3018..

# சிரித்திரன்

01.05.1989 மலர் 19. இதழ் 21

16.05.1989 மலர் 19. இதழ் 22


SL
2-11 on N70TA.
N.S. 1.19..
.076.

# தமிழரசு

1-5-1989 ரூ. 1












**வெள்ளுடை வேந்தர் தியாகராயர்**

தோற்றம் : 27-4-1852 மறைவு : 28-4-1925

# தமிழரசு




திருவள்ளுவர் ஆண்டு 2020
சுக்ல-சித்திரை 18
மலர்: 19 இதழ்: 21
1-5-1989

பக்கம் 33



பக்கம் 15

பக்கம் 39

## இந்த இதழில்


திரைப்படப் பவளவிழாவில் மேதகு குடியரசுத் தலைவா உரை ... ... 2

காந்தி கிராம விழாவில் மேதகு குடியரசுத் துணைத்தலைவர் உரை ... ... 3

மாண்புமிகு முதல்வர் கலைஞர் மேதினச் செய்தி ... ... 5

மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மேதினச் செய்தி ... ... 6

நீங்களே சொல்லுங்கள் - பாவேந்தர் கவிதை ... ... 15

தமிழ்வளர்த்த பெரியார் - மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் கட்டுரை ... ... 17

உணர்வும் உறவும் - டாக்டர் மு. வரதராசனார் ... ... 24

சர்பிட்டி தியாகராயர் குறித்துப் பேரறிஞர் அண்ணா ... ... 33

அண்ணல் அம்பேத்கார் ... ... 39

தானமுத்து நடராசன் மாளிகைத் திறப்பு விழா ... ... 42

பாவேந்தர் விருது, திரு.வி.க. விருது ... ... 46

தொழிலாளர் இயக்கம் குறித்து திரு.வி.க. ... ... 47


இந்த இதழுடன் இலவச இணைப்பு

**சொன்னதைச் செய்வோம்**

**(நீதி நிலை அறிக்கை மீதான சட்டமன்ற விவாதங்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அளித்த பதிலுரை)**




# திரைப்படத்தொழில் ஒரு கலங்கரை விளக்கு

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன்

"திரைப்படங்களில் புகுத்தப்படும் ஆபாசம் (செக்ஸ்) மற்றும் வன்முறைக் காட்சிகள் சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.

"திரைப்படத்தில் வரும் வன்முறையைத் தூண்டும் காட்சிகள், திரைப்படங்களில் இடம் பெறும் வன்முறைக் காட்சிகள், பார்ப்பவர்கள் மனதையும் பாதிக்கின்றன. என்பதை ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்து இருக்கிறார்கள்.

"சமுதாயத்தில் நடைபெறும் வன்முறைகளுக்கும், திரைப்படத்தில் வரும் இதுபோன்ற காட்சிகளுக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. திரைப்படம் வெற்றி விழாவைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக, வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகளைப் பொழுதுபோக்கு என்ற பெயரில் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

"வன்முறைக் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து ஒரு கால கட்டத்தில் மக்களும் அதற்கு அடிமையாகி விடுகிறார்கள். எனவே, வேண்டத்தகாத இந்தக் காட்சிகளுக்குப் பட அதிபர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

"இந்தக் காட்சிகளுக்குத் தடை கொண்டு வருவதைக் காட்டிலும், படஅதிபர்களே சுயகட்டுப்பாட்டை வகுத்துக் கொண்டு செயல்பட்டால்தான் இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

"திரைப்படத் தொழில் ஒரு கலங்கரை விளக்கு போன்றது. தொலை தூரங்களில் கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கும் எட்டும் தகவல் தொடர்புச் சாதனம் திரைப்படம்; கலங்கரை விளக்கு போல மக்கள் மத்தியில் நல்ல பண்புகளை வளர்த்து, நாட்டுக்கு நலன் தரும் நல்ல கருத்துக்களைக் கொண்ட தரமான படங்களைப் பட அதிபர்கள் தயாரிக்கவேண்டும்.

"விருது வாங்குவது எவ்வளவு முக்கியமோ, அதைப்போல தேசிய மற்றும் சர்வதேசப் புகழைப் பெறுவதற்கான படங்களைத் தயாரிக்க வேண்டும். திரைப்படத் தொழிலுக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது.

"தொலைக்காட்சி மற்றும் வீடியோ, தொழில் நுட்பங்கள் வளர்ந்துவிட்டாலும், திரைப்படத் தொழில் அதன் மதிப்பை இழந்துவிடவில்லை. கடந்த 75 ஆண்டுகளாகச் சமுதாய மக்களிடம் தொடர்ந்து பிரபலமாகிக் கொண்டு இருக்கிறது.

"இந்தியா முழுவதும் உள்ள 13 ஆயிரம் திரைப் படக் கொட்டகைகளில் தினமும் 3 கோடி மக்கள் திரைப்படம் பார்க்கிறார்கள். தமிழ்ப்படங்களின் வெற்றிக்கு அதன் கதை வசனம் காரணமாக அமைகிறது.

"மறைந்த முதல் அமைச்சர் அண்ணா, தற்போதைய முதல்-அமைச்சர் கருணாநிதி போன்றவர்கள் இந்தத் துறையில் தனி இடத்தைப் பெற்றுள்ளனர்.

"நடிப்பைப் பொறுத்தவரை முன்னாள் முதல்-அமைச்சர் எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன் ஆகியோரின் பெயர்கள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் ஒலிக்கும் வகையில் பாராட்டுப் பெற்றவர்கள்.

"திரைப்படத் தொழில் வளர்ச்சிக்குச் சோராப் மோடி, எஸ்.எஸ்.வாசன், கே.சுப்பிரமணியம், ஏவிஎம்., மெகபூப்கான், வி.சாந்தாராம், பிமல்ராய், பிரிதிவிராஜ், ராஜ்கபூர், எல்.வி.பிரசாத், நாகிரெட்டி, சத்யஜித்ரே, மிருணால் சென் ஆகியோர் சிறந்த தொண்டாற்றி உள்ளனர்.

"பட இயக்குனர்களில் கே.பாலசந்தர் போன்றவர்கள், கவிஞர்களில் கண்ணதாசன் போன்றவர்கள், இசை அமைப்பாளர்களில் இளையராஜா போன்றவர்கள் தேசிய அளவில் புகழ் பெற்றுள்ளனர்.

"நடிகர்களில் ராஜ்கபூர், நர்கீஸ், திலீப்குமார், அசோக்குமார், பிரேம்நசீர், உத்தம்குமார், [illegible] மீனாகுமாரி ஆகியோர் தேசியக் கலைஞர்களாக வளர்ந்தவர்கள். லதா மங்கேஷ்கர், முகம்மது ரபி, ஆர்.டி.பர்மன் ஆகியோர் திறமைமிக்க கலைஞர்கள். சத்யஜித்ரே, மிருணால்சென், அடூர்கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உலகப் புகழ்பெற்ற கலைஞர்களின் வரிசையில் இடம் பெற்றுள்ளனர்."

—சென்னையில் திரைப்படப் பவள விழாவை 16-4-89 அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து.



# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு சங்கர் தயாள் சர்மா

"அகில இந்திய அளவில் மதக் கலவரங்கள் நடைபெற்று வருகின்றன. அதுதொடர்பாக, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்று என்னிடம் இங்கு கருத்துக் கேட்டனர். காந்திஜி, மதக் கலவரங்களைத் தடுக்க தன் உயிரையும் கொடுத்த பிறகும் கூட இன்னமும் நாடு முழுவதும் ஜாதி, மத, இன வேற்றுமை என்ற கொடிய 'வைரஸ் நோய்' பரவிக் கொண்டே இருக்கிறது.

"இதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று நமது கல்வி முறையில் உள்ள குறைகளாகும். நமது கல்வி முறை வருவாயைப் பெருக்கவும், வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும்தான் முக்கியமாகப் பயன்படுகிறது. கலாசாரம், மனித நேயம், மனித சிந்தனை ஆகியவற்றை நமது கல்வி முறை கொடுப்பதில்லை. தவிர, எங்கு தனி மனித உரிமை மறுக்கப்படுகின்றதோ, அங்கு மத, இனக் கலவரங்கள் ஏற்படும். இந்த நிலையில் ஜனநாயக நாட்டில் மக்களுக்குத் தங்களது உரிமை குறித்து அதிக உணர்வு இருப்பது இயற்கை.

"காந்திஜி, ஹரிஜன மக்களின் நல்வாழ்வையே முக்கிய நோக்கமாகவும், முக்கியக் கொள்கையாகவும் கொண்டிருந்தார். மனிதர்களிடையே சமுதாய, பொருளாதாரக் கல்வி வித்தியாசங்கள் மறையவேண்டும்., நமது நாட்டில் அனைவருக்கும் சம அளவு அரசியல் உரிமை வழங்கப்பட்டிருந்தாலும், இன்னமும் அனைவரும் சமமான வளர்ச்சி பெறவில்லை. நல்ல முறையில் அதிகாரத்தில் உள்ளவர்கள்கூட தங்கள் அதிகாரத்தைச் சுய லாபத்துக்காகப் பயன்படுத்துவதாலும் இத்தகைய கலவரங்கள் தோன்றுகின்றன.

"இனக் கலவரங்களுக்கு மற்றொரு காரணம் அரசியல்வாதிதான் என்று கூறுவேன். அவர்கள் தங்கள் சொந்த லாபத்துக்காக வகுப்பு மோதல்களைத் தூண்டி விடுகின்றனர். படித்தவர்கள் மத்தியில் மாற்றம் ஏற்படவேண்டும். தங்களைவிடக் கீழாக இருப்பவர்களுக்கு உதவும் வகையில் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

"மற்றவர் பொருளை எடுத்துக் கொள்பவன் மட்டும் சுரண்டல்வாதி அல்ல; தன்தேவைக்கு மேல் சேர்த்துக் கொள்ளுபவனும் சுரண்டல்வாதிதான்" என்று காந்தி சொல்லியதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் நம்முடைய கல்விமுறையில், கலாசாரம், நன்னெறி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

"ஆரம்பக் கல்விக் கட்டத்திலேயே சமுதாய உணர்வை மாணவர்களுக்குப் புகட்ட வேண்டும். தாங்கள் சமுதாயத்தில் ஓர் அங்கம்; சமுதாயமின்றித் தங்களால் வாழ முடியாது என்ற உணர்வை இளம் வயதிலேயே மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

"பொருளாதாரத்தில் ஒருவன் வளரும்போது மற்றவர்கள் பொறாமை கொள்வது இயல்பு. இது தனி நபர்களுக்கு மட்டுமின்றி, நாடுகளுக்கும் பொருந்தும். உலகச் சந்தையில் எந்தவிதப் போட்டியுமின்றி மற்றவர்களைச் சுரண்டவேண்டும் என்ற எண்ணமும் உள்ளது. எனவே நமது முன்னேற்றத்தைத் தடுக்க நினைக்கிறார்கள்.

"இந்தியாவில் இன, சமூகக் கலவரங்களைத் தூண்டுவது மிகவும் எளிது என்பதை உணர்ந்துதான் அதனைச் செயல்படுத்துகிறார்கள். இந்தியாவில் பஞ்சாபில் இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்படும் என்று எவரேனும் எண்ணியிருக்க முடியுமா?

"வேதங்களை மறந்துவிட்டோம். இஸ்லாமியத்தை மறந்துவிட்டோம். ஒவ்வொருவருக்கும் மதத்தின் அடிப்படைத் தத்துவங்களைக் கற்பிக்கவேண்டும். நம்முடைய கலாசாரம், ஒழுக்கம் ஆகியவை போதிக்கப்பட வேண்டும்.

"ஒவ்வொருவருக்கும் அவர்களின் தாய் மொழி தான் தேசியமொழி. தமிழர்களுக்குத் தமிழ் என்பது போல, கேரள மாநிலத்தவருக்கு மலையாளம், மகாராஷ்டிர மாநிலத்தவர்களுக்கு மராட்டியம் தேசிய மொழியாகும். இந்தி, நாட்டு மக்களிடையே ஒரு இணைப்பு மொழியாகத்தான் இருக்க முடியும். ஒரு மொழியைப் பேசாத மக்கள் மீது, அந்த மொழியைத் திணிக்கும் பேச்சுக்கே இடமில்லை எனினும், பல்கலைக் கழகப் படிப்பை முடித்துச் செல்லும் மாணவர்கள் மற்ற மொழிகளைப் படித்தால், அவற்றின் இலக்கியத்தையும், மற்ற விஷயங்களையும் அறிந்து கொள்ள வசதியாக இருக்கும்.


"பட்டங்களைப் பெறுவதுடன் கல்வி முடிந்துவிடவில்லை. அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் புறக்கணிக்கக்கூடாது. தேவைப்படும் இடங்களில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

"தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ் மொழியை நாடு முழுதும் பரப்பவேண்டும்., அப்போது தான் அதன் சிறப்புகளை மக்கள் அறிந்து கொள்ள முடியும்."

—மதுரை, காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகத்தின் 11-வது பட்டமளிப்பு விழாவில் (9-4-89) ஆற்றிய உரையிலிருந்து.

## மே நாள்

தந்தை பெரியார் அவர்கள் தான், ரஷ்யாவுக்குச் சென்று வந்ததும் தொழிலாளர்நலனில்பெரிதும் ஆர்வங் கொண்டு முதன் முதலாக மே நாள் கொண்டாடினார்.





# ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசி

தமிழ்ப் பெருங்குடி மக்களின் புத்தாண்டுத் திருநாளில் ஏழை எளியோரின் இல்லமெல்லாம் மகிழ்ச்சி பொங்கிட, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற வாக்கு நினைவாகிட தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 75 இலட்சம் ஏழைக் குடும்பத்தினர் 14.4.'89 அன்று 5 கிலோ இலவச அரிசி பெற்றனர். இதையொட்டி தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் துறைமுகம் தொகுதி வடக்கு கடற்கரைச் சாலை 3-வது தெருவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்நிகழ்ச்சிக்கு தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., தலைமை வகித்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ரெ. ஆறுமுகம்,இ.ஆ.ப., வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவு அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு.எஸ். தங்கவேலு, மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் திரு.முரசொலி மாறன், திரு.டி.ஆர்.பாலு ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசியை வழங்கி விட்டு, உரையாற்றும்போது,

**இலவச அரிசி வழங்கும் திட்டத்தை அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், முதல்வரின் பாராளுமன்றச் செயலர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் ஆகியோர் தமிழகம் முழுவதும் தொடங்கி வைத்தார்கள்.**

"இந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுகின்ற - நான் இதயத்தில் பதிய வைத்துக் கொண்டிருக்கின்ற 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக நாம் பயணம் நடத்துகின்ற பல படிகளில் ஒன்றாக இலவச அரிசி வழங்குகின்ற பணியினை மேற் கொண்டிருக்கின்றோம்.

இன்று மூன்று ரூபாய் வ[illegible] மானம் அதற்குக் குறைவாகவு[illegible] பெறுகின்ற குடும்ப அட்டைகள் வைத்துக் கொண்டிருப்பவர்களு[illegible] சற்றொப்ப எழுபத்து ஆறு லட்[illegible] துக்கு மேற்பட்டவர்களுக்கு தமிழக முழுவதும் இலவசமாக ஐந்து கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இன்[illegible] விழாத் தலைவர் நம்முடைய தலைமைச் செயலாளரும், உண[illegible] அமைச்சரும் சுட்டிக்காட்டியது[illegible] போல நகர்ப்புறங்களிலே உள்[illegible] நியாய விலைக் கடைகளின் வாயிலாக மூவாயிரத்து எழுநூற்றி இரு[illegible] பத்து இரண்டு இடங்களிலும், கிரா[illegible] மப்புறங்களிலே உள்ள நியா[illegible] விலைக்கடைகளின் வாயிலாக ப[illegible] னேழாயிரத்து முந்நூற்றி ஐம்ப[illegible] திரண்டு இடங்களிலும் இந்த அரு[illegible] பணி இன்றைக்கு இந்த அரசினா[illegible] மேற்கொள்ளப்பட்டு ஆங்காங்[illegible] நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள்.

—அ. மருதவிநாய[illegible]





# மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் மே நாள் செய்தி

மே நாள் - மேதினியெங்கும் கொண்டாடப்படும் தொழிலாளர்களின் திருநாள்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அமெரிக்க நாட்டில், 'ஒரு நாளைக்கு எட்டுமணி நேர வேலை' என்பதைச் சட்டமாக்க உழைப்பாளி மக்கள் உரிமைக் குரல் கொடுத்த நாள்! இப்படி உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு ஆளாகி, இரத்தக்களறி, சிறைவாசம், தூக்குக் கயிறு என்று பல சோதனைகளுக்கு ஆட்பட்டனர். விளைவு- விழிப்புற்ற தொழிலாளர் உலகு புதிய எழுச்சியுற்றது.

பாடுபட்டுப் பாடுபட்டுப் பார் உயர வழி வகுத்த உழைப்பாளி மக்களின் உயர்வைப் போற்றும் நாளாக மே நாள் இப்பொழுது உலகெங்கும் கொண்டாடப் படுகிறது.

தொழிலாளர் நாளான மே நாளை, கழக அரசு தான் ஊதியத்துடன் கூடிய விடுப்பு நாளாக்கியது.

ஆர்க்கின்ற இயந்திரங்களும், அளவற்ற தொழிற் பெருக்கமும் நாட்டில் உருவாக்கும் தொழிலாளர் வாழ்வு சிறக்க வழிவகுப்போம்! துணை நிற்போம்!

பேரறிஞர் அண்ணா சொன்னார்:- "சாதாரண மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன்தான் ஒரு நாட்டின் முதுகெலும்பாய் இருப்பவன்.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை- குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை-தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியே நம் பணி".

அந்தச் சாதாரண மனிதனுக்கு வாழ்வு அளிக்கும் வகையில்தான் மே முதல் நாள்-

சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்த மானியம்;

ஆட்டோ ரிக்ஷா, டாக்சி வாங்க அரசு உதவி வழங்கும் திட்டம் துவங்குகிறது.

எல்லா வகையிலும் தொழிலாளர் உரிமை சிறக்க உறுதுணையாக இருக்கும் அரசு தமிழக அரசு.

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்! அவன் காணத் தகுந்த பெருமையை-உயர்வை தேடிக் கொடுப்போம்.

"தொழில் வளர்ப்போம்!
தொழிலாளர் நலங்காப்போம்!"

என்ற சூளுரையை மே நாளில் ஏற்போம்!

# உலகத் தொழிலாளர் உரிமைபோற்றும் திருநாள்



*மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்*

**திரு.பொன்.முத்துராமலிங்கம்**

மே நாள்

உலகத் தொழிலாளர் இயக்கங்களின் உரிமையைப் போற்றும் திருநாள்.

மே நாளின் வரலாறு ஒரு நூற்றாண்டை எட்டியதாகும்.

1884-ஆம் ஆண்டு அக்டோபர் 7-ஆம் நாள் அமெரிக்க நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு 1886 மே முதல் நாள் முதல், ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தது. இதற்கெனத் தீர்மானமும் நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானத்தின்படி அமெரிக்கா, கனடா நாடுகளில் உள்ள தொழிற்சங்கங்கள் மே முதல் நாள் எட்டு மணி நேர வேலைக்கு நீண்டவேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்தன.

1886-ஆம் ஆண்டு மே முதல் வேலை நிறுத்தப்போராட்டம் தொடங்கியது. அந்த வேலை நிறுத்தம் அது வரை தொழிற்சங்க இயக்கம் கண்டிராத போராட்டமாக விளங்கியது.

வேலை நிறுத்தத்தின் மையமாகச் சிகாகோ நகரம் விளங்கியது. பால்டிமோர். வாஷிங்டன், மில்லாக்கி, சின்னாட்டி, செயிண்ட் லூயிபிட்ஸ் பார்க், டெட்ராய்ட் நகரங்களிலும் பிற நகரங்களிலும் வேலைநிறுத்தம் நடைபெற்றது. ஆனால், சிகாகோ நகரில் வேலைநிறுத்தம் உச்சக்கட்டத்தை எட்டியது.

ஹே மார்கட் என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியால் அந்தப்பகுதி முழுவதும் தொழிலாளர்களின் குருதி கொட்டியதால் ஈரமாகியது. அடக்குமுறைக்கு அளவே இல்லை. 'சிறைவாசம்' தூக்குக்கயிறு என்பது தொழிலாளர் தலைவர்களுக்குக் கிடைத்த பரிசு'. அடக்குமுறையாக வெகுண்டது உழைப்பாளர்களின் உலகம். தொழிற்சங்க இயக்கத்தில் புதியவேகம், எழுச்சி. இது உலகு எங்கும் உள்ள தொழிலாளர்களை விழிப்படையச் செய்தது. ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்ற உழைப்பாளி மக்களின் உரிமைக்குரல் உலகின் பலபாகங்களில் கேட்கத் தொடங்கியது.

மீண்டும் 1888-ஆம் ஆண்டில் அமெரிக்கத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு செயிண்ட் லூயிநகரில் மாநாடு நடத்தியது. அதில் ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்பதை வலியுறுத்தத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை அரசியல் முறையில் மே 12-ஆம் நாள் நடத்துவது என்ற வழக்கம் தொடர்ந்தது.

அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்குக் குரல் கொடுப்பதை உணர்ந்து உலகத் தொழிலாளர்கள் அனைவரும், மே முதல் நாள் உழைப்பாளி மக்களின் உரிமையை உணர்த்தும் நாளாகக் கொண்டாடத் தலைப்பட்டனர்.

1889-ஆம் ஆண்டு அமெரிக்கத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு தொழிலாளர்களின் உரிமை நாளாக மே முதல் நாளைக் கொண்டாட முடிவெடுத்தது. இதனை உலக நாடுகள் பலவும் பின்பற்றத் தொடங்கின.

அமெரிக்க நாட்டில் 1886-ல் 'ஹே மார்க்கெட்' நிகழ்ச்சி நடைபெற்றாலும் 1889 முதல்நாள் உலகநாடுகள் பலவற்றிலும் மே முதல் நாளை உழைப்பாளி மக்களின் உரிமை நாளாகக் கொண்டாடும் நிலை ஏற்பட்டது.

எனவே, உலகம் முழுவதும் 'மே-முதல்நாள் தொழிலாளர் நாளாக' மாறி ஒரு நூற்றாண்டு நிறைவடைகிறது.

தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அரசு அமைந்த பிறகுதான் மே நாள் ஊதியத்துடன் கூடிய விடுப்புநாளாக அறிவிக்கப்பட்டது அனைவரும் அறிந்த செய்தி.

இன்றைய தமிழக அரசு ''வாழ்க தொழிலாளர், வளர்க தொழில்' என்ற கோட்பாடுடன் இயங்கும் அரசாகும். தொழிலாளர் நலங்காக்கும் அரசு இது என்பதை உழைப்பாளர் மக்கள் அனைவரும் உணர்வர்.

தமிழ்ச் சமுதாயத்தை வாழ்விக்கும் சமூக விஞ்ஞானியான தலைவர் கலைஞர் தலைமையில் உள்ள தமிழக அரசு, பாடுபட்டுப் பாடுபட்டுப் பார்உயர வழிவகுத்த பாட்டாளிகள் நலங்காக்கும் நல்லரசு ஆகும்.


உழைப்பாளி மக்களின் உரிமைத் திருநாளான மேநாளில் தொழிலாளர் நலங்காக்கும் பணிகளில் உறுதுணையாக நிற்போம் என்ற உறுதியைத் தொழிலாளர் சமுதாயம் அனைத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தொழிலாளர்...!
வளர்க தொழில் ...!









1 சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் 138-வது பிறந்த தின விழாவை முன்னிட்டு (27.4.89) சென்னை மாநகராட்சி வளாகத்திலுள்ள சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தார்கள்.

2 35-வது கைத்தறிக் கண்காட்சி விழாவினை, சென்னையில் 23.4.89 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்து, கண்காட்சியைப் பார்வையிட்டார். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் உடனிருந்தார்.

3 மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்களும் சென்னையில் நடைபெறும் கைத்தறி விழா '89-ல் 26.4.89 அன்று கலந்து கொண்டு கைத்தறிக் கண்காட்சியினைப் பார்வையிட்டார்கள்.

# அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

● நடப்பாண்டில் தொழிற் கல்லூரிகளில் சேர நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பம் செய்வதற்கான தகுதி மதிப்பெண்களில் மாற்றம் இருக்காது. +2 பொதுத் தேர்வில் மூன்றாம் பகுதியில் 70 சதம் எடுத்திருக்கவேண்டும் என்ற நிலையே நீடிக்கும்.


● 20 சத இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ள பிற்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் இது பொருந்தும். ஆனால் பழங்குடியினருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் இது பொருந்தாது.

● வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், குடிநீர்ப் பணிகளுக்காக தமிழ்நாட்டில் மேலும் குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கு குஜராத்திலிருந்து துரப்பணக் கருவிகள் கொண்டுவர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்பாடு செய்து வருகிறது. தற்போது வாரியத்திடம் உள்ள 215 துரப்பணக் கருவிகளும் இப் பணிக்குப் பயன்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் வறட்சியில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ. 12.50 கோடி செலவில் 5,000 குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது.

● வரும் கல்வி ஆண்டில் மாணவர்களுக்கு இலவசமாக அரசு வழங்கும் புத்தகங்கள் காலத்தில் கிடைப்பதற்காக இவ்வாண்டு 12.4.89 முதலே புத்தகங்களை மையங்களுக்கு அனுப்பும் பணி துவங்கப்பட்டுள்ளது.

1987-88 ஆம் ஆண்டு ரூ.11.85 கோடி மதிப்புள்ள புத்தகங்களும், 1988-89 ஆம் ஆண்டில் ரூ.16 கோடி மதிப்புள்ள புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. இவ்வாண்டு ரூ.19.66 கோடி மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. ஒரு கோடியே 17 இலட்சம் மாணவர்களில் 64 இலட்சம் பேருக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.



● அரசு ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மின்வாரியத்தில் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அனைத்துப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை இந்த அரசு மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறது.

மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற வுடன் இந்தக் கோரிக்கை நிறை வேற்றப்படும்.

1988 மார்ச் 15,1988 செப்டம் பர் 12 ஆகிய நாட்களில் நாடு தழு விய அளவில் முன்அறிவிப்பு அளித்த பொது காரியங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அதில் கலந்து கொண்ட தொழிலாளர் களுக்குப் போக்குவரத்துக் கழகத் தின் ஊக்கத்தொகை மறுக்கப்பட் டிருக்கிறது. சில கழகங்களில் அத் தகைய தொழிலாளர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நாள் வேலை நிறுத் தத்தின்போது பணிக்கு வராதவர் களை அவர்கள் விடுப்பில் இருந் தாகக் கருதப்பட்டு இந்தப் பிர னை தீர்க்கப்படும்.

பணியில் இருக்கும் தொழிலா இறந்துவிட்டால் அவர்களின் ஈம கடனுக்கு அளிக்கப்பட்டுவரு மானியம் ரூ.200 லிருந்து ரூ.30 ஆக உயர்த்தப்படும். ஊழியர்க பணி செய்து கொண்டிருக்கு பொழுது மற்றவர்களின் வ முறைச் செயல்களால் இறந்துவி டால் அவர்களது வாரிசுகளுக் அளிக்கப்பட்டு வந்த தொகை 5000லிருந்து ரூ.10,000 ஆ உயர்த்தப்படும்.

போக்குவரத்துத் தொழிலா களுக்கு வீடுகள் கட்டக் கூடிய தி டம் மேலும் எல்லாப் போக்குவர துக் கழகங்களிலும் தீவிரமாக்க படும். அவர்களுக்கு வழங்கப்பட கூடிய கடன் 120 தவணைகள்தா திருப்பிச் செலுத்துவதற்காக இ போது வழங்கப்படுகிறது. அவ களின் நீண்டநாள் கோரிக்கை கேற்ப, தவணையின் அளவு 18 மாதமாக உயர்த்தப்படுகிறது.



● உலகின் பல்வேறு மொழி, அ வியல், கலை, இலக்கியம் போன் வற்றின் சிறப்புகளைத் தாங் தமிழில் வெளிவரும் 'கூரியர்' மா இதழுக்கு ஆண்டுதோறும் அரசி சார்பில் ரூ.80,000 நன்கொடை யாக வழங்கப்படும் என மாண் மிகு முதல்வர் கலைஞர் அவர்க 11.4.89 அன்று அறிவித்தார்.

## சென்னையில் சுவாமி சிவானந்தர் சிலை திறப்பு விழா

சென்னையில் தொலைக்காட்சி நிலையம் அமைந்துள்ள ஆதம்ஸ் சாலைக்கு, சுவாமி சிவானந்தர் சாலை என்று பெயர் சூட்டிய தமிழக அரசு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அருகில் சிவானந்தரின் திருவுருவச் சிலையைத் திறந்ததற்காக, சிவானந்த தபோவனம், சமயஜோதி நிறுவனங்கள் தமிழக அரசுக்குப் பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்துள்ளன.

மார்ச் திங்கள் 13-ஆம் நாள் அன்று, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் சிவானந்தரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். ரிஷிகேசம் சிவானந்தாசிரம தெய்வநெறிக் கழகத்தின் தலைவர் சுவாமி சிதானந்தர், பொருளாளர் சுவாமி தயானந்தர் மற்றும் பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.





[தலைமைச் செயலகத்தில் 15-4-1989 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு]



# ஏழையர் நலம்பெறத் திட்டம் தீட்டுவோம்

## –அவர்கள்

# இனியபயன் உடன்பெற வழிகள் காணுவோம்

முதல்வர் கலைஞர்



உங்கள் அனைவரையும் இந்தச் சிறப்பான கூட்டத்தில் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அரசு உருவாகி சற்றொப்ப 75 நாட்கள் முடிவுற்று - உங்களையெல்லாம் அழைத்துப் பேசுகிற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநாட்டின் முக்கியமான நோக்கமே - மாவட்டங்களில் அதிகாரிகள் - ஆட்சித்தலைவர்களானாலும், காவல் துறை அதிகாரிகளானாலும், விரைந்து ஆக்கப்பூர்வமாக செயல்பட வேண்டும் என்ற ஊக்கத்தை ஊட்டுவதற்காகத்தான்! உங்களையெல்லாம் அழைத்து நீங்கள் வேகமாகச் செயல்படவேண்டுமென்று சொல்வதற்கு முன்னால் - அப்படிச் சொல்கிறவர்கள் வேகமாகச் செயல்பட்டிருக்கவேண்டுமல்லவா? அதற்கு சில எடுத்துக்காட்டுகளை - சற்றொப்ப இந்த 75 நாட்களில் அமைச்சர்களாகிய நாங்கள், இங்கே தலைமைச் செயலகத்தில் உள்ள அதிகாரிகள் செயல்பட்டிருக்கிற வேகத்தை உணர்ந்தால் - அதைப்பின்பற்றி நீங்களும் நடப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாங்களே செயல்படாமல் இருந்து, நீங்கள் செயல்படவேண்டுமென்று சொல்கிற உரிமை எங்களுக்கு இல்லை. எனவே தான் நாங்கள் செயல்பட்டிருப்பதை - முழுமையான பட்டியலை இங்கே கூற நேரம் இல்லாவிட்டாலுங்கூட - சிலவற்றை நினைவுக்குக்கொண்டு வருகிறேன்.

75,76 நாட்களுக்கு முன்பு இந்த அரசு உருவாக்கப்பட்ட பிறகு, தமிழகத்தில் மங்கிக்கிடக்கிற தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, தொழிலதிபர்களையெல்லாம் அழைத்து, அவர்களுடன் கலந்துரையாடி, தொழில் வளம் பெருக என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்ற அரிய ஆலோசனைகளைப் பெற்றும், அதன்தொடர்பாக, தலைமைச்செயலக அளவில் நானும், தலைமைச்செயலாளரும், மற்றும் ஆலோசகரும், தொழில்துறை செயலாளரும் கலந்து மற்றும் உள்ள தொழிற்துறையினரோடு தொடர்பு கொண்டு ஒரு நிலையான குழு அமைக்கப்பட, அந்தக்குழுவின் கருத்துக்களை அறிவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்து அறநிலையத்துறையில், நாம் கடைப்பிடிக்க வேண்டிய பல்வேறு முனைப்பான சீர்திருத்தங்களைப் பற்றியும், அங்கே ஏற்பட்டிருக்கிற முறைகேடுகளைக் களைவதைக் குறித்தும், சமயச் சான்றோர்களை அழைத்து கலந்துரையாடி அதற்கான திட்டங்களை மேற்கொள்ள குழு அமைத்திருக்கிறோம்.

காவேரிப் பிரச்சினை குறித்து கர்நாடக மாநிலத்தோடு பேச்சுவார்த்தை நடத்த, எந்த நேரத்திலே வாய்ப்பு கிடைத்தாலும், அதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்று, அந்தத் துறையின் இந்நாள் அதிகாரிகள், அந்தத்துறையின் அமைச்சர், மற்றும் முக்கியமான அமைச்சர்கள், அந்தத்துறையிலே இருந்த முன்னாள் பொறியாளர்கள், அதிகாரிகளையெல்லாம் அழைத்துப்பேசி இந்தப் பிரச்சினையில் கர்நாடக மாநிலத்தோடும், மத்திய அரசோடும் எப்படி அணுகுவது என்று பேசியிருக்கிறோம்.

இதற்கிடையே ஒன்பதாவது நிதிக்குழுவின் கூட்டம் நடைபெற்று, தமிழகத்தின் தேவைகளை எடுத்துரைத்து அதிக நிதி ஒதுக்கவேண்டுமென்று வலியுறுத்துகிற நிகழ்ச்சியில் ஒரு நாள் செலவிட்டிருக்கிறோம். சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். பத்திரிக்கையாளர்களுக்குக் கூட ஆச்சரியமாக இருக்கும்.


இந்த 75 நாட்களில் அமைச்சரவைக் கூட்டம் ஏழு முறை நடைபெற்றிருக்கிறது. சில ஆட்சிகளில் ஆண்டு ஒன்றுக்கு ஒருமுறை நடைபெற்றிருக்குமா என்பதேகூட சர்ச்சைக்குரிய கேள்வி. ஆனால் கடந்த 75 நாட்களில் ஏழு முறை அமைச்சரவைக்கூட்டம் நடைபெற்று முக்கியமான முடிவுகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

STANDING FINANCE COMMITTEE - நிதி நிலைக் குழு மூன்று நாட்கள் தொடர்ந்துகூடி - பல திட்டங்களை வகுத்திருக்கின்றது. இதற்கிடையே தான் - கவர்னர் உரை, அதற்கான தயாரிப்புப் பணிகளும், அதைத் தொடர்ந்து பட்ஜெட் உரையும், அதற்கான தயாரிப்புப் பணிகளும் நடைபெற்றிருக்கின்றன.

பட்ஜெட் உரையிலே அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களுக்காக, எல்லாத் துறையினரோடும் நானும் அமைச்சர் பெருமக்களும் கலந்து பேசுகிற பல நிகழ்வுகள் இந்த 75 நாட்களுக்குள் தான் நடைபெற்று, அந்தத்திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்களுக்குள்தான் —இலவசமாக ஐந்து கிலோ அரிசி புத்தாண்டுக்கு வழங்குவதற்கான திட்டத்தை அறிவித்து - அதனை நிறைவேற்றுவதற்கு, மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் அதிகாரிகளையும், அமைச்சரையும் கலந்தாலோசித்து நேற்றைய தினம் மிக வெற்றிகரமாக தமிழகத்தில், அது நிறைவேறியிருக்கிறது. அதனையொட்டி - இன்றும், நாளையும் மாவட்டஆட்சித்தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்.

இவ்வளவையும சொல்லக் காரணம் - செயல்பட்டுக் காட்டிய நாங்கள், தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற நாங்கள், நீங்கள் எல்லாம் செயல்படவேண்டுமென்று உரிமையோடு எடுத்துச் சொல்வதற்காகத்தான் — இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

இன்றைய இம்மாநாடு இருவகையில் முக்கியத்துவம் பெற்றதாகும். முதலாவதாக, குடியரசுத்தலைவரின் ஆட்சி முடிந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி அரசு அமைத்தபின் நடக்கும் முதல் மாநாடு இதுவே. இரண்டாவதாக பருவமழை பொய்த்ததினால் ஏற்பட்ட கடும் வறட்சி நிலைமையினை எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான காலக் கட்டமும் இதுவே.



எனவே, புதிய அரசு மக்களுக்கு அறிவித்திருக்கின்ற திட்டங்களைச் சீரிய முறையில் அமல்படுத்தவும், வறட்சியை முறியடிப்பதற்கான திட்டங்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அவை செவ்வனே நடைபெறவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முக்கியமாக எதிர்பார்ப்பது நிர்வாகம் செம்மைப்பட வேண்டும்; திறம்பட செயல்பட வேண்டும்; திட்டமிட்டபடி நடக்கவேண்டும் என்பதேயாகும். அரசு ஆணை கையொப்பம் இட்ட அந்த மை உலர்வதற்கு முன்பே, அந்த ஆணையினுடைய - திட்டத்தினுடைய பயன்களை மக்கள் பெற்றுவிட வேண்டும் என்பது இந்த ஆட்சியின் அவா. இவ்வரசு ஏழைகளுக்காக தீட்டும் திட்டங்கள் மூலம் உடனுக்குடன் மக்களுக்கு பயன்கிடைத்திடும் வகையில் நிர்வாகம் நடைபெறவேண்டும். இந்த அரசு, எடுக்கும்முடிவுகள் குறித்த காலத்திற்குள் மக்களைச் சென்றடைய வேண்டிய அளவுக்கு நிர்வாகம் முடுக்கி விடப்பட வேண்டும் என்றும், மக்களுடைய குறைகளை விரைந்து களைந்திட வேண்டுமென்றும் கருதுகிறது. மாவட்ட நிர்வாகத்தில் இருக்கக்கூடிய அனைத்து அதிகாரிகளும் மக்களுடைய தேவைகளை விரைந்து பூர்த்தி செய்யக்கூடிய அளவிலே செயல்படவேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், முன்பு பணியாற்றியதற்கும் தற்போது பணியாற்றுவதற்கும் பெருத்த வேறுபாடுகளை மனதில் கொள்ள வேண்டும். ஆங்கிலேயர் கால மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சட்ட ஒழுங்கு பிரச்சினைகளை மட்டும் கருத்திலேகொண்டு செயல்பட வேண்டுமென்று இருந்தது. இன்று, மக்களுக்குச் செய்ய வேண்டிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவது, அவற்றைச் செயல்படுத்துவது, பல்வேறு அரசுத்துறைகள் சம்மந்தப்பட்ட வேலைகளை மேற்பார்வை செய்து ஒருங்கிணைத்தல் முதலிய பல பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. இவற்றைச் திறம்பட செயல்படுத்தி அதன்மூலம் இந்த அரசு, தான் செய்யும் திட்டங்களின் பயன்களை மக்களுக்கு அடையச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறது. பொதுவாக கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு பணியாளர்கள், தலைமையிடத்தில் தங்குவதில்லை என்ற புகார்கள் உள்ளன. இன்னும் சொல்லப்போனால் சட்டம் ஒழுங்கு காக்கும் பொறுப்புகளில் இருக்கக்கூடிய வட்ட ஆட்சியாளர்கள்கூட, அவர்களது தலைமையிடங்களில் தங்குவது இல்லை என்று புகார்கள் வந்துள்ளன. இந்தக் குறைகளையெல்லாம் நாம் களைந்திட வேண்டும். இவற்றையெல்லாம் களைந்திட, மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்புடன் கண்காணிக்க வேண்டும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்ற அரசுப் பணியாளர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

பல்வேறு மாவட்டங்களிலிருந்து வட கிழக்குப் பருவ மழைபெய்யாத காரணத்தால் ஏற்பட்ட நிலைமைகள் குறித்து அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இப்போது நம்முடைய தலையாய கடமைகளை மூன்று கோணங்களில் பார்க்க வேண்டும்.

1. வறட்சிப் பகுதிகளை கண்டறிந்து, நிலைமையைச் சமாளிக்க போர்க்கால நடவடிக்கைகள் போல திட்டமிடப்பட வேண்டும்.

2. வறட்சியின் காரணமாக உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல், எல்லா மக்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் அவைகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

3. வறட்சியின் காரணமாக வேலை இல்லாமல் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுக்கு போதிய வேலை வாய்ப்பு அளித்தல் வேண்டும்.

ஏற்கனவே முன் ஏற்பாடாக 5,000 ஆழ்குழாய் கிணறுகள் போடுவதற்கு இந்த அரசு முடிவு செய்து, ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், எந்தெந்த இடங்களில் ஏற்கனவே ஆழ்கிணறுகள் இல்லையோ, அங்கேயெல்லாம் ஆழ்குழாய் கிணறுகள் போடுவதற்கும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அரசு எதிர்பார்த்த வேகத்தில் இந்தப் பணிகள் நடைபெறவில்லை. இது வருந்தத்தக்கது மட்டுமல்ல; உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் முடிவடையாமல் தேக்க நிலையில் உள்ளன என்பதையும் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் ஒருதிட்டம் முடிக்கப்படவில்லையெனில், திட்டச் செலவு அதிகமாகிவிடுவதுடன் அரசு விரும்பும் பலனும் மக்களுக்கு உடனுக்குடன் கிடைக்காமல் போகும்நிலை ஏற்பட்டு விடுகிறது.



இந்த நிலைமைகளை நாம் தவிர்த்தாக வேண்டும். மாவட்ட ஆட்சியாளர்கள் ஒவ்வொரு திட்டப் பணியையும் உன்னிப்பாக கவனித்தல் வேண்டும். திட்டங்களுடைய பயன்கள் மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியாளர்கள்15நாட்களுக்கு ஒரு முறை சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் கூட்டத்தை கூட்டி, திட்டப் பணிகளை ஆய்வு செய்து, திட்டப் பணிகளை முடித்திடச் செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டியாகவும் சிறந்த ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் பணி புரிந்தால் இந்த அரசு நினைக்கும் பணிகளை நிச்சயம் திறம்பட ஆற்றிட முடியும்.

நிலத்தடி நீர் இருக்கக் கூடிய சில இடங்களிலேகூட காரணமின்றி மக்கள் அங்கே ஆழ்குழாய் கிணறு போட்டால் சரிப்படாது என்று கூறுகிறார்கள். எந்தெந்த இடங்களில் நீர்வளம் உள்ளது என்பதை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து இருக்கிறோம். அவைகளையெல்லாம் பயன்படுத்தி, திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். சில இடங்களிலே குடிதண்ணீர் மேல்நிலை தொட்டி இருக்கின்றன. ஆனால் அங்கே போடப்பட்ட ஆழ்குழாய் கிணறு பயனளிக்கவில்லை. சில இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன. ஆனால் குடிதண்ணீர் மேல்நிலை தொட்டி இல்லை. இந்தக் குறைகளை எல்லாம் நிச்சயம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளவிலே தீர்த்து வைக்க முடியும். இது மாத்திரமல்லாமல், தேவையற்ற காலதாமதம் இந்த மோட்டார் பம்பு செட்டுகள் பழுதுபார்த்தலில் உள்ளது. இந்த கால தாமதங்களை எல்லாம் தவிர்க்க வேண்டும்.


கிராம அளவிலே, ஊராட்சி ஒன்றிய அளவிலே, கோட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குடிதண்ணீர் [illegible] எல்லைகள் தீர்த்து

வைக்க வாய்ப்புள்ளது. இதுபோன்ற தவறுகள் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறைந்தது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையாவது குடிதண்ணீர் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் கலந்து பேசினால் இந்தப் பிரச்சினையை எளிதாகச் சமாளித்துவிட முடியும்.

குடி தண்ணீர் மக்களுக்கு கிடைக்க இந்த அதிகாரிகள் கண்ணும்கருத்துமாக இருந்து செயல்பட வேண்டியது இந்த நேரத்தில் முக்கியமான கடமையாகும்.

பொதுவாக அத்யாவசியப் பொருள்கள் சீராக விநியோகம் செய்யப்பட, நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குறிப்பாக வறட்சிக் காலத்தில் இப்பணி மிகவும் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். மாவட்டத்தின் தேவையைச் சரியாகக் கணக்கிட்டு எல்லா விநியோக மையங்களிலும் தடையின்றி அவை பெறப்படவும், உணவுப் பொருள்களை ஒழுங்காக விநியோகம் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அடிக்கடி ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்து வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.





உணவு வழங்கல் துறையிலே இருக்கக் கூடிய ஊழல்கள் பற்றி விசாரணை செய்து அவைகளை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தவிர்த்திட எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். சிவில் சப்ளைக் கார்ப்பரேஷன் இடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் எடை குறைபாட்டுடன் செல்லாமல் பார்த்திட வேண்டும். எடை குறைவாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படாமல் கவனிக்கப்பட வேண்டும்.

போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து நீக்க வேண்டும். கூடுதல் கட்டணம் வசூலித்தல், போலிப்பட்டியல் தயாரித்தல், கடையை அதிகார பூர்வமின்றி மூடுதல் ஆகிய முறைகேடுகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் வழங்குவதிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்ணும்கருத்துமாக இருத்தல் வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கிட வேண்டும் என்பது குறித்து பிப்ரவரி மாதத்திலே அறிவித்து [illegible] இது சம்பந்தமாக அறிக்கைகளை அரசுக்கு அனுப்

பும்போது அதிகாரிகள் போதுமான கவனத்துடன் செயல்படாமல், சரியான புள்ளி விவரங்கள் தரப்படாமல், ஒரு சில மாவட்டங்களில் குழப்பங்கள் ஏற்பட்டு, கடைசி நேரத்தில் சரி செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படை புள்ளி விவரங்களைக் கூட மாவட்ட நிர்வாகம் சரிவரத் தரவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்குரியது.

ஒவ்வொரு நியாய விலை கடைக்கும் 'ஏ' ரிஜிஸ்தர் என்று உள்ளது. அதிலே தேவையான விவரங்கள் இருக்கின்றன. அதிலும் தவறுகள் இருக்கின்றன. தவறுகளுக்கு இடம் தராமல் நிச்சயம் அடிப்படைப் புள்ளி விவரங்கள் சரியாக பராமரிக்கப்பட வேண்டும். இனி வரும் காலத்தில் மாவட்ட நிர்வாகத்தில் முக்கிய பதிவேடுகளை ஒழுங்குற பதிவு செய்து அதில் ஏதும் முறைகேடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தவொரு காரணத்தாலும், எந்தவொரு பொருளும் நியாய விலைக் கடைகளில் இல்லை என்ற நிலைமையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உருவாக்கக் கூடாது.



வறட்சிக்காலத்தில் வேலை வாய்ப்பின்மையும், வருவாயின்மையும் மிக அதிக அளவில் தென்படும். அவற்றை சமாளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் அமுல்படுத்தும் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் மிக்க கவனமாக இருக்க வேண்டும். வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் வேலைவாய்ப்பை பெருக்குவதற்குகந்த வகையிலோ, அதன் மூலம் முடிந்த அளவு கிராமப்புற பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்ற வகையிலோ அமைந்திருக்கவேண்டும். ஏற்கனவே அமுலில் உள்ள தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஆதி திராவிடர் கிராமப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் போதிய வேலை வாய்ப்பினைப் பெருக்கிட முயற்சிக்க வேண்டும்.

கடுமையான வறட்சியின் காரணமாக கால் நடை தீவனம் பற்றாக்குறை முதலிய பிரச்சினைகளை சமாளிக்க முன் கூட்டியே திட்டமிட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே வேளையில், வறட்சியினால் ஏற்படக்கூடிய கடுமையான விளைவுகளைச் சமாளிக்க நீண்ட காலத் திட்டங்கள் தேவைப்படுகின்றன. அந்தத் திட்டங்களாவன:—

பாசன வளத்தை ஏற்படுத்துதல்-பெருக்குதல் - புன்செய் சாகுபடி, தரிசு நில மேம்பாடு, எரிபொருள்தரக்கூடிய மரங்கள், கால்நடைத் தீவனங்களைத் திட்டமிடுதல், மண் அரிப்பைத் தடுத்தல், நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாத்தல் போன்ற பணிகளாகும்.

மக்கள் பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு அணுகி தீர்க்கவேண்டியவற்றில் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

அ) நிலமனைப்பட்டா மற்றும் வீட்டு மனைப் பட்டா தகுதியுள்ளோருக்கு விரைவில் வழங்குதல்;

ஆ) குறைந்தபட்சக் கூலி சட்டத்தை அமுல்படுத்தல்;

இ) பின்தங்கிய கிராமங்களில் வாழக்கூடிய ஏழைகளின் குறைந்த பட்சத் தேவைகளை பூர்த்தி செய்தல்;

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும் -(என்.ஆர்.ஈ.பி), ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு-உத்தரவாதத் திட்டமும் (ஆர்.எல்.ஈ.ஜி.பி.), ஒருங்கிணைக்கப்பட்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (என்.ஆர்.ஈ.பி.) என்கிற புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது. மத்திய, மாநில அரசுகளின் சார்பாக மொத்தத்தில் இதற்கு ரூபாய் 120 கோடி செலவாகும்.

அதையன்னியில் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு காங்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம் சுமார் ஐம்பது கோடி செலவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் முன்னேற்றமின்றி சமுதாய மலர்ச்சி இல்லை. ஆகவே மகளிர் நலனைக் கருதி அவர்களுக்கு நல்ல வாய்ப்பும், உரிமையும் அளிப்பது ஒன்றே அவர்களின் விழிப்புணர்வுக்கும், தெளிவுற்ற சிந்தனைக்கும், அடிமை நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் உரிய வழியாகும். இதனை மனதில் கொண்டு வேலைவாய்ப்புகளில் 30 சதவிகிதம் மகளிருக்கென ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது. பள்ளிகளிலும் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணி இடங்களிலும் மகளிர்களே நியமிக்கப்படுவர்.




ஏழை நடுத்தர வர்த்தகக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு இளங்கலை பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி வரும் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

வறுமையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்து தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ. 5,000-உதவித்தொகை வழங்கப்படும்.

ஏழையெளிய பெண்கள் கர்ப்பவதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும் உழைக்க முடியாமல் இருப்ப

தால் அவர்களின் ஏழ்மை நிலையைக் கருதி எட்டாவது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந்தை பிறந்த பின்னர் இரண்டு மாத காலத்திற்கும் மாதம் ரூபாய் 50 விதம் உதவித்தொகையாக ரூபாய் 200 -வழங்க அரசு நிதிநிலை அறிக்கையிலே நான்கு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

கடந்த காலத்தில், விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் நிதிஉதவி அளிக்கப்பட்டதென்றாலும் கூட, அந்த நிதி உதவி, குறிப்பிட்ட சில பிரிவினருக்கு மட்டும், அதுவும் 3,500 ரூபாய் ஆண்டு வருமானத்திற்கு கீழே உள்ளவர்களுக்குத் தான் தரப்பட்டு வந்தது. இப்போது அதனை மாற்றி -அந்த குறிப்பிட்ட சில பிரிவினர்களுக்கு மாத்திரம் என்றில்லாமல் -வருமான உச்சவரம்பு என்ற அளவுகோலையும் நீக்கிவிட்டு-அந்தக் குறிப்பிட்ட பிரிவினர்களோடு மேலும் லாரி, ஆட்டோரிக்ஷா, தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுனர்கள், எல்லாக் கட்டிட கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், அவர்கள் விபத்தினால் இறக்க நேரிட்டால்-அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் வழங்கப்படும்.

குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்களுக்கு ரூபாய் 2,000 மானியமாக வழங்கப்படும்.

இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் பயனளிக்கத் தக்க வகையில் உடனுக்குடன் அந்தத் தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலத்தில் ஐந்தாறு ஆண்டுகள் கூட கால தாமதமாகியிருக்கின்றன.

சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்த 15 நாட்களுக்கு ஒருமுறை ஒரு முட்டை வழங்கப்படுமென்று அறிவித்துள்ளேன். இதனை நல்லமுறையில் செயல்படுத்தி ஊராட்சி ஒன்றியங்களில் கோழிப் பண்ணைகள் நிறுவி, அவைகளின் மூலமாக, முட்டைகள் நியாய விலையில் சத்துணவு மையங்களுக்கு வழங்கினால்-இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி வாரத்திற்கு ஒருமுறை முட்டை வழங்க இயலும். அதுகுறித்த கருத்துக்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழங்க வேண்டும்.

குடும்ப நலத் திட்டம் சிறப்பாக நடைபெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.







சிறு சேமிப்புத் திட்டத்தில் -நிகரச் சேமிப்பில் நான்கில் மூன்று பாகத்தை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாக அளிப்பதால், சிறு சேமிப்பு மாநிலத் திட்டத்திற்கு முக்கிய நிதிஆதாரமாக விளங்குகிறது.

சிறு சேமிப்புக்காக கவர்ச்சிகரமான திட்டங்கள் உள்ளன. சிறு சேமிப்பை கணிசமான அளவுக்கு உயர்த்தி, சிறு சேமிப்புத் திட்ட முகாம்களை தீவிரமாக நடத்துவதன் மூலம், இலக்கை எய்துவது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பாகும்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சாதாரண மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களின் பயன்கள் சாதாரண மக்களை விரைவில் அடையும் வகையில், மிக உன்னிப்பான கவனத்துடன் இத்திட்டங்கள் செயல்படுத்தப் படவேண்டும். இத்திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்தும, காலமுறை தோறும் ஆய்வு செய்தும் இத்திட்டத்தின் முன்னேற்றத்தின் மீதான அறிக்கை அரசுக்கு மாதமிருமுறை அனுப்பப்படல்வேண்டும்.

சாதி சண்டைகளோ அதன் தொடர்பான வன்முறைகளோ, இவை மட்டுமில்லாமல் வேறு காரணங்களால் ஏற்படும் வன்முறைச் சம்பவங்களோ நிகழச் சற்றும் இடம் கொடுக்கக் கூடாது. அம்மாதிரி சமயங்களில் கண்டிப்பான, திறமையான முன்னோடி நடவடிக்கைகள் எடுத்து அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறா வண்ணம் தடுக்க வேண்டும்.

கள்ளச்சாராய ஒழிப்பில் காவல்துறையினர் அதிக கவனம் செலுத்தி கள்ளச் சாராயத்தை அறவே ஒழித்திட எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். கள்ளச்சாராயம் காய்ச்சுவது தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை விரைவில் கொண்டுவர காவல்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாவட்ட நிர்வாகம் சீராகவும், விரைவாகவும் செயல்படத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இதற்கான கருத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இம்மாநாட்டில் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**[தலைமைச் செயலகத்தில் 15-4-1989 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய உரை]**





# நீங்களே சொல்லுங்கள்

பாவேந்தர் பாரதிதாசன்

சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

வித்தும் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்த அக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!

மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெலாம் வகுத்தார் - அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்திபெல்லாம் உழைத்தார்!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! - உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! - உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் - எங்கள்
சீர்த் தொழிலாளர்கள் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் நடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? - பசி
தீரும் என்றால் உயிர்போகும் [illegible]
செல்வர்கள் நீதி நன்றோ?

"குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"



கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!

தன்னிகரற்ற

பான்மின்த்*

(மொரண்ட்டல் விட்ரேட்)

குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

"பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சது —அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!"

**பால் இழப்பே இல்லை.**

"அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது."

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

"என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!"

**வசதி மிக்கதும் கூட.**

சாப்பிட வெகு இலகு பான்மின்த். கன்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — என்மாதிரி பெரிய பக எருமைகளுக்கு இரண்டு. உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!"

பால் இழப்பே இராது
பான்மின்த்

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் : சிறந்த மருந்து

பான்மின்த்*

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

UNTAS BMT 4 2217 TM

*யு.எஸ் ஏ. ஃபைசர் நிறுவன டிரேடு மார்க்

pfizer

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு :
ஃபைசர் லிட்., பி.ஒ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400021.



# பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்துத் தந்த தாமோதரனார்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

இவ் விருபதாம் நூற்றாண்டில் தமிழ் என்று சொன்னாலே, முப்பால் வழங்கும் குறளும், முத்தமிழ் முழங்கும் சிலம்பும், மூவாத் தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியமும், மண நூலாம் சிந்தாமணியும், சங்க இலக்கியச் செல்வங்களாம் எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் மற்றவர் தம் சிந்தனையைக் கவர்ந்து நிற்கும். அவர்தம் நெஞ்சம் தமிழின் தொன்மைக்கும், பெருமைக்கும், அருமைக்கும் சான்றாக நிலவும். அவற்றை எண்ணி எண்ணிப் பெருமிதத்தால் துள்ளும்.

சென்ற நூற்றாண்டிலோ எனில், இவை யாவும் ஒளி காணாத வைர மணிகளாய்ப் புதை பொருளாய்ப் புழுதி படிந்த ஏடுகளாய் இருட்டறையில் மக்கிக் கொண்டிருந்தன. அக் காலப் புலவர்களும் கவியரசர்களுமே அவற்றின் அருமை உணராது அவற்றைத் தீண்டாமைக்கு ஆட்படுத்திப் புறக்கணித்து நின்றனர். அக் காலத்தில் சமய வழியிலேயே இலக்கியங்கள் போற்றப்படும் நிலை இருந்தமையின் கம்பரும், சேக்கிழாரும், வில்லியும், ஆண்டாளும் அனைய புலவர்களே நினைவு கொள்ளப்பட்டனர். இவர்தம் இலக்கியங்களோடு, பிரபந்தங்களும் தலபுராணங்களுமே கவிராயர்கள் கற்றுக் கைக் கொள்வனவாக நிலவின. கவிபாடும் திறன் கைவரப் பெற்ற சீர்சால் புலவர்களும் சமய வழியிலேயே ஊன்றிய உள்ளத்தினராயினமையின் தத்தம் தெய்வங்கள்மீதே பிள்ளைத்தமிழ், உலா, கலம்பகம், அந்தாதி புராணம் ஆகிய சிற்றிலக்கியங்களை இயற்றி வந்தனர்.

இந்நிலையில், பொன்னவிர் மேனியளாய்த் தமிழன்னை விளங்கிய காலத்துப் பிறந்த சங்கச் செய்யுட்கள் வழக்கற்றுப் போவதுடன் தமிழே பல்லாற்றானும் தாழ்நிலையுற்றிருந்தது. வழக்கிறவாது பலராலும் கற்கப்பட்ட சங்க நூல் ஒன்றிருக்குமாயின் அது திருக்குறளேயாம். மற்றும் நாலடியார், முதலான சில அறநெறி ஏடுகளும், இலக்கண நூல்கள் சிலவுமே ஒரு சிலரால் கற்கப்பட்டன.



சி. வை. தாமோதரனார்
1832 – 1901
கலித்தொகையையும்
சூளாமணியையும்
செவ்வுறப் பதிப்பித்தவர்

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரையில், தமிழ் எழுதுவதற்கு உரிய கருவிகளாயிருந்தவை ஓலையும் எழுத்தாணியுமேயாம். எழுதுகோலும் (பென்சில்) (மைக்கட்டை) பழக்கத்திற்கு வரவில்லை. சிறுவர் தம் கல்விப் பயிற்சிக்குப் பயன்படும் கரும்பலகையும் குச்சியும் அக்காலத்தில் தான் தலைகாட்டின. பொதுக் கல்விமுறைப் பள்ளிகள் தோன்றாத காலம். கற்றவர் மிகச் சிலர். கற்க விரும்பிய இளைஞர்களோ குருவைத் தேடி, ஓடி; நாடி நின்று அவர் கற்பிக்க விரும்பிய சில சுவடிகளையே பாடங்கேட்க வேண்டும். அதற்கும் மாணவராகிக் கற்க விரும்புவோர் ஆசிரியரின் சமயத்தைத் தழுவியவராக இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் சிலரால் வற்புறுத்தப்பட்டுள்ளது. இவ் விடர்ப்பாடுகளிடையே தமிழ்க் கல்வி எப்படிப் பரவும்? முடங்கிக் கிடந்தது.

மேலும், அக்காலத்து நூல்கள் யாவும் ஓலைச் சுவடிகளே. இரும்பு எழுத்தாணி பிடித்துஓலையில் எழுதுவது எளிதன்று. மிகுந்த பயிற்சியும் ஊக்கமும் இருந்தாலன்றி எவரும் முனையார். எழுதப்பட்ட நூலைப் படி எடுப்பது என்றால் மிகுந்த உழைப்பு வேண்டும். சுவடிகளை அறியாதுகாத்தற்கோ பெருமுயற்சியும் கவனமும் வேண்டும். காலத்தால் ஓலை மடித்து விடும்போது அவற்றை மறுபடியும் படி எடுத்துக் காத்து வைப்பதற்கும் படும்பாடு பெரிது, மிகப் பெரிது. தாள்களிலே எழுதுவது, நூலை அச்சியற்றுவது ஆகிய முறைகளோடு ஒப்பிட்டு நோக்கின், ஓலைச் சுவடிக் காலத்தில் அந்த முறைக்குத் தேவைப்பட்ட உழைப்பும், காலமும் பொருளும் பலப் பல மடங்காகும். இருந்தும் அம் முறையால் பிழைகள் மலிந்து, பாட வேற்றுமைகள் நிறைந்து, சிதைவுக்கும் அழிவுக்குமே 'தமிழ்' ஆட்பட்டு வந்தது.

இந்த நிலையால் தமிழ், தமிழ்ப் புலவர்தம் நாவிலே நடமாடிய அளவு எழுத்திலே நடமாடாமலும், எழுத்திலே இடம் பெற்ற அளவும் ஏட்டிலே நிலைபெறாமலும், ஏட்டிலேநிலைபெற்ற அளவும் நாட்டிலே கால்கொள்ளாமலும், தமிழரிடையே ஒருகாலத்துப் பிறந்த அறிவுச் செல்வமெல்லாம் பிற்காலத்து மக்கள் பெற்றுப் பயன் கொள்ளுமாறு எக் காலத்தும் நிலை பெறச் செய்யும் கருவியில்லாமலும், தமிழன்னை காலத்தால் நலிந்தும் மெலிந்தும் குற்றுயிராகக் கிடந்தாள் என்றால் தவறாகாது.

மேலும் வேற்று நாட்டவர் ஆட்சிமொழி, பிறமொழி ஆதிக்கம், பொதுக் கல்வியின்மை, தாய் மொழிப் பற்றுணராமை, சாதி சமய வேற்றுமையினில் தழைத்த சமயக் காழ்ப்பு, இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாகும் அச்சுப் பொறி காணாமை முதலான காரணங்கள் பலவற்றால் தமிழ் இலக்கியங்கள் கற்பாரும் கற்பிப்பாருமின்றிக் கருத்தினில் தோன்றாது கண்ணிற் படாது, கவிராயர் வீட்டு

மச்சிலே மறைவாகக் கிடந்து மக்கிக்கொண்டிருந்தன. இராமபாணம் முதலான எழும்பற்ற புழுக்களாலும் துளைக்கப்பட்டு, அறிவுடைய மக்கட்கு விருந்தாவதற்கு வாய்ப்பின்மையின் ஓரறிவுயிர்க்கே உணவாகிப் புழுதியாகிக் குவிந்தன. அவ்வாறே கிடந்து, 'சமாதி' நிலை கண்டு, படி எடுத்து வைத்துக் கொள்ளப் படாமலே அழிந்து மறைந்து போன ஏடுகளும் பலப்பலவாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ் மக்களிடையே தமது சமயத்தைப் பரப்பும் ஆர்வத்தால், விவிலிய நூலைத் தமிழிலே மொழிபெயர்த்து அச்சேற்றியதோடு வேறு சில நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டனர். அதனைக் கண்ட சைவம் முதலான சமயத்துப் புலவர்களும் தத்தம் சமய நூல்களை அச்சியற்ற முனைந்தனர். அவ்வாறு வெளிவந்த நூல்கள் பலவும், பெரும்பாலும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட கால நூல்களும் சமய, புராண ஏடுகளாகவுமே அமைந்தன. எனினும் தமிழ் ஆர்வம் கொண்டு பழந்தமிழ்ச் சுவடிகளுக்கு அச்சுருவம் அளித்து அவை முற்றும் அழியாது காக்க முற்பட்டோரின் அருஞ்செயல் எந்நாளும் போற்றதற்குரியதாகும்.

அக்காலத்தில் வரலாற்று அறிவு நிலைபெறாமையின், தமிழ் இலக்கியங்களுள் தலைமையுடைய சங்கச் செய்யுட்கள் பற்றி அறிந்தோர் மிக்க சிலர். அவற்றின் அருமை உணர்ந்து அவற்றை அச்சியற்றிப் பாதுகாக்க எண்ணியோர் ஒரு கை விரல் அளவும் ஆகார். அவரினும், அம் முயற்சியிலே ஈடுபட்டு உழைத்த நல்லறிஞர் தம் அருமை உரைக்கக் கூடுமோ? அத்தகு அரிய பணியில் ஈடுபட்டுத் தமது உடல், பொருள், ஆவியைத் தமிழுக்கே ஒப்படைத்துச் சங்க இலக்கிய இலக்கணங்களை வெளியிட்ட தகைசால் பெரியார் இருவர். ஒருவர் யாழ்ப்பாணம் பயந்த அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், மற்றொருவர் சோழநாடு வழங்கிய சான்றோர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள்.

அவர்கட்கு முன்னரே சுவடிகள் சிலவற்றை அச்சியற்றி வெளியிடும் தொண்டிலே ஈடுபட்ட சிலருள், திருப்பெருந்திரு ஆறுமுக நாவலர், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், திருமயிலை சண்முகம் பிள்ளை, மழவை மகாலிங்கய்யர் முதலானோர் குறிப்பிடப்பட வேண்டியவராவர்.

தாமோதரம் பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுபிட்டி என்னும் ஊரில் பிறந்து, இளமையிலேயே கல்வியிற் சிறந்து, கன்னாகம் முத்துக்குமார கவிராயர் என்



னும் பெரும்புலவரிடத்தே தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி பெற்றார். கல்லூரியில் பயின்ற காலத்திலேயே அவரது தமிழ்ப் புலமையை அவர்தம் ஆசிரியர் ஒருவர் கண்டு பாராட்டிப் 'பண்டிதர்' என்று அழைத்துள்ளார் என்பதினின்று அவரது அறிவின் சிறப்பு விளங்கும்.

அவரது திறமையை அறிந்த பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் கிழமை ஏட்டில் அதன் ஆசிரியராக அமரச் செய்தார். பின்னர் மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகவும்விளங்கினார். சென்னைப் பல்கலைக் கழகம் முதன் முதலில் நடத்திய பி.ஏ. தேர்வில் முதல்வராகவும், பின்னர்ச் சட்டத்துறைத் தேர்விலும் வெற்றி பெற்றார். அரசாங்க அலுவலில் பல ஆண்டுகள் பணி ஆற்றி, பின்னர்ச் சில ஆண்டுகள் வழக்குரைஞராகவும் புதுக்கோட்டை நீதிபதியாகவும் இருந்து புகழ் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தேர்வாளராகவும் அவர் இருந்தார். பின்னாட்களில், பரிதிமாற் கலைஞன் எனப் புகழ்பெற்ற சூரிய நாராயண சாத்திரி அப்போது பி.ஏ. தேர்வு எழுதினார். அவரது தமிழ்ப் புலமையைக் கண்டு மகிழ்ந்து பாராட்டி 'திராவிட சாத்திரி' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினார். அறிஞர் தாமோதரம் பிள்ளை அவர்களது தமிழ்த்தொண்டு பல வகையானுஞ் சிறந்திருந்தது கண்டு 'இராவ்பகதூர்' என்னுஞ் சிறப்புத் தகுதியை அரசாங்கம் அவருக்கு அளித்தது.

அவர் இளமையிலேயே தமிழ்க் கல்வியில் சிறந்தனால், அந்நாளில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்கள் பலவும் பதிப்பிக்கப்பட வேண்டுமென விழைந்தார். ஏட்டுச் சுவடிகள் பல, பூச்சிகளால் அரிக்கப்பட்டும், படிப்பாரும் பாதுகாப்பாரும் இன்றியும் மண்ணுக்கு இரையாகி வருவதைக் கண்டபோதெல்லாம் அவர் துணுக்குற்றார். பழங்காலத்து ஏடுகள் பல இவ்வாறே அழிந்து போயுள்ளன என்பதையும் அவர் வருத்தத்தோடு உணர்ந்துள்ளார்.

அவர் அச்சேற்றிய கலித்தொகைக்கு எழுதிய பதிப்புரையில் குறித்துள்ளது இது:

"என் சிறு பிராயத்தில் எந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்களை இப்பொழுது தமிழ் நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் சுவடிகளும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமை தொட்டுப் பார்த்தவர்க்கன்றோ தெரியவரும்! ஏடு எடுக்கும்போதே ஓரம் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது: ஏட்டைப் புரட்டும்போது துண்டு துண்டாகப் பறக்கிறது. இனி, எழுத்துக்களோவென்றால் வாலுந் தலையுமின்றி நாலு புறமும் பாணக் கலப்பை (புழு) மறுத்து மறுத்து உழுது கிடக்கிறது.

"இந்த நிலையிலேனும் எல்லா இலக்கிய இலக்கணங்களும் ஏடுகளாகவாவது கிடைத்தனவா என்றால், அதுவும் அரிதேயாக இருந்தது எனவும், அவை அச்சில் பதிக்கப் படாவிட்டால் தமிழ் மக்கள் அவற்றின் பயனைப் பெறமுடியாது போய்விடும் என அஞ்சியே பதிப்பிக்கத் தலைப்பட்டதாகவும்" தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் தோன்றிய நூல்களின் சுவடிகளே முழுதாகக் கிடைப்பது அரிதாகுமாறு அவ்வளவு குறுகிய காலத்தில் சுவடிகள் அழிவுற்றுப் போவதையும் அவர் குறிப்பிடுகிறார்.

மேலும் அந்தச் சுவடிகளைக் கொண்டு நூலைப் பதிப்பிப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கடப்பதும் எளிதன்று. ஏடுகளைப் பிடித்து ஒப்பு நோக்கி உண்மையான பாடம் காண்பது கடினமாக இருந்தது என்பதைத் தாமோதரம் பிள்ளை அவர்களே இவ்வாறு விவரித்துள்ளார்:

"இலக்கணக் கொத்துடையார், நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என வருத்தமுவகை ஆசிரியரோடு யான் பரிசோதகாசிரியரென, இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் மூன்றுவர் தொழிலினும் பார்க்க மிகக் கடியதென்றும், அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். நூல் வல்லன்றோ தெரியும் தலைச்சுமை பரிசோதகாசிரியர் படும் கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டோர்க்கன்றி விளங்காது. ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு என்கண் காணச் சிந்தாமணியைப் பரிசோதித்துப் பதிப்பித்த கும்பகோணம் தமிழ்ப் பண்டிதர் உ. வே. சாமிநாதய்யரைக் கேட்டால், இந்நால்வகை ஆசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி".

இவ்வாறு பல்லாற்றானும் பேருழைப்பும் விடாமுயற்சியும் குன்றாத ஊக்கமும் வேண்டும். இவ்வரிய பதிப்பாசிரியர் பணியைத் தாமோதரம் பிள்ளை அவர்கள் தாமே விரும்பி மேற்கொண்டார். அதனால் நமக்குக் கிடைத்த செல்வங்கள் பல.

திருப்பெருந்திரு ஆறுமுக நாவலரோடு தொடர்புடையவராகத் தாமோதரம் பிள்ளை அவர்கள் தமிழ்த்தொண்டு செய்த நிலையில், நாவலர் அவர்கள் 1879ஆம் ஆண்டில் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையோடு வெளியிட்டனர். நாவலருக்குப் பின்னும், இவர் அப்பணியை விடாது தொடர்ந்து தொல்காப்பியம்பொருளதிகாரத்தைநச்சினார்க்கினியர் உரையோடு 1885இல் பதிப்பித்தார். அதற்கு முன்னரே வீரசோழியம், கட்டளைக் கலித்துறை ஆகிய நூல்களைப் பதிப்பித்திருந்த பிள்ளை அவர்கள் இறையனார் அகப்பொருளையும், தணிகைப் புராணத்தையும் பதிப்பித்தனர். அதன் பின்னர்ப் பல ஏடுகளையும் ஆராய்ந்து 1887இல் கற்றோர் ஏத்தும் கலித்தொகையை அச்சேற்றி வழங்கினார். அதைத் தொடர்ந்து இலக்கண விளக்கத்தை உரையுடன் பதிப்பித்ததோடு, தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணியையும் வெளியிட்டார். அதன் பின்னர்த் தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் நச்சினார்க்கினியர் உரையுடன் வெளியிடப்பட்டது. மழவை மகாலிங்க அய்யர் அவர்கள் பல ஆண்டுகட்கு முன்பே இதனைப் பதிப்பித்திருந்த போதிலும், தொல்காப்பியம் முழுவதும் பிள்ளை அவர்கள் பதிப்பாக வெளிவந்தது சிறப்பேயாகும். பின்னும் அவர்கள், அகநானூற்றைப் பதிப்பிக்க விரும்பி ஆராய்ந்துகொண்டிருந்த காலத்தில் 1901இல் தம் உயிரினும் இனிதெனக் கொண்ட தமிழொடுகலந்துவிட்டார்.

அவரது தாயதமிழ்ப் பணியாலேயே சங்க இலக்கியங்கள் பல தமிழ் கற்பாரிடையே பேச்சிலும் எழுத்திலும் நடமாடும் நிலை பிறந்தது என்றால் அது மிகையாகாது.

மேலும், அவர் பதிப்பித்த ஏடுகளுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரைகள் பலவும், அக்காலத்திய தமிழ்மொழி ஆராய்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. தமது ஆராய்ச்சியில் தவறியதைப் பிறர் விளக்கி உரைப்பின், அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவும் அவர் தயங்கியதில்லை. ஆனால், தமிழ் மொழியை இழித்தும் தாழ்த்தியும் கூறுவார் கருத்தை அவர் கண்டித்துரைக்கத் தவறியதில்லை.

தமிழ் ஒரு தனிமொழி: அதன் பெயர் திரவிட மரூஉ அன்று. 'தமிழே' என்பதும், அது பரதகண்டத்தில் எம்மொழிக்கும் பிந்தியதன்று என்பதும், எல்லாவற்றாலும் பிறமொழிக்குத் தாழ்ந்ததன்று என்பதும் வீரசோழிய பதிப்புரையில் அவர் குறித்த கருத்துக்களாகும்.

தமிழ் என்னும் பதம் 'திராவிடம்' என்னும் பதத்திலிருந்து மருவி வருவதற்கு இடமுண்டு என்பதைக் காட்டி, 'திராவிடமே தமிழாயிற்று' என்று சிலர் கூறி வாதித்ததைக் கண்டு அதனை மறுத்து அவர் எழுதியதில் ஒரு பகுதி:

"அகத்தியர் காலத்தில் முன் தொட்டு உள்ள பதினாறாயிரம் வயதுள்ள 'தமிழ்' பதத்தையும் உச்சியினி புரத்தில் இரண்டாயிரம் வருடத்திற்கு முன் பிறந்த 'திராவிட' பதத்தையும் ஒன்றென்றால் யார்தாம் நகையார்? மூதாதை திருமன்றலில் பௌத்திரன் சந்தன், தாம்பூலம் பரிமாறினான் என்பதற்கும், இதற்கும் யாது பேதம்? தமிழ் என்னும் பதத்தை எடுத்தாண்ட அகத்தியர், தொல்காப்பியர் காலத்துச் சமஸ்கிருத நூலுடையோராக நாரத, வியாச, வசிட்டராதியர் வாய்மொழியினின்று திராவிட சப்தம் வழங்கியதை முதற் காட்டியன்றோ பின்னர் இம்மதம் நாட்டப் புகுதல் வேண்டும்? சிவபெருமான் அகத்தியரைப் பொதிகைக்கு அனுப்பிய கதை, காந்தம் முதலிய பழைய புராணங்களில் உளதாகவும் ஆண்டுத் திராவிட சப்தத்தைக் காண்கிலமே! ஆலசிய புராணம், பாகவதம் முதலிய பிற்றை நாள் நூல்களிலன்றோ அது முளைத்தது! அகத்தியரும், 'யான் போகுமிடம் கலை வல்லோரும் முனிவரும் நிறைந்தபெருமாண்பினது ஆதலின், அவர்கள் மொழி உபதேசித்து என்னை அனுப்புக' என்று கேட்டதன்றித் 'திரவிட' மென்று கேட்டதில்லை".


இவ்வாறு தமிழ் என்னும் பெயரே தமிழுக்கு உரியதாவதை நிலைநாட்டியது முதல், -சங்க இலக்கியச் செல்வங்களை வழங்கியது வரை- தமிழ் மக்கள்புத்துணர்ச்சி கொள்ளுதற்குத் துணை நின்றார் பெருந்தகை தாமோதரம் பிள்ளை அவர்கள்.

**(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட "தமிழ்க் கடல் அலை ஓசை' என்ற நூலிலிருந்து)**

## கல்விக் கண் தந்த ஏந்தல்

**உள்ளாட்சி மன்றங்கள் கல்விக் கூடங்களை அமைக்க வழிவகுத்த வள்ளல் சர் பி. தியாகராயர்.**

**சென்னை நகராட்சி மன்றம் ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்வி பயிலும் வாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் முதன்முதலில் ஐந்து நகராட்சிப் பள்ளிகளை அமைத்தவர் சர். பி. தியாகராயர். குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியவரும் அவரே.**



திராவிட சமுதாயச் சிற்பி
சர். பி. தியாகராயர்

# வீட்டுவசதி ஒதுக்கீடுகளில் ஒழுங்கீனங்கள்



சென்னை நகரத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை வழங்குவதில் 1986-87ஆம் ஆண்டுகளில் அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவையான அடிப்படை வசதிகள் பற்றிய சட்ட விதிகளை (எம்.எம்.டி.ஏ)ரூல்ஸ் தளர்த்தி பலருக்கு முறைகேடான அனுமதிகளை அன்றைய அந்தத்துறை அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும், கட்டட விதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ) மற்றும், அரசுச் செயலாளர் பரிந்துரை செய்யாமல் ஆட்சேபணை தெரிவித்த பல அடுக்குமாடிக்கட்டடங்களுக்கு அமைச்சர் தன்னிச்சையாக எந்தக் காரணமும் இன்றி விதிகளைத் தளர்த்தி அனுமதி தந்து உத்தரவிட்டுள்ளார் என்றும்கடுமையான கண்டனங்கள் பொதுமக்களிட்மிருந்து எழுந்தன.

குடியிருப்புப் பகுதியில் கடைகள், ஒட்டல்கள், லாட்ஜ்கள், மற்றும் வியாபாரக் கட்டடங்கள் கட்டவும், ஏற்கெனவே நெருக்கடியான குறுகிய சாலைகள் உள்ள இடங்களில்-அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் முறைகேடாகப் பெருமளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி சென்னையில் உள்ள நுகர்வோர் நடவடிக்கைக் குழு (கன்ஸ்யூமர் ஆக்ஷன் குரூப்) உச்சநீதி மன்றத்தில் வழக்கு ஒன்றும் தொடர்ந்தது.

இதற்கிடையில் திருவாளர்கள் வலம்புரி ஜான், ஏ.சி.சண்முகம், ஜகத்ரட்சகன் ஆகிய அ.தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள்-வீட்டு வசதித் துறை அமைச்சர் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதிகள் வழங்க உத்தரவிடுவதில் பெருமளவு ஊழல்கள் புரிந்துள்ளார் என்று அப்பொழுது இருந்த கவர்னர் திரு குரானா அவர்களிடம் மனு ஒன்றை அளித்தார்கள். அந்த மனுவின் மீது விஜிலன்ஸ் கமிஷனர் விசாரணை செய்ய ஆளுநராக இருந்த குரானா உத்தரவிட்டிருந்தார்.

மேலும் 180, என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் வசிக்கும் திரு எஸ்.கிருஷ்ணன் என்பவரும் தனது வீட்டுக்கு அருகிலுள்ள மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு, திரு.வி.தாயாராம் மற்றும் திரு.வி.சிமன்தாஸ் இருவருக்கும் அனுமதி வழங்குவதில் அமைச்சர் முறைகேடாக உத்தரவு இட்டிருக்கிறார் என்று முறையிட்டு, அது குறித்து விசாரிக்கும்படி கேட்டிருந்தார். அந்த மனுவின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கவர்னர் குரானா விடுத்த உத்தரவை யொட்டி இதுபோன்ற பொது நல விரோத நடவடிக்கைகளைக் களைந்திட ஆர்வம் கொண்டுள்ள இன்றைய அரசு இதுபற்றி விரிவாக ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகியுள்ளன.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் வீட்டு வசதித் துறையால் பரிந்துரை செய்யப்படாமலிருந்தும் அமைச்சர் தன்னிச்சையாக உத்தரவிட்ட அயிட்டங்கள் பின் வருமாறு:

| | |
|---|---|
| 21.10.1986முதல் 30.11.1987வரை | 124 அயிட்டங்கள் |
| 1.12.1987 முதல் 24.12.1987வரை | 17 அயிட்டங்கள் |
| 25.12.1987முதல் 6.1.1988 வரை | 33 அயிட்டங்கள் |
| 7.1.1988 முதல் 29.1.1988 வரை | 7 அயிட்டங்கள் |
| | 181 அயிட்டங்கள் |

இந்த 181 இனங்களில் 174 இனங்கள் ஒருவர் அந்தத் துறையின் அமைச்சராக இருந்த போது உத்தரவு போட்டவைகளாகும்.

எம்.ஜி.ஆர். மறைந்த நான்காவது நாளான

28.12.87ல் - 2அடுக்குமாடிக்கட்டடங்களுக்கும்
29.12.87ல் -1 அடுக்குமாடிக்கட்டடத்திற்கும்
30.12.87ல் -1 அடுக்குமாடிக்கட்டடத்திற்கும்
31.12.87ல் - **அதாவது அந்த அமைச்சர் தனது பதவி காலத்தில் கையொப்பமிட்ட கடைசி நாளில் மட்டும் 29 அடுக்குமாடிக்கட்டடங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.**

மொத்தமாக அவர் அந்தத் துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில்- அதாவது 21.10.1986 முதல் 31.12.1987வரை **174 அயிட்டங்களில் எம்.எம்.டி.ஏ., மற்றும் வீட்டுவசதித் துறை ஆகியவற்றின் ஆட்சேபணைகளைப் புறக்கணித்து. தன்னிச்சையாக-உத்தரவிட்டுள்ளார்.**


தமிழரசு

தமிழ் - மாதம் இருமுறை

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா ரூ. 24
6 மாதச் சந்தா ரூ. 12

'தமிழரசு' - ஆங்கிலம்

ஆண்டுச் சந்தா ரூ. 12 6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தாத் தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி : உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


"இன்னின்ன காரணங்களுக்காக அனுமதி மறுக்கப்படுகிறது" என்று தெள்ளத்தெளிவாக எம்.எம்.டி.ஏ.வும், வீட்டு வசதித்துறையும் எழுத்து பூர்வமாகக் கோப்புகளில் விளக்கியிருந்தும் கூட, பெருமளவுக்கு முறைகேடான உத்தரவுகள் அந்த அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

திரு எஸ். கிருஷ்ணன் என்பவர் அன்றைய கவர்னர் குரானா அவர்களிடம்கொடுத்த மனுவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு -கவர்னர் அலெக்சாண்டர் ஆட்சியில் இதுகுறித்து முன்னாள் அட்வகேட் ஜெனரல் திருகிருஷ்ணமூர்த்தியிடம் 10.11.88 அன்று சட்டக் கருத்து (லீகல் ஒபினியன்) பெறப்பட்டுள்ளது.

அதன்படி

"விதிகளைத் தளர்த்தி முன்னாள் அமைச்சர் எடுத்த முடிவுகள் எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் அமையவில்லை. அவ்வாறு காரணம் குறிப்பிடாமல் பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரின் ஆணைகள் தன்னிச்சையானது - சட்டப்படி செல்லத்தக்கதாகாது. இதுபோன்ற அதிகாரங்களைப்பயன்படுத்துவது முறைகேடானது என்று அறிவிக்கப்படவேண்டும்" என்று அட்வகேட் ஜெனரல் கிருஷ்ணமூர்த்தி, கருத்து கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட காரியங்களால் கீழ்க்கண்ட பொது நலக்கேடுகள் விளைந்துள்ளன:

1. பல குடும்பங்கள் வசிக்கிற நெரிசலான நிலையில் பல அடுக்கு மாடிக் கட்டடங்களுக்குப் பாதுகாப்பு விதிகளை மீறி அனுமதிஅளித்ததால் தீ விபத்து மற்றும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு சாலை விபத்துக்கள் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

2. அடுத்தடுத்த நெருக்கமான பலமாடிக் கட்டடங்களுக்குத் தேவையான இடைவெளியும் திறந்த வெளியும் ஒதுக்கப்படாமல் அது சம்பந்தப்பட்ட அவசியமான விதிகளைத் தளர்த்தி, தனியார் பலருக்கு உதவிடும் வகையில் உத்தரவிட்டதில் போதிய காற்றோட்டம், சூரிய வெளிச்சம் போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்காமல் போவதுடன் அந்த வட்டாரத்தில் வாழ்வோரின் 'பிரைவசி'யும் பாதிக்கப்படுகிறது.

3. குடிதண்ணீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல் முதலிய அடிப்படை வசதிகள் பாதிக்கப்படும் அளவுக்கு ஏற்கெனவே நெருக்கமாசக் குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் மேலும்மேலும் அதிகஅளவு அடுக்கு மாடிக்கட்டடங்களை வ்திகளை மீறி அனுமதித்ததன் மூலமாக மக்களின் ஆரோக்கியமான வாழ்வு சிதைந்து விட்டது.

அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் வலம்புரி ஜான், ஏ.சி.

சன்முகம், ஜகத்ரட்சகன்-ஆகியோர் கொடுத்திருந்த மனுவின்பேரில் முன்பு ஆளுநராகஇருந்த திரு. குரானா அவர்களே இதுபற்றி விஜிலன்ஸ் கமிஷனர் விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்.

**அதையொட்டி, இந்த அரசு முன்னாள் அமைச்சர் செய்த அடுக்குமாடிக் கட்டட ஊழல் குறித்து உகந்த விசாரணையை மேற்கொள்ளும் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பூங்காக்களையும் மற்ற பொது இடங்களையும் வீட்டு மனைகளாக ஒதுக்குவதில் முந்தைய அரசு காலத்தில் நடந்த முறைகேடுகள் பற்றிய அறிவிப்பு,**

புதிய வீட்டுவசதித் திட்டங்களை உருவாக்கும்போது மொத்தப்பரப்பளவில் 10 சதவீதம் பூங்கா, சமூகக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், கடைகள் முதலிய பொதுநோக்குக் காரியங்களுக்காக ஒதுக்குவது என்று விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இது போன்ற பகுதிகள் மேற்கண்ட விதிகளுக்கு மாறாக வீட்டும்னைகளாக மாற்றப்பட்டு 1986 மற்றும் 1987ஆம் ஆண்டுகளில் அதிக அளவில் தனியாருக்குஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்று பொதுமக்கள் கண்டனம் தெரிவித்தனர். இது போன்ற பொதுநோக்குக் காலியிடங்களை வீட்டு மனைகளாக மாற்றம் செய்து, சம்பந்தப்பட்ட துறையின் அன்றைய அமைச்சரே அவருடைய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அண்ணா நகரில் காங்கிரஸ் ஆட்சியில் துவக்கப்பட்ட தொழிற் கண்காட்சி 1967ல் பேரறிஞர் அண்ணா காலத்தில் திறந்து வைக்கப்பட்டது நினைவிருக்கலாம். அதன் நினைவுச் சின்னங்களாக ஒரு கோபுரமும் (Tower) மற்றும் சிலைகளும், பூங்காக்களும் இன்னும் இருந்து வருவது நினைவிருக்கலாம். இது போன்ற சமூகக்கூடம், அந்த வட்டாரப் பொதுமக்களுக்குப் பயன்படும் மருத்துவமனை, பள்ளிக்கூடம், பூங்காக்கள்-போன்றவைகளை உருவாக்குவதற்காக ஆங்காங்கே காலியாக விடப்பட்டிருந்த சுமார் 302 கிரவுண்டுகளை வீட்டு மனைகளாக மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் விவரம் கீழே தரப்படுகிறது.

இப்படித் தனியாருக்கு விநியோகம் செய்யப்பட்ட (240 பிளாட்) 302 கிரவுண்டுகளும் இன்று சென்னை மாநகரத்திலேயே மிக அதிகமான ரூபாய்க்குவிற்பனையாகக்கூடிய அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், பெசன்ட் நகர், இந்திரா நகர் போன்ற Posh Locality யில் இருப்பவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்தே இந்த வீட்டுமனைகளின் விலை மதிப்பை மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழக மக்களும் ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம்.

| விவரம் | பிளாட் |
|---|---|
| மார்க்கெட்டுக்காக ஒதுக்கப்பட்டவை | 17 |
| கடைகள் | 50 |
| பொதுக்காரியம் | 26 |
| வியாபாரப்பகுதி(வணிக வளாகம்) | 22 |
| திறந்தவெளி | 17 |
| கிணறு | 1 |
| பள்ளிக்கூடம் | 2 |
| வாகனங்கள் நிறுத்துமிடம் | 8 |
| தொழில் பணிக்கூடங்கள் | 13 |
| நலிவடைந்தோருக்கான வீடுகள் | 17 |
| புதிதாக ஒதுக்கப்பட்டவைகள் | 35 |
| சமூகக்கூடம் | 13 |
| குடியிருப்புப் பகுதிகள் | 8 |
| பூங்கா | 4 |
| மருத்துவமனை | 7 |
| மொத்தம் | 240 |

(ஆக மொத்தம் 302 கிரவுண்டுகள்)

விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் பெரும்பாலான ஒதுக்கீடுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் செயற் பொறியாளர்கள் (எக்சிகியூடிவ் என்ஜினியர்கள்), அமைச்சருடைய வெறும் வாய்மொழி உத்தரவைப் பெற்றதன் மூலமே, வீட்டுவசதி வாரியம் மூலம் அரசுக்கு காலியிடங்களை வீட்டுமனைகளாக மாற்றுவது குறித்து அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கைகள் அனுப்பப்படுவதற்கு முன்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (எம்.எம்.டி.ஏ) அனுமதி எதையும்பெறவில்லை. அவசர அவசரமாகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் செயற்பொறியாளர்களிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டு உடனுக்குடன் **ஆணைகள் வெளியிடப்பட்டன. ஒரு ஒதுக்கீட்டிற்குக் கூட இன்னாருக்கு ஒதுக்கீடு செய்யலாம் என்று வீட்டுவசதி வாரியம் பரிந்துரை செய்யவில்லை**

இந்த 240 பிளாட்டுகளில், 43 நபர்கள் வீட்டுவசதி வாரியத்திடமிருந்து No objection certificate அதாவது ஆட்சேபணையில்லாத சான்றிதழைப் பெற்று,கட்டடம் கட்டும் வேலையைத் துவக்கிவிட்டனர். மீதமுள்ள 197 நபர்கள் இன்னும் கட்டடம் கட்டத் துவங்கவில்லை.

உதாரணத்திற்கு, இதுபோன்ற 53 இனங்களை ஆய்வு செய்ததில் ஏராளமான ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரே நபருக்கு 2 ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதும், ஏற்கெனவே வீடு உள்ளோருக்கு மீண்டும் வீட்டு மனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

அன்றைய அரசின் அல்லது அமைச்சரின் அலாதி அன்பைப் பெற்ற சில VIP களின் பெயர்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் திருமதி பானுமதி தம்பிதுரை,
க-பெ. தம்பிதுரை எம்.பி.,

(இது மருத்துவமனைக்காக உரிய பகுதியல்ல—இது மாற்றப்பட்டு அதுவும் ஏழரை கிரவுண்டு-அண்ணா நகரில் 24.7.87ல் இவருக்கு ஒதுக்கப்படுகிறது)

இன்னொருவர்:

டாக்டர் திருமதி நற்குணம்
டி-22, ஏழாவது அவென்யூ,
சென்னை-90

இவருக்கும் சுமார் ஏழரை கிரவுண்டு பெசன்ட் நகரில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலம் **அந்த வட்டார மக்களுக்குத் தேவையான மார்க்கெட் ஒன்று கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதையும் மாற்றி இவருக்குத் தரப்பட்டுள்ளது.**

இதுபோல் பல பெயர்கள் உள்ளன. பொதுவாக வீட்டுவசதி வாரியத்தில் வீடு கட்டுவதற்கு இரண்டு அல்லது இரண்டரை கிரவுண்டுதான் தருவது வழக்கம். விதிகளை மீறியதுமல்லாமல் ஏழரை கிரவுண்டுகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே கலைஞர் கருணாநிதி நகரில் அந்த வட்டார மக்களுக்கு உதவும் வகையில் கடைகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடம் அ.இ அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு கருப்பசாமி பாண்டியனுக்கும், திரு. கோவைத்தம்பிக்கும் வீடு கட்டுவதற்கு என்று வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு முறைகேடாகத் தரப்பட்டுள்ள 302 கிரவுண்டில் உள்ள 240 பிளாட்களின் மார்க்கெட் விலை சுமார் 13 கோடி ரூபாய்.

இதன் பின்னணியில் இந்த 240 பிளாட்டுகள் (Plots) ஒதுக்கீடு தொடர்பாக விரிவாக விசாரணை செய்து நடைபெற்ற வீட்டு மனை ஒதுக்கீடு ஊழல் குறித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் மற்றும் திர்வாக இயக்குநருக்கு இவ்வரசு ஆணையிடும்.

1. ஒதுக்கீடு பெற்றோர்கள் அனைவரும் வீட்டுமனை பெறத் தகுதி உள்ளவர்களா என்பதை விசாரித்து, தகுதியற்றவர்கள் ஒதுக்கீடு பெற்றிருப்பின், அவ்வொதுக்கீடுகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

2. இந்த மனைகளில் முறையான விசாரணையின்றி வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

3. ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட, பூங்கா, சமூகக் கூடம் போன்ற பொதுநோக்குக் காலியிடங்களை வீட்டுவசதி வாரியம் திரும்பப் பெற வேண்டும்.

இந்த ஆணையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் உரிய நடவடிக்கை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டும். அதனையொட்டி இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டு ஊழல்கள் புரிந்தோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

—மாண்புமிகு முதல்வர் அவர்கள்
சட்டப் பேரவையில் கடந்த 4.4.89 அன்று
வெளியிட்ட அறிவிப்பு

**தெரிந்து கொள்ளுங்கள்**




சிறுவர் முதல் பெரியவர்கள் வரை தினசரி பயன்படுத்துவது சைக்கிள். நம்முடைய ஒவ்வொருவர் வீட்டிலும் சைக்கிள் இல்லாமல் இருக்காது. அது அன்றாடம் பயன்படுத்தும் இரண்டு சக்கர வாகனம்.

அன்றாடம் பயன்படுத்தும் இந்த சைக்கிளை முதன்முதலில் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பிளான்ஷார் - மெகாரர் எனும் இருவர் 1779-ம் ஆண்டு கண்டுபிடித்தனர்.

இவர்கள் முதலில் இரு மரச் சட்டத்தில் அமர்ந்து இரு கால்களினால் தள்ளிச்சென்று ஓட்டிக் காட்டினார்கள். ஆனால் இதனைத் திருப்ப வேண்டுமானால் கீழே இறங்கி எந்தப் பக்கம் செல்ல வேண்டுமோ அந்தப் பக்கம் திருப்பி வைத்து ஓட்ட வேண்டும். ஆகையால் இது பயனற்றதாகிவிட்டது.

இதனை தம் விருப்பம்போல் திசை திருப்பும் விதத்தில் 1851-இல் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கார்ல் லோன்ட் ரெய்ஸ் என்பவர் முன் சக்கரம் வைத்து டிரெய்ஸின் என்ற சைக்கிளை அமைத்தார். இந்த சைக்கிளையும் இரு கால்களால் தள்ளிக்கொண்டு ஓட்ட வேண்டும். அதன் பிறகு சில மாற்றங்கள் செய்து பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த எர்னஸ்ட் மீஷோ என்பவர் 1861இல் முன் சக்கரத்தில் மிதியடிகள் பொருத்தி, அச்சக்கரத்தின் மீது ஓட்டுபவரின் இருக்கையைப் பொருத்தி பயன்படுத்தும் விதத்தில் தயாரித்தார். இச்சைக்கிளுக்குப் பென்னி பெர்திங் எனப் பெயரிட்டனர். இந்தச் சைக்கிள்தான் மக்களுக்குப் பயன்படும் விதத்தில் ஓட்டப்பட்ட சைக்கிளாகும்.

அதன்பிறகு இரு சக்கரங்களையும் இணையும் வகையில் 1874 இல் சங்கிலி Chain பொருத்தப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டது.

1852-ஆம் ஆண்டு சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரண்ட்ரிச் பிஷர் என்பவர் சைக்கிளுக்குப் பால்பேரிங்குகள் - மிதியடிகள் பொருத்தப்பட்டு விரைவாகச் செல்லும் வகையில் அமைத்தார். ஆனால் இன்று நாம் உபயோகப்படுத்தும் வகையில் வடிவமைத்துக் கொடுத்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் பாய்ட் டன்லப் என்பவராகும்.

இவர் 1889-இல் காற்றடைத்த ரப்பர் டயர் பொருத்தி ஓட்டுபவருக்கு எந்தவித அதிர்ச்சியும் இல்லாமல் அதேசமயம் வேகமாகவும் ஓட்டும்படிச் செய்தார்.

அது மட்டுமின்றி இரண்டு சக்கரங்களும் ஒரே அளவாகவும், ஓட்டுபவரின் எடை சமமாகவும் இருக்கும் பொருட்டு இருக்கையுடன் கூடிய அமைப்பை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

—திரு. மயிலைத் தொண்டன் எழுதிய 'அறிவியல் சிந்தனைக் களஞ்சியம்' என்னும் நூலிலிருந்து.

# உணர்வும் உறவும்

## டாக்டர் மு.வரதராசனார்

சிறு பெண்கள் சிலர் கூடி மணலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் புன்னைக் கொட்டைகளை வைத்துக்கொண்டு விளையாடினார்கள். காசு முதலியவைகளை மணலில் அழுத்தி மறைத்துப் பிறகு மணலைத் தோண்டி எடுத்துப் பார்ப்பதில் சிறுவர்களுக்குத் தனி இன்பம் உண்டு. அழித்தல் ஆக்கல் என்னும் ஆற்றல் தங்களிடம் இருப்பதை அப்போது அவர்கள் உணர்கிறார்கள் அல்லவா? அதுதான் இன்பத்துக்குக் காரணம். பொம்மைகளை வைத்து விளையாடுவதில் காக்கும் ஆற்றல் இருப்பதை உணர்ந்து மகிழ்கிறார்கள். இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலில்தான் சிறுவர்களும் இன்பம் காண்கிறார்கள்.

இப்படி விளையாடி வந்த புன்னைக் கொட்டைகளில் ஒன்றை மறந்து விட்டு விட்டார்கள். அந்தக் கொட்டை மணலிலேயே அழுந்திச் சிலநாள் கிடந்தது. அதனுள் கிடந்த உயிர் வாளா இருக்குமா? அது வெளிப்பட்டது. புன்னைக் கொட்டை புன்னைச் செடியாகித் தோன்றியது.

விளையாடிய சிறுமியர் பலருள் ஒருத்தி அந்த விந்தையைக் கண்டு வியந்தாள். படைத்தலும மறைத்

### இலக்கிய விருந்து

தலும் ஆகிய விளையாட்டுக்கு உரிய புன்னைக் கொட்டை இப்போது காத்தல் தொழிலுக்கு உரிய இளஞ் செடியாக விளங்கியது. சிறுமியோ இளந் தாயாகிவிட்டாள்; அந்தச் செடியின்மேல் கொண்ட அன்புதான் அவள் மனத்தைத் தாய்மனம் ஆக்கிவிட்டது.

சிறு செடி வளர்ந்து ஓங்கும் என்று கனவு கண்டாள்; வளர்க்க முனைந்தாள்; அன்பு சொரிந்தாள்.

அந்தப் புன்னைச் செடிக்குத் தண்ணீர் மட்டும் ஊற்றினால் போதும். ஆனால் அது யார் செய்யும் செயல்? அதைச் செடி என்று அறிந்த மூளை உடையவர் செயல். சிறுமியோ தன் அன்பை முன்னே செலுத்தி உணர்ந்து வளர்த்தாள். தன் தாய் தன்னை வளர்த்த முறை-தேனும் பாலும் ஊட்டித் தன்னை வளர்த்த முறைதான் சிறுமியின் உணர்வில் நின்றது. தானும் அந்த இளஞ் செடியை அவ்வாறு வளர்க்க முனைந்தாள்.

இளம் புன்னைச் செடிக்கு நாள்தோறும் தேனும் பாலும் கிடைத்துவந்தன; தண்ணீரும் ஒவ்வொரு வேளை கிடைத்திருக்கும்.

பல ஆண்டுகள் கழிந்தன. செடி மரமாக ஓங்கியது. சிறுமி மங்கையாக வளர்ந்தாள். திருமணம் நடந்தது. இல்வாழ்க்கை அமைந்தது. குழந்தைச் செல்வமும் வாய்த்தது. இந்தக் குழந்தை ஒரு பெண் குழந்தைதான்.

இந்தக் குழந்தை வளர்ந்து சிறுபெண் ஆனது. பெற்ற தாய்க்கு இந்தச் சிறுபெண் முதல் குழந்தையா? இரண்டாம் குழந்தையா? உணர்வு உலகம் கண்டவர்கள் உண்மையைச் சொல்வார்கள். இந்தச் சிறுபெண் அவளுக்கு இரண்டாம் குழந்தைதான். அவள் மனம்-அன்பு நெஞ்சம்-வளர்த்த முதல் குழந்தை புன்னைமரம் தானே!

இதை அந்தத் தாயே ஒருநாள் சொல்லிவிட்டாள்.

ஒருநாள் அவளுடைய சிறுபெண் அழுதாள்; தேனும் பாலும் பருகாமல் தொல்லை கொடுத்தாள். அப்போதுதான் சொன்னாள்; ''அம்மா! நீ இப்படிப் பாலும் தேனும் பருகாமல் அழுகின்றாயே! உன்னால் எனக்கு எவ்வளவு தொல்லை! உன் அக்கா ஒருநாளும் அப்படிச் செய்தது இல்லையே!'' என்றாள்.

''யாரம்மா அக்கா?'' என்று மகள் கேட்டாள். ''இதோ இருக்கின்றதே இந்தப் புன்னை மரம்தான். இதுதான் நான் முதலில் வளர்த்த குழந்தை. நாள் தோறும் என் கையால் தேனும் பாலும் ஊட்டினேன். ஒரு நாளும் மறுக்க வில்லை; அழவில்லை; கோபம் வரவில்லை. ஒரு நாளும் தொல்லை கொடுக்காமல் உண்டுவந்தது. நீ மட்டும் இப்படிச் செய்கின்றாயே!'' என்றாள் தாய்.

மகளின் மனத்தில் அரைகுறையாக இந்தச் செய்தி பதிந்தது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்தன. அவளு





டைய அறிவு வளர்ந்தது. அப்போது புன்னை குழந்தையாகப் பிறந்த கதையையும் வளர்ந்த வரலாற்றையும் தாய் விளக்கினாள். மகளுக்கு உண்மை விளங்கிவிட்டது.

மகளும் உற்ற வயது அடைந்தாள். வாழ்க்கை தொடங்கினாள்.

ஒரு நாள் தன் காதலனோடு அந்தப் புன்னை மரத்து நிழலில் இருந்து பேசிக்கொண்டிருந்தாள். பேச்சில் விளையாட்டும் நகைச்சுவையும் பெருகிவிட்டன. காதல் பேச்சு, காதல் விளையாட்டு இவற்றுக்கு இடையே திடீரென்று காதலியின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தடையாக எழுந்தது. பேச்சும் மகிழ்ச்சியும் தடைப்பட்டன.

காரணம் வேறொன்றுமில்லை. நிழலில் இருந்த அவள் நினைவு நிழல் தந்த புன்னை மரத்தின் மேல் சென்றது. இளமை முதல் தன் உள்ளத்தில் ஊறிவந்த உறவுமுறை முன்வந்து நின்றது.

புன்னை மரம் தமக்கை: தான் தங்கை-இதை எப்படித்தான் மறக்க முடியும்? ஒருநாள் பாட்டமா? தமக்கையின் எதிரில் காதல் பேச்சும் விளையாட்டும் நிகழ்த்தத் தங்கைக்கு மனம் இல்லை. ''என்ன செய்தோம்'' என்று நாணம் அடைந்தாள்.

இதை அவளுடைய உயிர்த்தோழி அந்தக் காதலனுக்குத் தெரிவித்தாள்.

இந்தக் கருத்து ஒரு பழம் பாட்டில் உள்ளது. பாடிய புலவர் யார் என்று தெரியவில்லை. தமிழ்நாடு பெயரை மறந்துவிட்டது. ஆனால், நல்ல காலம், அந்தப்பாட்டை மறக்கவில்லை.

''விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்த்தது
நும்மிலும் சிறந்தது நுவ்வை யாகும்'' என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே;
அம்ம நாணுதும் நும்மொடு நகையே;

—நற்றிணை 172

(மணல்வீடு என்னும் நூலிலிருந்து)



குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

**தமிழ்நாடு கனிம நிறுவனம்**
**சென்னை-600 005.**
( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெள்ளைக் கல் (குவார்ட்ஸ்) | : +99.8% $SiO_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : +12% $K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : +99.7% $SiO_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

DIPR/1174/MS/88/ARIES



# நினைவுக் கோலம்

மதுரையில், பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் 1956ஆம் ஆண்டு பாவேந்தர் தலைமையில் ஒரு கவியரங்க நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. நிகழ்ச்சியின் முடிவில்,

"பழனியப்பா! திருக்குறளுக்கு ஒரு புரட்சி உரை எழுதப் போகிறேன். நீ என்னோடு புறப்படு. எனக்கு உதவியாக இருப்பதோடு அச்சகத்தையும் நீயே கவனித்துக் கொள்ளலாம்" என்றார்.

நான், உடனே, பாவேந்தருடன் புறப்பட்டு, புதுவை சென்று, 'பாவேந்தரின் வீட்டில் நானும் ஓர் உறுப்பினரானேன்.

இரண்டொரு நாள் கழிந்ததும் இல்லத்திலுள்ள ஒரு சிறு அறையில் உட்கார்ந்து எழுத ஆரம்பித்தோம்.

"பழனியப்பா! முதலில், 'திருக்குறள் கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் எழுதிய புரட்சிஉரை' என்று எழுது" என்றார்.

நான் அவரை நிமிர்ந்து பார்த்து, "ஐயா பாரதிதாசன் என்னும் பெயர் தான் எல்லோருக்கும் அறிமுகமான பெயராகிவிட்டதே, அப்படியிருக்க, "ஏன் கனக சுப்புரத்தினம் என்று குறிப்பிட வேண்டும்? என்று கேட்டேன்.

"உனக்குத் தெரியுமா? இந்த உரையில் நான் குறிப்பிடும் இலக்கண மேற்கோள்களும் குறிப்புகளும் நான்கனகசுப்புரத்தினமாக இருந்த போது கற்றுக்கொண்டவை. பாரதியாரின் தொடர்புக்குப் பிறகு, நான் அவரிடம் கற்றுக் கொண்டது, கவிதை எளிமையாக-எல்லாருக்கும் புரியும் நடையில் இருக்கவேண்டும் என்பதுதான். அதன் பிறகுதான் எளிய நடையில் கவிதை எழுதினேன். எனவே, இந்த உரையில், 'கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் எழுதியது' என்று குறிப்பிடுவதுதான் சரி என்று கூறினார்.

உண்மைதானே? அவர் கூறினார்-நான் எழுதினேன்.

**சந்தன மரமும் ஆலமரமும்**

காரைக்குடியில் 'வாரச் செய்தி' என்னும் கிழமை இதழின் ஆசிரியனாகப் பணிபுரிந்த காலம். அப்போது, சென்னை 'அமுதசுரபி' மாத இதழ் ஆசிரியரிடமிருந்து, எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில்,

"'அமுதசுரபி'யில் வெளிவரும் பாரதி பரம்பரை என்னும் கட்டுரைத்தொடரில், தங்களையும் அறிமுகப்படுத்த விரும்புகிறோம். எனவே, தங்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும், தங்களது ஒளிப்படத்தையும், தங்கள் கவிதை ஒன்றையும் விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

—என்று அதன் ஆசிரியர் எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்து முடித்தேன். உடனே, அமுதசுரபி ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

"தாங்கள் என்பால் கொண்ட பேரன்பிற்கு நன்றி.

**கவிஞர் சாமி பழனியப்பன்**

'பாரதி பரம்பரை' என்று கூறிக் கொள்வதற்கான தகுதி எள்ளத்தனையும் எனக்கில்லை. என்னைப் பொறுத்தவரை, அப்படிக் கூறிக் கொள்ளும் தகுதி, பாவேந்தர் பாரதிதாசன் ஒருவருக்கு மட்டுமே இருப்பதாக நான் கருதுகிறேன். என் கருத்து, சரியாகவும இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம். தயவு செய்து, என்னை அத்தொடரில் சேர்ப்பதை விட்டுவிட வேண்டுகிறேன்" என்று கடிதத்தில் குறிப்பிட்டேன். பிறகு, இரண்டோரு திங்களில் அத்தொடரும் நிறுத்தப்பட்டுவிட்டது.

பிறகு, நான் பாவேந்தரைப் பார்த்தபோது, இத் தகவலைத் தெரிவித்தேன். அதற்கு அவர் கூறியது என்ன தெரியுமா?

"பாரதியார் அவர்களோடு, பல அறிஞர்களும், சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும், பழகினார்கள்; சிலர் கூடவே இருந்தார்கள். ஆனா

லும் அவர்களில் யாரும் கவிஞராக ஒளிவிட முடியவில்லை.

''பாரதி ஒரு சந்தனமரம்;சந்தன மரத்தின் அடியிலே, வேறெந்தச் செடியும் மரமும் வளராது; நான் ஒரு ஆலமரம். ஆலமரம் வளர்ந்து, விழுது விட்டு, விழுதுகளையும் வலுப்படுத்தி,தானும் வலுப்பெற்று நிற்கும்'' என்றார்.

எவ்வளவு பெரிய உண்மை! எவ்வளவு அருமையான விளக்கம்! இதனை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பொன்னி' இதழ் அறிமுகப் படுத்திய ''பாவேந்தர் பரம்பரை'' உண்மையாக்கிக் காட்டுகிறதல்லவா?

### தனியுடைமை தூங்குகிறது

செட்டி நாட்டிலே கோனாபட்டு என்னும் ஒரு ஊர்; தமிழ் மணத்திற்குப் பேர்பெற்ற ஊர்களில் அதுவும் ஒன்று. அங்கு ஓர் இலக்கிய நிகழ்ச்சிக்காக, பாவேந்தரை அழைத்திருந்தார்கள்.

காரைக்குடியிலிருந்து அண்ணன் இராம. சுப்பையா அவர்களும், நானும்,மற்றொரு நண்பரும் அந்த நிகழ்ச்சிக்குப் போயிருந்தோம். பாவேந்தர், மிக அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். நிகழ்ச்சி முடிய இரவு 10 மணிக்கு மேல் ஆகிவிட்டது. நாங்கள், காரைக்குடிக்குத் திரும்ப மறுநாள் காலையில்தான் பஸ் என்றார்கள். நாங்கள் எப்படியும் இரவே காரைக்குடிக்கு வந்தாக வேண்டும்.

நிலைமையை அறிந்த பாவேந்தர், '' ஏம்பா! நீங்கள் இனிமேல் எப்படி ஊருக்குப் போவீங்க? பஸ் இல்லையாமே!›› என்று பாசத்தோடு கேட்டார்.

அண்ணன் இராம.சுப்பையா, ''நாங்கள் எப்படியும் போயிடுவோம். அய்யா,''என்று அவரிடம் கூறிவிட்டு எங்களைப் பார்த்து, ''தம்பிகளே!நல்லா நிலா வெளிச்சம் இருக்கு! அப்படியே பேசிக்கொண்டு நடந்து போயிடலாமா? '' என்று கேட்டார்.

நாங்கள் அப்போது மிகவும் இளைஞர்கள். அண்ணன் இராம. சுப்பையா சற்று முதுமையான இளைஞர்.

''ஓ! தாரளமா!'' என்று நாங்கள் கூறினோம்.

அன்று முழுநிலவு. எங்கும் பட்டப் பகல் போல் இருந்தது. சற்றுத் தொலைவில், ஆங்காங்கே சிலர், படுக்கை ஏதுமின்றி, வெறுந்தரையிலேயே குறட்டைவிட்டு, அநாயாசமாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

இதைப் பார்த்த பாவேந்தர் 'அதோ பாருங்கள்! அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார்களே,எந்தக் கவலையுமில்லாமல், எவ்வளவு அநாயாசமாகத் தூங்குகிறார்கள்! இப்போது அவர்களிடத்தில் எத்தகைய வேறுபாட்டுணர்வுமில்லை- நான் பெரியவன், நீ பெரியவன் என்ற அகம்பாவமுமில்லை, 'அது என்னுடையது - இது எனக்குச் சொந்தம்'என்று சொல்லுகிற, தனியுடைமையுமில்லை. இவன் எனக்கு வேண்டியவன்-என்னவன், இவன் என்னுடைய பகைவன் என்ற பகையும் நட்பும் இல்லை. எவ்வளவு இனிமையான உலகம்!'' என்றார்.

நாங்கள், வியப்படைந்தவாறே, பாவேந்தரிடமும் விடைபெற்றுக் கொண்டு, அந்தப் 'பொதுமை'யையும், தனியுடைமையையும் பற்றிப் பேசிக் கொண்டே நடைபோட்டோம், காரைக்குடியை நோக்கி! சோர்வும் தெரியவில்லை! தொலைவும் தெரியவில்லை.

### 8-வது உலகத் தமிழ்மாநாடு

வருகிற டிசம்பர் திங்களில் மோரீஸ் தீவில் 7-வது உலகத்தமிழ் மாநாடு நடைபெற உள்ளது. மோரீஸ் அரசுடன் உலகத் தமிழ் மாமன்றம் இணைந்து நடத்த உள்ளது. 19-3-87 அன்று நடைபெற்ற உலகத் தமிழர் மாமன்ற செயறகுழுக் கூட்டத்தின் பின் இத் தகவல்களைக் கூறிய அம்மாமன்றத்தின் தலைவரும் மலேயா தமிழர் தலைவருமான டாக்டர் வி. டேவிட் எம்.பி. அவர்கள் ''எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை,தமிழ்நாட்டின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடத்த வேண்டும் என்றும்,மாநாடு சிறப்புற நடைபெற நாங்கள் முழு ஒத்துழைப்பு அளிப்போம்'' என்றும் கூறினார்.

### பாவேந்தரைப் பின்பற்றினால்

எந்தச் சூழ்நிலையிலும் அவசர அவசரமாகக் கவிதை, எழுதி, அதனை அப்படியே அனுப்பிவிடும் பலர் இன்று இருக்கிறார்கள். அவை, பெரும்பாலும் அரைவேக்காடுகளாகவே இருக்கும். பாவேந்தரைப் பொறுததவரை அப்படிக் கவிதைகள் எழுதுவதில்லை. கவிதையைச் சொல்லி, 'எழுது' என்பார். சொல்லச் சொல்ல எழுதியபின், படிக்கச் சொல்லிக் கேட்பார். வார்த்தைகளை, வரிகளை மாற்றி எழுதச் சொல்லி, பிறகு படிக்கச் சொல்வார். அதைக் கேட்டு, அவர் மனதுக்கு நிலறவாகத் தெரிந்தாலே தகவெடுத்து அனுப்பச் சொல்வார்.

இன்று, கவிதை படைப்போர் இந்த முறையினைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்துப் பின்பற்றினால், அது அவர்களுக்கும் நல்லது; நமது தமிழுக்கும்,இலக்கியத்திற்கும் கூட நல்லது.

### பூட்டை உடைத்தோம்

காந்தியடிகள், தந்தைபெரியார், பாரதியார், ப. ஜீவானந்தம் ஆகியோரெல்லாம் வந்து தங்கிச்சென்ற இல்லம், கானாடுகாத்தான் 'இன்ப மாளிகை'. ஆம். செட்டிநாட்டில் வாழ்ந்த சிறந்த சீர்திருத்தவாதிகளில் குறிப்பிடத்தக்க ஒருவரான பெரியார் வை.சு. சண்முகம் அவர்களின் இல்லம்தான் அந்த இன்ப மாளிகை.

வை.சு.அவர்கள் புலவர் உள்ளம் படைத்தவர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாத உத்தமர். தனக்குச் சரியென்று பட்டால் அதை நிலைநாட்ட எந்த விலையும் கொடுக்கத் தயங்காதவர்; பாவேந்தரிடம் மிக்க ஈடுபாடும், குடும்ப நட்பும் கொண்டவர்.

ஒரு சமயம், பாவேந்தரும் அண்ணன் இராம. சுப்பையாவும், இன்னும் ஒருசில அன்பர்களும்,அப்போது மாணவனாக இருந்த நானும் கானாடுகாத்தான், இன்ப மாளிகைக்குச் சென்றோம். பாவேந்தரின் படைப்புகளை நூலாக வெளியிட 'முத்தமிழ் நிலையம்' என்னும் பெயரில் ஒரு வெளியீட்டு நிறுவனம் உருவாக்குவது பற்றிக் கலந்துபேசி முடிவெடுப்பதற்காக.

'இன்ப மாளிகையினுள் செல்லுவதற்கு இரண்டு வழிகள் உண்டு: 'முகப்பு வழிக்கதவு' எப்போதும் உள்ளே பூட்டப்பட்டிருக்கும். முக்கியமான நிகழ்ச்சிகளின்போதுதான் திறக்கப்படும். பக்கத்திலேயே இன்னொரு வழி. அது அடையாநெடுங்கதவம். சாதாரணக் காலங்களில் அந்த வழியாகத்தான் போக்குவரத்து!

நாங்கள் இன்ப மாளிகைக்குப் போனதும், பெரியவர் வை.சு.சண்முகமும்,அவர்தம் குடும்பத்தினரும் மிக்க அன்போடு வரவேற்று உபசரித்தனர். சிறிது நேரத்தில் மதிய உணவு.

உணவருந்தி, சிறிதுநேர ஓய்வுக்குப் பின், முத்தமிழ் நிலையம் பற்றிக் கலந்துரையாடல், கலந்துரையாடலில், எங்களுடன் வந்திருந்த அன்பர்களில் ஒருவர் தெரிவித்த கருத்து, 'வை.சு.'வுக்குப் பிடிக்கவில்லை. எதிர்ப்புத் தெரிவித்தார். 'உரையாடல்' திசை திரும்பிப் புயல் ஆயிற்று. பாவேந்தரின் உள்ளம்எளிமையானது,'ஒன்றும் வேண்டாம். உடனே இங்கிருந்து புறப்படு என்று ஆணையிட்டுவிட்டு, எழுந்து வேகமாக நடந்தார். அண்ணன் இராம. சுப்பையா'வும் நானும், பாவேந்தரைப் பின் தொடர்ந்தோம். 'வை. சு.' எவ்வளவோ தடுத்தும் பயனில்லை.

பூட்டப்பட்டிருக்கும் முகப்புக் கதவை நெருங்கினார், பாவேந்தர். 'ஐயா! கதவு பூட்டப்பட்டிருக்கே' என்றேன். நான்.

'பூட்டை உடை' என்று உரத்த குரலில் ஆணையிட்டார் பாவேந்தர்.

பக்கத்தில் கிடந்த ஒரு இரும்பை எடுத்து, பலங்கொண்ட மட்டும் ஓங்கி அடித்தார் அண்ணன் இராம. சுப்பையா. பூட்டு உடைந்தது. கதவைத் திறந்து கொண்டு, நாங்கள் வெளியேறினோம். அங்கிருந்து பேருந்து நிலையத்திற்கு நடந்து, பேருந்து மூலம் காரைக்குடி அண்ணன் இராம.சுப்பையா அவர்களின் இல்லத்திற்கு வந்து சேர்ந்தோம். அதுவரை பாவேந்தர் எதுவும் பேசவே இல்லை. முகம் மட்டும் கடுகடுப்பாகவே இருந்தது.

ஓய்வு நாற்காலியில் உட்கார்ந்தார் பாவேந்தர். உடனே, சமையலறையிலிருந்து அங்குவந்த அண்ணியார் விசாலாட்சி இராம.சுப்பையா பாவேந்தரைப் பார்த்து, ''என்னங்க ஐயா, வை.சு.வோட சண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்டீங்களா?'' என்று கேட்டார்.

உடனே பாவேந்தர் கலகலவென்று சிரிப்பு ஒலி அதிர, "என்னம்மா உனக்குச்சோதிடமா தெரியும்?" என்று கேட்டார். நாங்களும் அப்போதுதான் சிரித்தோம்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, பெரியவர் வை.சு.வின் மகன் வயிற்றுப் பேத்திகமலாவுக்கும், அண்ணன் இராம.சுப்பையாவின் மூத்த மகன் திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமனுக்கும் திருமணம் நடைபெறும் என்பது அப்போது எங்கள் யாருக்குமே தெரியாது.

### வைணவ உணவு

பாவேந்தர் ஒருசமயம் கடலூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். அதே கூட்டத்தில் டார்பிடோ திரு.ஏ.பி. ஜனார்த்தனமும் கலந்து கொண்டார்.

அன்று இரவு சுமார் 7 மணி அளவுக்குக் கடலூரில் இருந்து பாண்டிக்கு வந்த பேருந்து நடத்துநர் ஒருவர், பாவேந்தரின் பழனியம்மா அச்சகத்திற்குவந்து 'இதை, கவிஞர் ஐயா உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்'' என்று கூறி, என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்தார். நான் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

''அன்புள்ள பழனியப்பனுக்கு,


இரவு, கூட்டம் முடிந்ததும், தோழர் ஜனார்த்தனமும் நானும் கடைசி வண்டியில் வருகிறோம், எங்களுடன் இன்னும் இருவரும் வருவார்கள். எனவே, நான்கு அல்லது ஐந்து பேருக்கு வைணவ உணவு தயாரித்து வைக்கச் சொல்லவும்."

கடிதத்தைப் படித்து முடித்ததும், பாவேந்தரின் நகைச்சுவையை எண்ணிச் சிரித்தேன்.

ஆம். 'அசைவ உணவைத்தான், அவர் 'வைணவ உணவு'என்று குறிப்பிட்டிருந்தார். பாவேந்தர் வீட்டிற்குச் சென்று விஷயத்தைச் சொல்லி 'அசைவச் சாப்பாடு' சமைத்துவைக்கும்படி அம்மாவிடம் சொல்லி ஏற்பாடு செய்தேன்.

'பிறகு, பாவேந்தரும், டார்பிடோவும், மற்றிருவரும் வந்தனர். டார்பிடோ என்னைப் பார்த்துப் புன்னகைத்தவாறே, 'என்ன சாப்பாடு 'என்றார். நான் சிரிப்பை அடக்கிக் கொண்டே 'வைணவம் தான்' என்றேன். அப்புறமென்ன? இந்த நகைச்சுவை விருந்தில் அனைவருமே கலந்து கொண்டனர்.

### சிறார் பொறுப்பு



இன்று குழந்தைகள் நீங்கள்-எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

குன்றினைப்போல் உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப்போ ராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்விற் புதுமை காணவேண்டும்
இன்று குழந்தைகள் நீங்கள்!

பல்கலை ஆய்ந்து தொழில் பல கற்றும்,
பாட்டிற் சுவை காணும் திறமையும் உற்றும்,
அல்லும் பகலும் இகாட்டுக் குழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

### தூய்மை

தூய்மை சேரடா தம்பி-என்
சொல்லை நீ பெரிதும் நம்பித்
தூய்மை சேரடா தம்பி!

வாய்மையாலும் ஒழுக்கத்தினாலும் அகத்
தூய்மை உண்டாகும் மேலும் மேலும்
தூயமை சேரடா தம்பி!

உடையினில் தூய்மை-உண்ணும்
உணவினில் தூய்மை-வாழ்வின்
நடையினில் தூய்மை-உன்றன்
கல்லுடற் றூய்மை சேர்ப்பின்
தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்
தரும்நாள் ஆகும்-நீ-என்றும்
தூய்மை சேரடா தம்பி!



தகளிலா நெஞ்சில்-சாதி
துளிர்ப்பதும் இல்லை;-சமயப்
புகைச்சலும் இல்லை;-மற்றும்
புன்செயல் இல்லை!-தம்பி!
அகத்திலே அன்பின் வெள்ளம் மூளும்;தீய
அச்சம் போகும்!-நீ எக்காளும்
தூய்மை சேரடா தம்பி!

பாவேந்தர் பாரதிதாசன்




## குழாய்க் கிணறுகளில் பிளாஸ்டிக் குழாய்களின் பயன்

தமிழ்நாட்டில் விவசாயிகள் பாசனத்திற்கு வேண்டிய நீரை குழாய்க் கிணறுகளின் மூலம் எடுத்துப் பயன்படுத்துகின்றனர். இந்த குழாய்க்கிணறுகளில் பொதுவாக உலோகக் குழாய்கள் பயன்படுத்தப் படுகின்றன.

உலோகக் குழாய்கள் சிறுது காலங்களில் துருப்பிடித்து விடுவதால் அதனுடைய ஆயுட்காலம் குறைவதுடன் நீரேற்றும் திறனும் குறைகின்றது. விலையும் அதிகமாக உள்ளது. மாறாக,தற்போது குழாய்க் கிணறுகளில் பிளாஸ்டிக், பிவிசி, மற்றும் உயர் அழுத்தமுள்ள பாலி எதிலின் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தக் குழாய்கள் அழுத்த விரயத்தைக் குறைத்து அதிக நீரை வெளியேற்றுகிறது. ஆராய்ச்சி முடிவுகளின்படி இந்தக் குழாய்களைப் பயன்படுத்துவதால் உலோகக் குழாய்களைவிட ஏற்படும் விரயத்தைக் குறைத்து, அதாவது சக்தியைச் சேமித்து, சுமார் 5 சதவிகிதம் நீரை அதிகமாக வெளியேற்றுகிறது.

மேலும், பிளாஸ்டிக் குழாய்கள், உலோகக் குழாய்களைவிட மூன்று மடங்கு விலை குறைவானதாகும். எனவே, வேளாண் பெருமக்கள் இந்த வகையான பிளாஸ்டிக் குழாய்களை ஆழ் கிணறுகளில் பயன்படுத்தி அதிக நன்மை பெறலாம்.

## மாசி என்னும் மடியில் பணமும்

மாசி என், மடியில் பணம்' என்ற பழமொழியை யாவரும் அறிவர். என் சாகுபடியை மானாவாரியிலும், இறைவையிலும் நடப்புப் பருவத்தில் சாகுபடி செய்யலாம்.

வருகிற கோடை மழை பெய்கிற காலத்து – அதாவது பங்குனி-சித்திரைப் பட்டத்தில் பெய்யும் மழையைக் கொண்டு மானாவாரி சாகுபடி செய்ய முடியும். கிணற்றுப் பாசனமுள்ள பகுதிகளில் இறைவைப் பயிராக சாகுபடி செய்யலாம்.

பூமியை நன்றாக உழுது, நன்றாக மக்கிய தொழுஉரம் எக்டேருக்கு 12.5 டன் கடைசி உழவில் போட்டு விட வேண்டும். இரசாயன உரங்களை மண் பரிசோதனை செய்து, அதன் பரிந்துரையின்படி அடியுரமாகவே இட வேண்டும். அப்படி இல்லையெனில், மானாவாரிப் பயிருக்கு எக்டேருக்கு 23 கிலோ தழை, 13 கிலோ மணி, 13 கிலோ சாம்பல்,முறையே இடவேண்டும். இறைவைப் பயிருக்கு எக்டேருக்கு 35 கிலோ தழை, 23 கிலோ மணி, 23 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இதனையும் அடியுரமாக இடவேண்டும்.

ஓர் எக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். ஒரு கிலோ விதையுடன் 3 கிராம் அல்லது 2 கிராம் கார்பாக்ஸின் அல்லது 2 கிராம் கார்பெண்டாஜின் என்ற பூசண மருந்தைக் கலக்க வேண்டும். பின்பு 24 மணி நேரம் கழித்து அசோஸ்பைரில்லம்' நுண்ணுயிர் உரத்தை 5 கிலோ என் விதையுடன் 3 பாக்கெட் (600 கிராம்) என்ற அளவில் வடிகஞ்சியுடன் கலந்த கலவை கலக்க வேண்டும். இதனை நிழலில் 15-30 நிமிடம் உலர வைத்து உடனே விதைக்க வேண்டும். விதை விதைப்பதற்கு முன்பு எக்டேருக்கு 5 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை 50 கிலோ மண்ணுடன் கலந்து சீராகத் தூவிவிட வேண்டும்.

என் பயிருக்கு இடைவெளி மிக முக்கியம். 'அடர விதைத்து சிதற எடு' என்ற பழமொழிப்படி ஆரம்பக்கட்டத்தில் பயிர் சிறிது நெருக்கமாக இருந்தாலும், 15-வது மற்றும் 30வது நாள் களை எடுக்கும் போது 30-30 செ.மீ இடைவெளியில் பயிர் இருக்கும்படி செய்து, மற்ற பயிர்களைக் கலைத்து விட வேண்டும்.

மேற்கண்ட சாகுபடி நுட்பங்களை வருகிற பங்குனி-சித்திரைப் பட்டத்தில் கையாள வேண்டும்.

## மிளகாயில் வெள்ளைச் சிலந்தியைக் கட்டுப்படுத்திடுவீர்!

தற்பொழுது நிலவும் மழையற்ற தட்ப வெப்ப நிலைகளில் மிளகாயில் வெள்ளைச்சிலந்தியின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது.


வெள்ளைச்சிலந்தி நுண்ணியவை. கண்ணுக்குத் தெரியாதவை. (உருப்பெருக்கியன் மூலம்தான் பார்க்க முடியும்) மிளகாய் நாற்றுவிட்டது முதல் இச்சிலந்தி பயிரின் எல்லா வளர்ச்சிப் பருவங்களிலும் தாக்குகிறது. இச்சிலந்திகளின் முட்டை மற்றும் குஞ்சுகள் இலைகளின் அடிப்பாகத்தில் காணப்படும். இளம் பயிர்களில் பல பளப்பான கருப்பு நிறப்புள்ளிகள் இலைகளின் அடிப்பாகத்தில், அங்குமிங்குமாகத் தோன்றும். இலைகள் சுருங்கி, கீழ் நோக்கி மடியும். மேலும் இலைகள் தடித்து, தொட்டால உடையும் தன்மை பெறும். இலைகளின் நுனிகள் கருகிச் சுருங்கும். (எனவே இது "முரனை" என்று அழைக்கப்படுகிறது.) பயிர் வளர்ச்சி குன்றிபயிர் நோயுற்றது போலச் சிறுத்துக் காணப்படும்.

வெள்ளைச் சிலந்தி கண்ணுக்குத் தென்பட வாய்ப்பில்லாததால் சிலந்தியின் அறிகுறி பல சமயங்களில் பூச்சியின் தாக்குதல் என எண்ணி பூச்சிக் கொல்லிகளை உபயோகிப்பீர். இதனால் இச்சிலந்தியைத் தாக்கும் எதிரிச் சிலந்திகள் கொல்லப்பட்டு வெள்ளைச் சிலந்திகள் மேலும் பரவுகின்றன. பாதிக்கப்பட்ட செடிகளில் கருகிய இலைகள் முற்றிலும் உதிர்ந்துவிடும். மிளகாய் பூக்கும்பருவத்திலும்,காய்கள் பிடிக்கும் பருவத்திலும் பாதிக்கப்பட்ட செடிகளில் பூக்கள் உதிர்ந்து விடும். காய்பிடிப்பது வெகுவாகப் பாதிக்கப்படும்.

மிளகாயில் தோன்றும் வெள்ளைச் சிலந்தியைக் கட்டுப்படுத்த அசிபேட் 0.05 (1 கிராம் மருந்தை 1.5 லிட்டர் நீரில் கரைக்கவும்). மருந்துக் கரைசலைக் கைத்தெளிப்பான் மூலம் ஓர் எக்டேருக்கு 500 லிட்டர் என்ற அளவில் கலந்து பயிர் மீதும், இலைகளின் மீதும் அடிப்பாகத்திலும் நன்கு படும்படி தெளிக்கவேண்டும். தற்போது மிளகாய் வற்றலுக்கு நல்ல விலை இருப்பதால், சாகுபடியாளர்கள் மேற்கூறிய மருந்தைப் பயன்படுத்தி வெள்ளைச் சிலந்திகளைக் கட்டுப்படுத்தி, மகசூலைப் பெருக்கலாம்.

வெளியீடு: வேளாண் தகவல் பணி மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641003.





# நூல் நயம்

### சந்திப்பு

ஆசிரியர்: புலவர் இளஞ்செழியன்
வெளியீடு: மலர்மாமணி பதிப்பகம்
9, சிவராமன் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை-600005.

விலை: ரூ.12.00 பக்கம்: 96

மூன்று நாடகங்களைக் கொண்ட இந்த நூல், கதை அமைப்பிலும் நிகழ்ச்சிப் பின்னல்களிலும் சிறப்பாக அமைந்துள்ளது. பாத்திரங்கள் தக்க முறையிலே உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். உரையாடல்கள் நல்ல தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. தத்துவங்களைப் போதிக்கின்றன. எதுகை மோனைகள் மிக இயல்பாகக் காணப்படுகின்றன. நடையிலே விறுவிறுப்பு உள்ளது.

உரையாடல்களில் சிறந்தவை சில தேர்ந்தெடுக்கப்பெற்று பொன்மொழிகள் போல, நூலின் இறுதியில் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

"விடியாத இரவுண்டா? விலகாத பனி உண்டா? இல்லை! அதுபோல முயன்றால் எதுவும் முடியும்"

—மொத்தத்தில் மரபுக்கவிதை நூலைப் படித்த நிறைவு ஏற்படுகிறது.

-தமிழ்ப்பித்தன்

### முயற்சியின் வெற்றி

ஆசிரியர்: கவிஞர் தமிழ்முடி
வெளியீடு: தமிழ்முடி நிலையம்
எச்.10 ,கே. பொன்னம்பலம் சாலை,
கே.கே. நகர்
சென்னை-600 078

விலை. ரூ. 4.50 பக்கம்.48

சின்னச் சின்னக் கதைகளின் தொகுப்பு. குழந்தைகளுக்கு ஒவ்வொரு கதையிலும் ஓர் அறிவுரை கூறப்பட்டுள்ளது.

எளிமையாக எழுதப்பட்டிருக்கும் இக்கதைகளில் சில, படிக்கும் போதே முடிவைத் தெரிந்துகொள்ள ஆவலைத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளன.

கதைகளின் இறுதியில் அந்தந்தக் கதைகளில் கூறப்பட்டுள்ள நீதியைத் தனியே நான்கு வரிகளில் சுருக்கிக் கொடுத்திருப்பதுசிறப்பாகவுள்ளது.

### அது ஏன்? இது ஏன்?

ஆசிரியர்: டாக்டர் ஆனைவாரி ஆனந்தன்.
வெளியீடு: சங்கர் பப்ளிகேஷன்ஸ்,
6, தம்பையா தெரு 'விரிவு'
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.

விலை. ரூ. 7.50 பக்கம் 74

ஒவ்வொரு நாளும் நம் குழந்தைகள் தங்களுக்கு எழும் சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளும் ஆவலில் ஏன்? எதற்கு? எப்படி? என்று நம்மிடம் கேட்கின்றனர். தெரிந்தவைகளுக்கு அரைகுறையாக பதில் கூறிச் சமாளிக்கிறோம் தெரியாதவற்றிற்கு அதட்டி அடக்கி விடுகிறோம் அத்தகைய பல வினாக்களையும், அவற்றிற்கான விடைகளையும் கொண்டதுதான் இந்நூல்

நம் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புள்ள பல விவரங்களை நம் குழந்தைகள் அறிந்துகொள்ள (ஏன்? நாமும்தான்) உதவுகிறது இந்நூல்

-அ மருதவிநாயகம்

### பாவேந்தர் பாகலம்

தொகுப்பாசிரியர்: அமுதவல்லி
வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குவீதி,
மயிலாப்பூர், சென்னை-600004.

விலை ரூ 14. பக்கம்: 168

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைக் குறித்து 17பெருமக்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். அவ்வப்போது பாவேந்தரைக் குறித்துப் பல இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கியுள்ளார், பாவேந்தரின் பேர்த்தி அமுதவல்லி.

ஒவ்வொரு கட்டுரையும் பாவேந்தரின் ஒவ்வொரு திறன் குறித்து எடுத்துக் கூறுகிறது. பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் உள்ள ஒற்றுமையை-ஒப்பியல்பை ஒரு கட்டுரை விவரிக்கிறது. குழந்தை இலக்கியத்திற்குப் பாவேந்தர் ஆற்றிய தொண்டினை மற்றொரு கட்டுரை விளக்கம் செய்கிறது.

இப்படி அரிய தொரு இலக்கியப் பெட்டகமாக இந்நூலைத் தொகுத்திருக்கும் நூலாசிரியர் பாராட்டுக்குரியவர் என்று பல முறை சொல்லலாம். சொல்லிச் சொல்லி மகிழலாம்.

—எஸ்.எஸ்.சுந்தரம்.

### நாட்டுப்புற மண்ணும் மக்களும்

ஆசிரியர்: டாக்டர் கே.ஏ.குணசேகரன்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600098

விலை: ரூ.15 பக்கம்: 172

எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்களின் வாய்மொழியாக வெளிவந்தவைதாம் நாட்டுப்புறப் பாடல்கள்-நாட்டுப்புறக் கலைகள்.

நீ செய்யும் காரியத்திற்கு நீயே
பொறுப்பாளியாயிருக்க வேண்டும்,
நீ செய்வதற்குப் பிறர் தண்டனை
அடையும்படி ஏற்படக்கூடாது.

— [illegible]

இது வெறும் பாடலாக மட்டுமின்றி, ஆடல்வாயிலாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. பல்வேறு கால கட்டங்களில் நாட்டுப்புற மண்ணின் தன்மைகளை எடுத்துக்காட்டும் இலக்கியங்கள் என்றுகூட இதனைக் கூறலாம்.

நாட்டுப்புறவியல் அன்றும் இன்றும் பற்றிய ஆய்வினைத்தொடங்கி, நாட்டுப்புறக் கலையும் சமூகத் தேவையும் என்று முடித்து, இடையே நாட்டுப்புற நடனங்கள்-ஒயிலாட்டங்கள்-தெருக்கூத்து-சிந்து இசைவகை-பேயாட்டம் முதலான இத்துறை பற்றிய கூறுகள் எல்லாம் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கலைகள் பற்றி ஆராய்வோருக்கு மட்டுமல்ல, ஆர்வலருக்கும்கூட இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—பி.வி.கிரி.

மாணவர் பக்கம்

# நல்லபடி வாழ்ந்திட...



கலைப் பொழிலன்

நல்லபடி வாழ்வதற்குத்
தம்பி — சில
நல்லுரைகள் சொல்லுகிறேன்
கேட்டுநட நம்பி!

பெரியோரைப் பணிவதே
பெருமை - உன்னைப்
பெற்றவர்க்கு அடங்கி
நடத்தலே கடமை!
சிறியோரின் நட்பெலாம்
சிறுமை - நீ
சிறப்புறவே வாழ்வதற்கு
வேண்டுமடா திறமை!

அன்பெனும் பண்புகொண்ட
உள்ளம் - அது
ஆண்டவன் விருப்பமுடன்
இருக்கின்ற இல்லம்!
வம்பின்றிப் பிறரிடம்
நீபழகு - அது
வசையில்லா வாழ்க்கைக்கு
வளமான அழகு!

உண்மையுடன் உழைப்பதற்கே
பிறப்பு - அது
ஊருக்கும் உறவுக்கும்
நீசெய்யும் சிறப்பு!
திண்மையுடன் தீமைகளை
எதிர்த்து - மன
வன்மையுடன் வாழ்ந்திடுநீ
நல்லோரை மதித்து!

சாமி



## விளையும் பயிர்!

தருமபுரி மாவட்டம், ஓசூர் இரா. பி.வி. அரசு ஆண்கள்மேல் நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் பயிலும் மாணவர் நா.சண்முகநாதன்.

இவர் படிப்பில் மட்டுமல்ல, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளார். பாண்டிச்சேரியில் நடைபெற்ற அகில இந்தியக் குழந்தைகள் விழாவில், தருமபுரி மாவட்டத்தின் சார்பில் இவர் கலந்து கொண்டார்.

**14 வது வயதில்**
வில்லியம்பட் — உலகமே புகழும் அருமையான அரசியல் சோக நாடகத்தை எழுதிப் பெயர் பெற்றார்!

**15வது வயதில்**
விக்டர் ஹியுகோ — பிரஞ்சு இலக்கியக் கழகத்துக்குச் சிந்தனையூட்டும் கவிதை ஒன்று எழுதிப் படைத்துத் தன் கீர்த்திக்கு விதை நட்டார்.


**16வது வயதில்!**
மாவீரன் அலெக்சாண்டர் — தன் தந்தையாரின் படையில் தளபதியாகி, உலகையே கலக்கினார்.

அரிஸ்டாட்டலின் தத்துவத்தில் உள்ள தவறுகளை அறிஞர் பேகன் எடுத்துக் காட்டியதும் இதே வயதில்தான்!

**17 வது வயதில்**
கலிலியோ — பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலுள்ள விளக்கு அப்படியும் இப்படியும் 'ஏன்' அசைகிறது என்ற ஆராய்ச்சியில் இறங்கினார்.







**1[illegible]வது வயதில்**
ஜோன்-ஆப்-ஆர்க் — பிரஞ்சுக்காரர்களிடம் தாய்நாட்டுப்பற்றை ஊட்டி, போர்க்குரல் எழுப்பிப் புகழ் பெற்றார்.

# திராவிடர் நிலையை உயர்த்திய தியாகராயர்

—பேரறிஞர் அண்ணா



தியாகராயர் பெரிய செல்வந்தர், பணம் படைத்தவர்; தியாகராயர் விரும்பியிருந்தால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சம் சட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

தியாகராயர் விரும்பியிருந்தால் சென்னையிலேயே பெரும்பாலான இடங்களை அவர் சொந்தமாக வாங்கியிருக்க இயலும். பணத்தின் மதிப்பு இன்றிருந்ததை விட அன்று பல மடங்கு உயர்ந்திருந்தது. இன்றைய இலட்சம் அன்றைய ஆயிரம் ரூபாய்க்குச் சமமானது. அத்தகைய காலத்திலே பல இலட்சம் படைத்த அவர் நினைத்திருந்தால் சென்னை நகரையே தன் முத்லீட்டுப் பணமாக ஆக்கியிருக்கலாம். அவர் கூப்பிட்ட நேரத்திலே பணியாற்ற பல ஆட்கள் அவரிடம் இருந்திருக்கக்கூடும். எத்தனையோ சீமான்கள், சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், ஜமீன்தார்கள் உண்டு களித்து, உல்லாச வாழ்வு வாழ்ந்து, களியாட்டத்தில் காலத்தைக் கடத்திக் கொண்டு இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பதைப் போல, தியாகராயரும் இருந்திருக்க முடியும்.

மேலும், தியாகராயர் விரும்பியிருந்தால், பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் வேலையிலோ, பளிங்கு மண்டபம் கட்டும் வேலையிலோ ஈடுபட்டிருக்கலாம். அவர் விரும்பியிருந்தால் தெற்கிலுள்ள பழனியைப் போல,வடக்கே ஒரு பழனியை உண்டாக்கியிருக்கலாம். இவைகளை ஏற்படுத்துவதற்குரிய பணம் அவரிடம் ஏராளமாக இருந்தது. அவர் இவைகளையெல்லாம் பெரிதாக மதிக்கவில்லை. தன்னுடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிட சமூகத்திலே ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெறவேண்டுமென்று அவர் விரும்பினார். தியாகராயர் போக போக்கியத்தை விட்டுத் தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் கருங்குழியும் திரம்பிய பாதைவழியேசெல்லத் தொடங்கினார்.

சர் தியாகராயர் தோன்றி, திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமைப் பூண்டு, அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டு, சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.

நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்கவேண்டுமென்று அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். திராவிட இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்.

அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின் கீழ் நின்று தான், நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

எங்கு நோக்கினும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனைமிகுந்த காட்சியைக்கண்டு உள்ளம் வெதும்பினார். சீறிப் போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்தமட்டும் அவருக்கு ஒரு குறையுமில்லை. மற்ற பிரச்சாரங்களைவிட அறிவுப் பிரச்சாரந்தான் முக்கியமானதென்று [illegible] எண்ணினார். அன்றே அவர் அறப் போரைத் துவக்கினார். அந்த அறப் போர் இன்று வெற்றி பெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப் படைகிறோம். இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அரசியல் வாழ்விலே பலர் இடம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அன்று தியாகராயர் மத விஷயங்களிலே புகவில்லை. புரோகிதத்தை எதிர்க்கவில்லை. ஏனென்றால் முதலில் அவர், திராவிடர்களுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்தி மக்களைத் தட்டி எழுப்பிய பின்தான், மத விஷயத்திலே புக விரும்பினார். முதன் முதலில் நம் மக்களுக்கு என்ன தேவை என்பதை நன்குணர்ந்தே அவர் முதலில் அப்படி ஈடுபட்டார்.

தியாகராயர் நாம் வெற்றிமேல் வெற்றி பெற வழி காட்டினார். இருட்டறைகளிலும், காட்டு நிலத்திலும், கூட்டம் கூடி, இயேசுநாதர் உபதேசத்தைக் கேட்டு உலகம் உயர்ந்தது போல, தியாகராயரின் சொற்கள் தென்னாட்டில் மெள்ள, மெள்ள, ஏழை எளியோர் குடிசையில் குடிபுகுந்த பின்னர், மாளிகைகளிலெல்லாம் சென்று,மக்கள் மன்றத்திலே புதியதோர் எழுச்சியை உண்டாக்கிவிட்டன. சர். தியாகராயர் புதுமை பல செய்து காட்டினார்.

தியாகராயர் நம்மை விட்டுப் பிரிந்தார். ஆனால் அவரது ஞாபகம் நம்மை விட்டுப் பிரியாது. சர். பிட்டி.தியாகராயர் அரும்பாடுபட்டு வளர்த்த கொள்கைகளைக் கடைப்பிடித்து அதனின்றும் வளர்ச்சி பெற்று உயர்ந்தோங்கி வந்திருக்கும் திராவிடர் இயக்கம் வெற்றிமேல் வெற்றி பெறும்.

*(30-6-1950 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தியாகராயர் நினைவுக்கூட்ட உரையிலிருந்து)*

# உழைப்பே உயர்வு



இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்!

—திருவள்ளுவர்.

ஒரு நல்ல தொழிலும், போதுமான வருமானமும், எதிர்காலத்துக்குக் கொஞ்சம் மீத்துவைக்க வசதியும், தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட அறிவும், பிறருக்கு உதவிடும் எண்ணமும் உடையவன் எவனோ-அவனே உண்மையான மகிழ்ச்சி உள்ளவனாவான்!

—இங்கர்சால்.

கடினமான உழைப்பே, நம் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்கும்; பொறுப்புணர்ந்து உண்மையுடனும் ஒற்றுமையுடனும் உழைக்கும் நம் மன உறுதிப்பாட்டினால்தான் நம் நாட்டின் முன்னேற்றத்தைக் காண முடியும்:

—அண்ணல் காந்தியடிகள்.

உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன்: வாழ்த்துக்குரியவன்! அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.

—பேரறிஞர் அண்ணா.

கடினமான நிலத்தில் ஏர் கட்டி உழுவோரிடமும், சாலை அமைக்க சரளைக் கல் உடைப்போரிடமும் இறைவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகின்றான். வெயிலில் உலர்கின்றான். அவனைப்போல நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டு கொள்ளுங்கள்:

—கீதாஞ்சலியில் தாகூர்.

உழைக்கும்போது நீங்கள் உலகில் பண்டைய நெடுங்கனவில் ஒருபகுதியை நிறைவேற்றியவராவீர்கள். அக்கனவு என்று பிறந்ததோ அன்றே உங்களுக்குரிய பங்கும் ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டது. எனவே, உழைப்போடு ஒத்திசைந்து நடக்கையிலேதான் உண்மையில் நீங்கள் வாழ்வைக் காதலிக்கின்றீர்கள். இவ்வாறு உழைப்பால் வாழ்வைக் காதலிப்பது, வாழ்வின் இரகசியங்களை நெருங்கி அறிந்து கொள்ளதாகும்.

—கலீல் ஜிப்ரான்.

தான் வாழ்வதற்காக மற்றவர்களை உழைக்கச் செய்துவிட்டுத் தான் மட்டும் உழைக்காமல் வாழ முடியும் என்கிற நிலை படைத்த மனிதன் எங்கே இருக்கிறானோ, அங்கே அடிமைத்தனம் நிச்சயமாய் இருக்கும்.

—டால்ஸ்டாய்.

மனிதன் தானாக உழைத்துப் பழகிக் காய்த்துப் போயிருக்க வேண்டும். இன்பநுகர்ச்சியிலும், மகிழ்ச்சியிலுமே ஆழ்ந்திருக்கக்கூடாது. அவை உடலுக்கும் நன்மை செய்வதில்லை; அறிவுக்கும் உதவுவதில்லை!

—சாக்ரடீஸ்.

மனிதன் தானாக நிமிர்ந்து நிற்கவேண்டும். மற்றவர்கள் அவனை அப்படி நிறுத்தி வைக்கக்கூடாது.

—மார்க் ஒளரேலியர்.





# மே நாள்



மே முதல் நாள்!

தொழிலாளர் இனத்துக்கு உவகை தரும் நாள்!

உலகம் முழுதும் உள்ள தொழிலாளர்கள் இந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். ஒரு நாட்டின் விடுதலைநாள் விழா, குடியரசு நாள் விழா போன்ற தேசிய நாட்கள் எவ்வளவு சிறப்புப் பெற்றிருக்கின்றனவோ அதுபோல மே நாளும் உலகச் சிறப்புப் பெற்றிருக்கிறது.

இந்த விழாவின் பொருள் என்ன? ஏன் இது கொண்டாடப்படுகிறது?

நாள்தோறும் 12 மணி நேரம் வேலை செய்துவந்த தொழிலாளர்கள் தங்கள் அலுவல் நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்று போராட்டம் செய்து, வெற்றி பெற்றது இந்த மே நாளில் தான்.

## உழைக்கும் இனத்தின் உள்ளக் குமுறல்

ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க நாட்டில் தொழிலாளர்கள் நாள்தோறும் 16 மணி நேரம் அலுவல்பார்த்துவந்தார்கள். உழைக்கும் இனத்தின் உள்ளத்தில் குமுறல் ஏற்படத் தொடங்கியது. அலுவல் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறத் தொடங்கினர்.

1837இல் அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த வான்ப்யூரன் அரசு அலுவலகங்களில் வேலை செய்வோர் 10 மணிநேரம் வேலை செய்தால் போதும் என்ற சட்டத்தை அறிமுகப்படுத்தினார். அவரது சட்டத்தைப் பின்பற்றிச் சில தொழிற்சாலைகள் 10 மணி நேர வேலைத் திட்டத்தை அமல் நடத்தின.

''பத்து மணி நேர அலுவல்கூட அதிகம், எட்டு மணி நேர அலுவலே நிர்ணயிக்கப்பட வேண்டும்'' என்று தொழிலாளர்கள் போராட்டம் செய்தார்கள்.

## தொழிலாளர்கள் ஒன்று கூடினர்

போராட்டம் மாபெரும் ஆர்ப்பாட்டமாக மாறியது. முதலாளிகள் அதனை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன. 6 தொழிலாளர்கள் இறந்தனர். எண்ணற்ற தொழிலாளர் காயமுற்றனர். இந்த அடக்குமுறையைக் கண்டிப்பதற்காக 'ஹேய் மார்க்கெட்' என்ற இடத்தில் முப்பாதாயிரம் தொழிலாளர்கள் ஒன்று கூடினர். அவர்கள் மீதும் அடக்குமுறை பயன்படுத்தப்பட்டது. மிகப் பலர் கைதாகினர். அவர்களில் பலரது தலைகள் கொய்யப்பட்டன.

அதன்பின்னர் 1888இல் அமெரிக்காவில் தொழில்கூட்டு மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாடு, எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தியது. பாரிஸ், பிரஸ்ஸெல்ஸ் ஆகிய இடங்களில் கூடிய தொழிலாளர் மாநாடுகளும் அமெரிக்க மாநாட்டின் கருத்தை ஏற்றுக் கொண்டன. அந்தப் போராட்டங்கள் யாவும் மே திங்களில் நடைபெற்றதால் மே நாள் போராட்டம் என்று பெயர் பெற்றது. மிகுந்த இன்னல்களுக்குப் பின்னர் இந்தப் போராட்டத்தின் வெற்றி கிட்டியது.

1904ஆம் ஆண்டில் ஆம்ஸ்டர்டாமில் கூடிய தொழிலாளர் மாநாட்டில் ''இனிமேல் ஒவ்வொரு மே மாதம் முதல் நாளன்றும் இவ்விழாவைக் கொண்டாடவேண்டும்'' என்று முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்காவில், சிறிது காலம் வரைமேமுதல் நாள், 'குழந்தைகள் நல நாளாகக் கொண்டாடப்பட்டது. சிலர், ''முதலாளி ஒழிப்பு நாள்'' என்றும் கொண்டாடி வந்தார்கள். அன்று அமெரிக்காவில் மட்டும் கொண்டாடப்பட்ட இந்த நாள், இன்று உலகப் பெரும் நாளாகத் திகழ்கிறது.

## உரிமை காக்கும் நாள்

தொழிலாளர்களின் உரிமைகளைக் காக்கும் நாளாக மே நாள் விளங்குகிறது. எந்த ஓர் அரசியல் கட்சிக்கும், சொந்தமானதல்ல இந்த நாள்! சாதி, சமயம், நாடு, மொழி என்ற வேறுமையின்றி அனைத்து நாட்டவராலும் கொண்டாடப்படும் இந்த மே நாள் அனைத்துலக விழா நாள் என்பதில் ஐயமில்லை.

தொழிலாளர்களைப் பெருமைப் படுத்தும் வகையில், மே நாளை, சம்பளத்தோடு கூடிய விடுமுறை நாளாக்கியுள்ளது தமிழ்நாடுஅரசு.



# இவர் ஒரு சாதனையாளர்

இராமநாதபுர மாவட்டத்தில் வேதாளை கிராமத்திற்கு அருகில் தாழையடித் தோப்பு என்ற பகுதியில்ஒரு வீட்டில் மின்விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. வீட்டிலே மின்விளக்கு எரிவதில் வியப்பு என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

மின்சாரத்தின் மூலமோ, ஜெனரேட்டரின் மூலமோ அந்த விளக்கு எரியவில்லை. ஏரோ ஜெனரேட்டர் என்னும் ஒரு காற்றாலையின் மூலம் கிடைக்கும் சக்தி 6 வோல்ட் சக்தி படைத்த ஒரு மின்கலத்தில் (பேட்டரி) சேமித்து வைக்கப்பட்டு, ஓர் ஊக்குவிப்பானின் மூலம் 220 வோல்ட் சக்தியாக மாற்றப்பட்டு, அதன் உதவியால் அந்த விளக்கு எரிகிறது என்றால், இது வியப்புக்குரிய செய்தி இல்லாமல் வேறென்ன?

அந்த அதிசயத்தை உருவாக்கியவர் - 50 வயதைக் கடந்த சுறுசுறுப்பு மிகுந்த அலிமனிக்பன் என்னும் அதிசயமனிதர் ஆவார்.

லட்சத்தீவுகளின் தென்கோடியில் இருக்கும் மினிகாய்த் தீவைச் சேர்ந்த இவர், பழங்குடி வகுப்பில் வந்தவர். பள்ளியில் பயிலாத இவர் அனுபவக் கல்வியை, வேண்டிய அளவு கற்றிருக்கிறார். அதிலும் விஞ்ஞான அறிவை இவர் ஏராளமாகப் பெற்றிருக்கிறார்.

1960 ஆம் ஆண்டில் இராமநாதபுரத்தின் கடற்கரைப் பகுதியான மண்டபத்திற்கு வந்து சேர்ந்த இவர், கடுமையாக உழைத்து-முன்னேற்றம் பெற்றார். 1984ல் வேதாளை கிராமத்தில் 2 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை விலைக்கு வாங்கி, அதில் பல விஞ்ஞான அதிசயங்களை உருவாக்கியுள்ளார்.

குறிப்பாக, கடல் அரிப்பினைத் தடுப்பதற்கு ஓர் உத்தியைக் கையாண்டிருக்கிறார் இவர். கடற்கரைப் பகுதியில் காற்று அதிகமாக வீசுவது வாடிக்கை. அப்போது கரையில் உள்ள மணல், காற்றினால் வேறொரு தரைப் பகுதிக்கு அடித்துச் செல்லப்படுவதும் உண்டு. அதன் காரணமாகக் கடற்கரையில் பள்ளங்கள் உருவாவதும், அந்தப் பள்ளங்களில் கடல்நீர் சூழ்ந்து கொள்வதும் உண்டு. அதனால் நீர்ப்பகுதி அதிகமாகி நிலப்பகுதி குறைந்துவிடும் அபாயம் ஏற்படுகிறது. இந்த இடர்ப்பாட்டைத் தடுப்பதற்கு அலிமனிக்பன் அரியதோர் உத்தியைக் கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

கடற்கரையை ஒட்டியுள்ள இவரது நிலத்தில் கடற்பனைக்கொடி என்னும் ஒருவகைத் தாவரத்தை வளர்த்து நிலமெங்கும் அதனைப் படரவிட்டார். அந்தத் தாவரம் நிலமெங்கிலும் பரவியிருப்பதால் அங்கிருக்கும் மணல், கடற்காற்றினால் அடித்துச் செல்ல முடியாமல் இருந்த இடத்திலேயே வியாபித்து விடுகிறது. அதனால் கடல்அரிப்பு முழுமையாகத் தவிர்க்கப்படுகிறது. இது அவரது விஞ்ஞான ஆய்வுகளில் ஒன்று.



இதுமட்டுமா? இன்னும் எத்தனையோ விஞ்ஞானச் சாதனைகளை இவர் உருவாக்கியிருக்கிறார்.

0.25 குதிரைச் சக்தியுள்ள ஸ்ப்ரேயர் இன்ஜின் ஒன்றினை இணைத்து, பெட்ரோலின் சக்தியால் இயங்க வைத்து, அதனை சைக்கிள் சக்கரத்துடன் பொருத்தி, மோட்டார் வாகனம் போல் சைக்கிளை ஓடவிடுகிறார். இப்படிப்பட்ட சைக்கிளைப் பயன்படுத்தி இராமநாதபுரத்திலிருந்து டெல்லி வரை சென்று திரும்பியிருக்கிறார்.

பொதுவாக, மின்சாரத்தினால் அல்லது ஜெனரேட்டரின் சக்தியால் குளிர்பதனப்பெட்டி இயங்கி வருகிறது. ஆனால் மண் எண்ணெய்யினால் குளிர்பதனப்பெட்டி ஒன்றை இயங்கச் செய்திருக்கிறார் இந்தச் சாதனையாளர்.

மினிகாய்த் தீவிலிருந்து கொண்டு வரப்பட்ட விதைகளைப் பயன்படுத்தி புதிய மாதிரி தாழைமரம் ஒன்றை வளர்த்து வருகிறார்.

பென்மனுஸ் லீவம் என்ற செடியை வளர்த்து அதன்மூலம் ஓலைப்பாய்களைத் தயாரித்து வருகிறார்.

இப்படிப் பற்பல சாதனைகளைப் படைத்துச் சரித்திரம் படைக்கிற இவரை ஒவ்வொருவரும் பின்பற்றினால் நமது நாட்டின் சாதனைப் பட்டியல் நீளுமல்லவா?

**இரா. பா. கார்மேகம்,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம் மாவட்டம்.





# சமுதாயத்திற்குப் புத்துருவம் தருபவர்கள் தொழிலாளர்கள்

நம்நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள். இயற்கை வளத்தைப் பயன்படுத்தித் தொழில் திறனை உண்டாக்குபவர்கள், தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் யாரும் ஐயப்பட வேண்டாம்!

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

தொழிலாளர் உரிமைகளையும், அவர்கள் நலனையும் எவ்வளவுக் கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அவ்வளவு விரிந்த அளவில், தொழில் வளம் பெருகும். நாட்டுடைமை சேதமாகாமல் செயல்படுமானால், தொழிலைப் பெருக்கலாம். தொழிலாளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்க வேண்டும்.

முதலாளிகளுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்.

நன்றாக ஓடிய பந்தயக் குதிரை கொஞ்சம் நொண்டினால்கூட சுட்டு விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோலத் தொழிலாளர் நலிவடைந்தால் அவர்களை விரட்டிவிடக்கூடாது.

சுடப்பட்ட குதிரை இறந்தபிறகு அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வார். ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால், அவன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

அமெரிக்காவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இயந்திரம் தருவிக்கலாம். ஆனால், மனித இயந்திரங்களைத் தருவிக்க முடியாது. அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம் தான் செய்கிறது. நூறில் ஒரு பங்காவது பாட்டாளி நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

தொழிலாளர் சமூகம், நல்ல பலம் பெற்றால் அவர்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் தெம்போடு உழைப்பார்கள். மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்; செல்வம் வளரும்.

எனவே, தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டாலும், அது சமூகத்துக்கு, ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும். தொழிலாளருக்காகச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்கில் கணக்காகி விடுவதில்லை.

இன்று மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றும் நவீனக் கருவிகளைப்பற்றிக் கூறுகிறார்கள். அதையும் மனிதன் தான் செய்தான் என்பதை மறந்து விடலாகாது.

உணர்ச்சியில் உந்தப்படுபவன் மனிதன். அந்த மனிதன் அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி - அவனது கண்களில் கண்ணீர் - அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால், அந்த இயந்திரத்திடமிருந்து முழுப் பயனும் பெறமுடியாது.

அந்த மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து அவனது வலியினையும் வாட்டத்தையும் போக்கிடக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பு இது. அந்தமனித இயந்திரத்தினைக் கவனித்தால், அது உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை நிற்கும்.

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டால்தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைப்பட்ட மனத்தோடு அவர்கள் வேலை செய்தால் தொழிலில்நேர்த்தியிருக்காது. தரம் இருக்காது - பயனும் கிடைக்காது.

காலையில் எழுந்தவுடன் பச்சைப் பசேலென்ற காட்சியும், பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழ்தலே உடலுக்கு நலன் பயக்கும்என்று உடற்கூறுநிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கானகட்டடங்களாகி விடுகின்றதைப் பார்க்கிறோம். தொழில்கள் அதிகமாகி வளரும்போது புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்தக் காரணங்களால், நாம் தொழில் வளர்ச்சியை விட்டு விட முடியாது. தொழில் வளர்ந்தால் தான் பொதுச் செல்வம் ஏற்படும் - அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளமுண்டாகும்.

தொழிலாளரது வாழ்வானது பாழ்நிலமாக அல்லாமல், பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

## புது வாழ்வுதரும் புத்தக சாலை!

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்!

—பாவேந்தர் பாரதிதாசன்





பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு விருது

அனைத்திந்திய அளவில், புறநகர் போக்குவரத்து இயக்கத்தில்-1987-88-ஆம் ஆண்டில் முதன்மையான கழகமாகப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தேர்ந்தெடுக்கப் பட்டது. அதற்கான விருது 31-3-89 அன்று, மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. ஜெ. வெங்கல்ராவ் அவர்களால் வழங்கப் பட்டது.

புதுடில்லியில் அளிக்கப்பட்ட அந்த விருதைப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு என். வெங்கட கிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்.

இந்த வகையில், இக்கழகம் இந்தப் பரிசை இரண்டாவது தடவையாகப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், திரு. மு. கண்ணப்பன் அவர்கள் அந்த விருதைக் கண்டு மகிழ்ந்து, நிர்வாக இயக்குநரைப் பாராட்டினார்.

## நிதிநிலை அறிக்கை மகிழ்ச்சியைத் தந்தது

1.4.89 இதழில், நிதி நிலை அறிக்கை முழு விவரம் படித்தேன். மகிழ்ச்சியைத் தந்தது.

-ஜின்னா,
ஆர்.கே.எஸ். ஷம்சுகனி
டி. மாரியூர்.

மாண்புமிகு கலைஞரின் வரவு செலவுத் திட்டப் பேருரையை அப்படியே பிரசுரித்துள்ளதால், அவரின் பேச்சைக் கேட்டது போலிருந்தது.

செ.மு.வேடியப்பன்,
ஈச்சம்பாடி.

தமிழரசு ஒவ்வொரு இதழும் ஒரு பொன்னேடு. படித்துப் பாதுகாக்க வேண்டியவை.

இ.பாலமுரளி,
இ.சுரேந்திரன்,
எஸ்.அக்ரகாரம்.

'வரவேற்பு' சிறுகதைக்கு வரவேற்பு. மாணவர் பக்கம் வழக்கம் போல் இனிமை.

-மாவேந்தன்,
பரமன்குறிச்சி.

முதல்வர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலைஅறிக்கைவிவரங்களை முழுமையாகத் 'தமிழரசு' இதழில் படித்தபோது நேரிலேயே அவர் உரையைக் கேட்டதுபோன்ற உணர்வு ஏற்பட்டது.

எம்.பி.இளங்கோ,
மேட்டுப்பாளையம்.

இந்தியப்பிரதமர் - தமிழக முதல்வர் அட்டைப்படம் அருமை.

க. வெற்றிவேல்,
உதயமார்த்தாண்டபுரம்

வெ.சங்கரநாராயணன்,
திருவண்ணாமலை-1.
க. சம்பத்குமார்,
விழுப்புரம்.

பார்த்தோம் - படித்தோம்





# அண்ணல் அம்பேத்கார்

கீழ்சாதி, மேல்சாதி என்ற பாகுபாடு நீங்க காந்தியார் பெரிதும் பாடுபட்டார். 'அரிசனங்கள்' என்றால் தெய்வத்தின் பிள்ளைகள் என்று அவர் கூறினார். அவர்கள் ஆலயப் பிரவேசம் செய்ய ஒரு போராட்டமே நடத்தி வெற்றி கண்டார்.

எம்மதமும் சம்மதமே என்ற கொள்கை மிகவும் உயர்ந்தது ஆகும். மேலவர் கீழவர் என்பது அவரவர் பிறப்பால் அமைவதில்லை; அவரவர் அறிவை வைத்தே வரையறுக்கப்பட வேண்டும் என்பார்கள் அறிஞர்கள். இதைத் தெளிவு படுத்தத்தான் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடினார் பாரதியார்.

ஒருவரது பிறப்பை வைத்தே மேலோர், கீழோர் என்று கூறுவது தவறு. அவரவர் அறிவுத் திட்டத்தை வைத்தே இதைக் கணிக்க வேண்டும்.

முள் நிறைந்த கள்ளிக் காட்டில் தோன்றினாலும் அகில் அதிகம் மதிக்கப்படுகிறது.

உப்புக் கரிக்கும் கடல் நீரில் கிடந்தாலும் முத்து உயர்வானதாக எண்ணப்படுகிறது.

சேற்றில் பிறந்தாலும் செந்தாமரை சிறப்பாகப் பேசப்படுகிறது.

1891-ஆம் ஆண்டில், ஏப்ரல் 14 ஆம் தேதி மராட்டிய மாநிலத்தில் உள்ள அம்பாவதி என்ற சிற்றூரில் பிறந்தவர் அவர். தந்தையார் பெயர் ராம்ஜி சக்பால். தாயார் பெயர் பீமபாய். பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் பீமராவ் என்பதாகும்.

பதினான்காவது பிள்ளையாகப் பிறந்த அவர், பள்ளியில் சேர்க்கப் பட்டார்.

தீண்டாமைக் கொடுமை அந்தப் பள்ளியிலும் தலைவிரித்தாடியது. உயர்சாதி என்று அப்போது கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் மட்டுமே பலகையில் உட்காருவர். கீழ்ச்சாதி என்று கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் வெறும் தரையில்தான் உட்காருவர். தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த பீமராவும் தரையிலேயே அமர்த்தப்பட்டார்.

ஆசிரியரோ, உயர் சாதிப் பிள்ளைகளோ தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளைத் தொடக்கூடக் கூசுவார்கள். அவர்களுடைய பாடநூல், எழுதுகோல் ஆகியவற்றைக் கூடத் தொடமாட்டார்கள்.

பீமராவ் தனது பள்ளியில் இருந்த இந்த நிலையை வெறுத்தார். இதனால் கல்வியிலும் அவரால் கவனம் செலுத்த முடியவில்லை.

இதுபோன்ற நேரத்தில் அந்தப் பள்ளிக்கு அம்பேத்கார் என்றொரு ஆசிரியர் வந்து சேர்ந்தார். அவர் பிறப்பால் அந்தணர், ஆனால், அப்போதிருந்த மற்ற ஆசிரியர்களைப் போலத் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களை அவர் அலட்சியம் செய்யவில்லை.

பீமராவ் தாழ்ந்த சாதியினரானாலும் அவரை மிகவும் அன்போடு

### மேலான மே நாள்!

அகில உலகமெங்கும் அகமகிழ்ந்து கொண்டாடப்படும் இம் மே தின விழாவை, கட்சி-கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப் பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள், ஓய்வு பெற்று நின்று, சென்றகால-வருங்காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மே நாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து, மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்றவேண்டியசெயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மே நாள் பயன்படுகின்றது.

—பேரறிஞர் அண்ணா.





### தியாகராயரும், செய்தித் தாள்களும்

சர் பிட்டி தியாகராயர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தினச் செய்தித்தாள்களை அச்சிட்டு வெளியிட்டார்.

'ஜஸ்டிஸ்' என்ற பெயரில் ஆங்கில செய்தித் தாளை 1917 பிப்ரவரி 26 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1263. 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில இதழின் பெயரின் காரணமாக தென் இந்தியன் லிபரல் பெடரேஷனானது ஆங்கிலத்தில் "ஜஸ்டிஸ் பார்ட்டி" என்றும், தமிழில் "நீதிக்கட்சி" என்றும் அழைக்கப்படலாயிற்று.

1885-இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி "திராவிட பாண்டியன்" என்ற ஒரு தமிழ்ச் செய்தித் தாளை வெளியிட்டார். அதே நோக்கில்தான் சர். பிட்டி. தியாகராயரும் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி 1917 ஜூன் 1 சனிக்கிழமை 'திராவிடன்" என்ற பெயரில் தமிழ் தினச் செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்.எம். 1279.

1885-இல் தெலுங்கு மொழியில் 'ஆந்திர பிரகாசிகா' என்ற செய்தித் தாள் வெளிவந்தது. சர். பிட்டி. தியாகராயர் அதே தெலுங்கு செய்தித் தாளை 1917 ஜூன் 10 திங்கட்கிழமையிலிருந்து அச்சிட்டு தினச் செய்தித் தாளாக வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1280.

நடத்தினார். தான் கொண்டுவரும் உணவையும் அவருக்கு உண்ணக் கொடுத்தார். படிப்பதில் உற்சாகம் ஊட்டினார்.

ஆசிரியர் அம்பேத்கார் காட்டிய அன்பே, சிறுவன் பீமராவை அக்கறையோடு படிக்க வைத்தது. தான் பெற்ற முன்னேற்றத்திற்குக் காரணமான அவர் பெயரையும் சேர்த்துத் தான் இவர் தன்பெயரை 'பீமராவ் ராம்ஜி அம்பேத்கார்' என்று மாற்றிக்கொண்டார். நாளடைவில் அம்பேத்கார் என்ற பெயரே நிலைத்தது.

சதாரா என்ற இடத்தில் அம்பேத்காரும் அவர் தமையனாரும் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் தந்தை கோரிக்கேன் என்ற ஊரில் வேலை பார்த்துவந்தார்.

ஒருநாள் அம்பேத்காரும், அவரது தமையனாரும் தந்தையைப் பார்க்கப்புறப்பட்டனர். ரயில் மூலம் மாசூரில் போய் இறங்கினார்கள். அங்கிருந்து கோரிக்கேனுக்குப் போக ஒரு மாட்டு வண்டியில் புறப்பட்டனர்.

போகிறவழியில், இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று தெரிந்துகொண்ட வண்டிக்காரர் மிகவும் கோபப்பட்டார். தன் வண்டியின் தூய்மையே கெட்டு விட்டதாகச் சொல்லி வண்டியைக் குடை சாய்த்து அவர்களை கீழே உருட்டிவிட்டார்.

அப்போது நிதானம் இழக்கவில்லை அம்பேத்கார். பேசியது போல் இரண்டு பங்கு வாடகை தருவதாகவும், தம்மை ஏற்றிச் செல்லுமாறும், வண்டிக்காரரிடம் கூறினார். வண்டிக்காரர் சிறிது யோசித்து விட்டுப் பிறகு சம்மதித்தார்.

ஆனால், அவர்களை வண்டி ஓட்டச் சொல்லிவிட்டு, தன்சாதிப் பெருமை கெட்டுவிடக் கூடாதே என்று வண்டியின் பின்னால் நடந்தே சென்றார் அவர்.

இன்னொரு சமயம் தாகமுற்று நீர்கேட்டார் அம்பேத்கார். அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதால் யாரும் நீர்தர மறுத்துவிட்டார்கள். தாகம் தாளாமல் குளத்தில் இறங்கித் தண்ணீர் குடித்தார் அம்பேத்கார். இது கண்ட அங்கிருந்த சாதி இந்துக்கள் கோபமுற்று அவரைப் பலமாகத் தாக்கிவிட்டனர்.

இந்த இரண்டு சம்பவங்களும் அம்பேத்கார் நெஞ்சில் ஆழப்பதிந்தன. எனவே, தீண்டாமைக் கொடுமையைப் பூண்டோடு அழிக்க உறுதி பூண்டார்.

தாழ்த்தப்பட்டோர் அவல நிலை பற்றிக் காந்தியாரைக் கண்டு பேசினார் அம்பேத்கார். காந்தியார் அவரது அறிவாற்றலைப் பெரிதும் பாராட்டினார். 1947-ல் "தீண்டாமை பெருங்குற்றம்; அதைக் கடைப்பிடிப்பவர்கள் குற்றவாளிகள்' என்று அறிவித்தது அரசியல் அமைப்புச்சபை. அம்பேத்கார் ஓரளவு நிம்மதிப்பட்டார்.

1947-ல் ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பதவியளித்துச் சிறப்பிக்கப்பட்டார் அம்பேத்கார். இந்திய அரசியல் சட்டத்தை நிர்ணயிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதன் தலைவராகவே அம்பேத்கார் நியமிக்கப்பட்டார்.

அந்தக் குழுவை உறுப்பினர்கள் பல காரணங்களால் ஒதுக்கியிருந்தனர். ஆனால், அம்பேத்கார் தனித்தே நின்று அரும்பாடுபட்டு இந்திய அரசியல் சட்டத்தை இயற்றித்தந்தார்.

அம்பேத்காருக்கு அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக் கழகம் சிறப்புப் பட்டம் அளித்தது. நம் இந்திய நாட்டிலுள்ள உஸ்மானியா பல்கலைக்கழகம், இலக்கியத்தில் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

அழியாப் புகழுக்குச் சொந்தக்காரரான டாக்டர் அம்பேத்கார் 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் நாள் உயிர்நீத்தார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தாலும், தன்னம்பிக்கையோடு படித்து முன்னேறிய டாக்டர் அம்பேத்கார் பெருமை அளவிடற்கரியதாகும்.





# பெண்களுக்கு சொத்துரிமை

பால் அடிப்படையில் பெண்களுக்குக் காட்டப்பட்ட பாரபட்சம் நீக்கப்படும் வகையிலும் மகளிர் மனம் மகிழும் வகையிலும் மறுமலர்ச்சிச் சட்டம் ஒன்று 13.4.89 அன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை அளிக்க வகை செய்யும் இந்தச் சட்ட முன்வடிவை, மாண்புமிகு சட்ட அமைச்சர் திருஎஸ்.ஜே. சாதிக்பாட்சா அவர்கள் முன்மொழிந்தார்.

சட்ட முன்வடிவில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

இந்தச் சட்டம் 1989-ஆம் ஆண்டு இந்து வழிமுறை உரிமை (Succession) தமிழ்நாடு திருத்தச் சட்டம் என வழங்கப்படும்.

இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

இந்தியக் குடியரசின் 40ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாதில சட்டப்பேரவையால் இயற்றப்படும் இந்தச் சட்ட முன் வடிவு, தமிழ்நாடு அரசு இதழில் முதன்முதலாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்து விட்டதாகக் கொள்ளப்படும்.

சட்டத்தின் முன்பு சமத்துவத்தை ஓர் அடிப்படை உரிமையாக இந்திய அரசு அமைப்பானது சாற்றியுள்ளமையாலும், பெண்பாலாய் இருக்கிற காரணத்தினால் மட்டுமே கூட்டுஉடைமை உரிமையில் பங்கு கொள்வதிலிருந்து மகளை விலக்கி வைப்பதாவது அந்த அடிப்படை உரிமைக்கு முரணாக இருக்கின்றமையாலும், மகளை அவ்வாறு விலக்கி வைப்பதானது சமூகத்திற்குப் பெரும் கேடு விளைவிக்க வல்ல வரதட்சிணை முறையையும் அதனோடு சேர்ந்த சமூகக் கேடுகளையும் உருவாக்குவதற்கு வழிவகுத்துள்ளமையாலும், ஆக்கமுறையான நடவடிக்கைகளின் மூலம் கொடுமையான இந்த வரதட்சணை முறை ஒழிக்க வேண்டியுள்ளமையாலும், அதே நேரத்தில் இந்து சமூகத்தில் பெண்களின் நிலையை அது சீராக்கும் என்பதாலும் இந்தியக் குடியரசின் 40-வது ஆண்டின் தமிழக மாநிலச் சட்டமன்றப் பேரவையில் சட்டம் இயற்றுவதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது.

1956-ஆம் ஆண்டு இந்து வழிமுறை உரிமைச் சட்டமானது (மையச் சட்டம் 30/1956) உயில் இல்லாத நிலையில் வழிமுறை உரிமையைப் பற்றிய இந்துச் சட்டத்தைத் திருத்தித் தொகுக்க விழைகின்றது.

தற்போது இந்து மிதாக்சாரச் சட்டத்தின் கீழ் மகள்கள் கூட்டுடைமை உறுப்பினர்களாக இல்லை. அதனால் கூட்டுடைமைச்சொத்தில் பாகப்பிரிவினை கோருவதற்கு அவர்களுக்கு உரிமை தகுதியில்லை. அவ்வாறு மகள்களை விலக்கி வைத்திருப்பதாவது, சமூக ரீதியாகப் பெருங்கேடு விளைவிக்கவில்லை. வரதட்சணை முறையையும் அதனோடு சேர்ந்த சமூகக் கேடுகளையும் உருவாக்குவதற்கு வழி வகுக்கிறது. ஆக்க முறையான வழிகளின் மூலம் இந்தத் தீமைகளை ஒழிப்பதற்காகவும் அதே நேரத்தில் இந்து சமூகத்தில் பெண்களின் நிலைமைகளை அது சீராக்கும் பொருட்டும் மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன் மூலம் அரசமைப்பு வலியுறுத்துகிற சமத்துவத்தை எய்துவதற்காக வேண்டி ஓர் இந்து கூட்டுக் குடும்பத்தில், மகன் ஒருவன் பெற்றிருப்பதன் மூலம் அதே உரிமைகளை ஓர் இந்து மகளுக்கும் வழங்கக் கருதப்பட்டுள்ளது. கருதியுள்ள திருத்தங்கள் இந்த திருத்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு திருமணமாகியுள்ள மகள்களுக்குப் பொருந்தாததாகச் செய்யப்பட்டுள்ளன. கருதியுள்ள 29எ பிரிவின் (11) ஆம் கூறின் வகை முறைகள் தகுதியுள்ள இந்தத் திருத்தச் சட்டத்தின் தொடக்கத்தேதிக்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட ஒரு பாகப்பிரிவினைக்குப் பொருந்தாது.

## மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலப்பாடம் கற்பிக்கப்படும்.


1948-49 ஆம் ஆண்டிலிருந்து சில காலம் ஆங்கிலப் பாடம் ஆறாம் வகுப்பிலிருந்து மட்டும் கற்பிக்கப்பட்டது. அதன் பின்னர் கீழ்க்கண்டவாறு படிப்படியாக, கீழ் வகுப்புகளில் ஆங்கிலப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது:

1. 1960-61-ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பு.
2. 1962-63-ஆம் ஆண்டில் நான்காம் வகுப்பு.
3. 1963-64-ஆம் ஆண்டில் மூன்றாம் வகுப்பு.

பின்னர், அரசு ஆணை எண்.79 கல்வி நாள் 25.1.88-இல், 1988-89ஆம் கல்வியாண்டிலிருந்து ஆங்கிலப் பாடத்தைப் பள்ளிகளில் முதலாம் வகுப்பிலிருந்து பேச்சு மொழியாகக் கற்றுத் தருவதற்கு அரசு ஆணையிட்டது.

முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடத்தைப் பள்ளிகளில் கற்பிக்க வெளியிடப்பட்ட ஆணையினை அரசு மறு பரிசீலனை செய்தது. முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடத்தைக் கற்பிப்பது இளஞ்சிறார்களுக்குப் பெருஞ்சுமையை ஏற்படுத்தும் என்பதால், ஜனவரி 1988-க்கு முன்பு அமலிலிருந்தவாறு மூன்றாம் வகுப்பிலிருந்து மட்டும் பள்ளிகளில் ஆங்கிலப் பாடத்தைக் குறிப்பதற்கு அரசு முடிவெடுத்தது. அதன்படி, 1989-90ஆம் கல்வியாண்டு முதல், பள்ளிகளில் மூன்றாம் வகுப்பிலிருந்து மட்டும் ஆங்கிலப் பாடம் கற்றுத் தரப்படவேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

இவ்வாணை அனைத்து மேலாண்மையின் கீழ் உள்ள பள்ளிகள், பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள அரசுப் பள்ளிகள், உள்ளாட்சித் துறை, ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறை பிற்பட்டோர் நலத் துறை மற்றும் சமூக நலத் துறையின் கீழ் நடத்தப்படும் பள்ளிகள் எல்லாவற்றிற்கும் பொருந்தும்.





# சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமம் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலகக் கட்டடமான 'தாளமுத்து-நடராஜன்' மாளிகையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 14-4-89 அன்று சென்னையில் திறந்து வைத்தார்.

விழாவிற்கு, மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு தலைமை தாங்கினார். நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு. சி. செல்லப்பன் வரவேற்புரையாற்றினார்.

160 அடி உயரம் கொண்டதும், 50 மனைகள் பரப்பளவு கொண்டதும், 12 மாடிகளைக் கொண்டதுமான இக்கட்டடம் 15 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டதாகும். திறப்பு விழாவில்-1974இல் துவக்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றிய விளக்க அறிக்கையைத் தலைமைப் பொறியாளர் திரு. எஸ். குமரேசன் படித்தார்.

எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி, இவ்விழாவில் பேசும்போது குறிப்பிட்டதாவது;

''இந்த மாபெரும் மாளிகைக்குத் தாளமுத்து, நடராஜன் ஆகிய இருவரின் பெயரைச் சூட்டியதன் மூலம், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் மதிப்பை நமது முதல்வர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார். டாக்டர் அம்பேத்காரின் பெயர் ஒரு மாவட்டத்திற்கு வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, அடுத்து பிரியவிருக்கும் மாவட்டத்திற்கு அம்பேத்கார் பெயர் வைக்கப்படும் என்றும் முதல்வர் அறிவித்திருக்கிறார். இதற்காகவெல்லாம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.''

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ. கலாநிதி பேசுகையில்-''இந்தப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம், முன்பு, மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது துவக்கி வைக்கப்பட்டதுதான். அவரது திருக்கரத்தால் துவக்கி வைக்கப்படும் எதுவுமே சோடை போனதில்லை என்பதற்கு இந்த மாபெரும் கட்டடமே தக்க சான்று'' என்று குறிப்பிட்டார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். ராஜேந்திரன் பேசும்போது-''கிராமப்புற மக்கள் பெருமளவில் நகரத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். . இந்தியாவிலேயே, இப்படிப்பட்ட நிலையில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அதற்கேற்ப நகர்ப்புற வளர்ச்சி அமையவேண்டும் என்கிற கருத்தில்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்தைத் தோற்றுவித்திருக்கிறார்; அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. பொன்முடி பேசுகையில்:''தமிழ் காக்கப் போராடி உயிர் நீத்த தியாகிகளின் பெயரை இக்கட்டடத்திற்குச் சூட்டி உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழ்ச் சமுதாயமே கடமைப்பட்டிருக்கிறது'' என்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி பேசுகையில்-''தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிகளை, பதவியேற்ற இரண்டுமாத காலத்தில் பெருமளவு நிறைவேற்றிய பெருமைமிக்க மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். மாண்புமிகு முதல்வர் அவர்களின் இத்தகைய அரும்பணியைத் தமிழகமே போற்றுகிறது'' என்று சொன்னார்.

'தாளமுத்து—நடராஜன்' மாளிகைக்கு வடிவமைத்த நிபுணர்கள், கட்டுமானக் கழக நிர்வாக இயக்குநர் திரு. செங்கல்வராயன்-மற்றும் அக்கட்டடம் உருவாக அரும்பாடுபட்ட அலுவலர்கள், ஆண்-பெண் கட்டடத் தொழிலாளர்கள், தலைமைக் கொத்தனார், தலைமைத் தச்சர், தலைமை மின்தொழிலாளி ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகள் அளித்தார். 6 தளங்களில் அலுவலகம் அமைக்க உரிமை பெற்றோருக்கு வெள்ளித் திறவுகோல்கள் வழங்கினார்.

## முதல்வர் உரை

தாளமுத்து-நடராஜன் மாளிகையைத் திறந்து வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில்-''பன்னிரண்டாண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த நான், அரசாங்கத்தின் முதல் நிகழ்ச்சியாக இந்தப் பன்னிரண்டு மாடிக் கட்டடத்தைத் திறந்து வைப்பதில் பூரிப்படைகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

''தாளமுத்து—நடராஜன் என்ற பெயர்களுக்குப் பின்னால் இருக்கின்ற ஒரு பெரிய வரலாறு பெரும்பாலோருக்குத் தெரிந்திருக்க நியாமில்லை. 1938-ஆம்-ஆண்டு நடைபெற்ற மொழிப் பேராட்டத்திலே பங்கேற்று-சென்னைச்சிறைச் சாலையிலேயே மாண்டு போனவர்கள்தான் தாளமுத்து-நடராஜன் என்ற இரண்டு தியாகத் தழும்புகளும்; அவர்கள் மேட்டுக்குடி மக்களல்ல; தாளமுத்து பிற் பட்ட சமுதாயத்தில் பிறந்த நாடார் குலத்தைச் சேர்ந்தவர்; நடராஜன் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இன்றைய தினம் இந்தித் திணிப்பு தமிழகத்திலே நிச்சயமாக இராது என்று வடக்கேயிருந்து வருகிற எல்லாத் தலைவர்களும் சொல்லுகிறார்கள் என்றால், அதற்குக்காரணம் அந்த, இன்னுயிர்கள்தான் என்பதை யாரும் மறந்து விடமுடியாது. அப்படிப்பட்டவர்களின் பெயர் மங்கி மறைந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஓங்கி உயர்ந்த கட்டடத்திற்கு அந்தத் தியாகப் பெருமக்களினுடைய பெயர்கள் இடப்பட வேண்டும் என்று நான் கருதினேன்'' என்றும் முதல்வர் அவர்கள் தெரிவித்தார். ''1938-ஆம் ஆண்டு ஒரு ஐம்பதாண்டுக் காலம் என்னுடைய பொது வாழ்க்கையில் ஆரம்ப கட்டமாக அமைந்தது மொழிப்பேராட்டக் காலம். இந்த மொழிப்பேராட்டக் காலத்திலே மேலும் எனக்கு உத்வேகத்தையும், ஆர்வத்தையும், மொழியின்பால் பற்றையும் உருவாக்கிய இரண்டு பெயர்களே தாளமுத்து-நடராஜன் என்ற பெயர்களாகும். இந்தக் கட்டடம், தீ ஏற்பட்டால் அந்தத் தீயைத் தானே அணைத்து விடும் தன்மைவாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் காரணத்தினாலேதான் இந்தியை அணைக்கப் புறப்பட்ட அவர்கள் பெயரை இந்தக் கட்டடத்திற்கு நான் சூட்டினேன்'', என்றும் அவர் சொன்னார்.

மேலும் அவர் பேசியதாவது: ''கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் இன்னும் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. இது கடந்த கால அரசால் தொடங்கப்பட்ட திட்டம் என்றாலும்—வீராணம் திட்டத்தைப் போல - கடந்த கால அரசால் தொடங்கப்பட்ட திட்டம். ஆகவே கிடப்பிலே போடுவோம் என்ற குறுகிய மனப்பான்மை எங்களுக்கு இல்லை. யாரால் அது தொடங்கப்பட்டதாக இருந்தாலும் மக்களுக்கு அது நன்மைதரும் திட்டமாக இருந்தால், அதை நிறைவேற்றக்கூடிய-பெருந்தன்மையை அண்ணா அவர்கள் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார். எனவே, விரைவில் தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற ஆந்திர முதல்வரோடு நான் பேசவிருக்கிறேன். சில நாட்களில் காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து கர்னாடக முதல்வரோடு பேசவிருக்கிறோம். ஆந்திர முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி இன்னும் இரண்டு மூன்றாண்டுக்காலத்தில் அத்திட்டத்தை நிறைவேற்றி, தெலுங்கு கங்கைத் தண்ணீரை சென்னை மாநகரமக்கள் பருகும் வாய்ப்பை இந்த அரசு உருவாக்கித்தரும்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

பின்னர், கட்டட நுழைவாயிலில் குத்து விளக்கேற்றி வைத்த அவர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

விழா முடிவில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழும உறுப்பினர் திரு. எல். கே. திரிபாதி நன்றியுரையாற்றினார்.



## முதல்வர் நிதியிலிருந்து உதவி


சென்னை பெரம்பூரைச் சேர்ந்த திரு ந.சுப்பிரமணியன் என்பவரின் இரண்டரை வயது குழந்தை ராம்குமாருக்கு, இருதய அறுவைச் சிகிச்சைக்காகத் தற்போதுள்ள விதிகளின்படி அவர் தகுதி பெறாத போதும் அக் குழந்தையின் நலன் கருதி, தனி இனமாக ரூ.5000 கருணை அடிப்படையில் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் வட்டம், சான்றோர்பாளையம் கிராமத்தில் கடந்த 20.10.88 அன்று இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலில் 15 வயது சிறுமி சாந்தி மரணமடைந்தார். இனக் கலவரத்தில் இறந்த செல்வி சாந்தியின் தந்தை திரு குப்புசாமி படையாச்சிக்கு, மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5000 நிதியுதவி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சேலம் மாவட்டம் சேலம் ஆதின வட்டம், சுந்தரபிள்ளை வலசு கிராமத்தில் தென்னை மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமடைந்த திரு ராயலிங்கம் குடும்பத்தின் துயர் துடைக்க அவரது வாரிசுதாரர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம், குளச்சல் கிராமம் சுத்தியபாடு தட்டாரவிளையில் பனை மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமடைந்த திரு ஆ.சுப்ரமணியின் குடும்பத்தின் துயர் துடைக்க அவரது வாரிசுதாரர்களுக்கும் ரூ. 5000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி வட்டம் சித்தரங்குறை கிராமத்தில் மின்னல் தாக்கி மரணமடைந்த திருமதி கோவலாவின் குடும்பத்தின் துயர்துடைக்க அவரது வாரிசுதாரர்களுக்கு ரூ.2000 வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

# படமும் செய்தியும்



தமிழகத்திற்கு, 14-4-89 அன்று வருகை தந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வரவேற்றார்.



இந்தியத் திரைப்படப் பவள விழாவையொட்டி, 16-4-89 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மேதகு தமிழக ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாண்டர் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அவ்விழாவில் மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. எச். கே. எல். பகத் அவர்கள்பழம் பெரும் திரைப்படக் கலைஞருக்கான விருதினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு வழங்கிப் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்களும் இவ் விழாவில் கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசு, வரும் கல்வியாண்டிற்கான இலவசப் பாட நூல்களை, மையங்களுக்கு லாரிகள் மூலம் அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியை மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் 12-4-89 அன்று துவக்கி வைத்தார்.







மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், 13-4-89 அன்று, சென்னை உயர்நீதி மன்றத்தில் அட்வகேட்ஜெனரல், அரசுத் தரப்பு வழக்கறிஞர், பப்ளிக் பிராசிக்யூட்டர் மற்றும் அலுவலர்களுடன் இடவசதி குறித்தும் பராமரிப்பு குறித்தும் ஆலோசனை நடத்தினார்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், சென்னையில் ஆஸ்திரேலியக் கழகத்தினர் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் ஆஸ்திரேலியச் சுற்றுப்பயண வழியனுப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயணச் சீட்டுகளை 20-4-89 அன்று வழங்கினார்.

மாநில அளவிலான செய்தி, கல்வி, தொடர்பு விரிவாக்க அலுவலர்களுக்கான முத்தமிழ்ப் பணியிடைப் பயற்சிக் கருத்தரங்கை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் துவக்கி வைத்தார். (11-4-89).



மகம்மதுவின் தெய்வ ஒருமையும் கிறிஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அஹிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சிணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்கவில்லை? சில தடைகள் மறிக்கின்றன. அவை யாவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி வழக்கவொழுக்கங்கள் முதலியன. இவற்றைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி தொழிலாளி வேற்றுமை. இவ்வேற்றுமையை ஒழிக்கவல்லது பொருட் பொதுமை; பொருட் பொதுமை மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், பிறவும், மன்பதையின் கால் கொள்வதற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்ததுவென்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்சியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

உலகம் போராட்டத்துக்கும் இரையாதல் கண்கூடு. மூலம் என்ன? இது குறித்துத் தனித்தனி ஆராய்ச்சி செய்தவர் பலர். அவருள் சிறந்தவர் காரல் மார்க்ஸ். உலகப் போராட்டத்துக்கு மூலமாக நிற்பது முதலாளி-தொழிலாளி என்னும் வேற்றுமை உணர்வென்பது மார்க்ஸ் கண்ட உண்மை. இது நடுநிலையில் நின்று போர்மூலத்தை ஆராயும் ஒவ்வோர் அறிஞர்க்கும் எளிதில் புலனாகும்.

பண்டைநாளில் சாம்ராஜ்யங்கள் பெருகவில்லை. அதனால் முதலாளி-தொழிலாளி உணர்வு, வளராமற் கிடந்தது. இந்நாளில் சாம்ராஜ்யங்கள் பெருகி உள்ளன. அப்பெருக்கம் முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வை வளர்ப்பதாயிற்று. அவ்வளர்ச்சி வாழ்க்கையில் போராட்டத்தைப் புகுத்தியது. போராட்டத்தை ஒழிக்கும் மருந்து காரல் மார்க்சுக்குக் கிடைத்தது. அது, பொதுமை அறத்தை நிலை பெறுத்தவல்ல பொருளாதார சமரசம்.

மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை, உலகில் புறஅமைதியை நிலவச் செய்யும் மாண்புடையது. அக அமைதியை மகம்மது, கிறிஸ்து அருகர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கை நிலைபெறச் செய்யும். அக அமைதிக்குப் புற அமைதி வேண்டற்பாலது.

புற அமைதியை உலகில் நிலவச்செய்யும் வல்லமை வாய்ந்த மார்க்சியத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது? மார்க்சியத்தைத் தள்ளுவது சான்றோரின்

## 200 பெண்களுக்கு ஆட்டோரிக்ஷா!

மகளிர் முன்னேற்றத்திற்காக இந்த அரசு அறிவித்த திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

சில மாநிலங்களில் பெண்கள் சொந்தமாக ஆட்டோரிக்ஷா வைத்துக்கொண்டு குடும்பத்துக்குத் தேவையான வருமானத்தைப் பெறுகிறார்கள். இப்போது இங்கு பள்ளிகளிலிருந்து குழந்தைகளை அழைத்துச் செல்லும் ஆட்டோ ரிக்ஷாக்களை ஆண்கள்தான் ஓட்டிச் செல்கிறார்கள். அதிகக் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பலர் கண்மண் தெரியாமல் ஓட்டிப் போவதைப் பார்க்கிறோம்.

பெண்கள் இத்தகைய ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டிச் சென்றால் பாதுகாப்பாக இருக்கும்.

எனவே முதல் கட்டமாக 200 பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்க 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், 10 பெண்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா வாங்க 60 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர கரும்புச்சாறு பிழியும் இயந்திரம், ஐஸ்கிரீம் வண்டி, ஆகியவை வாங்கவும், பிளாஸ்டிக் பாய்முடைதல் போன்றவற்றுக்காகவும் இந்த ஆண்டு ரூ.33 இலட்சம் செலவிடத்திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 5,500 பெண்கள் இந்த ஆண்டு பயன் அடைவார்கள்.

**—மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் 21.4.89 அன்று சட்டமன்றத்தில் பேசிய திலிருந்து.**

அமைதிச் செல்வத்தைத்தள்ளுவதாகும். போராட்டத்தை அழைப்பதாகும்.

சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கந்தேடவே யான் மார்க்சிய பொருட் பொதுமைக் கொள்கையைத் தழுவுகிறேன். மார்க்சியத்தைச் சான்றோரின் மூலக்கொள்கைக்கு மாறாகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என் மனம் ஈடுபடுவதில்லை.

மார்க்சியம் முழுமையதா? குறையுடையதா? எதிலுங் குறையுண்டு. மார்க்சியத்திலும் சிறு குறையுண்டு. என்ன குறை? அதன் கண் சத் என்னும் நுண் பொருள் வெளிப்படையாகக் காணப்படாமை; மார்க்சியத்தில் 'சத்' என்னும் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடையதாகும்.

மார்க்சியம் சமதர்மத்தை அறிவுறுத்துவது; சமதர்மத்தில் 'சத்' தானே சேரும். 'சத்' தைக் கொண்ட சமதர்மமே சன்மார்க்கமென்பது. சன்மார்க்கம் எது? மார்க்சியமும், மகம்மது, கிறிஸ்து, புத்தர், அருகர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கையுஞ் சேர்ந்த ஒன்று சன்மார்க்கம். இஃது எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவங்களின்றும் கனிந்த உண்மை.

முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு சன்மார்க்கத்தை வளர விடாது. சன்மார்க்க வளர்ச்சிக்கு முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமை உணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்லவேண்டுவதில்லை. ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்.

புரட்சி இருவகை. ஒன்று அறவழியில் நிகழ்வது. மற்றொன்று மறவழியில் நிகழ்வது. அஃது அறப்புரட்சி. இது மறப்புரட்சி. உலகைச் சீர் செய்ய அறப்புரட்சி இடம் பெறாத வேளையில், மறப்புரட்சி அவ்விடத்தில் தானே நுழையும். இரண்டாலும் விளையும் பயன் ஒன்றாகுமா? ஒல்லும் வகை அறப்புரட்சிக்கு இடம் தருவதே அறிவுடைமை. இல்லையேல் மறப்புரட்சி எழும். எனது மனத்துக்கு இயைந்தது அறப்புரட்சியே. அறப்புரட்சி வாயிலாகச் சன்மார்க்கத்தை ஓம்பவே யான் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டேன்.

இந்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இருபத்தைந்து ஆண்டு அநுபவம் எனக்குண்டு. புரட்சி ஏன் உச்சநிலையை அடையவில்லை? சாதி மத வெறி, சம்பிரதாயக் கட்டு, மூடவழக்கவொழுக்கம், மூர்க்கப் பிடிவாதம், முதலாளி அமைப்புக்களின் மோகம், தலைமைப் போராட்டம், விட்டுக் கொடுத்தல் இன்மை முதலிய தளைகள் புரட்சியைத் தகைத்து நிற்கின்றன என்று எனது அநுபவம் சொல்கிறது. இத்தளைகளை உடைத்தெறியத் தோன்றிய இயக்கங்கள் பலப்பல. அவற்றுள் சிறந்தது தொழிலாளர் இயக்கம். இது தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டவர்க்கு வியப்பாகத் தோன்றாது.

**(1944ல் வெளிவந்த திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் என்னும் நூலிலிருந்து)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

/ அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள் /



ங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.






டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னைத் துறைமுகம் எதிரே அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 14.4.1989 அன்று மாலையணிவித்தார்.

ஆறாண்டுகளுக்குப் பிறகு, திருவாரூர்க்கோயில் தேரோட்டம் நடைபெற்றது (7-5-'89).



# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2020
சுக்ல-வைகாசி 2
மலர்: 19 இதழ்: 22
16-5-1989


## இந்த இதழில்....


சட்டமன்றப் பொன்விழா 2
ஓட்டுநர் நல்வாழ்வுத் திட்டத் தொடக்கவிழா 4
எது வீரம்? 6
அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள் 7
நலிவுற்றோர்க்கு நலம் சேர்க்கும் பணிகள் 10
கண்கவர் கைத்தறிக் கண்காட்சி 17
ஆரூரில் தேரோட்டம் 46
அண்ணா சொன்ன கதை 21
இஸ்லாமிய சரித்திரம் காவிரியிலிருந்து எழுதப்பட வேண்டும் 23
பாவேந்தர் பிறந்த நாள் 24
நெடுங்கடல் (கவிதை) 27
முன்பனிக்காலம் 28
குழந்தைகள் மருத்துவம் 32
சில பழங்குடியினரின் படைப்புக் கதைகள் 33
மாணவர் பக்கம் 36
வெண்பாப் போட்டி 38
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மேன்மையுற 20 சதவிகித இட ஒதுக்கீடு 41




## முதல் அட்டை சொல்லும் செய்தி:



# சட்டப்பேரவைப் பொன்விழா

தமிழ்நாடு சட்டமன்றத்தின் 50-வது ஆண்டுப் பொன்விழா, 5-5-89 அன்று மிகச் சிறப்பான வகையில் நடைபெற்றது.

தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்ற மண்டபத்திலேயே எழுச்சி மயமாக இவ்விழா நடைபெற்றது. விழாவையொட்டி, சட்டமன்றத்தின் உள்ளிருந்த திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா,மூதறிஞர் ராஜாஜி, கர்ம வீரர் காமராசர், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார், காயிதே மில்லத் ஆகிய அறிஞர் பெருமக்களின் வண்ணப் படங்களெல்லாம் சரவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பார்வையாளர் மாடங்களிலும் பிற பகுதிகளிலும் பூச்சரங்கள் அலங்கரித்தன.

பொன்விழாவையொட்டி, 41 பேருக்குப் பொன்னாடை போர்த்தி விருது வழங்கினார் முதல்வர் கலைஞர் அவர்கள்.

விழாமண்டபத்திற்குள் சரியாக 5.50-க்கு வருகை தந்த அவர், அங்கே வந்திருந்த முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் அவரவர் இருக்கைக்கே சென்று கரங்குவித்தும்,கை குலுக்கியும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஆறுமணியளவில் விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

### பேரவைத்தலைவர் உரை

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள் "மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இங்குள்ள மூத்த உறுப்பினர்களுக்கெல்லாம் முதல்வ ராகவும், முதல்வர்களுக்கு முதல்வராக வும், இருக்கிறார். அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கும் இதைவிட வேறு பெருமை இந்தத் தமிழ்க்குடிமகனுக்குக் கிடையாது' என்று பெருமிதத்தோடு கூறினார். மாண்புமிகு முதல்வர்அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுப்பரிசு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள்-மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசியர் க. அன்பழகன் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி விருது வழங்கினார்.



சட்ட மேலவை முன்னாள் தலைவர்கள் திரு. மாணிக்க வேலர். திரு. ம.பொ. சிவஞானம் ஆகியோருக்கும்-முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்கள் புலவர் கோவிந்தன், திரு. பி. எச். பாண்டியன் ஆகியோருக்கும் பொன்விழா நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்தாற்போலச் சட்டப் பேரவையில் 14 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய திரு. ஏ. ஆர். நல்லசிவன், திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார், திரு. கே. கே. முத்தையா, திரு. ஏ. கே. சுப்பையா, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. டி. ராஜரத்தினம், திரு. எஸ். அழகர்சாமி, திருமதி டி. என். அனந்த நாயகி, திரு. அர்த்தநாரீஸ்வர கவுண்டர், திரு. டி. பி. ஏழுமலை, திரு. என். கே. பழனிச்சாமி, திரு. ஹாஜா செரீப், திருமதி சத்தியவாணிமுத்து, திரு. அன்பில் தர்மலிங்கம், திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, திரு. சுவாமிநாத உடையார், திரு. எஸ். முருகையன், திரு. எம் சண்முகம், திரு. என் ராஜாங்கம், திரு. பி. ஜெயராஜ், திரு. பி. எம். முனுசாமி கவுண்டர், திரு. இராம அரங்கண்ணல், ஆகியோருக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கினார்.



நான்குமுறை சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ். வீரபாண்டி ஆறுமுகம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எஸ். துரை முருகன், மற்றும் திரு. கே. ரமணி, திரு. ஆண்டி அம்பலம், திரு. ஆ. இரகுமான் கான் ஆகியோருக்கும்-முன்னாள் பேரவைத் துணைத் தலைவர்களான, திரு. கே. பார்த்தசாரதி, திரு. பெ. சீனிவாசன், திரு. என். கணபதி ஆகியோருக்கும்-இந்நாள் சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. துரைசாமி ஆகியோருக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பொன் விழா விருது வழங்கிச் சிறப்பித்தார்.

நடக்க இயலாத நிலையில் இருந்த முன்னாள் அமைச்சரும், முன்னாள் கேரள ஆளுநருமான திருமதி ஜோதி வெங்கடாசலம் அவாகளுக்கு சபாநாயகர் மேடையைவிட்டு இறங்கி அவர் இருந்த இடத்திற்கே சென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடையினைப் போர்த்தி விருதளித்தார். விடுதலைப் போராட்ட விரர் திரு. எல். கிருஷ்ணஸ்வாமிபாரதிக்கும் நினைவுப்பரிசு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

சட்டப் பேரவையின் முன்னாள் செயலாளர்கள் திரு. அனுமந்தப்பா, திரு. நடராசன், திரு. மா. சுப்பிரமணியன், திரு. மு. அழகர்சாமி, இந்நாள் பேரவைச் செயலாளர் திரு. சி.கு. இராமசாமி ஆகியோருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்குப் பின் சட்டமன்றப் பொன்விழா மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியை அவை முன்னவரும் மாண்புமிகு கல்வியமைச்சருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து அவர் சிறப்புரையாற்றியதற்குப் பிறகு, சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களான திரு. குமரி அனந்தன், திரு. கே. ரமணி, திரு. பி. எச். பாண்டியன், திரு. ஒய். வெங்கடேசுவர தீட்சிதர், திரு. அப்துல் லத்தீப், திரு. எஸ். அழகர்சாமி, திரு. பொன். விஜயராகவன், திரு. ம.பொ. சிவஞானம் ஆகியோர் பேசினார்கள்.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், பொன்விழா நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர்-"ஐம்பத்திரண்டு ஆண்டுகள் கழிந்த பிறகு பொன்விழாவா என்று பேசப்பட்டது. எவ்வளவு காலம் மாறினாலும் பொன், பொன்தானே? இங்கே, இன்று நாமெல்லாம் கருத்து வேறுபாடுகள், மாச்சரியங்களையெல்லாம் மறந்து அனைவரும் பொன்மனம் படைத்தவர்களாக அமர்ந்திருக்கிறோம். எனவே, இது ஒன்றே இது பொன்விழா என்பதற்குச் சரியான சான்றாகும் என்று நான் கருதுகிறேன்" என்றார்.

தமது உரையில், சட்டமன்றத்தின் வரலாற்றை விளக்கினார் முதல்வர். மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த நல்ல விழாவில் ஓர் இனிய செய்தியை- ஓர் உணர்ச்சிகரமான செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்தின் சென்னை ராஜ்யம் என்ற பெயர் மாற்றப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கப்பட்டபோது-இந்த மன்றத்தில் பேசுகையில் முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள்-தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்து கொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படும் என்று குறிப்பிட்டார். ஏறத்தாழ இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அண்ணா அளித்த அந்த உறுதி மொழியை, அவர் தம்பியாகிய நான் நிறைவேற்றுவதாக உறுதியளிக்கிறேன். சங்கரலிங்கனார் அவர்களுக்குத் தமிழகத்தின் தலைநகரத்திலே மிக விரைவில் ஒரு நினைவுச் சின்னம் உருவாக்கப்படும்".

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார். இரவு 8 மணியளவில், சட்டமன்றப் பொன் விழா, நாட்டு வாழ்த்தோடு நல்ல வண்ணம் நிறைவுற்றது.

-'ராஜு'

**தமிழரசு**

**தமிழ் - மாதம் இருமுறை**

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா ரூ. 24
6 மாதச் சந்தா ரூ. 12

**'தமிழரசு' - ஆங்கிலம்**

ஆண்டுச் சந்தா ரூ. 12 6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தாத் தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி : உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

127076
சென்னை-600 008.

**மனிதனை மனிதன் இழுத்துச் செல்லும் மனிதாபிமானமற்ற செயலை ஒழிப்பதற்காகக் கை ரிக்ஷாக்களுக்குப் பதிலாக, சைகிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் 1973ல் துவக்கி வைக்கப்பட்டது. தமது 50 வது பிறந்த நாளில் அந்த நற்பணியைச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், இப்போது மீண்டும் ஓர் அரிய திட்டத்தைத் துவக்கி வைத்திருக்கிறார்!**

# ஓட்டுநர் நல்வாழ்வுத் திட்டத் தொடக்க விழா

ரிக்ஷா, ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்களுக்கான நல்வாழ்வுத் திட்டத் தொடக்க விழா சென்னையில் தொழிலாளர் நாளான மே நாளன்று (1-5-'89) நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இராஜாஜி மண்டபத்தில் இதனைத் துவக்கி வைத்தார். விழாவிற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்.

25 ஆயிரம் பேர் பயன்பெறும் வகையில், தமிழகமெங்கும் விரிவாக்கப் படவிருக்கும் இத்திட்டத்தொடக்க நாளில், சென்னை வாழ் ஓட்டுநர்கள் 293 பேருக்கு ஆட்டோ, டாக்சி, சைகிள் ரிக்ஷா ஆகியவை மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப் பட்டன.

அரசு தலைமைச் செயலர் திரு. எம்.எம்.இராஜேந்திரன், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுச் சிறப்பித்த ஓட்டுநர் நல்வாழ்வுத் திட்ட விழாவில்-தொழில் துறைச் சிறப்பு ஆணையர் திரு. க.சு.நம்பியார் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.மு.கண்ணப்பன் அவர்கள், தனது தலைமையுரையில்:

"பொதுத் தேர்தல் முடிந்து புதிய ஆட்சி மலர்ந்த நூறு நாட்களுக்குள்ளாகவே தமிழகத்தில் நலிந்தோர்க்கான நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 'அன்றாடம் உழைத்தால்தான் சோறு' என்ற நிலையில் உள்ளோர் வாழ்வில், மறுமலர்ச்சி ஏற்படும் வகையில், ஒளியேற்றி வைக்கும் வகையில், இங்கே இந்தத் திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப் படுகிறது. புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, கஜானா காலியாக இருந்தாலும், களஞ்சியம் காலியாக இருந்தாலும்-எங்கெங்கோபோய்க் கொண்டிருந்த நிதி வாயில்களை-யெல்லாம் அடைத்து நாள்தோறும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

"இன்று இத்திட்டத்தால் பயன் பெறும் ஓட்டுநர்களை நான் கேட்டுக் கொள்ளுவதெல்லாம் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில்- மிகுந்த பணிவோடும், மரியாதையுடனும் உங்கள் பணி தொடரட்டும்" என்று குறிப்பிட்டார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன் அவர்கள் பேசியதாவது

"உலகெங்கும் கொண்டாடப்படும் மே தின விழா நாளான இந்தப் புனிதமான நாளில், இந்த விழா இங்கே நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாகும். எந்தத் திட்டமானாலும் விரைவாகவும் விவேகமாகவும் செயல்படுத்தப்படும் வகையில் அரசு அலுவலர்கள்-ஊழியர் பணி அமைய வேண்டும் என்கிற முதல்வர் அவர்களின் ஆசைக்கேற்ப எல்லோரும் பணிபுரிந்து வருகிறார்கள். இதில் இன்னமும் வேகம் தேவை என முதல்வர் அவர்கள் கருதுவாரானால் எல்லோரும் அதற்குத் தயாராகவே இருக்கிறோம் என்று உறுதி கூறுகிறேன். இங்கே இன்று பயன்பெறும் ஓட்டுநர்கள், சாலை விதிகளை மதித்து நடந்து விபத்துகளைத் தவிர்க்க வேண்டும்; உங்கள் வாகனங்களை நல்லபடி பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்"

-தலைமைச் செயலாளரின் உரையைத் தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எம்.ஏ. லத்தீப், திரு. ஆர். எஸ். ஸ்ரீதர், திரு. பரிதி இளம்வழுதி, திருமதி எஸ். சற்குணம், திரு. என். கணபதி, திரு. அ. ரகுமான் கான் ஆகியோரும், மாநிலங்கள் அவை உறுப்பினர் திரு. டி. ஆர். பாலுவும் பேசினர்.

முதல்வர் உரை:

293 பேருக்கு ஆட்டோ, டாக்சி, சைகிள் ரிக்ஷாக்களை வழங்கி-மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேருரை நிகழ்த்திய போது-"மேதினி புகழும் மேநாளில், பாட்டாளி மக்களுக்குப் பயன்படத்தக்க நல்லதோர் திட்டத்தைத் துவக்கி வைக்கும் வைபவத்தில் கலந்து கொள்வதையெண்ணி நான் இதயம் பூரிக்கிறேன். அதே நேரத்தில்-தொடர்ந்து இதே போல் செய்து கொண்டே இருக்கத்தான் வேண்டுமா? ஒரு நிலையான, நீடித்த வளமான நல்வாழ்வு மக்களுக்குக் கிடைக்கின்ற நாள் எந்நாள் என்று நான் ஏங்காமல் இல்லை. அந்நாள் வரும் வரை, நம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மக்களுக்கு, முடிந்த அளவு நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற கடமைக்கு உரியவர்களாக நாங்கள் இருக்கிறோம்; அதைத்தான் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்".

"பேரறிஞர் அண்ணா அவர்கள், திருமூலரின் வாக்கியமான " ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதையும்-தாகூரின் கவிதை வரியான "ஏழையின் சிரிப்பில்இறைவன் இருக்கிறான்" என்பதையும் அடிக்கடி நினைவூட்டுவார். அண்ணாவிற்குப் பிறகு அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாங்கள், அந்த வகையிலே ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு கொண்டிருக்கிறோம். அந்த நிகழ்ச்சிதான் இது."

"அரசு தலைமைச் செயலாளர் பேசும்போது, வேகமாகவும், விவேகமாகவும் செல்ல வேண்டும் என்று முதலமைச்சர் விரும்புகிறார்: அதற்கு நாங்கள் ஒத்துழைப்புத் தருவோம் என்றார். அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். ஏன், நன்றிகூட தெரிவித்துக் கொள்கிறேன். பந்தயக் குதிரை போல் நாம் ஓடியாக வேண்டும் என்று நான் ஏற்கெனவே முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபோதுகூடச் சொன்னேன். பந்தயக் குதிரை தனக்காக ஓடுவதில்லை; தன் மீது பணம் கட்டியவர்களுக்காக ஓடுகிறது. அதைப்போல், நம்மை நம்பியிருக்கிற மக்களுக்காக நாம் ஓடித்தான் தீர வேண்டும்;"

"சைக்கிள் ரிக்ஷா வைத்திருப்பவர்களுக்கு மோட்டார் பொருத்திக் கொடுக்கின்ற திட்டம். இதற்கு உத்தேசமாக ஆகின்ற தொகை ஒரு சைக்கிள் ரிக்ஷாவிற்கு மோட்டார் பொருத்திக் கொடுக்க நான்காயிரம் ரூபாய் ஆகிறது. இதில் தமிழக அரசு மானியமாகத் தருகிற தொகை ஆயிரத்தி ஐநூறு ரூபாய். டி.ஐ.ஐ.சி. தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம், அதன் சார்பில் கடனாகத் தரப்படுவது இரண்டாயிரம் ரூபாய். ஓட்டுநர்கள் தட்ட வேண்டிய தொகை வெறும் ஐநூறு ரூபாய் தான். இந்தக் கடன் தொகைக்கு வட்டி 14.5 சதவீதம். அந்த வட்டியில் அரசு மானியமாகத் தருவது ஏழு சதவீதம். அவர்கள் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினராக இருந்தால் அரசு மானியமாகத் தருகின்ற வடடித்தொகை ஒன்பது சதவீதம். தவணைத் தொகை குறித்த காலத்தில் கட்டப்பட்டால் மேலும் ஒரு சலுகை இந்தக் கடன் தொகைக்கு வட்டியாக இரண்டு சதவீதம் செலுத்தப்படுகிறது.

"மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தில், உத்தேசமாக ஆகிற தொகை ஆறாயிரத்து எழுநூற்றி ஐம்பது ரூபாய். இதில் அரசு வழங்குகிற மானியம் ஆயிரத்து ஐநூறு ரூபாய். தொழில் முதலீட்டுக் கழகத்தின் கடன் நான்காயிரத்தி எழுநூற்றி ஐம்பது ரூபாய். ஓட்டுநர் கட்ட வேண்டிய தொகை வெறும் ஐநூறு ரூபாய். இஃதன்னியில் கடனுக்கு வட்டி 14.5 சதவிகிதம். அந்த வட்டியில் அரசு மானியம் 7 சதவிகிதம்;7.5 சதவீத வட்டி மடடும் கடனுதவி பெறுபவர் செலுத்த வேண்டும். ஆதிதிராவிடர்-பழங்குடியினராக இருந்தால் அரசு மானியம் வட்டியில் 9 சதவிகிதம்; தவணைத்தொகை குறிதத காலத்தில் கட்டப்பட்டால், மேலும் சலுகையாக வடடியிலே இரண்டு சதவிகிதம்.

"ஆட்டோ ரிக்ஷா வழங்கும் திட்டம். ஒரு ஆட்டோ ரிக்ஷாவின் உத்தேச விலை முப்பத்தி எட்டாயிரம் ரூபாய். இதில் தமிழக அரசு வழங்கும் மானியம் இரண்டாயிரத்து எண்ணூற்றி ஐம்பது ரூபாய். தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கும் கடன் முப்பத்திரண்டாயிரத்து முன்னூறு ரூபாய். ஓட்டுநர் கட்ட வேண்டிய தொகை இரண்டாயிரத்தி எண்ணூற்றி ஐம்பது ரூபாய். கடனுக்கு வடடி 14.5. சதவீதம் அந்த வட்டியில் அரசு மானியம் 4.5. சதவிகிதம். 10 சதவீத வட்டி மட்டும் கடனுதவி பெறுபவர் செலுத்த வேண்டும். ஆதிதிராவிடர்-பழங்குடியின மக்களாக இருந்தால் 6.5 சதவிகிதம் வட்டியிலே அரசு மானியம். முறையாகத் தவணைத்தொகை கட்டுபவருக்கு மேலும் சலுகை இரண்டு சதவிகிதம்.


"டாக்சி வழங்கும் திட்டம். ஒரு டாக்சியின் உத்தேச மதிப்பு ஒரு லட்சத்து நாற்பத்தி ஓராயிரம். இதில் டி.ஐ.ஐ.சி-தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிற கடன் 85 சதவிகிதம். ஓட்டுநர் கட்ட வேண்டிய தொகை 15 சதவிகிதம். கடனுக்கு வட்டி 145 சதவிகிதம். அந்த வட்டியில் அரசு மானியம் இரண்டு சதவிகிதம்-மீதி 12.5 சதவீதம் மட்டும் கடனுதவி பெறுபவர் செலுத்த வேண்டும். ஆதி திராவிடராக-பழங்குடியினராக இருந்தால் அந்த வட்டியில் அரசு மானியம் நான்கு சதவீதம். முறையாகத் தவணைத் தொகை கட்டப்பட்டால் மேலும் சலுகை இரண்டு சதவிகிதம்.

"இதன்படி இன்றைக்கு ஏற்கெனவே சைக்கிள் ரிக்ஷா வைத்திருப்போருக்கு மோட்டார் பொருத்திக் கொடுப்பது இன்றைய தினம் நூறு பேருக்கு; அந்த நூறு பேரில் எழுபத்தைந்து பேர் ஆதிதிராவிட மக்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா கொடுப்பது நூற்று நாற்பத்து மூன்று பேருக்கு; அதில் நூற்று இருபத்தேழு பேர் ஆதிதிராவிட மக்கள். ஆட்டோ ரிக்ஷா கொடுப்பது முப்பத்தி மூன்று பேருக்கு; அதிலே ஏழு பேர் ஆதிதிராவிட மக்கள். டாக்சி வழங்குவது பதினேழு பேருக்கு; அதில் ஒருவர் ஆதிதிராவிடர். மொத்தமாக இன்று பயன் பெறுவோர் இந்த நாளில் மாத்திரம் இருநூற் றுத்தொண்ணூற்று மூன்று பேர். இதில் இருநூற்று பத்துப் பேர் ஆதி திராவிட மக்கள் என்பதை

என்று குறிப்பிட்டார்.

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:











கொண்டோ அல்லது தோள்-கொண்டோ போரிட்டு வெற்றி பெறுவது அல்லது மரணம் எய்துவது என்றுதான் பொருள். ஆனால், இன்றைக்கு வீரத்தின் இலக்கணமே மாறிவிட்டது. ஒரு குழந்தை கிணற்றிலோ அல்லது குளத்திலோ தவறி விழுந்து விட்டதைப் பார்க்கிற ஒருவன், தன் உயிரைத் துச்சமாக மதித்து ஓடிச் சென்று தானும் நீரில் குதித்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றுவதுதான் வீரம் என்று ஏற்றுக் கொள்ளப்படுகிற காலத்தில் நாம் வாழ்கிறோம். ஆகவே, வன்முறைகளைக் களைந்து விட்டு நன்முறைகளைக் கடைப்பிடிக்க நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

**-முதல்வர் கலைஞர்**

**('கலைஞர் கடிதம்' தொகுப்பு: 5)**

**வீரம் வேண்டாம் என்று நான் கூற மாட்டேன்; அது நமது இலட்சியத்தைக் காக்கப் பயன்படட்டும். வெத்து வேட்டுக்காரர்களைத் தாக்கி, வீரத்தை விழலுக்கிறைத்த நீராக்கிவிடக்கூடாதல்லவா?**

**ஆர்ப்பாட்டங்கள், வாய்வீச்சுக்கள், வசைமாரிகள், வன்முறைப்-பேச்சுகள் வீரர்களுக்குஇலக்கணம் வகுக்கக் கூடியவைகள் அல்ல; அவையெல்லாம் முண்டா தட்டும் குண்டர்களுக்கு உரிய அழகுகளாகும். அமைதியிலேதான் உறுதியிருக்கும்; அன்பு பிறக்கும். இதைத்தான் நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.**

**தாய் உள்ளம், பெண்களுக்கு மட்டுமே உரியதல்ல; அது வீரமுள்ள ஆண்களுக்கும்உரியதாகும் என்பது என் வாதம்.**

**வீரம் என்பதற்கு முன்பெல்லாம். ஒருவருக்கொருவர் வாள்**



அகம் குளிர நான் இங்கே மகிழ்ச்சியுடன் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் மூலமாக இன்றைக்கு வழங்கப்படுகின்ற இந்த வாகனங்கள், மோட்டார், இதற்கான மொத்த மதிப்பு ஐம்பது இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய். இதிலே டி.ஐ.ஐ.சி. கடன் முப்பத்து ஒன்பது இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து அறுநூறு ரூபாய். அரசு தருகின்ற மான்யம் ஏழு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து ஐநூற்று இருபத்து ஒரு ரூபாய்.

நான் குறிப்பிட்ட அந்த இருநூற்று தொண்ணூற்று மூன்று பேரும் கட்ட வேண்டிய தொகை, ஐந்து இலட்சத்து எழுபத்தையாயிரத்து நூறு ரூபாய் ஆகும். இதைத்தான் ஓட்டுநர்கள் தருகிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

எனவே இந்தத் திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பும்-கடமை உணர்வும் தொழிலாளி வர்க்கத்துக்கு உண்டு; இருக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்."

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்'.

விழா முடிவில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குனர் ஏ.பி. பட்கர் நன்றி கூறினார்.

**–பி.எல்.ஆர்.**



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

◇ இந்தியத் துணைக் கண்டத்திலேயே பேருந்துக் கட்டணம் தமிழ்நாட்டில்தான் மிகவும் குறைவாக இருக்கிறது. நீண்டகாலமாக நட்டத்துல் நடைபெறும் பொருள்போக்குவரத்துக் கழகம், நிபுணர் குழுவின் சிபாரிசுகளுக்கேற்பக் கலைக்கப் படுகிறது; அதில் வேலைபார்த்தோர், எவ்வித வேலையிழப்பும் இல்லாமல், முந்திய சர்வீஸோடு மற்ற போக்குவரத்துக் கழகங்களிலே இணைத்துக் கொள்ளப்படுவார்கள். போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ஒய்வு ஊதியம் வழங்கும் திட்டம், மத்திய அரசின் ஒப்புதல் பெற்று விரைவில் நிறைவேற்றப்படும்.

◇ திரைப்படங்களை விதிகளுக்குப் புறம்பான முறையில், சான்றிதழ்கள் இல்லாமலேயே வீடியோ கேசட்டாகத் தயாரிப்பவர்கள், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் சட்ட விதிகளின்படி உண்டு.

◇ மேட்டூர், தூத்துக்குடியில் 210 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையப் பிரிவுகள் நிறுவப்பட்டு விரைவில் செயல்படுத்தப்பட உள்ளன.

◇ தகுந்த நடவடிக்கை மூலம் ரூ. 10 கோடிக்கான கைத்தறித் துணி ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டு, அமெரிக்காவில் விற்கப்பட்டுள்ளது.

◇ உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிட நிதி உதவி வாரியம் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அனுமதி வழங்கியுள்ளார். 50 ஆயிரம் துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தூசு அலவன்ஸ் வழங்கப்படும்.

◇ ஆழ்துளைக் குழாய் அமைத்திட, அனைத்து மாவட்டங்களுக்கும் ரூ. 586.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரத்திற்கு மட்டும் ரூ. 426 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

◇ வணிகர் நல வாரியம் அமைப்பதற்காக இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. அப்பளம், வடகம் போன்றவற்றுக்கு முற்றிலும் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. தலைக்கவசம், பீடி இலைகள் உள்ளிட்ட ஒன்பது இனங்களுக்குப் பல முனை விற்பனை வரி மாற்றப்பட்டு ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படுகிறது.

◇ புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பிறந்த நாளை நாடு முழுவதும் தமிழக அரசு கொண்டாடும். புரட்சிக் கவிஞரின் நூல்கள் அன்னாரின் நூற்றாண்டு விழாவின்போது அரசுடைமையாக்கப் படும்.

◇ விடுதிகளில் தங்கிப்படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும்; 10 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு இரு ஜோடி இலவசச் சீருடை அளிக்கப்படும்; அவர்களது கல்விஉதவித்தொகைக்கான வரம்புஉயர்த்தப்படும். 1290 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ஆட்டோ வாங்கக் கடனுதவி அளிக்கப்படும்.

◇ மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் ஆகியவற்றில் செல்கிறவர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என்ற உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. "சர்வதேசப் புகழ்பெற்ற நரம்பியல் வல்லுநர் டாக்டர் பி. இராமமூர்த்தியின் தலைமையிலான மூவர் குழுவுடன் கலந்து பேசியபோது — அவர் இதற்கு அவ்வளவாக இசைவு தெரிவிக்கவில்லை. உயிருக்குப் பாதுகாப்பு வேண்டுமேயானால், தலைக் கவசம் அணிந்துதான் தீரவேண்டும் என்று தெரிவித்தார்" என்று சட்டமன்றத்தில் தெரிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெரும்பான்மையோர் வேண்டுகோளுக்கிணங்கவே இதை அறிவிப்பதாகவும் கூறினார்.

◇ வறட்சி நிவாரணப் பணிகளுக்கெனத் தமிழக அரசு 23 கோடி ரூபாய் ஒதுக்கி ஆங்காங்கே பணிகள் நடைபெற்று வருகின்றன. வறட்சி நிவாரணப்பணிகள் இன்னும் தீவிரமாக முடுக்கிவிடப்படும்.

◇ செங்கை அண்ணா மாவட்டத்தில்-அனந்தமங்கலத்திலிருந்து செங்கற்பட்டுக்கும், சென்னைக்குமாக இரண்டு பேருந்து வழித்தடங்கள் விடப்பட்டன.

◇ நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் பயன் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

◇ மதுரை, கோவை ஆகிய மாநகர்களுக்குப் போலீஸ் கமிஷனர்கள் நியமிக்கப்படுவார்கள்.

◇ சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தில், ஒலி-ஒளிக்காட்சியும், அரும்பொருட் காட்சியகமும் அமைக்கும் திட்டம் விரைவுபடுத்தப்படும்.

◇ நிறைவேற்றப்படவிருக்கும் புதிய அணைக் கட்டுத் திட்டங்கள் மூலம் ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

◇ அனைத்துப் பாசன வாயில்களையும் மேம்படுத்த, பாசன மேம்பாடு மற்றும் நீர்வள நில ஆணைக்குழு அமைக்கப்படும்.

◇ சென்னை உயர்நீதிமன்றக் கட்டடத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டும் பணி முடுக்கிவிடப்படும்.

◇ பதவிக் குறைப்புக்கு ஆளான எஞ்சினியர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

◇ பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள பீடித் தொழிலாளர்கள் 3 லட்சம் பேர் குறைந்தபட்ச ஊதியம் அமலாக்கப்பட்டதால் பெரும் பயன் பெறுகிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது.

◇ குடிசைமாற்று வாரிய வீடுகளில் வசூலிக்கப்படும் வாடகையை ரத்து செய்து, குடியிருப்பவர்களுக்கே வீடுகளைச் சொந்தமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

◇ பெண்கள் ஆட்டோரிக்ஷா வாங்க மானியமும் கடனும் அளிக்கப்படும்; முழுமையாக அதைப் பெண்களே பயன்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்படும்.

◇ நெசவாளர்களுக்கு ரிபேட் வழங்குவது பற்றி மத்திய அரசோடு தொடர்ந்து இந்த அரசு பேசும். முடிவில் அவர்கள், ரிபேட் தரமறுத்துவிட்டாலும் மாநில அரசு இந்த ரிபேட்டை வழங்க முன்வரும்.

◇ குறைந்த வட்டியில் தொழிற் கடன்; பழங்குடியினர்க்கு வட்டி ரத்து; பணிக்காலத்தில் இறக்கும் கூட்டுறவு ஊழியருக்கு ரூ. 20 ஆயிரம்; கூட்டுறவுக் கடன் வகையில் இந்த அரசு மொத்தம் 100 கோடி ரூபாய் அளவில் சலுகைகளை அளிக்கவும் முன்வந்துள்ளது.

◇ தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், தீபாவளி ஆகிய நாட்களுடன்-பேரறிஞர் அண்ணா பிறந்த நாளிலும், முதல்வர் கலைஞர் பிறந்தநாளிலும் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக 5 கிலோ அரிசி அரசால் வழங்கப்படும்.

◇ போலீசில் தொடரப்படும் சந்தேக வழக்குகள் முறை நீக்கப்படுகிறது. புதிதாக 10 இடங்களில் காவல நிலையங்கள் அமைக்கப்படும. 3 இடங்களில் செயல்படும் புறக்காவல் நிலையங்கள் முழுமையான காவல் நிலையங்களாக உயர்த்தப்படும். 2 இடங்களில் புறக்காவல் நிலையங்கள் அமைக்கப்படும். கடந்த ஆட்சிக் காலத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போலீசார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ரத்து செய்யப்படும். காவல் துறையினர் வீட்டுவசதி வாரியம் கலைக்கப்பட்டு விட்டதால், இனி பொதுப்பணித்துறை மூலம் வீடுகள் கட்டித்தரப்படும். காவலர் குடியிருப்புகளில் மின்விசிறி பொருத்தப்படும்.

◇ சென்னை மாநகர சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள் உரிமைபெறவும், உரிமையாளர்களாகவும் - குறைந்த வட்டிக் கடனுதவியும், மானியமும் அளிக்க அரசு அமைப்பான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு நல்வாழ்வுத் திட்டத்தைத் துவக்கியுள்ளது. விரைவில் இத்திட்டம் பிற நகரங்களுக்கும் விரிவாக்கப்படும்.

◇ தமிழகத்தைத் தொழில் மயமாக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வறுமையையும் அகற்றும் வகையில் 236 கோடி ரூபாய் முதலீட்டில் பல்வேறு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் துவக்கப்படவிருக்கின்றன.

நடப்பு நிதியாண்டில் 3 ஆயிரம் இலவச வீடுகள் கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளது. கால்நடைகளின் வெக்கை நோய்த்தடுப்புத் திட்டத்திற்கு ரூ.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1500 டன் வைக்கோல் மானிய விலையில் வழங்கப் பரிசீலனை செய்யப்படுகிறது. ரூ.2.5 இலட்சம் செலவில் மீன் வலைகள் வாங்க உதவி செய்யப்படும். ரூ.44 கோடி செலவில் கால்நடை வளர்ச்சித் திட்டமும், ரூ.5 இலட்சம் செலவில் குஞ்சு பொறிப்புத் திட்டமும் அமலாக்கப்படும்.

**சட்டமன்றக் கூட்டத் தொடர் விவரங்கள்**

தமிழ்நாடு சட்டப்பேரவையின் 1989-90 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான கூட்டத் தொடர் மார்ச் மாதம் 25 ஆம் நாள் தொடங்கியது. முதல்நாள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

ஆக மொத்தம், சட்டப் பேரவை கூடிய மொத்த நாட்கள் 44. அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் 213 மணி, 36 நிமிடங்கள்.

இக் கூட்டத்தொடரில் 32 சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அரசினர் தனித் தீர்மானங்களாக 4 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

கூட்டம் தொடங்கிய நாள் முதல், கடைசி நாள்வரை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், அவை முன்னவர் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், திரு. பி.எச். பாண்டியனும நாள்தவறாமல் வருகை புரிந்ததற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தொடர், மறுதேதி குறிப்பிடப்படாமல், 12.5.89 ஆம் நாள் ஒத்திவைக்கப்பட்டது.







மண்டலத் துணை இயக்குநர்
அலுவலகத் திறப்பு விழா!
கதர் கிராமியக் கண்காட்சி
திறப்பு விழா!

# மதுரை மாநகரில் அமைச்சர் பெருமக்கள்

1989 ஏப்ரல் 9ஆம் தேதி மதுரையில் சுமார் 20 இலட்சம்ரூ.செலவில் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சில் கி.மனோகரன் அவர்கள் திறந்து வைத்தார்.

அவர் மண்டலத் துணை இயக்குநர் அலுவலக அங்காடியில் அமைக்கப்பட்ட கதர் கிராமியக் கைத்தொழில் வலைஞர்களின் கண்காட்சியையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார். குலறந்த வலவயில் நேர்த்தியாகவும், மடுக்காகவும் சிறப்பாகவும் அவை செய்யப்பட்டு காண்போர் கண்களைக் கவர்ந்தன. அழகான தோல் பைகள், சிறப்பான பொம்மைகள், காஞ்சிபுரம் போன்ற ஆதர பட்டுச்சேலைகள், ஆடவர், பெண்டிர் அணியும் துங்கிகள், குயவர்கள் திறன் சொல்லும் வதவிதமான மண்பாண்டங்கள் நமது பண்பாட்டுச்சிறப்பைத் தெளிவாக எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தன. மிக நேர்த்தியான பாய் வார்ப்புகள் அவற்றுள் அழகிய பூ வேலைப்பாடுகள், ஓலைப்பாய்கள், கூடைகள்,பனை வெல்லப் பொருட்கள் அத்தனையும் நமது கலையுணர்ச்சியை வெளிப்படுத்துவதாயிருந்தன.

இக்கண்காட்சியைப் பார்த்த மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், மதுரையில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் நிரந்தரக் கண்காட்சி ஒன்றை அமைகக வேண்டும் என்ற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா.தேவராஜ அவர்கள் வேண்டுகோளை அரசு பரிசீலனை செய்யும் என்று கூறினார்.

இவ்விழாவில் 407 பலவத் தொழில் கைவினைஞர்களுக்கும், கிராமத்தொழில் கைவினைஞர்கள் 21 பேருக்கும், மேலும் ஐந்து காலணித் தொழிலாளர்களுக்கும் அமைச்சர் பெருமக்களால் நிதி உதவி வழங்கப்பட்டது.

**இரா. இராவணன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.



## அஞ்சல் தலை

கடிதப் போக்குவரத்து முதன் முதலில் இங்கிலாந்தில்தான் ஏற்பட்டது. அக்கடிதத்திற்கு -தூரத்திற்கு ஏற்றவாறு கட்டணம் வசூலிக்கப்பட்டது. அதுவும் எவர் கடிதம் பெற்றுக் கொள்கிறாரோ, அவர்தான் பணத்தைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இந்த முறை நடைமுறைக்குச் சரிப்படாமையால் 1837இல் ரோலண்டு ஹில் என்பவரின் யோசனையின்படி எவ்வளவு தூரம் என்றாலும் ஒரே மாதிரியான கட்டணத்தை அஞ்சல் தலையாக ஒட்டியனுப்பினால் சிரமம் இருக்காது என்று, முதல் அஞ்சல் தலையாக ''பென்னி பிளாக்'' 1840-ஆம் ஆண்டு மே மாதம் 6-ந்தேதி வெளியிடப்பட்டது.

இந்தத் தபால்தலை கறுப்பு நிறத்தில் சதுர வடிவில் ராணி விக்டோரியா படத்துடன் இருந்தது.

இதனையடுத்து அமெரிக்கா 1847ஆம் ஆண்டும், பிரான்சு 1849ஆம் ஆண்டும் தபால் தலையை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து மற்ற நாடுகளும் தபால் தலையை வெளியிட்டன.

## செங்கோட்டை

டெல்லியிலுள்ள செங்கோட்டை கி.பி. 1639ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தக் கோட்டையைக் கட்டி முடிப்பதற்குச் சரியாக ஒன்பது ஆண்டுகளும், மூன்று மாதங்களும் ஆகின. செலவான தொகை அப்போதைய ஒன்பது கோடி ரூபாய்.

இந்தக் கோட்டையைக் கட்டி முடிப்பதற்கு அக்காலத்தில் புகழ் வாய்ந்த கட்டடக்கலைக் கலைஞரான ''முக்கா ராமத்கான்'' என்பவர் முழுப் பொறுப்பேற்று முடித்தார்.

இக்கோட்டையின் சுற்றளவு ஒன்றரை மைல் தூரமாகும். வடக்கிலிருந்து தெற்கு வரை இதன் நீளம் 3200 அடிகள். இதன் அகலம் கிழக்கிலிருந்து மேற்கில் 1800 அடிகளாகும். முனைந்து நோக்கிய சுற்றுச் சுவர்களின் உயரம் 90அடிகளாகும். சுவரைச் சுற்றிலும் உள்ள அகழியில் (போர்க் காலங்களில்) நீர் நிரம்பி இருக்கும்.

# நலிவுற்றோர்க்கு நலம்சேர்க்கும் பணிகள்

திருமதி லலிதாகுமாரி-இயக்குநர்-சமூகநலத் துறை

சமூகநலத் துறையின் மூலம் சமுதாயத்தில் நலிவுற்றோர்க்கு கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் பல நன்மைகள்அளிக்கப்படுகின்றன. அத்திட்டங்கள் விவரம், தகுதி, விண்ணப்பிக்கும் முறை ஆகியவை வருமாறு:

மகளிர் நலம்
குழந்தைகள் நலம்
ஊனமுற்றோர் நலம்

**மகளிர் நலம்**

சேவை இல்லம்: சமூகநலத்துறையின் கீழ் ஏழை விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர் ஆகியோர் நலன் கருதி, தமிழகத்தில் சென்னை (தாம்பரம்), கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், காரைக்குடி ஆகிய ஆறு இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன.

சென்னை, கடலூர், மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள சேவை இல்லங்களில் மேல்நிலைக் கல்வி வகுப்பு வரையும், இதர சேவை இல்லங்களில் 10-ஆம் வகுப்பு வரையும் கல்வியளிக்கப்படுகிறது. இது தவிர, தையல் ஆடைகள் தைத்தல், பூ வேலை செய்தல், பொம்மைகள் செய்தல், பாய் நெய்தல் முதலிய தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது.

இச்சேவை இல்லங்களில் தங்குபவர்கள், தங்களது இரண்டு குழந்தைகள் அதிகபட்சம் மூன்றாண்டுக் காலம் தங்கிப் பயிலுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். தங்கிப் பயிலுவோர்க்கு, கல்வி, வயதுக்கேற்றவாறு உணவு, உடை ஆகியவற்றிற்கான செலவினம் மேற்கொள்ள உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

தகுதி: ஆண்டொன்றுக்கு வருமானம் ரூ. 6400க்கு மிகாமலும், வயது 18-40 வரையுமுள்ள விதவை ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இச்சேவை இல்லங்களில் சேருவதற்குத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.

விண்ணப்பிக்கும் முறை: சேவை இல்லங்களில் வழங்கப்படும் இதற்கான விண்ணப்பத்தினைத் தக்க சான்றிதழ்களுடன், இணைத்து சேவை இல்லக் கண்காணிப்பாளர் (அ) சமூகநல இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும். அரசு மானியம் பெற்று இதுபோன்ற சேவை இல்லங்கள் தனியார் நிறுவனத்தாராலும். நடத்தப்படுகின்றன.

ஆசிரியர் பயிற்சிப்பள்ளி: சென்னையில் பல்லாவரம் என்னுமிடத்தில் சேவை இல்லத்தில் மேல்நிலை வகுப்பு தேர்ச்சி பெற்ற 18-30 வயதுள்ள மாணவிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டு இரண்டாண்டுக் காலம் ஆசிரியர் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில மாதம் ரூ. 75 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.



இப்பயிற்சியில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு வருமானம் ரூ. 6,400. இப்பள்ளியில் பயிற்சி பெற்றோர் வேலைவாய்ப்பு பெறும் பொருட்டு, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்க்கு வயது வரம்பு 40 என்று தளர்த்தப் பட்டுள்ளது.

பயிற்சிப் பள்ளியில் இதற்கென வழங்கப்படும் விண்ணப்ப பாரம் பூர்த்தி செய்யப்பட்டு கண்காணிப்பாளர், ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, 4, புனிதசேவியர் தெரு. பல்லாவரம், சென்னை-43 என்ற முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஏழை விதவைகளின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவச பாட நூல் வழங்கும் திட்டம்: நலிவுற்ற ஏழை விதவை மற்றும் மறுமணம் புரிந்த விதவைகளின் குழந்தைகள் கல்விபெறும் பொருட்டு, ஆண்டு வருமானம் ரூ. 6400க்கு மிகாமலிருக்கும், ஏழை விதவையின், அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பள்ளியில் பயிலும் ஒரு குழந்தைக்கு, கீழ்க்கண்ட முறைப்படி, இலவசப் பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன

1 முதல் 5-ஆம் வகுப்பு வரை ரூ.15 ஒரு ஆண்டிற்கு; இதே போல் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை ரூ.30. 9 முதல் 10ஆம் வகுப்பு வரை ரூ90. மேல்நிலைக்கல்வி (பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2) ரூ. 190

இத்திட்டத்தினால் பயன்பெற, அதற்கான விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து, அம்மாணவர்கள் பயிலும்பள்ளித் தலைமை மூலமாக, அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

**திருமண நிதியுதவி**

அ) ஆதரவற்ற பெண்கள்: ஏழை. ஆதரவற்ற பெண்கள் நல்வாழ்க்கை பெறும் நோக்கத்துடன், அன்னார்களின் பாதுகாவலரின் ஆண்டு வருமானம், ரூ. 6400க்கு மிகாமலிருந்தால், அன்னார்களின் திருமணத்திற்கு, தக்க சான்றுகள் பெற்று, ரூ. 1000 ரொக்கமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் ஆண்டிற்கு 18 முதல் 30 வயதுள்ள சுமார் 200 பெண்கள் பயன் பெறுகின்றனர்.

இதற்கான விண்ணப்பத்தினை சென்னையில், சமூகநல இயக்குநருக்கும், மாவட்டங்களில், அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலருக்கும் அனுப்புதல் வேண்டும்.

ஆ) ஏழை விதவைகளின் மகள் திருமண நிதியுதவி: ரூ. 6,400க்கும்



குறைவான ஆண்டு வருமானமுள்ள ஏழை விதவைகளின் மகள் நல்வாழ்வு பெறும் பொருட்டு, திருமண நிதியுதவியாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால், ஆண்டிற்கு, 18 முதல் 30 வயதுள்ள 1015 பெண்கள் பயன்பெறுகின்றனர். இதற்கான விண்ணப்பத்தினை சென்னையில் சமூகநல இயக்குநருக்கும், மாவட்டங்களில் அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலருக்கும் அனுப்புதல் வேண்டும்.

இ) விதவை மறுமணம்: விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 18-30 வயதுள்ள அத்தம்பதியர்க்கு, ரூ. 5000 பெறுமானமுள்ள ஆறு ஆண்டிற்கான தேசியசேமிப்புப்பத்திரம் இருவரது பெயரிலும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று, அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

ஆதரவற்ற பெண்கள்,குழந்தைகள் பராமரிப்பு இல்லம்: 5 முதல் 18 வயது வரையுள்ள தாய், தந்தையற்ற ஏழைக் குழந்தைகளின் நலன் கருதி, அனைத்து மாவட்டங்களிலும் 22 அனாதைக் குழந்தைகள் பராமரிப்பு இல்லம் நடத்தப்படுகிறது. இவ்வில்லத்திலேயே 5ஆம் வகுப்பு வரை கல்வி கற்பித்து, மேல் கல்விக்காக, அரசினால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இவ்வில்லத்திலுள்ள குழந்தைகளுக்கு, இலவச உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுகிறது.

இதில் சேருவதற்கு, அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலருக்கு முறைப்படி விண்ணப்பித்தல் வேண்டும். இதுபோன்ற இல்லங்கள் அரசின் மானியம் பெற்று, தனியார் நிறுவனங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன

பணிபுரியும் பெண்கள் விடுதி: பொருளாதார நிலை கருதி வேலை வாய்ப்பினால், தங்கள் குடும்பத்தை விட்டு, வெளியூர்களுக்குச் செல்லும் பெண்கள் அதிக செலவின்றித் தங்குவதற்கு வழிசெய்யும் வகையில், தமிழகத்தில், சென்னை, கடலூர், தூத்துக்குடி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் பணிபுரியும் பெண்கள் விடுதி அரசினால் அமைக்கப்பட்டுச் செயல்படுகிறது. இதில் தங்குவோரின் மாதவருமானம் ரூ.2000க்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

உணவு, மின்கட்டணம் மற்றும் விடுதிச் செலவினங்கள், அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளித்து வசூலிக்கப்படுகிறது. விடுதி வாடகை அன்னார்களின் சம்பளத்திற்கேற்ற வாறு, 5, 7 மற்றும் 10 விகித முறையில் வசூலிக்கப்படுகிறது.

சிறப்புத் திட்டங்கள்; (அ) சிறப்புத் திட்டங்கள் பெண்கள் பயனடையும் வகையில் செயல்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவைகளுக்குப் பங்கு, மூலதனக் கடன் மற்றும் இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவை கொள்முதல் செய்வதற்கு மானியத் தொகை, நடப்பு மூலதனக் கடன் மற்றும் நிர்வாக மேற்பார்வை உதவி ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு பினவருமாறு:

பெண்கள் எழுதுபொருள் உற்பத்தித் தொழில் கூட்டுறவுச் சங்கம்: வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள ஏழைப்பெண்கள் வேலைவாய்ப்பு பெறும் பொருட்டு, 15 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அதில் பயிற்சியளிக்கப்பட்ட சுமார் 300 பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இத்துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் தேவைக்கேற்றவாறு எழுதுபொருட்கள் உற்பத்தி செய்து அளிக்கப்படுகிறது. இவற்றின் பயன் பெற விரும்புவோர், அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலரிடம் தொடர்பு கொள்ள வேணடும்.




பனைப்பொருள் தயாரிக்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கம்: தர்மபுரி மாவட்டத்தில், பனைப்பொருள் தயாரிக்கும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு, பனை நார் மற்றும் பனைப் பாய் ஆகியவை உற்பத்தி செய்யும் 20 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, சுமார் 150 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டம் கள்ளந்தல் கிராமத்தில் ஒரு கிராம நூற்பு மையம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் 25 கிராமப்புறப் பெணகள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

மதுரை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சாக்குக் கட்டி மற்றும் மெழுகு வர்த்தி உற்பத்திக் கூடங்கள் 1980-81இல் ஆரம்பிக்கப்பட்டு, இன்று வரைசெயல்படுகின்றன.இதன்மூலம் சுமார் 60 கிராமப்புறப் பெண்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

உபயோக மற்றும் நீக்கப்படும் பட்டு நூல்களிலிருந்து பட்டு நூல் தயாரிக்கும் 2 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட்டு, சுமார் 50 மகளிர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

கயிறு தயாரிக்கும் தொழிலில் பயிற்சி பெறும் பொருட்டு, தஞ்சாவூர் மாவட்டம், நல்லூர் கிராமத்தில் தொழிற் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டு,இதுநாள் வரை சுமார் 346 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 150 பெண்கள் வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர். விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக இச்சங்கக் கிளைகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் மெலட்டூர், அரித்துவாரமங்கலம், ஆலங்குடி, நீடாமங்கலம், கபிஸ்தலம் மற்றும் மன்னார்குடி ஆகிய 6 கிராமங்களில் செயல்படுகின்றன

மேற்குறித்த சங்கங்களின் மூலம் வறுமைக்கோட்டின் கீழுள்ள பெண்கள் பயனடைய வாய்ப்புள்ளது. இதன்மூலம் பயன்பெற, அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலரிடம் முறைப்படி விண்ணப்பித்தல் வேண்டும்.

தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறை மாணவர்களுக்கான சீருடைகளைத் தைத்து வழங்குவதோடு, இதர நிறுவனங்களின் தையல் வேலைகளையும் மேற்கொண்டு, சுமார் 15,000 மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதுபோல், சுமார் 74 சங்கங்கள் செயல்படுகின்றன.

தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் துறைகளில் மகளிர்க்காக மட்டும் 120 தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 16 முதல் 30 வயதுள்ள சுமார் 1000 பெண்கள் ஆண்டு தோறும் பயனடைகின்றனர்.

உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள் மூலம். 16 முதல் 35 வயதுள்ள 5-ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற பெண்களும் பயனடைகின்றனர். இதுபோன்று 35 உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடங்களும், 4 உற்பத்திக் கூடங்களும் இயங்கி வருகின்றன ஆண்டிற்கு 900 பெணகள் இதன்மூலம்பயிற்சி பெறுகின்றனர்.

இலவசக் காலணி வழங்கும் திட்டம்: தாழ்த்தப்பட்ட அருந்ததி

யர் வகுப்பின மகளிர்க்கு வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டு, 87-88ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டப் பணி 39 மகளிர் காலணி உற்பத்தித் தொழிற் கூட்டுறவுச் சங்கம் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 2000 ஆதிதிராவிட மகளிர் பயன்பெறுகின்றனர்.

ஆண்டு வருமானம் ரூ. 6400-க்கு மேற்படாமலும், 18 முதல் 45 வரை வயதுள்ள பெண்கள், அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர்.

மகளிர்க்கான சத்துணவுக் கூட்டுறவுச் சங்கம்: மகளிர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு அளித்தலைத் திட்டமாகக் கொண்டு சத்துணவு (இணை உணவு) தயாரிப்பதற்காக 22 சத்துணவுக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் மூலமாகத் தயாரிக்கப்பட்ட உணவு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்திலுள்ள குழந்தைகளின் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 18 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், திருமணமாகாத பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோர் இத்திட்டத்தில் சேரத் தகுதியானவர்கள். மேற்படி மனுதாரர்கள் அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலர்களை அணுக வேண்டும். ஆண்டு குடும்ப வருமானம் ரூ. 6400 உட்பட்ட ஏழை மகளிர்கள் இத்திட்டத்தின் வாயிலாகப் பயன் அடைவார்கள்.

மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் சங்கம்; மகளிர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளித்தலை நோக்கமாகக் கொண்டு 15 சாக்குக் கட்டி தயாரிக்கும் சங்கங்கள் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் சுமார் 750 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேர 18 முதல் 45 வயது வரையில் இருத்தல் வேண்டும், மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.6400 உட்பட்டு இருத்தல் வேண்டும். மேற்படி மனுதாரர்கள் சங்கத்தில் உறுப்பினராக அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலர்களை அணுக வேண்டும்.

குடிசைத்தொழில், சிற்றுண்டிச் சாலைகள் போன்ற திட்டங்களின் மூலம் மகளிர்க்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டம்: இத்திட்டம் விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்டோர், பெண்களின் தலைமையில் செயல்படும் குடும்பதலைவர் ஆகியோர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளித்தலை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## மங்கையர் திலகங்கள் பெயரில் மகளிர் நலத் திட்டங்கள்

ஏழை மற்றும் நடுத்தர வகுப்புப் பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக்கல்வி அளித்திடும் வகையில் 'ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்' அமுல்படுத்தப்பட்டுள்ளது.




வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் எட்டாம் வகுப்பு அல்லது, அதற்கு மேல் படித்துத் தேறியிருந்தால் அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ.5000 உதவித் தொகை வழங்கிடும் வகையில் 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு 8-வது மாதம் தொடங்கி, 4 மாதங்களுக்கு மாதம் ரூ. 50 வீதம் மொத்தம் ரூ. 200 உதவித்தொகை தரப்படுகிறது. இத்திட்டம் 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்' என்று வழங்கப்படும்.

இத்திட்டத்தினால் சிற்றுண்டிச் சாலை, சலவை நிலையம், ஊறுகாய் தயாரித்தல், கயிறு திரித்தல், கூடைமுடைதல், வண்ணப் பூச்சு, பிளாஸ்டிக்கினால் ஆன கூடை செய்தல், இட்லி வியாபாரம் செய்தல் போன்ற சிறிய தொழில்கள் தொடங்கக் கடனுதவி வழங்கப்படுகிறது.

இக்கடன்களுக்கு ரூ. 600 வரை அரசு மானியத்தொகை வழங்கப்படுகின்றது. மேற்படி தொழில் தொடங்குபவர்களுக்குக் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 6400 உட்பட்டு இருத்தல் வேண்டும். மேற்படி மனுதாரர்கள் அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலர்களை அணுக வேண்டும். இத்திட்டத்தினால் 18 முதல் 50 வரையுள்ள ஏழை மகளிர் பயன் அடைவார்கள்.

மகளிர்க்கென்று தொழிலியல் பயிற்சி அளித்தல்: மகளிர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு அளித்தலை நோக்கமாகக்கொண்டு 5000 மகளிர்களுக்குத் தட்டச்சும், 500 மகளிர்களுக்குக் கம்ப்யூட்டரிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்படி தட்டச்சுப் பயிற்சியாளர்களுக்கு ரூ. 150 உதவித்தொகையும், கம்ப்யூட்டர் பயிற்சிக்கு ரூ. 1500 உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. மேற்படி பயிற்சியில் சேர்பவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 6400 உட்பட்டு இருத்தல் வேண்டும். மேற்படி மனுதாரரின் வயது 16 முதல் 30 வயதுக்குட்பட்டு இருத்தல் வேண்டும். மேற்படி பயிற்சி தொடர்பாக அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலரை அணுக வேண்டும்.

### கலிவுற்றோர் பெறும் நன்மைகள்

மகளிருக்கு இலவசத் தையல் இயந்திரம் வழங்குதல்: இத்திட்டத்தின்கீழ் 20 முதல் 40 வயதுக்குள்ளான விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், திருமணமாகாத ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஊனமுற்றோருக்குத் தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேர்வு செய்யப்படுகின்ற மகளிர் இத்துறையின்கீழ் உள்ள தையல் பயிற்சி நிலையங்கள் மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு இத்துறையின்கீழ் இயங்கும் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வேலைவாய்ப்பு வசதிகள் செய்து தரப்படும். இவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 6400க்கும் குறைவாக இருக்கவேண்டும். மேற்படி மனுதாரர்கள் அந்தந்த மாவட்டச் சமூகநல அலுவலர்களை அணுக வேண்டும்.

வழிகாட்டி நிலையங்கள்: வறுமைக்கோட்டின் கீழ் ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் வழிகாட்டி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படுகின்றன. இதன் மூலம் குறைந்த படிப்புள்ள பெண்கள் உயிர்க் காப்பீட்டுக் கழகம் மற்றும் வருங்கால வைப்பு நிதியில் சலுகைகள் பெற உதவி செய்தல், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு இலவசச் சட்ட உதவி பெற வழிவகை செய்தல், கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான ஆலோசனை வழங்குதல், அன்னாரது குழந்தைகள் கல்வி பெறும் பொருட்டு ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் சேர்த்தல், சுயவேலை வாய்ப்பு அளிக்க உதவி செய்தல் போன்ற வகைகளில் பயன்பெறுகின்றனர். இவ்வழிகாட்டி நிலையத்தின் மூலம் பயன்பெற மாவட்ட அளவில் மாவட்டச் சமூகநல அலுவலர்களையும் சென்னை சமூகநல இயக்குநரையும் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

### குழந்தைகள் நலம்

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம்: வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களிலிருந்து வரும் 2 முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, கல்வி மற்றும் சுகாதாரம் வழங்குதலை நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கிராமப்புறங்களில் 1.7.82 முதலும், நகர்ப்புறங்களில் 15.9.82 முதலும் செயல்படுகிறது. நகர அளவில் 4840 குழந்தைகள் நல மையங்களும், கிராமங்களில் 23,483 மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் ஆதிவாசிகள் நல மையங்களும் அடங்கும். சுமார் 18.5 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயனபெறுகிறார்கள். இத்திட்டத்தினால் பயனபெறும் குழந்தைகள், அந்தந்த வட்டார அளவில் குழந்தைகள் நல அமைப்பாளரால் ஆய்வு செய்து தகுதியான குழந்தைகள் மையத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்: கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், 6 மாதம் முதல் 36 மாதம் வரை உள்ள குழந்தைகள் ஆகியோர் ஊட்டச்சத்து இன்றி நோயினால் பாதிக்கப்படுதல், இறப்பு ஆகியவற்றைத் தடுக்கும்பொருட்டு 6-36 மாதக் குழந்தைகளுக்கு மாதா மாதம் எடை எடுத்தல், வயதுக்கேற்ற எடை இல்லாத குழந்தைகளுக்குப் போதுமான எடைத் தகுதி வரும்வரை இணை உணவு வழங்குதல், 4 மாதங்களுக்கு ஒரு முறை வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து வழங்குதல், 6 மாதங்களுக்கு ஒருமுறை, கண்பார்வை நன்கு இருக்கும்பொருட்டு வைட்டமின் 'அ' திரவம் வழங்கல், கக்குவான், ரணஜன்னி, காசநோய் மற்றும் டிப்தீரியா போன்ற நோய்த் தடுப்பு ஊசி போடுதல், இளம்பிள்ளைவாதச் சொட்டு மருந்து வழங்குதல், வயிற்றுப்போக்குக் காரணமாக நீரிழப்பைச் சரிசெய்யும் தூள் வழங்குதல், ஆகியவைகளும், கர்ப்பிணி ஆரோக்கியத்திற்காகக் கருத்தரித்த 5வது மாதத்திலிருந்து கர்ப்பக் காலச் சிகிச்சை அளித்தல், ரணவாதஜன்னி தடுப்பூசிபோடுதல், 7வது மாதம் முதல் பிரசவித்து

## விளையாட்டுப் பணப் புழக்கம்



'விளையாட்டு விளையாட்டுக்காகவே' என்ற காலம், மலையேறிப் போய், நீண்ட காலம் ஆகிவிட்டது.

விளையாட்டு ஒரு தொழில் என்ற கொள்கை, கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து, இன்று வளர்த்தவர்களையே நிலையாற, தடுமாறச் செய்கிற அளவுக்கு உயர்ந்து போய் விட்டது.

விளையாட்டு ஒரு வருமானம் தரக் கூடிய சாதனம் என்ற நினைவு, இன்று தலையாய நிலையாக மாறிக் கொண்டு விட்டது.

எவ்வளவு பணம் விளையாட்டுக்கு என்பது, இப்போது இடத்துக்கு இடம், ஆட்டத்திற்கு ஆட்டம் மாறியிருக்கிறது.

டென்னிஸ் ஆட்டம் என்றால், உலக அளவில் லட்சம் கோடி என்று உச்ச நிலைக்குப் போய்விட்டது.

கிரிக்கெட் ஆட்டம் என்றால், இப்பொழுது ஆயிரத்தில் தான் இருக்கிறது.

ஆயிரங்கள் பல போதாது என்று போர்க் கொடி ஆட்டக்காரர்கள் உயர்த்துகிற அளவுக்கு, விளையாட்டு நிலை தலைகீழாகப் போய் விட்டது.

1988ஆம் ஆண்டில் இந்தியாசார்பாக விளையாடிய கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் பெற்ற ஊதியம் 60,000 ரூபாய். இதுபோதாது என்பதுதான் அவர்களின் போராட்டம்.

அவர்கள் சொல்லுகிற வாதம் இதுதான். 1983ஆம் ஆண்டில் ஆடிய போது 50,000 ரூபாய் கொடுத்தார்கள். 5 ஆண்டுகள் போன பிறகும், ஒரு 10,000 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். இது எப்படிப் போதும்? இது என்ன நியாயம்?

பணம் கொடுக்கும் தலைமைக் கழகம் மனம் இல்லாமல் இல்லை என்கிறதா? பணம் இல்லாமல் மாட்டேன் என்கிறதா?

இந்த மாதிரி 'கேட்கும் கொடுக்கும்' போராட்டம், முற்றிலும் முடிந்து போகவில்லை. போதும் என்று பணத்தில் யார் சொன்னார்கள்? சரித்திரமே இல்லை.

நன்றி:
'விளையாட்டுக் களஞ்சியம்'

4 மாதங்கள் வரை இணை உணவு வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

தமிழ்நாட்டில் மதுரை, திண்டுக்கல் - காயிதேமில்லத், இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், நெல்லைகட்டபொம்மன், சிதம்பரனார், வடார்க்காடு, செங்கை அண்ணா மற்றும் புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 9,000 மையங்கள் செயல்பட்டுவருகின்றன

இவைகளில் புதுக்கோட்டை, இராமநாதபுரம், மற்றும் செங்கை அண்ணா மாவட்டங்களில் 1,138 மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாற்றப்பட்டு 7,862 மையங்கள் தமிழ்நாடு ஊட்டச் சத்துத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் பயன்பெற வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்புவோர் மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலரையும், வட்டார அளவில் சமுதாய ஊட்டச்சத்துப் பயிற்றுநரையும், கிராமிய அளவில் மையப் பணியாளர்களையும் தொடர்புகொள்ளுதல் வேண்டும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்: இத்திட்டத்தின் கீழ் 6 மாதம் முதல் 2 வயது வரையிலான குழந்தைகளும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயன்பெறுகின்றனர். சத்துணவு பாதிப்பினைத் தடுக்கும் பொருட்டு, மத்திய அரசின் உதவியுடன்கோதுமையால் செய்யப்பட்ட சத்துணவு பயனடைவோர்க்கு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்குக் காசநோய், இளம்பிள்ளைவாதம், ரணஜன்னி, தட்டம்மை, கக்குவான் போன்ற நோய்களைத் தடுக்கும் பொருட்டு விட்டமின் 'ஏ' மற்றும் பூச்சி நீக்க மருந்து, இரும்புச்சத்து மாத்திரை ஆகியவை வழங்கப்படுகின்றன. கர்ப்பிணிப் பெண்களுக்கு டெட்டனஸ் தடுப்பூசியும், இரும்புச்சத்து மாத்திரையும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், குழந்தைகளின் மனவளர்ச்சிக்குத் தக்கவாறு பலதரப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, "கருத்து அணுகுமுறை செயல்பாட்டில்" 3 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முறைசாரா கல்வியும் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. 15 முதல் 44 வயதிற்குட்பட்ட அனைத்து மகளிர்க்கும் ஊட்டச்சத்து மற்றும் உடல்நலக் கல்வி அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு எடை எடுத்தல், ஊட்டச்சத்து அளித்தல், சுற்றுப்புறச் சுகாதாரம் முதலியவை எடுத்துச் சொல்லப்படுகிறது. இத்திட்டம் தற்போது 65 வட்டாரங்களில் செயல்பட்டு வருகிறது. ஆயிரம் மக்கள் தொகையுள்ள ஒரு பகுதிக்கு ஒரு மையம் என ஒரு திட்டத்தின்கீழ் 100 மையங்கள் செயல்படுகின்றன. இதில் பயன் பெற விரும்புவோர் அந்தந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலரை அல்லது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மேற்பார்வையாளரைத் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

### நலிவுற்றோர் பெறும் நன்மைகள்

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்: ஆறு மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளும் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் சேவைபுரியும் பொருட்டு உலக வங்கி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இது. தாய்சேய் நலப்பணிகள் திட்டத்தின் கீழ் துணை ஊட்டச் சத்து, மருத்துவ சோதனை, நோய்த்தடுப்பு,



மேல் மருத்துவ சோதனை, சுகாதாரம், ஊட்டச்சத்துக் கல்வி, முறைசாராக் கல்விமற்றும சத்துணவு வழங்குதல் ஆகிய பலவேறு பணிகள் அடங்கியுள்ளன. தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் 219 குழந்தைகள் நலமையங்கள் நடைபெறுகின்றன.

2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சத்து உணவுப்பொருட்களைக் கொண்டும் இதர குழந்தைகளுக்குத் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ ஊட்டச்சத்துணவு அளிக்கப்படுகிறது. இத்திட்டம் குழந்தைகள் நலப்பணியாகப் பயன்படுகிறது. இதில் குழந்தைகள் இறப்பு விகிதத்தையும், பிரசவ நிலையில் தாய் இறப்பதைத் தடுக்கவும், போலியோ, தட்டம்மை, முடக்கு நோய் ஆகியவை வராமல் தடுப்பதும், சத்துணவு அளிப்பது மூலமாக குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பேணுதலும், அவ்வப்போது குழந்தைகளின் ஆரோக்கிய வளர்ச்சியை ஆராய்தலும் கண்காணிப்பதும் இதன் நோக்கங்களாகும். 5 மாத வயதுள்ள அமைத்துக் குழந்தைகளும் மற்றும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் இத்திட்டத்தில் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தில சேர அந்தந்தப் பகுதிக் குழந்தைகள் நல அமைப்பாளர்களை அணுக வேண்டும்.

### ஊனமுற்றோர் நலம்

ஊனமுற்றோருக்குச் சிறப்புக் கல்வி; சமூக நலத்துறை கண்பார்வையற்ற, காது கேளாத, கை கால் ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளைத் தமிழகமெங்கும் பல மாவட்டங்களில் நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் இலவசச் சிறப்புக்கல்வி, இலவச உணவு, இருப்பிடத்துடன் இரண்டு இணை உடையும் இலவசமாக வழங்கப்படுகிறது. சுமார் 1800 பேர் இத்திட்டங்களின் மூலம் பயனடைகின்றனர். அரசுப்பள்ளிகளைத் தவிர தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமும் 25 சிறப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவைகளின் மூலம் 3873 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். இப்பள்ளிகளில் சேர அந்தந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்' மாவட்டச் சமூகநல அலுவலர்கள், மண்டல மறுவாழ்வு அலுவலர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும.

ஊனமுற்ற மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை: ஒன்று முதல் எட்டாம வகுப்பு வரை பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு ரூ.10 முதல் ரூ. 84 வரை அவர்கள் பயிலும் வகுப்பிற்கு ஏற்ப புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் வாங்க கல்வி உதவித் தொகை தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகளில பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு மாதம் ரூ. 85 முதல் ரூ.240 வரை அவர்கள் பயிலும் கல்வி நிலைக்கு ஏற்ப மைய அரசின் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்ற மாணவர்கள் தமது இல்லத்திலிருந்து பள்ளி மற்றும். மருத்துவமனைகளுக்குச் சென்று வர இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. இதனைப் பெற அந்தந்த மாவட்டங்களிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவிக்கும்ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி: பார்வையற்றோருக்குப் போதிக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, பூவிருந்தவல்லி அரசினர் பார்வையற்றோர் பள்ளியிலும், காதுகேளாதோருக்குப் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி சிறுமலர் காது கேளாதோர் பள்ளியிலும், மனவளர்ச்சி குன்றியோருக்குப் போதிக்கும் ஆசிரியர் பயிற்சி பாலவிகார் பயிற்சிப் பள்ளியிலும் நடைபெறுகிறது. இப்பயிற்சித் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் 65 ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

ஊனமுற்றோருக்குத் தொழிற் பயிற்சி: கிண்டியில் உள்ள பார்வையற்றோருக்கான தொழிற் பயிற்சி மையத்தில் பொறிப்பகுதி பொருத்துதல் மற்றும்அடிப்படை இயந்திரம் இயக்குதல், புத்தகம் கட்டுதல், மின்கம்பி சுற்றுதல் போன்ற பயிற்சிகள் தரப்படுகின்றன. 30 பார்வையற்றோர் இப்பயிற்சியை ஆண்டு தோறும் பெறுகின்றனர்.

அரசினர் பார்வையற்ற பெண்களுக்கான மறுவாழ்வு மையம்: அரசினர் பார்வையற்ற பெண்களுக்கான மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி அரசினர் பார்வையற்றோர் மேனிலைப்பள்ளி மைதானத்தில் இயங்கி வருகிறது. 18 முதல் 40 வயது வரையான (தாழ்த்தப்பட்ட மலைசாதியினர் 45 வயதுவரை) பார்வையற்ற ஆதரவற்ற பெண்களுக்குச் சாக்குக் கட்டிகள் தயாரித்தல், துணி நெய்தல் போன்ற பயிற்சிகள் தரப்படுகின்றன. மாதம் ரூ. 90 உதவித்தொகையாகத் தரப்படுகிறது. பயிற்சிக்குப் பின்பு நிறுவனத்திலேயே வேலைவாய்ப்பும் தரப்படுகிறது.

காது கேளாதோர் மற்றும் கை கால் ஊனமுற்றோருக்குத் தொழிற் பயிற்சி: கிண்டியில் உள்ள தொழிற் பயிற்சி மையத்தில் காதுகேளாதோருக்கு பொறிப்பகுதிபொருத்துபவர், கம்பியாள் போன்ற பிரிவுகளிலும், அம்பத்தூர் மற்றும் வட சென்னைத் தொழிற் பயிற்சி மையங்களில் வண்ணம் பூசுபவர், குழாய் பொருத்துபவர், கட்டடப் படம் வரைபவர் போன்ற பிரிவுகளில் தொழிற் பயிற்சி தரப்படுகிறது.

ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு: ஊனமுற்றோருக்கு அனைத்து அரசு,அரசு சார்புமற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் 3 சதவிதம்வேலைவாய்ப்பில்இடஒதுக்கீடு தரப்படுகிறது. இதில் ஒரு சதவிதம் கண்பார்வையற்றோருக்கும், ஒரு சதவிதம் காதுகேளாதோருக்கும், ஒரு சதவிதம் கைகால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று 3 சதவித இடஒதுக்கீடு கல்வி நிறுவனங்களில் சேரவும் உண்டு. இதுதவிர தமிழ்நாடு





தேர்வாணைக்குழுவினால் நடத்தப்படும் தேர்வுகளில் ஊனமுற்றோருக்குப் பத்தாண்டுகள், வயதில் சலுகைகள் உண்டு. 18 வயது முதல் 40 வயது வரையான பார்வையற்ற படித்து வேலைகிடைக்காதோருக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவடைந்து இருந்தால் அவர்களுக்கு நிவாரணத்தொகை ரூ. 50 முதல 100 வரை கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது.

சுயவேலைவாய்ப்பிற்குநிதியுதவி: சுயவேலை வேலை வாயப்பு மூலமும்,பெட்டிக்கடை வைத்தும் ஊனமுற்றோர் மறுவாழ்வு பெற சமூக நலத்துறைதேசிய மடமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடனுதவி பெற உதவுகிறது. மேலும் மானியமாக ரூ.500 முதல் ரூ. 1000 வரையும் வழங்குகிறது.

---



கண்ணுக்கு மை இடுவதுபோலப் பிறமொழிகளைப்பயன்படுத்தவேண்டும். மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ, அதைப்போலப் பிறமொழிகளை அதிகம் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும்.

-பேரறிஞர் அண்ணா

மண்டல மறுவாழ்வு மையங்கள்; சென்னை, கோயம்புத்தூர், மதுரை, வேலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் நூறு பேருக்காவது மறுவாழ்வு உதவிகள் நலகும் நோக்கத்துடன் மண்டல மறுவாழ்வு மையங்கள் இயங்கி வருகின்றன. இங்கு ஊனமுற்றோருக்கு ஒருமாத கணிப்புப் பயிற்சியும் இதர அனைத்து மறுவாழ்வு உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஊனமுற்ற முதியோர் உதவித் தொகை: 45 வயதிற்கும் மேற்பட்ட ஆதரவற்ற அநாதையான ஊனமுற்றோருக்கு முதியோர் உதவித் தொகை வழஙகப்படுகிறது. இதனைப் பெற அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகவேண்டும்.

ஊனமுற்றோருக்கு இலவசமாக, உதவும் — பொருத்தும் கருவிகள் வழங்குதல்: மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், காதுகேட்கும் கருவிகள் போன்ற ஊனமுற்றோருக்கான உதவும் பொருத்தும் கருவிகள் இலவசமாகத் தகுதி அடிப்படையில் வழங்கப்படுகின்றன . இவைகளைப் பெற மண்டல மறுவாழ்வு அலுவலர்கள் மாவட்டச் சமூகநல அலுவலர்களை அணுக வேண்டும்.

பெட்ரோல் வாங்க மைய அரசு மானியம்: உடல் ஊனமுற்றோர் தமது சொந்த உபயோகத்திற்காக இயந்திரத்தால்இயக்கப்படும்வண்டிகளை உபயோகித்தால், அவர்களுக்கு மைய அரசின் திட்டத்தின் கீழ் பெட்ரோல் உபயோகிக்க மானியம் வழங்கப்படுகிறது. இரண்டு குதிரைத் திறனும் அதற்குக் குறைவான வண்டியாக இருப்பின், அதிகப்பட்சம் 50சதவிதம் அல்லது அதிகப்பட்சம் 15 லிட்டர்கள் இதில் எது குறைவோ அந்தத்தொகை வழங்கப்படும். இரண்டு குதிரைத்திறனுக்கும் அதிகமாகச் சக்தி வாய்ந்த இயந்திரமுடைய வண்டியாக இருந்தால் அதிகப்பட்சம் 25 லிட்டருக்கான தொகை வழங்கப்படும். இதுபற்றிய விவரங்களை மாவட்டச் சமூகநலக அலுவலர்கள் மண்டல மறுவாழ்வு அலுவலர்களிடமும் பெறலாம்.

இளம் பிள்ளைவாதநோய் தடுப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம்: இளம்பிள்ளை வாதநோயால் தாக்கப்பட்டோருக்கான ஒருங்கிணைந்த மறுவாழ்வுத்திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது முழுவதும் மைய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படும்திட்டமாகும். இதனை மேலும் விரிவுபடுத்தும் திட்டம் மைய அரசின் பரிசிலனையில் உள்ளது.




### குறள் வழி நடந்த பெரியோர்கள்

ஆசிரியர்: கவிஞர் தம்ழ்முடி
வெளியீடு: தமிழ்முடி நிலையம்.
எச் 10 கே.பொன்னம்பலம்
கே கே நகர்,
சென்னை-600078.

விலை ரூ. 5.50 பக்கம்.64

வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்கு வழிவகை வகுக்கும் நீதி நூல் திருக்குறள் ஆகும். குறள் காட்டிய நெறிப்படி, பல பெரு மக்கள் நடைபோட்டுப் பெரும்புகழ் ஈட்டியிருக்கிறார்கள். குறளைப் படித்து அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டார்களா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படிக்கும் போது அவர்கள் குறள்நெறிப்படி நடந்தவர்கள் என்றே கூறவேண்டும் என்னும் விதத்தில் பெருமக்கள் சிலரைக் குறித்து நூலாசிரியர் சுவை பட எழுதியுள்ளது பாராட்டுக்குரியது. எளிய, இனிய நடை, நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

### காதல் கதை இன்னும் ஒன்று

ஆசிரியர்: ப.புகழேந்தி
வெளியீடு: பூர்ணிமா பதிப்பகம்,
சென்னை-14
விற்பனை: பாரிநிலையம்.
184 பிராட்வே, சென்னை108

விலை ரூ. 10 பக்கம்:120

பத்துச் சிறுகதைகளின் தொகுப்பான இந்நூலின் ஒவ்வொரு கதையும் காதலை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

ஏக்கம், அவலம், தியாகம், ஏமாற்றம், வஞ்சகம், எதிர்பாராத திருப்பம், நம்பிக்கை மோசம், நெருக்கம், இப்படிப் பல்வேறு இயல்புகளை அடித்தளமாக வைத்துச் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. மனித இனத்தின் நற்செய்கைகளும் தீச் செயல்களும் இக்கதைகளின் வாயிலாக அலசப்படுகின்றன. பாத்திரப்படைப்புகள் அருமை. பாத்திரங்கள் படிப்போரின் இதயங்களில் நீங்காது நிலைத்து விடுகிறார்கள். பாத்திரங்கள் நமக்கு அறிமுகமானவர்களைப் போலவே தெரிகிறார்கள். அதற்கு நூலாசிரியரின் எழுத்துத் திறன்தான் காரணம். எழுத்துநடை, சிற்றாறெனப் பாய்ந்து மகிழ்ச்சி அலையை நமது இதயத்தில் உருவாக்குகிறது.

—தமிழ்ப்பித்தன்

### இந்து மதம்

ஆசிரியர்: ஸ்ரீகிருஷ்ண தத்தபட்
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை-625020

விலை: ரூ.15 பக்கம்:226

உலகில் பல மதங்கள் உள்ளன. அவற்றுள் பழம் பெருமை மிக்கது இந்து மதம்.

இந்து மதத்தின் சிறப்பினை விளக்கும் இந்நூல், வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்று மூன்று பகுதிகளைக்கொண்டுள்ளது.

இராமாயணம் மகாபாரதம், புராணங்கள், பகவத்கீதை, பாகவதம் முதலானவற்றின் தத்துவங்களும், கருத்துக்களும் இந்நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. விளக்கச் சித்திரங்களும் உள்ளன.

இந்து மதம் பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்புவோர்க்கு இந்நூல் ஒரு கையேடாக விளங்கும்.

—பி வி. கிரி

### பென்ஷன் பெறுவோர்க்கான சட்டங்கள்

ஆக்கியோர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு.
வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்
4, தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை-17

விலை: ரூ.10 பக்கம்: 120

அரசு ஊழியர்கள் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்வர் பெறுகின்ற ஓய்வூதியதொகை குறித்த தகவல்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

ஊதியம், சராசரி ஊதியம், கட்டாய ஓய்வு பெறுவோர் அடையும் பயன்-ஓய்வு பெறும் அரசுப் பணியாளர் தரவேண்டிய ஆவணங்கள், ஓய்வு ஊதியத்தைத் தொகுத்துப் பெறுதல் போன்ற பல்வேறு விவரங்கள் இந்நூலில் உள்ளன. பணிக்கொடை, ஓய்வுக்கொடை விகிதங்களும் அவை தொடர்பான கணித முறைகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்பட்ட அரசு ஆணைக்குறிப்புகளும் கொடுக்கப் பட்டுள்ளன.

ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கு மிகமிகத் தேவைப்படும் நூல் இது.

—எஸ்.எஸ்.சுந்தரம்.

### வசந்த உலா

தொகுப்பாசிரியர்:
கவிஞர் எஸ். இரகுநாதன்.

வெளியீடு:
சந்திரா பதிப்பகம்
சி.391, சந்திரசேகரன் சாலை,
பெரியார் நகர்.
சென்னை-600 082.

விலை ரூ.5.00 பக்கம்.64

நாற்பது கவிஞர்களின் எண்ணங்களின் தொகுப்பு. புதுக்கவிதைகளும் உண்டு. நாற்பது கவிஞர்களின் திறமையை ஒரே நூலில் அறிந்து மகிழ்ந்திட.... எதிரும் புதிருமான கருத்துக்களின் கவிதைக் குவியல்.

### தமிழுக்குப் பெருமை

ஆசிரியர்: கவிஞர் தம்ழ்முடி
வெளியீடு: தமிழ்முடி நிலையம்.
எச்.10.கே. பொன்னம்பலம்
சாலை, கே.கே.நகர்.
சென்னை-600 078.

விலை ரூ.7.50 பக்கம்.80

இரட்டைப்புலவர், கவிமணி, அருணகிரிநாதர், பெருஞ்சித்திரனார் போன்றோரின் கவிதைகளுக்கு கற்பனைக் கதை விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கதைக்கும் ஓவியம் உண்டு. கதைகள் யாவும் ஆவலைத் தூண்டும் வண்ணம் அழகிய கற்பனை வளத்தோடு அமைந்துள்ளன.

—அ. மருதவிநாயகம்



## கண்கவர் கைத்தறிக் கண்காட்சி

ஒவ்வோர் ஆண்டும் சென்னை மாநகரத்திலும், மாவட்டத் தலைநகர்களிலும் மற்றும் முக்கிய நகரங்களிலும் கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம சங்கங்களில் பெருத்த அளவில் கைத்தறித் துணிகள் இருப்பு இருப்பதால், சென்னையில் பாந்தியன் சாலையில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சித் திடலிலும் மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை, காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம் ,கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, காரைக்குடி, தஞ்சாவூர், வேலூர், கடலூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களிலும் கண்காட்சிகள் நடத்தப் பெறுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர மாநிலங்களாகிய கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி, அஸ்ஸாம், அரியானா, மகாராஷ்டிரம் ஆகியவற்றின் கைத்தறித் துணிகள், 214 கடைகள் மூலம் வாடிக்கையாளர்களின் பார்வைக்காகவும் மற்றும் விற்பனைக்காகவும் சென்னைக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியில், பட்டுப் புடவைகள், பருத்திச் சேலைகள், பாலியஸ்டர் சேலைகள், போர்வைகள் மற்றும் திரைச்சீலைகள், சட்டைத் துணிகள், வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள், ஆயத்த ஆடைகள், அச்சிட்ட துணி இரகங்கள், ஆடைத் துணிவகைகள் மற்ற கைத்தறித் துணி வகைகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

கண்காட்சியின்போது கைத்தறித் துணிகள் 1985ல் ரூ.201 இலட்சத்திற்கும், 1986ல் ரூ. 225 இலட்சத்திற்கும், 1987ல் ரூ. 227 இலட்சத்திற்கும், 1988ல் ரூ. 218 இலட்சத்திற்கும் விற்பனையாகியுள்ளன. 1989ல் ரூ. 300 இலட்சத்திற்கு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மற்றும் மாவட்டத் தலைநகர்களில் அமைக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் ஸ்டால்கள் மற்றும் அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் 1985ல் ரூ.1097 இலட்சத்திற்கும், 1986ல் ரூ. 1069 இலட்சத்திற்கும், 1987ல் ரூ. 1297 இலட்சத்திற்கும், 1988ல் ரூ. 710 இலட்சத்திற்கும் மொத்த விற்பனை நடந்துள்ளது. 1989ல் ரூ. 1500 இலட்சத்திற்கு விற்பனை ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புது இரகங்கள்**

கோவை மாநகரின் கைத்தறி நெசவாளர்களின்கைத்திறமையைக் கருத்தில் கொண்டு, அதற்கேற்ப அழகிய வேலைப்பாட்டுடன் நவீன வடிவங்களைக் கொடுத்து, பட்டு மற்றும் நூலினால் தயாரான கைத்தறிச் சேலைகள் இக்கண்காட்சியில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. சிறு பார்டர்களைக் கொண்டும் மிக அகலமான முந்திகளைக்கொண்டும் மிகவும் நேர்த்தியுடனும் நெய்யப்பட்ட இந்த ரகச் சேலைகள் சுமார் ரூ. 300-400 வரையிலான விலையில் கிடைக்கின்றன.

இந்த ஆண்டு ஆண்களுக்கென்று நவீனமான பாலியஸ்டர் கலப்பிழை நூலினைக் கொண்டு புது வடிவங்களில் சட்டைத் துணிகளும் மற்றும் சாயம் தோய்த்த பாலியஸ்டர் கலப்பிழை கொண்டு கோடு போட்ட வடிவமைப்புகளுடனும், நவீனமான வண்ணங்களில் நெய்த கால்சட்டைத் துணிகளும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

**தனிப்பட்ட பட்டு விற்பனை நிலையங்கள்**

பட்டுத் துணி விற்பனையைப் பெருக்குவதற்காக, கோ-ஆப்டெக்ஸ் தனிப்பட்ட பட்டு விற்பனை நிலையங்கள் குளிர்வசதி செய்யப்பட்டு, ஏராளமான புது வடிவமைப்புகளுடன் கூடிய சேலைகள் சென்னை "தில்லையாடி வள்ளியம்மை" பட்டு மாளிகையிலும், சேலத்தில் சேலம் பட்டு மாளிகையிலும், ஈரோடில் "பவளம்" பட்டு மாளிகையிலும், கோயம்புத்தூரில் "தாமரை" பட்டு மாளிகையிலும், திருச்சியில் "அமுதசுரபி" பட்டு மாளிகையிலும், ஐதராபாத்தில் "குஷ்பு" பட்டு மாளிகையிலும் பெங்களூரில் "ரேஷம்தாரா" பட்டு மாளிகையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

மேற்கண்ட விற்பனை நிலையங்களின் விற்பனை மிகவும் உற்சாகம் ஊட்டுவதாக இருக்கிறது. பட்டு விற்பனை 1987ஆம் ஆண்டைவிட 1988 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 6 கோடி அதிகமாக விற்பனை ஆகியுள்ளது.

**"கோலம்" விற்பனை நிலையம்.**

சென்னை மாநகரில் 'கோலம்' என்ற பெயரிட்ட நவீனமயமாக்கப்.





பட்ட விற்பனை நிலையத்தில் திரைச்சீலை, படுக்கை விரிப்புகள், துவாலைகள் தலையணை உறைகள், தரை விரிப்புகள், முதலான இரகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற விற்பனை நிலையங்கள் மற்றப் பெருநகரங்களான பெங்களூர், பம்பாய், புதுடில்லி ஆகிய இடங்களிலும் திறக்கும் திட்டம் உள்ளது.

எழும்பூர் பாந்தியன் சாலையில் 23-4-89 அன்று நடைபெற்ற 35வது கைத்தறிக் கண்காட்சி விழாவுக்கு மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு தங்கவேலு தலைமை ஏற்றார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ்நாட்டில் 4.27 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இவற்றில் 2.58 இலட்சம் தறிகள் கூட்டுறவுத் துறையைச் சார்ந்ததாக உள்ளன. ஏனையவை பல்வேறு தனிப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்தவையாக இருக்கின்றன.

"வேளாண்மைக்கு அடுத்த தொழிலாக, நெசவுத் தொழில் விளங்குகிறது. தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் பட்டுத் துணி, பருத்தித் துணி, செயற்கைப் பட்டுத் துணி ஆகியவற்றின் பெருமை வெளிமாநிலத்தவர்களாலும் நன்கு உணரப்படுகிறது.

"நெசவாளர்களுக்கு உள்ள குறைகளை இந்த அரசு கட்டாயம் நிவர்த்தி செய்யும். கைத்தறி நெசவாளர்களின் வாழ்வை வளப்படுத்தி மேலும் சிறப்பெய்தச் செய்யப் பற்பல திட்டங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியினால் நிறைவேற்றப்படும்".

விழாவைத் தொடங்கி வைத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு.க.அன்பழகன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

"கைத்தறித் தொழிலாளர்களின் கண்கள் கலங்காமல் இருப்பதற்காக அந்தந்த ஆண்டு அவர்களை நினைவூட்டும் வகையில் இந்தக் கண்காட்சி இடம் பெறுகிறது. கைத்தறி வடிவமைப்பில் அவ்வப்போது உருவாக்கப்படுகின்ற மாற்றத்தை, புதிய ரகத்தை-உற்பத்தியை நாட்டு மக்களுக்கு அறிவிப்புச் செய்யும் வகையில் இந்தக் கண்காட்சி உருவாகியுள்ளது.

"உலகத்தில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படுகின்றபோது, அதன் காரணமாக இந்தியாவிலும் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. நாட்டில் விஞ்ஞானத்தினால் ஏற்படும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை-தாங்கிக் கொள்ள வேண்டியவை.

"200 ஆண்டுகளுக்கு முன்னர், கைத்தறித் தொழிலாளர்கள் செல்வச் செழிப்போடு வாழ்ந்துவரும் சூழ்நிலை இருந்தது. 20ஆம் நூற்றாண்டு, கைத்தறித் தொழிலாளர்களின் கைகளை முடக்கம் செய்யும் நூற்றாண்டாக மாறிவிட்டது. முன்பு மக்கள் தொகை குறைவாக இருந்தது. மக்கள் எல்லாம் கைத்தறியை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு கூட, 5 இலட்சம் கைத்தறிகள் தமிழ்நாட்டில் உண்டு என்று நாங்களெல்லாம் மேடையில் முழங்கியிருக்கிறோம். இன்று 4½ இலட்சம் என்று கணக்குச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் போனால் இன்னும் 10 ஆண்டுக்குள் 3½ இலட்சம் கைத்தறிகள்தான் என்ற நிலை வருமானால் அதில் ஆச்சரியம் அடைவதற்கு ஏதுமில்லை.

ஏறக்குறைய 17 அல்லது 18 இலட்சம் பேர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஒரு கைத்தறியில் 3 அல்லது 4 நபர்கள் பணியாற்றுகிறார்கள். கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோர் எல்லோருமாகச் சேர்ந்து பணிபுரிந்தால்தான் கைத்தறியின் இயக்கம் சரியாக இருக்கும்.

கைத்தறி தொடர்புள்ள தொழில்களான வண்ணம் தோய்த்தல், போன்ற பணிகளில் 16 இலட்சம் பேர்கள் பணியாற்றிடக்கூடும். ஏறக்குறைய வயிற்றுக்கு உணவை எதிர்பார்த்து 80 இலட்சம் பேர் இந்தத் தொழிலில் வாழ்கின்றனர். தமிழகத்தின் மக்கள் தொகை 5 கோடி என்றால் 6 பேருக்கு ஒருவர் கைத்தறியை நம்பி வாழ்பவர்களாக இருக்கிறார்கள்.

விஞ்ஞான வேகம் எதிர்கொண்டு வருகின்ற இந்த நேரத்திலும் நமது கைத்தறியாளர்கள் எந்த வலிமையின் காரணமாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் சிந்தித்துப் பார்த்தேன். கைத்தறித் தொழிலாளர்கள் இந்தத் தொழிலை விட்டு விட்டு வேறொரு தொழிலுக்குப் போகமுடியாது என்பதுதான காரணம். அவர்களை

# "மக்கள் வரவேற்ற தீர்ப்பு"

நான் நிச்சயமாகச் சொல்லுவேன், நம் தமிழ்நாட்டில் நெய்யப்படுகின்ற கைத்தறித் துணி ரகங்கள்போல் வேறு எங்கும் கிடையாது என்று. ஏனென்றால் நான் அமெரிக்கா சென்றிருந்தபோது அங்குள்ள மக்கள் உங்கள் இந்தியாவிலே தயாராகும் கைத்தறித் துணிகள் எங்களுக்கு எவ்வளவு அனுப்பித் தந்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, நம் தமிழ்நாட்டில் நெய்யப்படுகின்ற கைத்தறி ரகங்களின் நேர்த்தியையும் கைத்திறனையும் வெளிநாட்டவர்கள்-ஏன்! உலகெங்கிலும் உள்ள மக்கள் தெரிந்து வைத்துள்ளார்கள். ஆனால் நம் நாட்டிலுள்ள மக்களுக்கு கைத்தறி இரகங்களின் நேர்த்தியும் மதிப்பும் தெரியவில்லை. அமெரிக்கா மக்கள் நமது கைத்தறியின் நயத்தைத் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளார்கள்.

கவிக் குயில் சரோஜினி நாயுடு அவர்கள், தன்னுடைய 'இந்தியர் வீவர்' என்ற கவிதையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்:


நான் ஒரு நெசவாளியின் வீட்டிற்குக் காலைப்பொழுதில் சென்று, இப்போது என்ன வகையான துணிரகம் நெய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு "குழந்தைகள் அணிவதற்கான துணிவகைகள் நெய்து கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள். மாலையில் சென்று கேட்கும்போது, இப்போது அரசிகளும் அரசர்களும் அணிவதற்கான துணிவகைகள் நெய்கிறேன் என்று சொன்னார்கள்.. இரவில் சென்று கேட்டபோது, வெள்ளைரகத்துணி நெய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். ஏன் என்று கேட்டபோது இறந்தவர்களின் உடல்களைப் போர்த்துவதற்காக என்று சொன்னார்கள். இவ்விதமாக கைத்தறித் தொழிலானது மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்புவரை பின்னி இழையோடியிருக்கின்றது.

இந்த நெசவாளப் பெருமக்கள் வேலையில்லாமல் வறுமையில் உழலும்போது அவர்களுக்கு வேலை கிடைக்கும் பொருட்டு சில குறிப்பிட்ட இரகங்களை கைத்தறித் துணிகளுக்கு ஒதுக்கி மத்திய அரசு ஆணை பிறப்பித்தபோது, அதை எதிர்த்து ,சில சுயநலக்காரர்கள் தங்கள் சொந்த லாபத்திற்காக நீதிமன்றம் சென்றனர். ஏழை நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும், அவர்களின் வாழ்வு ஒளி பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அந்த சுயநலக்காரர்களை எதிர்த்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தருணத்தில் கார்ல்மார்க்ஸ் சொன்ன வார்த்தைகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன. அதாவது தொழில் நுணுக்கம் முன்னேற்றம் அடைந்தும் தொழிலாளி நாள் முழுவதும் உழைப்பால் நாள் கணக்கில் வெயிலில் திரிவான். அதனால் அவன் முதுகு வெயிலில்தான் காய்கிறது; அவன் மனநிறைவு கொள்ளும்படி அவனுக்கு எதுவும் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். இதே கருத்தைக் கூறி நெசவாளர்களுக்கு சாதகமாக ஒரு தீர்ப்பை வழங்கினேன். அப்படி நான் கூறிய தீர்ப்பு மக்களிடத்தில் ஒரு நல்ல வரவேற்பைப் பெற்றது.

-தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு. எஸ். மோகன், கைத்தறி விழாவில் (25-4-89) பேசியது.





'சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிச் சேலையடி' என்ற பாடல் தோன்றுகிறதா? இவை உண்மைப் புடவைகள் அல்ல; கைத்தறிக் கண்காட்சி வளாகச் சுவரில் தீட்டப்பட்டிருந்த ஓவியப் புடவைகள்

விட்டு விட்டு நாம் அரசாங்கம் நடத்தவும் முடியாது. அவர்களுக்கு வேறு தொழில் ஏற்படுத்தித் தரவும் நம்மால் இயலாது. அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை.

1977ல் 19 கோடி ரூபாய் அளவில் விற்பனையாகிய கைத்தறித் துணி இன்று 100 கோடி ரூபாய் அளவில் விற்பனையாகிறது. கூட்டுறவு மூலம் 50 சதவிகிதம் துணி வாங்கிக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில்கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் 290, வெளிநாடுகள், வெளிமாநிலங்கள் ஆகியவற்றில் உள்ள 200க்கு மேற்பட்ட நிலையங்கள் மூலம் விற்பனை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த விற்பனைக்கு அடித்தளமாக உள்ள கைத்தறித் தொழிலாளர்களின் நிலை பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறது.

கைத்தறித் தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களல்லர். எல்லா ஜாதியினரும் உள்ளனர். எல்லா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர்.

வேறு மாநிலங்களில் கைத்தறித் தொழில் செய்வோர், பக்க பலமாக வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். பிறமாநிலங்களில் ஓய்வு நேர வேலையாகக் கருதப்படும் கைத்தறி நெசவு, நமது தமிழகத்தில் வயிற்றுப் பாட்டுத் தொழிலாக உள்ளது. வாழ்க்கைக்கு நம்பியிருக்கின்ற ஒரே தொழிலாக உள்ளது.

கைத்தறித் தொழில் நசிந்துவிடக்கூடாது, நலிந்து விடக்கூடாது என்பதற்காகப் பலலாண்டுகளுக்கு முன்னர், அறிஞர் அண்ணா அவர்கள், தமது தோள்மீது சுமந்து, வீதிவீதியாக சென்று, பொதுமக்களிடம் விற்பனை செய்தார். தமது கட்சி கைத்தறிநெசவாளர்களுக்கு ஆதரவு தரும் இயக்கம் என்பதை நிலை நிறுத்தினார். அதன்பின்னர்தான் தி.மு.கழகத் தோழர்கள் தொடர்ந்து கைத்தறி ஆடையை அணியும் சூழ்நிலை உருவாயிற்று. அறிஞர் அண்ணா அவர்கள் இறுதி வரை கைத்தறி ஆடையையே அணிந்துவந்தார். கைத்தறித் துணியால் ஆன சட்டையையே அணிந்தார்.

எத்தகைய ஆடையையும் ஏற்றுக் கொள்ளலாம் என்பதில் எனக்கு ஒன்றும் பெரிய மாறுபாடு கிடையாது.

ஆடையில்லாதவன் அரை மனிதன் என்று பழமொழியே இருக்கிறது. ஆடை மானம் காக்கிறது. கைத்தறி ஆடைக்கு என்ன சிறப்பு இருக்கிறது தெரியுமா? கைத்தறி ஆடை இனமானம் காக்கிறது.

இனம் வாழாதபோது எந்த மனிதனின் தனி வாழ்க்கை எவ்வளவு உயர்ந்திருந்தாலும் அது வாழ்க்கையாகாது. பாடுபட்டு வாழும் வாழ்க்கைக்குப் பாதுகாப்புத் தருவது மற்றவர்களின் கடமையாகும்.

தனிமனித வசதிகூட சமுதாயத்தின் கண்ணீரைத் துடைக்கும் வகையில் தான் அமையவேண்டும்.

உத்தமர் காந்தி அடிகள்கூட, கைராட்டையைப் பயன்படுத்தி நூல் நூற்று, கதர்த்துணி தயாரிப்பதை ஓர் இயக்கமாக உருவாக்கினார். ஏழைகளின் துன்பத்தை நீக்கப் பாடுபட்டார். கதர் இயக்கம் மிகப் பெரிதாக வளரவில்லை என்றாலும், ஏழை, எளியவர்களின் பசி, பட்டினி, துன்பத்தைப் போக்குவதற்குத் துணையாக அமைந்தது.

சமுதாய அமைப்பில் கைத்தறிக்கு முக்கியத்துவம் கிடைக்கவேண்டும். தரம், வண்ணம், எழில், வேலைப்பாடு கொண்டதாக உருவாக்கப்படும் கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் படுக்கை விரிப்புகளுக்கு வெளிநாட்டில் மிக நல்ல வரவேற்புக் கிடைக்கிறது. கைத்தறியின் வண்ணம், வடிவம், நேர்த்தி, வேலைப்பாடு ஆகியவை குறித்து வெளிநாட்டினர் நன்கறிந்து வைத்துள்ளனர். அவற்றின் அருமை நம்மவர்களுக்குப் புலப்படாவிட்டாலும் வெளிநாட்டினருக்கு நன்கு தெரிந்துள்ளது.


இயந்திர மயமான வாழ்க்கை நாட்டில் உருவாகியிருந்தபோதிலும் கைவினைப் பொருட்களுக்கு உள்ள வரவேற்புக் குறையவில்லை.

கைத்தறித் தொழிலில் டிசைன்கள் அமைப்பதற்கு கம்ப்யூட்டர் கருவி பயன்படுத்தப்படுகிறது. கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கு மறுமலர்ச்சிக்கு—உருவாக்கத்திற்கு கூட்டுறவு நெசவாளர்களின் ஒத்துழைப்புடன் சிறந்த பணி ஆற்றி வருகிறது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம். கைத்தறியை ஆதரிப்பது நம் இனத்தைக் காப்பாற்றுகிறது என்ற உணர்வு பரவ வேண்டும்."

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு பரிதி இளம்வழுதி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.மதிவாணன், விழாக்குழு உறுப்பினர் திரு எஸ்.ஏ. எம்.உசேன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் மற்றும்மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயந்தி வரவேற்புரை ஆற்றினார். கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு இரா.கிருபாகரன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு இர. ச. பண்டா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

—த.பி.



வேளாண்மை வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகள் பற்றிய சமூகப் பொருளாதார ஆய்வு ஒன்றைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கடந்த ஏப்ரல் மாதம் முதல் மேற்கொண்டது. வாஷிங்டனிலுள்ள அகில உலக உணவுக் கோட்பாடு ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து நடத்தப்படும் இவ்வாய்வுக்கு, அந்நிலையம் நமது வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ரூபாய் 2.54 இலட்சம் கொடுத்துள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட உள்ள இந்த ஆராய்ச்சி வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு மைய இயக்குநர் டாக்டர் எ. கந்தசாமி மேற்பார்வையில், பேராசிரியர் டாக்டர் சி. இராமசாமி தலைமையில் நடைபெறும்.

வேளாண்மை உற்பத்தி, விற்பனை மற்றும் பதனிடுதல் ஆகியவற்றை வியாபார நோக்குடைய தாக்குவதில் அடிப்படை வசதிகளின் தாக்கத்தை அளவிடவும், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு, வருமானம் மற்றும் செலவினங்களின் தன்மையை அளவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல; அடிப்படை வசதிகளைப் பெருக்குவதில் தனியார் துறைகளின் முதலீடு மேலும் மேலும் அரசுத் துறை முதலீட்டுடன் அதற்குள்ள பல்வேறு தொடர்புகளும் இந்த ஆய்வில் கண்டறியப்படும்.

இத்தகைய ஆய்வுகளின் மூலம் அடிப்படை வசதிகளுக்கும் மற்ற பொருளாதார நடவடிக்கைகளுக்கும் உள்ள தொடர்பின்படி வேளாண்மை வளர்ச்சிக்கு அடிகோலும் வகையில் அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டம் பல்கலைக் கழகத்தால் வகுக்கப்படும்.

இந்த ஆராய்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் அகில உலக உணவுக் கோட்பாடு ஆராய்ச்சி நிலையமும், சென்னைப் பல்கலைக் கழகமும் இணைந்து செயலாற்றுகின்றன.

இவ்வாறான இணைந்த செயலாக்க முறை, பெருமை மிக்க பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு இடையேயான ஆராய்ச்சிக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், உலகளாவிய வேளாண்மை ஆராய்ச்சியை உரிய முறையில் புரிந்து கொள்ளவும் வழிகோலும் எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சோ. ஜெயராஜ் கருத்துத் தெரிவித்துள்ளார்.


— வேளாண் தகவல் பணி மையம் கோவை.



கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற பதினான்காவது பட்டமளிப்பு விழாவில், மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கோ. சி. மணி ஆகியோர் பங்கேற்றனர்.



# அண்ணா சொன்ன கதை!



நமது அண்ணன் ஒரு கதை சொல்வார்.

எலியொன்று தன் மகளுக்கு உயர்ந்த இடத்தில் சம்பந்தம் செய்ய வேண்டுமென்று விரும்பியதாம். மிக உயர்ந்த இடத்து மாப்பிள்ளையாக யார் கிடைப்பார் என்று ஆகாயத்தை அண்ணாந்து நோக்கிச் சிந்தித்தது.

அதன் கண்களில் சூரியன் தெரிந்தான். உடனே சூரியனைப் பார்த்து ''கதிரவனே! கதிரவனே! என் மகள் ஒருத்தி கட்டழகி இருக்கின்றாள்; உலகத்தில் நீதான் பெரியவன். அவளை நீ எப்படியாவது மணந்துகொள்!'' என்று வேண்டியது.

சூரியன் சொன்னான் ''என்னைவிடப் பலசாலியாக மேகம் இருக்கிறது. அது சமயத்தில் என்னையே மறைத்து விடுகிறது. ஆகவே, நீ உன் மகளை மேகத்திற்குத் துணைவியாக்கு!'' என்று.

பிறகு, எலி மேகத்திடம் தன் விழைவினை வெளிப்படுத்தியது. மேகம் எலியின் கோரிக்கையை மறுத்துவிட்டது. ''என்னை வலிவுடையவன் என்று கருதாதே! என்னை இங்குமங்கும் துரத்தியடிக்கக் கூடிய காற்றுதான் என்னைவிடப் பலசாலி!'' என மேகம் உரைத்தது.

எலி காற்றை அணுகி, தன் மகளின் கழுத்தில் தாலியைக் கட்டுக என வேண்டியது. பெருமூச்சு விட்டவாறே காற்று தன் பலஹீனத்தை விளக்கியது:

''எழில்மிகு எலியே! என்னையா வீரன், தீரன் உலகிலே பெரியவன் என்று எண்ணுகிறாய்! தவறு தவறு! அதோ நிற்கிறது பார் நெடுஞ்சுவர்! அதனைத் தள்ளுவதற்கு மூன்று நாட்களாக நான் முயன்று பார்த்துத் தோற்றுவிட்டேன். ஆகவே என்னைவிடச் சுவர்தான் பெரியவன். அங்கே சென்று பேசிப்பார்'' என்று காற்று தட்டிக் கழித்தது.

எலி, சுவரிடம் ஓடிப்போய் ''நீதான் எல்லோரையும்விடப் பெரியவன். என் மகளைத் திருமணம் புரிந்து கொள்'' என்று விண்ணப்பம் செய்தது.

சுவர், கலகலவென்று சிரித்தது. ''எலியாரே! என்னைக் கிண்டலா செய்கிறீர்? என்னைவிடப் பெரியவன் யாருமில்லை என்று உனக்கு யார் சொன்னது? உன்னைப் போன்ற ஒரு எலி, என் உடம்பு முழுவதும் துளை போட்டிருப்பதைப் பார்! நான் என்னதான் காற்றைத் தடுக்குமளவுக்குக் கம்பீரமாக வளர்ந்து, உயர்ந்து நின்றாலும், உன் இனத்தைச் சேர்ந்த ஒரு எலிக்குப் பதில் சொல்ல முடியவில்லையே! எனவே என்னைவிடப் பலசாலி எலிதான். நீ உன் பெண்ணுக்கு எலி வீட்டிலேயே மாப்பிள்ளை பார்ப்பது நல்லது'' என்று விரிவுரையொன்றை நிகழ்த்தியது நெடுஞ்சுவர்!

எலி, சிந்திக்கத் தொடங்கியது. நம்மைவிடப் பெரியது பூனை! அதுவோ நமக்குப் பகை! ஆகவே, எலிகளுக்குள்ளேயே சம்பந்தம் செய்து கொள்வதே சரியான முடிவு எனத் தனக்குள்ளே கூறிக் கொண்டது. எலிக்கும் எலிக்கும் திருமணம் நடந்தது!


இதுதான் கதை.

எங்கெங்கே யார் யார் உயர்ந்தோர்-சிறந்தோர் சீமான்கள் பூமான்கள் இருந்தாலும், எலிக்குக் கிடைத்த சம்பந்தம் எலிதான் என்பதைப் போல், எங்களுக்கு நீங்கள்தான் கிடைத்தீர்கள்; உங்களுக்கு நாங்கள் தான் கிடைத்திருக்கிறோம்!

-முதல்வர் கலைஞர்

[கலைஞர் கடிதம்-18-3-76]

# தஞ்சையில் உலகக் கலாச்சாரப் பாரம்பரிய நாள் விழா '99'



உலகக் கலாச்சாரப் பாரம்பரிய நாள் விழா, தஞ்சைப் பெரிய கோயிலில் (18.4.89) சிறப்புற நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். மச்சேந்திரநாதன், 'இந்தியாவிலுள்ள நினைவு போற்றும் சின்னங்கள்' என்ற செய்தி மடலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

"கலாச்சாரப் பாரம்பரியங்களை நமது முன்னோர்களிடமிருந்து பெற்றோம் என்பதைவிட, கலாச்சாரப் பாரம்பரியங்களைக் கடனாகப் பெற்றோம் என்பதே உண்மையாகும். நமக்குப் பின்னால் வரும் சந்ததியர்களுக்குப் புராதனச் சின்னங்கள் புராதனச் சின்னங்களாகவே போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்கள். பெருமைமிக்க இப்புராதனச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாத்துச் சீர்கேடு அடையாமல் இளந்தலைமுறையினருக்கு அளிக்க வேண்டும். அப்போது தான் நமது கலாச்சாரப் பண்புகளை நம் சந்ததியினர் உணர முடியும். மற்ற கலாச்சாரங்களைவிட நமது கலாச்சாரம் எந்த விதத்திலும் குறைந்ததல்ல. தஞ்சைப் பெரிய கோயிலைப் போற்றிப் பாதுகாக்க உதவுவதாக யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது பாராட்டுதற்குரியதாகும். இது நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது," என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அப்போது குறிப்பிட்டார்.

விழாவில்-நகர்மன்றத் தலைவர் திரு ஏ.வி.பதி பேசும்போது "தஞ்சாவூர் பெரிய கோயிலுக்கு நகர மன்றத்தின் சார்பாக இலவசமாகக் குடிநீர் வழங்கிடத் தயாராக உள்ளோம்" என்று கூறினார். சிவகங்கைப் பூங்கா, சிவகங்கைக் குளம், பெரிய கோயில் உள்ளிட்ட ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலுள்ள சுற்றுலாத் திட்டத்தினை உடன் மேற்கொள்ள வேண்டுமென அரசைக் கேட்டுக் கொண்டார்.



தொல்பொருள் ஆய்வுத் துறை கண்காணிப்பாளர் திரு ராமமூர்த்தி விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார். நிகழ்ச்சியில் பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் திரு. எம்.எஸ். கோவிந்தசாமி மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறைப் பேராசிரியர் திரு இராசு முதலானோர் பேசினார்கள். தொல்பொருள் ஆய்வுத் துறையினரின் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மச்சேந்திரநாதன், திறந்து வைத்தார்.

—ஜி.டி.மோகன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.

## ஊரக வளர்ச்சிப் பணிகள்.

திருவை மாவட்டத்தில் உள்ள 34 ஊராட்சி ஒன்றியங்களில் 1988-89-ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், மற்றும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவைகளின் கீழ், ஒதுக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் அக்டோபர்'88 இறுதியிலேயே முழுமையாக முடித்த சீர்காழி, திருத்துறைப்பூண்டி மற்றும் திருவாரூர் ஆகிய மூன்று ஒன்றியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு தஞ்சை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது.

சீர்காழி, ஊராட்சி, ஒன்றியத்திற்கு மேற்படி திட்டங்களின் கீழ் 160 ஆதி திராவிடர் குடியிருப்புகள், 5 சமுதாயக் கூடங்கள் மற்றும் வாய்க்கால்கள் தூர் எடுத்தல், ஆகிய பணிகளுக்கு கூடுதல் மதிப்பீடு ரூ. 21.98 இலட்சங்கள் அளவில் முதலில் ஒதுக்கப்பட்டது. இந்தப் பணிகள் அனைத்தும் அக்டோபர் மாத இறுதியிலேயே முழுமையாகச் செய்து முடிக்கப்பட்டன.

இதன் காரணமாக இந்த ஒன்றியத்திற்குக் கூடுதலாக ரூ. 2.40 இலட்சம், நிதி ஒதுக்கீடு, அளிக்கப்பட்டு வாணகிரி ஊராட்சியில் வாணகிரி குப்பத்தில் 20 ஆதிதிராவிடர் குடியிருப்புகளும் மற்றும், அதனைச் சார்ந்த அடிப்படை வசதிகளான சமுதாயக்கூடம், சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் செய்யவும் அனுமதிக்கப்பட்டன. இந்தப் பணிகள் அனைத்தும் ஜனவரி'89 முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டு மார்ச் முதல் வாரத்தில் முழுமையாக முடிக்கப்பட்டன.

[redacted]

வைகை அணையிலிருந்து மதுரை மாநகர் வரை குழாய்கள் மூலமாகக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உலக வங்கி உதவியுடன் ரூ. 3,756.24 இலட்சம் அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

வைகை அணையிலிருந்து மதுரை மாநகர் வரை குழாய்கள் பதிப்பதற்காக ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் குழாய்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. 1000 மீட்டரில் குழாய்கள் பதிப்பதற்கான ஆயத்த வேலைகள் இப்போது நடைபெற்று வருகின்றன. 141 ஏக்கர் நிலத்திற்கு நிலம் கையகப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மதுரை மாநகராட்சியில் 2 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

போர்க்கால நடவடிக்கையில் இத்திட்டம் செயல்பட்டு மதுரையில் குடிநீர் பற்றாக்குறை போக்கிடப் பெரிதும் முயலும் தமிழக அரசை, மதுரைவாழ் மக்கள் வாழ்த்தி மகிழ்கிறார்கள்.



இஸ்லாமிய சரித்திரம்:

# கங்கையி-லிருந்து எழுதக் கூடாது: காவிரியிலிருந்து எழுதப்பட வேண்டும்

-மாண்புமிகு சட்ட அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா-

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் போதித்த அறிவுரைகளை அனைவரும் பின்பற்றுவோமேயானால் நாட்டில் அமைதி, சுபிட்சம் தழைத்தோங்கும்.

இன்றைக்கு நம் சமுதாயத்தைப் பற்றி சிந்திக்கக் கேட்டுக் கொள்கிறேன். வரதட்சணைக் கொடுமை தலைவிரித்தாடுகிறது. இதனால், ஏழைப் பெண்களின் வாழ்க்கை திக்கில்லா காட்டில் விடப்பட்டதுபோல் உள்ளது.

பெண்களின் மேன்மைக்கும் உரிமைக்கும் வாழ்வுக்கும் உயரிடம் தந்த நபிகளாரின் பிறந்த நாள் விழாவிலே-ஏழைப் பெண்கள் கரையேற முடியாது தவிக்கும் நிலையை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும். வரதட்சணைக் கொடுமை அறவே நீங்கி, ஷரீஅத்தைப் பின்பற்றி மஹர் கொடுத்து திருமணங்கள் நடைபெற ஒவ்வொருவரும் உறுதி பூணும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு முஸ்லிம்களின் மீது தவறான பிரச்சாரம் நடக்கிறது. இந்திய சரித்திரம் திருத்தி எழுதப்படவேண்டும். இஸ்லாமியமார்க்கம் வாள்கொண்டு பரப்பப்பட்டதாக இன்னும் தவறான சரித்திரம் சொல்லப்படுகிறது.

யாரையும் கட்டாயப்படுத்தி நம் மார்க்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற அவசியம் நமக்கில்லை. தேவையும் இல்லை. ஆனால் தொடர்ந்து தவறான பிரச்சாரம் செய்யப்படுகிறது.

இன்றைக்கு சரித்திரம்- கங்கையிலிருந்து எழுதக் கூடாது; காவிரியிலிருந்து எழுதப்படவேண்டும். தமிழகம் தொன்மையான நாகரிகம் கொண்டது.

இஸ்லாம், இந்தியாவில் பரவக் காரணம் வடக்கிலிருந்து முகம்மது காஸிம் படையெடுத்து வந்தபின் என்று தவறான கருத்து நிலவுகிறது. ஆனால், அதற்கு முந்தியே இஸ்லாம்-நபிகள் நாயகம் (சல்) அவர்கள் காலத்திலேயே தென்னகத்திற்கு வந்துவிட்டது.

கேரளக் கடற்கரைக்கு, நபிகள் நாயகம் (சல்) கால அரபு வணிகர்களால் இஸ்லாம் இறக்குமதி செய்யப்பட்டுவிட்டது.

ஆகவே தான் சொல்லுகிறேன், இஸ்லாமியர்களின் சரித்திரம் கங்கையிலிருந்து எழுதப்படக் கூடாது; காவிரியிலிருந்து எழுதப்படவேண்டுமென்று.

இன்று ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது முஸ்லீம்கள் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என்று பார்த்தால் மிகமிகப் பின்தங்கி இருக்கிறார்கள்.

நமக்குள் ஒற்றுமை இல்லை. நம் உரிமையைத் தட்டிக் கேட்பவர்கள் உருவாகவேண்டும். தீனையும் துனியாவையும் ஒரு சேர வெல்ல நம் மார்க்கம் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது.

ஆன்மீகக் கல்வியிலும் விஞ்ஞானப் படிப்பிலும் நம் இளைஞர்கள் பங்கு பெற்றாக வேண்டும். போட்டிமிகுந்த இந்த உலகத்திலே அப்போது தான் நம் சமுதாயம் ஈடுகொடுக்க முடியும்.

அரபு நாடுகளை நம்பிக்கொண்டு வேலை தேடிச் சென்ற நமது சகோதரர்களுக்கு அங்கேயும் வேலை இல்லாமல், காலி செய்து கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் தொழில், வியாபார முன்னேற்றத்தில் புதிய பார்வை அவசியமாகிறது.

வக்ஃப் வாரிய ஊழியர்களுக்கு அரசு ஆதரவு உண்டு. நிதிநெருக்கடி, எந்த ஒரு இனத்துக்கும் நிதி வழங்க மனமிருந்தும் வழியில்லாமல் இருக்கிறது. ஒரு நாற்காலி வாங்க வேண்டுமென்றால்கூட யோசிக்க வேண்டிய நிலையில் நாங்கள் ஆட்சியில் அமர்த்தப்பட்டுள்ளோம். ஆனாலும் எல்லோருக்கும் நன்மைகள் செய்யமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

நம்பிக்கைதான் வாழ்க்கையின் அடிப்படை. ஆண்டவன் ஒருவன் என்று நம்பி, அவன் துணை என்றும் உண்டு என்று நம்பி வாழ்பவர்கள் தாம் முஸ்லீம்கள்.

ஆண்டவன் மீது நம்பிக்கை வைத்து நம்மால் இயன்றவரை சமுதாயத்திற்காகப் பாடுபடக் கடமைப்பட்டுள்ளேன்.

(வக்ஃப் வாரியத்தில் நடந்த மீலாத் விழாவில் அமைச்சர் அவர்கள் பேச்சின் ஒரு பகுதி)



மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் (3-5-'89) 'ஹஜ் வழி காட்டி' 1989 என்ற நூலினை சென்னையில் வெளியிட்டார்.

# பாவேந்தர் பிறந்த நாள்







பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 99-வது பிறந்தநாள் விழா சென்னை கலைவாணர் அரங்கில் 29-4-'89 அன்று மாலையில் சீருடனும் சிறப்புடனும் நடைபெற்றது.

திருப்பனந்தாள் பாலசுப்பிரமணியம் குழுவினரின் நாயன இசைக்குப் பின்னர், கலைஞர் எழுதிய 'சங்கத்தமிழ்' நாட்டிய நாடகத்தை வழுவூர் இரா. சாம்ராஜ் குழுவினர் மிகச் சிறப்பாக நடத்தினர்.

நாட்டியக் குழுவினர் பாவம் ததும்ப நாட்டியம் ஆடி மக்களை மகிழ்வித்தனர். போர்க்களத்தில் இறந்த மகனைத்தேடும் புறநானூற்று வீரத்தாயாக நடித்த பெண்மணி முதியவள் வேடம் தாங்கி-முதுகை வளைத்தபடி, நாட்டியம் ஆடி-சபையினரின் கைதட்டலை அமோகமாகப் பெற்றார்.

'மணப்பதற்கு மறுப்பெதற்குச
சொன்னாள்?'
'ஆயமகன் குழல் ஊதினான்-அந்த
ஆயமகள் குழைந்தாடினாள்.'
'பல்லியின் சொல்லுக்கு நிச்சயம்
பலன் உண்டு'

என்ற பல்லவிகளுடன் தொடங்கும் பாடல்களைச் சபையினர் தாளம் போட்டு வரவேற்றனர். ஒரு சிலர் பாடவும் செய்தனர்.

பின்னர், விழா நிகழ்ச்சி தொடக்கமாகியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்.

பாவேந்தரின் திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

செய்தி சுற்றுலாத் துறைச் செயலாளர் (பொறுப்பு) திரு வே. சங்கரசுப்பையன் இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தொடக்க உரை ஆற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆஸ்கார் சி. நிக்லி, திரு. என். நஞ்சப்பன், திரு. பொன். விஜயராகவன், திரு எம். அப்துல் லத்தீப், திரு ஒய். வெங்கடேச தீட்சிதர், திரு கோவிந்த ராஜ திரு. பி. எச். பாண்டியன், திரு. குமரிஅனந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். கவிஞர் முடியரசன், கவிஞர் பொன்னிவளவன், கவிஞர் அப்துர் ரகுமான் ஆகியோருக்குப் பாவேந்தர் விருதுகளையும், கவிஞர் கா.மு. ஷெரீப், டாக்டர் சுப்புரெட்டியார், மணவை முஸ்தபா ஆகியோருக்கு திரு. வி.க. விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தார்.

பாவேந்தர் விருது பெற்ற கவிஞர்களின் சார்பில் கவிஞர் அப்துர் ரகுமான் ஏற்புரை நல்கினார்.

திரு.வி.க. விருது பெற்ற எழுத்தாளர்களின் சார்பில் டாக்டர் சுப்புரெட்டியார் ஏற்புரை நல்கினார்.

இந்தச் சமயத்தில், விழாவுக்கு வருகை புரிந்திருந்த பாவேந்தரின் மூத்தமகள் சரசுவதி அவர்கள், மேடைக்குச் சென்று முதல்வர் அவர்களிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

'பாவேந்தரின் நூல்களை நாட்டுடைமையாக்குவதற்கு நான் மனப்பூர்வமாகச் சம்மதம் தெரிவிக்கிறேன்' என்று அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்து இருந்தார்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப்பேருரை நிகழ்த்தினார்.

பாவேந்தரின் கவிதைத் திறனையும் அவருடன் தமக்கிருந்த நெருங்கிய உறவையும் குறித்துப் பேருரை நிகழ்த்திய முதல்வர் பாவேந்தர் தொடர்பான பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறினார்.

'நானும் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் பாவேந்தரின் மகன் மன்னர்-மன்னனுடனும் மற்றவர்களுடனும் கலந்து பேசி, விரைவில் பாவேந்தரின் நூல்களை நாட்டுடைமையாக்க ஆவன செய்வோம்' என்று குறிப்பிட்டார் முதல்வர்.

தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.







# புதுமைப் பண் பாடிய புரட்சிக் கவிஞர்

பராசக்தி படத்தில் பாரதிதாசன் அவர்களுடைய "வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு" என்ற பாடலை முதல் காட்சியிலே இடம் பெறச் செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம். ஏ.வி.எம். மெய்யப்பன் அவர்களும், நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அவர்களும், கிருஷ்ணன் பஞ்சு அவர்களும், நானும் விரும்பி, புரட்சிக் கவிஞரைச் சந்தித்து இதைச் சொல்ல வேண்டுமென்று புதுவைக்குச் சென்றேன். "என்னுடைய பாடலை ஒரு படத்திலே வைத்து அது தமிழ்நாடு முழுவதும் முழங்குவதாக இருந்தால் எனக்குப் பணமே வேண்டாம் போ-பாடலை வைத்துக் கொள்ளச் சொல்" என்று அன்றைக்குப் புரட்சிக்கவிஞர் அறிவித்தார்.

புரட்சிக்கவிஞரின் நூறாவது ஆண்டு விழாவினை இந்த அரசு வெகு சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று சொன்னார்கள். 100-வது ஆண்டுவிழா சீரும் சிறப்போடும் கொண்டாடப்படும். ஓராண்டுக்காலம் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படும்.

அவரது 100-வது பிறந்தநாள் விழா தொடங்குகின்ற நேரத்திலே புரட்சிக்கவிஞரின் நூல்கள் அரசுடைமையாகிவிட்டன என்ற நல்ல செய்தியை உங்களுக்கு நான் தெரிவிப்பேன்

-மாண்புமிகு முதல்வர் கலைஞர்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன். கடந்த 60 ஆண்டுக்காலக் கவிஞர்கள் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் பாரதியார் தேசியக் கவியாகத் திகழ்ந்திருக்கிறார். பாரதிதாசன் தமிழ் இன மானக் கவிஞராக விளங்கியிருக்கிறார். பாரதியார் எடுத்தார், பாரதிதாசன் முடித்தார் என்று சொல்லும் அளவுக்கு நிலைமை இருந்தது.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை-எழுச்சியை ஊட்டியவர் பாரதிதாசன். வீழ்ச்சியுற்ற மக்கள் எழுச்சிபெறச் செய்தவர் பாவேந்தர்.

-மாண்புமிகு கல்வி அமைச்சர்

பேராசிரியர் திரு க. அன்பழகன்

"பாவேந்தர் பாரதிதாசன், தமது சிந்தனையை-எண்ணத்தை-தாழ்ந்த தமிழகம் உயர்ந்திட வேண்டும் என்ற முயற்சிக்குச் செலவிட்டார். தமிழ்மொழி உலகப் பெருமை பெறவேண்டும்-கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும் என்பதற்காக ஆயுள் முழுதும் பாடுபட்டார். அவரது கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பாவேந்தரின் கொள்கைகளுக்குச் சட்ட வடிவம் தந்து கொண்டிருக்கிறார்.

-மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

திரு. பொன். முத்துராமலிங்கம்

உழைப்பாளர்களால்தான் உலகம் உயரும். அந்த நன்னாள்தான் பொன்னாள் என்று கூறினார் பாவேந்தர். குறுகிய வட்டத்திற்குள் அவர் நின்று கொண்டிருக்கவில்லை. சர்வ தேச ரீதியில்-உலகத் தொழிலாளர்களுக்குக் கைகொடுப்பவராகத் திகழ்ந்தார் பாவேந்தர்.

-திரு. என். நஞ்சப்பன், எம்.எல்.ஏ.

பாவேந்தரின் பிறந்தநாளை மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கும் தமிழக அரசு வரலாற்றில் நிலைத்து நிற்பது உறுதி.

-திரு. ஆஸ்கார் நிக்ஸி, எம்.எல்.ஏ.



புதுவை சுப்புரத்தினம் என்றும், பின்னர் தமிழ்கூறும் நல்லுலகில் பாரதிதாசன் என்றும் வழங்கப்பெற்ற பாவேந்தர் பாரதிதாசன், 'விலை போட்டு வாங்கவா முடியும்' என்ற வரியின் மூலம் கல்வியை மிகவும் வலியுறுத்துகிறார்.

-திரு. பொன். விஜயராகவன், எம்.எல்.ஏ.

தமிழுக்குப் பாடுபட்டவர் பாவேந்தர் பாரதிதாசன். அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை நாம் மறக்கக்கூடாது.

-திரு. வெங்கடேச தீட்சிதர் எம்.எல்.ஏ.



பாவேந்தர் பாரதிதாசன், தலைசிறந்த கவிஞர். சமுதாயச்சிற்பி. தேசியவாதி, விடுதலைப் போர்க் காலத்தில் கதர்த்துணியை அவர் விற்றிருக்கிறார். அதன் காரணமாக பிரெஞ்சு அரசாங்கத்தினால் 1 1/2 ஆண்டு வேலை நீக்கம் செய்யப் பெற்றிருந்தார். சமதர்மக் கருத்துகளைப் பல்லாண்டுகளுக்கு முன்பே துணிந்து பாடினார்.

-திரு. கோவிந்தராஜ் எம்.எல்.ஏ.

தமிழர்தம் பெருமையைத் தரணிக்கே எடுத்துச் சொல்லிய மாபெரும் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்.

-திரு. எம். அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ.



பாவேந்தர் பாரதிதாசன் இசையால், மொழியால், முயற்சியால் தமிழர்களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கித் தமிழின் பெருமையை உலகமெல்லாம் பரவச் செய்து நமது உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றிருக்கிறார். சமுதாயத்திற்கு உருப்படியான திட்டங்களைத் தீட்டி, நாட்டுக்கு நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்பதே இந்த நன்னாளில் நாம் எடுக்கும் உறுதியுரை.

-திரு. பி. எச். பாண்டியன். எம்.எல். ஏ.

ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் சந்தித்த நிகழ்ச்சி யுக சந்தியாகும். அதைப் போலவே பாரதியும் பாரதிதாசனும் சந்தித்துக் கொண்டதும் ஒரு யுக சந்தியாகும்.



நாடு அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டும். விடுதலை பெறவேண்டும் என விரும்பினார் பாரதி. சமுதாயம், கேடுகளிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று பாடுபட்டார் பாரதிதாசன்.

-திரு. குமரி அனந்தன், எம்.எல். ஏ.

"புதுமைப் பண்பாடிய புதுவைக்குயில், போர்முரசு கொட்டிய புரட்சிக்கவிஞர்-சமுதாயக் கோணல்களைச் சரி செய்வதற்காக-சீர்திருத்தக் கருத்துக்களைப் பரவச் செய்த கவிஞர். அவர் பேசாத-பாடாத பொருளே இல்லை! தமிழ், தமிழினம், தமிழிசை, பெண்கள், சமுதாயம், பண்பாடு, காதல் இப்படி எத்தனையோ பொருள்கள் குறித்து அவர் பாடிய கவிதைகள் காலத்தைக் கடந்து நிற்கும் திறன் பெற்றவை.

-திரு. வே. சங்கரசுப்பையன்
செயலாளர் (பொறுப்பு)
செய்தி சுற்றுலாத்துறை.

(பாவேந்தர் பிறந்த நாள் விழாச் சொற்பொழிவிலிருந்து)



# நெடுங்கடல்

## கவிஞர் மு. அண்ணாமலை

நெடுங்கடல் விரிவே; நெஞ்ச
நினைவிற்கோர் எடுத்துக் காட்டே.
தொடுத்தெழும் பாவல் லோர்கள்
தொன்றுதொட் டுன்னைப் பாடி
எடுத்தனர் பெருமை; நீயோ
என்னையும் பாடச் சொன்னாய்!
கொடுத்தனை; தொடுத்தேன்; உன்றன்
கூத்தெலாம் கவிதை யன்றோ!

பற்றுடன் ஓடி யாடும்
பயல்கள்போல் கூச்ச லிட்டாய்;
வெற்றிகொள் பட்டா ளத்து
வீரர்போல் கூத்த டிப்பாய்!
சுற்றிடும் செக்கு மாட்டின்
சுளிவாயின் நுரைபா ரென்பாய்!
வற்றிடா நீர்ப்ப ரப்பே
வர்ணிப்ப தெவ்வா றாமோ?

கடனத்தைக் காட்டும் பெண்போல்
நாட்டியம் ஆடிக் காட்டி
விடங்காட்டும் பாம்பாய்ச் சீறி
வேடன்கை வில்லாய் மாறி
மடக்கென்று வெறி பிடித்த
மருக்கொள்ளி தனைப்போல் ஆடி
நடைமின்றி விழ்வாய்; மீள்வாய்;
நடிகவேள் ஆவாய் வாழ்க!

அலைமிகுக் தாக்கும் போதும்
ஆழத்தை நினைக்கும் போதும்
தலைசுற்றிக் குலை நடுங்கும்
உனக்கேற்பத் தனைத் திருத்தி
மலைபோன்ற துன்பத் திற்கும்
மலையாத மனிதன் தானே
தலையான முத்தைக் கண்டான்
தனிப்பயன் தெரிந்து கொண்டான்!

செம்படச் சிறுவன் வந்து
செகமாளும் வேந்தன் போல
கம்போடும் கட்டை யோடும்
கரையோரம் நின்றி ருந்தான்;
வெம்பியே ஓடித் தாவி
மேவிடும் அலைக்கூட் டத்தை
அம்புவி நடுங்க வந்த
அரிமாவின் கூட்ட மென்றேன்!

அவனதை மறுத்துச் சொன்னான்
அலைக்கூட்டம் குதிரை என்றான்;
இவர்ந்தேறித் திரிவோ ரெல்லாம்
எம்போலும் மன்ன ரென்றான்;
தவழ்ந்தாடும் தொட்டில் என்றான்
தாய்மடி தானே என்றான்;
உவந்தவன் மகிழ்வைக் கண்டான்
ஒடிந்தவன் பயந்து செத்தான்!

('அன்புப் பண்ணை' வெளியிட்ட 'தாமரைக் குமரி' என்னும் நூலிலிருந்து)

# முன்பனிக் காலம்



இலக்கியத்தில் முன்பனிக்காலம் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. முன்பனிக் காலத்தில் தோன்றும் இயற்கைச் செழுமை, காய், கனித்தோற்றம், மக்களின் மெய்ப்பாட்டு உணர்ச்சிகள், சீராடல் முறை, பருகும் பொருள்கள், உண்ணும் உணவுகள் ஆகிய பற்பல செய்திகள் இக்கட்டுரையில் இடம்பெற்று இனிய விருந்தை நமக்கு வழங்குகின்றன.

டாக்டர் அ. சிதம்பரநாதன்

தமிழில் காலங்களைப் பெரும்பொழுது என்றும், சிறுபொழுது என்றும் பிரிப்பர். ஆண்டினை ஆறு பகுதியாக்கி, ஒவ்வொரு பகுதியையும ஒவ்வொரு பெரும்பொழுது என்பர். நாளினை ஆறு பிரிவாக்கி ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு சிறுபொழுது என்பர். பெரும்பொழுதுகளாவன; கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப்படுபவை. இவற்றுள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு மாத அளவு உடையது. முன்பனிக் காலமென்பது மார்கழி, தை மாதங்களின் காலமாகும்.

மழை பெய்யும் பருவம் கார்காலம் எனில், குளிர்காற்று வீசும் பருவம் கூதிர்காலம் எனின், சாயுங் காலத்திலிருந்து நள்ளிரவு வரையில் பனி துளிக்கின்ற பருவம் முன்பனிக்காலம் எனப்படும். மார்கழி, தை மாதங்களில், இரவின் முற்பகுதியில் பனி மிகுகின்றதை நாம் இன்றும் கண்ணாரக் காண்கிறோம். இரவு ஒன்பது அல்லது பத்து மணிக்குப் பார்த்தால், புகை சூழ்ந்திருக்கிறது போல ஒரு தோற்றங் காணப்படும். புள்ளி புள்ளியாகச் சிறு பனித் திவலைகள் விழுந்து பூக்களை நிரப்பிக் கொண்டிருக்கிற காட்சியை இக்காலத்தே பார்க்கலாம். இதனைக் கண்ட கழார்க் கீரனெயிற்றியார் என்னும் புலவர்.

''புகையுறப் புள்ளி நுண்துவலை பூவகம் நிறைய''

என அகநானூற்றுப் பாடல் ஒன்றில் மொழிந்துள்ளார். அவரே இன்னொரு பாட்டில், பஞ்சினுடைய துய்யைப் போலப் பனி தூவிச் செல்கின்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார். சிறு திவலைகள் முன்பனிக் காலத்திலே பொழியப்படுமென்று நப்பூதனார் என்பாரால் முல்லைப் பாட்டிலும் பேசப்பட்டுள்ளது. ''எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களில்'' என்றதைக் காண்க. களாவின் புதரிலுள்ள முன்னிடத்தே அழகிய முத்துக் கோத்தால் ஒப்பப் பனித்துளிகள் சிந்திக் கிடக்கின்ற காட்சியை நுகர்ந்த புலவர் ஒருவர் பாண்டிக் கோவையில்

''களியார் களவின் அகமுட் கதிர்முத்தங் கோப்பன போற்
பனியார் சிதர்துளி மேற்கொண்டு நிற்கும் பருவங்கவே.'

என உரைத்தார். இன்றும் ஒருவர் விரும்பினால் இக் காட்சியைக் கண்டு களிக்கக்கூடும். அவர் அதற்காக இரவில் மரஞ் செடி கொடிகளிடஞ் செல்ல வேண்டியதில்லை. அதிகாலையில் எழுந்து சென்று பார்த்தாற் போதும். சில இலைகளில் ஓரத்தே இரண்டு பக்கங்களிலும் வெள்ளிய முத்துக்களடுக்கி வைத்தாற் போன்றுள்ள அழகிய காட்சியை நானும் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அக்காலை, இப் புலவர் சொல்லிய சொல்லின் உண்மை வெளிப்பட்டது. இவரைப் போன்று இயற்கை எழிலைக் கண்டு மகிழ்ந்து வாழ்ந்த புலவர்கள் பண்டைத் தமிழ் நாட்டிற் பலர் இருந்தனர். அவர்களால் இயற்றப்பட்டுச் சங்கச் செய்யுட்கள் என்ற பெயரால் வழங்குகின்ற பாட்டுக்களில் இயற்கை நலம் மிளிருகின்றது.

இக்காலத்து வாழ்கின்றவருட் பலர்க்குத் தூய வெள்ளிய மஸ்லின் அல்லது ஜியார்ஜட்டு போன்ற பனி மாசு படிந்திருக்கிறது என்று கூறினால் அது விளங்கும். அக் காலத்திலோ பனி தவழ்வதுபோல வெள்ளை ஆடை அசைந்தது என்றால் நன்றாக விளங்கும். அதனாலே, ''பனி தவிழ்பவை போல் நுண்டுகில் நுடங்க'' என்று உருத்திரங் கண்ணனார் என்னும் பழம் புலவர் பெரும்பாணாற்றுப் படையிற் பாடினார். வணிகர் குலத்து மகளிர் சிலர் மயிலைப் போல இயலிச் சிலம்புகள் ஒலிக்கும்படி மாடத்தின் மீது நாற்பந்தாடுகின்ற செய்தியைத் தெரிவிக்கின்ற இடத்திலே அவர் இங்ஙனஞ் செப்பினார். அம்மகளிர் பசிய மணிகள் கோத்த வடங்களைத் தரித்த இடையினை உடையர். அவ் விடைகளில் மெல்லிய ஆடையை அவர்கள் உடுத்து உள்ளனர். பந்தாடும்பொழுது அவ் ஆடை அசைவது பனி தவழ்வது போல உள்ளது என்றும், அவர்களுடைய அரைகள் கொன்றை மரத்தின் கொம்புபோல உள்ளது என்றும் அப் புலவர் கருதினார். அதனால்,

''கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்காழ் அரையின் நுண்டுகில் நுடங்க''

என்று கூறினார்.

முன்பனிக் காலத்தில் கருவிளையும் கரும்பும் பூக்கின்றன. பிடவும் பகன்றையும் பீனி விழுகின்றன. தோன்றியும் கொடலும் பூத்துத் தோன்றுகின்றன. பயறும் உளுந்தும் பழுத்துக் காயைச் சிந்துகின்றன. அவரை முகை யவிழ்கின்றன. இவற்றை எல்லாம் பழந்தமிழ்ப் புலவர் கண்டறிந்த தத்தம் பாடல்களில் ஆங்காங்கே முன்பனிக் காலத்திற்கு உரியனவாகச் சொல்லி இருப்பது பாராட்டத் தக்கது. அவைபற்றிய செய்திகளை அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை முதலான பண்டைத் தமிழிலக்கியங்களிற் பரக்கக் காணலாம். புலவர் சிலர் இப் பூக்களைத் துணையாக வைத்துக்கொண்டு பிறிதொரு கருத்தைக் குறிப்பாகத் தெரிவிப்பதுண்டு. அவ்வாறு அமைந்த பாட்டு ஒன்றைப் பார்ப்போம்.

தலைவன் பிரிந்திருக்கிறான். அவன் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற முன்பனிக் காலம் வந்துவிட்டது. அவன் விரைவில் வந்து விடுவான் என்ற தோழி தலைவிக்கு வற்புறுத்திச் சொல்கிறாள். அவ் வேளையில், தலைவி குறிப்பாகச் சொல்வதைக் கவனிப்போம். ''மலைப் பக்கத்திலேயுள்ள தினைப் புலத்தில் குறவனுடைய சிறிய தினையை அரிந்த மறுகாலிடத்தில் அவரைக்கொடி பூப்பதாகிய முன்பனிக் காலத்தில் வராத என் கணவர், முன்னெல்லாம் அழுத கண்ணீர் துடைத்தவர் இப்பொழுது வரக் காணேனே, எத்தன்மையை உடையராயினாரோ'' என்று தலைவி கூறியது போலக் குறுந்தொகையில் ஒரு பாட்டு உண்டு.

''யாரா குவர்கொல் தோழி! சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி யச்சிரம் வாரா தோரே''

எனக் கடுவன்மள்ளனார் பாடியது அப் பாட்டு. இதில் என்ன குறிப்பினால் யாது அறியப்படுகிறது? பிரிந்து சென்ற கணவன் முன்பு மனைவியிடத்தில் இன்பம் பெற்றவாறே மீண்டும் வந்து இன்பம் பெறத் தக்கவன் என்பது தினையின் மறுகாலை பற்றிய பேச்சால் கிடைக்கப் பெறுகிறது. ஏதோ ஒரு செயலைச் செய்துமுடிக்கும் பொருட்டுப் பிரிந்து சென்றுள்ள அவன் அச் செயலை முடித்து விட்டாற் பெறும் இன்பத்தோடு மனைவி மாட்டுப் பெறும் இன்பத்தையும் எய்தற்பாலன் என்பது அவரைக்கொடி பூக்கின்ற மறுகால் தினையைப் பற்றிய பேச்சால் கிடைக்கப் பெறுகிறது. எனவே,

"சிறுதினை மறுகால் கொழுங்கொடி அவரைபூக்கும்
அரும்பனி யச்சிரம்''

என்பதன்கண் உள்ள குறிப்புப் பொருள்அறியப்படும்.



இனி, இப் பருவத்தே குளிரினால் மக்கள் நடுங்குவதும், போர்வையை நாடுதலும், நெருப்பின் பக்கத்தே இருக்கவிரும்புதலும் இயல்பு என அறிவோம். இவ்வியல்புகளை அறிந்து பழந்தமிழ்ப் புலவர் முன்பனிச் செய்திகளாக அவற்றைக் குறித்து வைத்திருப்பது கேட்டு மகிழ்தற்குரிய செய்தியாம். ஆசிரியர் நல்லந்துவனார் பாடிய பரிபாடற் பாட்டொன்றில் மார்கழி மாதத்தைப் பற்றிப் பேசுகின்றவர்,

''பனிப்படு பைதல் விதலைப் பருவத்து''

என்று கூறினார். விதலைப் பருவம் என்றால் நடுக்கத்தைச் செய்யுங் காலம் என்று பொருள். நடுக்கமுறும் மக்கள் போர்வையை நாடுதல் கண்கூடு. படுக்கைக்குப் போகுங்கால் கம்பளங்களை எடுத்துப் பலர் போர்த்திக் கொள்வார்கள். இஃது இயல்பு. இவ் வியல்பினை அறிந்த திருத்தக்கதேவர் மக்கள் எலியின் உரோமத்தால் ஆகிய போர்வையை இக்காலத்தே விரும்பிப் போர்த்துக் கொண்டனர் என்று சொன்னார்.

''கொங்கு விம்முபூங் கோதை மாதரார்
பங்க யப்பகைப் பருவம் வந்தென
எங்கு மில்லன எலிமயிர்த்தொழிற்
பொங்கு பூம்புகைப் போர்வை மேயினார்''

என்று கூறினார். கம்பளிப் போர்வை இல்லாதவர், துணிப் போர்வைதானும் இல்லாதவர் என்செய்வார்? தத்தம் கையையே போர்வையென நினைத்துக் கொண்டு கட்டிக் கொள்வர் அல்லரோ? அவரைப் போலவே, சேர மன்னனைக் கடும் பனியிற் காணச் சென்ற ஒருத்தியின் மனம் கையே போர்வையாக வாசலில் நின்றதுவோ என்றவாறு அமைத்துப் பாடப் பட்ட பாடல் ஒன்று உள்ளது. அந்த முத்தொள்ளாயிரச் செய்யுளை நோக்குவோம்:

''கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொல் தோழி-நெடுஞ்சினவேல்
ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் நெஞ்சு''.

இடையர்கள் காட்டிடத்தே பனி மிகுதலால் தீக்கடை கோலின் உதவியால் சிறுதீயைஉண்டாக்கிக் குளிர் காயுஞ் செய்தியை உறையூர் முது கூத்தனார் என்னும் புலவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு சிற்றரசன் தன்பால் இல்லாததையும் உண்டாக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதற்கு உவமையாக, இல்லாத சிறு தீயை உண்டாக்கும் இடையனைக் கூறினார். அந்தப் புறப்பாட்டுப் பகுதி இது:

..............................''பனிமிகப்
புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்
கல்லா இடையன் போலக் குறிப்பின்
இல்லது படைக்கவும் வல்லன்''

இக்காலத்திற் காலையில் எழுந்த உடனும் நமக்கு வெப்பத்தில் விருப்பம் இருக்கக் காண்கிறோம். காலைக் கதிரவன் முன்னே நிற்கவும் இருக்கவும் ஆசைப்படுகிறோம். நம்மைப் போலவே ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னாலும் நம் மூதாதையர் இருந்து வந்தார்கள். அவர்கள் இள நிலாவைத் துய்க்கச் சில முற்றங்கள் அமைத்து வைத்திருந்தார்கள். அம்முற்றங்கள் முன் பனிக் காலத்தே இள வெயிலை நுகர்வதற்கும் பயன் பட்டன. இந்தச் செய்தியை இளங்கோவடிகள்,

''வளமனை மகளிரும் மைந்தரும் விரும்பி
இளநிலா முன்றிலின் இளவெயில் நுகர
விரிகதிர் மண்டிலந் தெற்கேர்பு வெண்மழை
அரிதிற் றோன்றும் அச்சிரக் காலை''

என்று சிலப்பதிகாரத்தே குறித்தார். இப்பருவத்தே நண்பகல் நேரத்தில்கூட நமக்கு வெயிலில் விருப்பம் இருக்கிறது. அதற்குக் காரணம் இக் காலத்திலே சூரியன் நம்மைச் சுடுவதில்லை என்பது. இப்பருவம் ''ஞாயிறு காயாப் பருவம்'' என்று பரிபாடலிற் பேசப்பட்டுள்ளது.


இருநூறு ஆண்டுகட்கு முன்னால் வாழ்ந்த ஜேம்ஸ் தாம்சன் என்னும் ஆங்கிலப் புலவர் இப் பருவத்தைப் பற்றிக் கூறுங்கால்

செந்நிற அழலும் ஒண்கதிர் விளக்கமும்
இருளினை யோட்ட இயைந்தே நிற்பன

என்றவாறு மொழிந்தார். காளிதாசரும் இருது சம்ஹாரத்தில், இப் பருவத்தை வருணிக்கின்றவர், மக்களுக்கு ஒண்தழலில் உள்ள விருப்பத்தையும், பகலில் வெளியே செல்லவேண்டியவர்க்குச் சூரியனிடத்திலுள்ள அவாவினையும், பனியினின்றும் பாதுகாக்கும் பொருட்டு வெப்பத் துளிகளின்பால் உள்ள விருப்பத்தையும் குறிப்பிட்டுள்ளார். முன்பனிக் காலத்தின் தன்மை யாண்டும் ஒரே விதம் என்பதை இக் கவிஞர்கள் சொற்களால் நாம் அறியலாம்.







வெயிலிலும் வெப்பத்திலும் இப்பருவத்தே விருப்பமுள்ள நமக்கு வெந்நீரிலும் விழைவு ஏற்படுதல் இயல்பன்றோ? வெந்நீரைத் தாங்கும் குழாய்களை Thermo Flasks நாம் இப்பொழுது பெற்றிருக்கிறோம். அவை நம் தமிழ் நாட்டிற்குப் புதியன அல்ல போலும்! 1,800 ஆண்டுகட்கு முன்னே நம் நாட்டில் அவை இருந்தன என்பதற்கு வேண்டிய ஆதாரம் குறுந்தொகைப் பாடலிற் கிடைக்கிறது.

''அச்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்ச்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே''

என்று வந்துள்ள பாட்டில், ''வெப்பத் தண்ணீர்ச் சேமச் செப்பு'' என்று கூறப்பட்டிருப்பது வெந்நீரைச் சூடாகவே பாதுகாத்து வைக்கும் பாத்திரம் என்று சொல்லத் தக்கது. முன்பனிக் காலத்தில் ''அச் செப்பிலிருந்து சுடுநீரைப் பெறுக'' என்று வாழ்த்துகின்ற 'ஓரிற் பிச்சையார்'' என்னும் புலவரது பாட்டில் இங்ஙனம் வந்துள்ளது.

அன்றி, இக் காலத்தில் மக்களுக்குக் காரம் பொருந்திய இஞ்சியிலும், பொரி, அவல் முதலியவற்றிலும் விருப்பம் நிரம்ப உண்டு. இவற்றைத் தின்று குளிர்ச்சி பொருந்திய சண்பக மலரை வெறுத்து, மல்லிகை மாலையை மகளிர் சூடினார்களென்று சீவகசிந்தாமணியுள்ளும் சொல்லப்பட்டது.

''அளிந்த தீம்பழ மிஞ்சி யார்ந்தநீர்
விளைந்த வல்விளை வரிசி வேரியும்
வளைந்த மின்னனார் மகிழ்ந்து சண்பகம்
உளைந்து மல்லிகை யொலியல் சூடினார்''

என்றதைக் காண்க.

மார்கழியுந் தையும் முன்பனிக் கால மாதங்கள் என்பது முன்னரே கூறப்பட்டது. இம் மாதங்களில், விடியற் கால வேளையில் நீராடுதல் பண்டைக் காலத்தில் பெரு வழக்கிற்றாக இருந்தது. இப்பொழுது மார்கழித் திங்களில் விடியுமுன் பல மக்கள் நீராடிக் கோயிற் சென்று வழிபடுகின்றனர். ஆனால், தைத் திங்களில் முற்காலத்தில் வழங்கிய வழக்கம் கைவிடப்பட்டு விட்டது. 1,800 ஆண்டுகளுக்கு முன்னே கன்னிப் பெண்களாய் இருந்தவர்கள் தை மாதத்தில் தத்தம் தாய்மார் அருகே நின்றுகொண்டு நோன்பு செய்யும் முறையைக் காட்ட, யாற்றிலும் குளத்திலும் காலை நேரத்தில் நீராடுவர் என்றும், அந் நோன்பின் பயனாய்த் தக்க கணவரைப் பெற வேண்டுவர் என்றும் அறிகின்றோம். இச் செய்தி,

''தாயருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்''

என்று பரிபாடலுட் குறிக்கப் பெற்றுள்ளது.

மார்கழி நீராடல்பற்றித் திருவாசகத்துள்ளே கூறியிருப்பது பலர்க்குத் தெரிந்திருக்கும். அதனையும் நினைவூட்டுகின்றேன்:

''மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்து....ஆடுவோம்''
என்று கூறியிருப்பது நினைக்கத் தக்கது.

''தை இத் திங்கள் தண்கயம்போல'' என்று முன் உவமையாக எடுத்தாளப் பெற்றது, ''மார்கழி மாத மடுவினைப்போல'' என்று இக்காலத்திற் சொலத்தக்கதாய் உளது. மாணிக்க வாசகர் போன்ற பெரியவர்கள் நீராடுகின்ற பொய்கையிலே கருங்குவளை மலரையும் செந்தாமரைப் பூவையும் பார்த்து இறைவியையும் இறைவனையும் கண்டால் ஒத்த மகிழ்ச்சியை அடைந்திருக்கின்றனர். கல்லிலே நல்லூர்களும், ஆற்றிலே அறநூல்களும் கேட்கத்தக்க அப் பெற்றியாளர்க்குப் பொய்கையில் ஒரு பக்கம் கருங்குவளையும், மற்றொரு பக்கம் செங்கமலமும் பூத்திருக்கின்ற காட்சி கருநிறம் பொருந்திய உமையம்மையையும் செந்நிறம் பொருந்திய சிவனையும் அன்றி வேறு எதை நினைப்பூட்ட வல்லன?

''பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப்
பைம்போதால்

• • •

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து...

• • •

பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோ
ரெம்பாவாய்''

என்ற மாணிக்கவாசகத்தை நினைவுகூர்வோமாக.

இவ்வளவு பனி பெய்கின்ற காலத்திலே, குளிரினால் உடம்பு நடுங்குகின்ற காலத்திலே, போர்வைவேண்டிய காலத்திலே, வெப்பத்தை விரும்புகின்ற நேரத்திலே, தண்ணீரிலே சென்று நீராடுதல் எங்ஙனம் இயலும் என்பார்க்கு விடை இறுப்பார்போல மாணிக்கவாசகர் இறைவனுடைய ஆரழல் போன்ற மேனியை நினைப்பார்க்கு, அவன் செம்மை நிறத்தைச் சிந்திப்பார்க்கு, வெண்ணீற்றினைப் பூசுவார்க்கு, அவனுடைய பொற்பாதத்தை ஏத்துவார்க்கு இப்பனிக்காலம் துயர்தராது என்ற குறிப்புப்பட இயம்பியுள்ளார்.

''கையாற் குடைந்து குடைந்து உன்கழல் பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்
போற்

செய்யா வெண்ணீறாடி செல்வா.......

• • •

எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்''
என்பன அவ்வாசகம்.

# குழந்தைகள் மருத்துவம்

டாக்டர் வி. எஸ். சங்கரநாராயணன்

குழந்தைகளுக்கான இந்தியன் அகடமி அகில இந்திய அளவில் செயல்படுகின்றது. அதில் கிட்டத்தட்ட 4,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குழந்தைகள் மருத்துவத்தில் ஈடுபாடு உள்ளவர்கள். இந்த அகடமி 1963இல் துவக்கப்பட்டது.

குழந்தைகளுக்கு கால், வயிறு, மற்றும் குடல், கல்லீரல் சிறப்புப் பகுதி இந்த அகடமியின் சிறப்புப் பிரிவாகச் செயல்படுகிறது. சிறப்புப் பகுதி குழந்தைகளுக்கான வயிறு மற்றும் குடல், கல்லீரல் சம்பந்தப்பட்ட உறுப்புகளையும், அதில் உண்டாகும் நோய்களையும் தீவிரமாக ஆராய்ந்து கண்டுபிடிப்பதோடு, புதிய மருத்துவ சிகிச்சை முறைகளையும் ஆராய்ந்து கண்டுபிடித்து மற்ற மருத்துவர்களுக்கு எடுத்துச் சொல்லும்.

இந்தச் சிறப்புப் பகுதியில் முக்கியமாக வயிற்றுப்போக்கு, வாந்தி பேதி, வயிற்றுவலி, ரத்த வாந்தி அல்லது ரத்த பேதி போன்ற பல தரப்பட்ட கல்லீரல் மற்றும் குடல் கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் உதாரணமாக மஞ்சள் காமாலை, 'மகோதரம்' என்று சொல்லப்படுகின்ற ஈரல் குலைநோய், சிறுகுடலைப் பெரிதும் பாதிக்கும் வயிற்றுப்போக்கு நோய்கள் ஆராயப்படுகின்றன.

வயிற்றுப் போக்கின் கொடிய விளைவுகளை நாம் அறிவோம். இந்த இரைப்பை மற்றும் குடல், கல்லீரல் சம்பந்தமான சிறப்புப் பகுதி மேற்கண்ட வியாதுகளின் காரணத்தையும், போக்கையும், நவீன பலன் தரத்தக்க சிகிச்சை முறைகளையும் ஆராய்ச்சி செய்யும். அதன்பின், ஒருமனதாக அகில இந்திய ரீதியில் அதன் உறுப்பினர்கள் கூடி அதன் பலனை எடுத்து விளக்கி, மேற்கண்ட நோய்களால் வரும் இறப்பு விகிதத்தைக் குறைக்க வழி செய்வார்கள்.

குழந்தைகளின் ஐம்.எம்.ஆர். என்று சொல்லப்படுகின்ற இறப்பு விகிதத்தில், 30 சதவிகிதம் இருக்கிறது. இதற்கு வயிற்றுப்போக்கு ஒரு முக்கியக் காரணம். சராசரியாக இந்தியாவில் ஒவ்வொரு குழந்தையும் (புட்டிப்பால் குடிக்கும் குழந்தை) ஓர் ஆண்டிற்குள் ஓரிரு முறை வயிற்றுப்போக்கினால் அவதிப்படுகின்றது. சில குழந்தைகள் ஒன்றிரண்டு சதவிகிதம் இதன் கொடிய விளைவான உப்பு நீரிழிவு என்று சொல்லப்படும் நிலைக்கு உள்ளாகின்றது. பேதி கண்ட ஆரம்பத்திலேயே உப்பு சர்க்கரை நீர் கரைசலைக் கொஞ்சம் கொஞ்சம் அடிக்கடி ஸ்பூனால் கொடுத்துவந்தால் மேற்கண்ட கொடிய விளைவு வராமல் தடுக்கலாம்.

வயிற்றுப்போக்கு கண்ட குழந்தையைப் பட்டினி போட்டு ஊட்டச்சத்துள்ள திரவ உணவையும் கொடுக்காமல் தேவையில்லாத மருந்துகளை மட்டும் கொடுப்பதால் கொடிய விளைவு ஏற்படுவதோடு, வயிற்றுப்போக்கும் சக்கிரம் குணமாகாது. பின்னர் அடிக்கடியோ அல்லது குணமாகாமலேயோ வெகு நாட்களாக வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டு எடை குறைந்து நோஞ்சான் அல்லது சவலையாகக் காணப்படும். சாதாரணமாகக் குறுகிய கால பேதியில் சுமார் 20 சதவிகிதம் வெகு நாட்களாகப் போகும் பேதியாக மாறுகின்றது. இதனால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் 5 முதல் 15 சதவிகிதம் வரை மடிந்து போகின்றன.

வயிற்றுப்போக்கினால் (தற்காலிக பேதி) அவதிப்படும் குழந்தைகள் மருத்துவ விடுதியில் சேர்க்கப்படும் எண்ணிக்கை, உப்பு சர்க்கரை நீர் வெளிப்புறப்பகுதியிலேயே வயிற்றுப்போக்கிற்குக் கொடுப்பதனால், 11.8 சதவீதத்திலிருந்து 2.4 சதவீதம் குறைந்துள்ளது. மருத்துவமனையின் உட்புற வயிற்றுப்போக்குப் பகுதியில் பலநாள் வயிற்றுப்போக்கால் அவதிப்படும் சிக்கனமான அரிசி மாவு - பொட்டுக்கடலை தேங்காய் எண்ணெய் கலந்து தயாரித்துக் கொடுக்கப்படும் திரவ உணவு மூலம் சிகிச்சையில் நல்ல பலன் தெரிகிறது.




சென்னை எழும்பூர்-அரசு குழந்தைகள் மருத்துவமனை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள குழந்தைகளுக்கான இரைப்பை (வயிறு) மற்றும் குடல் கல்லீரல் சிறப்புப்பகுதி, தென்னிந்தியாவிலேயே முதன் முதலாக கடந்த சில ஆண்டுகளாகச் செயல்படுவது குறிப்பிடத்தக்கது. குழந்தைகள் நோய் பட்டப் படிப்பிற்கு மேல், இரண்டாண்டுகள் இந்தச் சிறப்புப் பகுதியில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் 4 பேர்கள் சிறப்புப் பிரிவில் உள்ளனர்.

ஈரல் குலைக்கட்டி, மஞ்சள் காமாலை நோய் பற்றி காலஞ்சென்ற டாக்டர் ஆச்சாரி காலத்திலிருந்து தலைமுறை தலைமுறையாக இன்னமும் தொடர்ந்து ஆராய்ச்சியும் செய்யப்படுகிறது. நவீன சிகிச்சையும் கொடுக்கப்படுகிறது. இறப்பு விகிதம் கணிசமாக மேற்கண்ட முறைகளால் குறைக்கப்பட்டுள்ளது.

## சிறப்பு மருத்துவர்கள்

இந்த மருத்துவமனையில் பல நவீன கருவிகள் (அல்ட்ரா சவுண்டு) எண்டாஸ் கோப்பி, லாபராஸ் கோப்பி போன்ற கருவிகள் கல்லீரல் சதைப் பரிசோதனை, செரிமானப் பகுதி பரிசோதனை போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தினசரி 200 புதிய குழந்தைகள் இந்த மருத்துவமனையில் தனிப்பட்ட வயிற்றுப் போக்குப் பகுதியிலும், 200 குழந்தைகள் உட்புற வயிற்றுப்போக்குப் பகுதியிலும் சிகிச்சை பெறுகின்றார்கள். வயிற்றுப் போக்கு மற்றும் ஈரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு, அவ்வப்போது இந்த சிறப்புப் பிரிவில் தேர்ச்சி பெற்ற சிறப்பு மருத்துவர்கள் ஆலோசனை கூறுகின்றார்கள்.



# சில பழங்குடிகளிடையே நிலவும் படைப்புக் கதைகள்

பல்வேறு அறிவியல் உண்மைகள் தொடுத்த தாக்குதல்களுக்குப் பிறகும் நிலைத்து நின்று கற்றாரையும் கல்லாதாரையும் கவர்ந்துவரும் கதைகள் படைப்புக் கதைகளாகும்.

உலகில் முதல் மனிதன் தோன்றிய நாளில் அவன் முன்னே வைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய கேள்வி "இவ்வுலகம் எவ்வாறு தோன்றியது?" என்பதேயாகும். புரியாத புதிராக இருந்த இயற்கைத் தோற்றங்களைக் கண்டு, ஒரு குழந்தையைப் போல் கேள்விகளைக் கேட்டு, ஒரு குழந்தையை அமைதிப்படுத்தும் அளவுக்குப் போதுமானதாக இருந்த விடைகளை அவன் மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டான். தனக்கு நிறைவளித்த செய்திகளைக் கதைகளாகத் தன் சந்ததியினருக்குச் சொல்லி மகிழ்ந்தான். மொழியையும், சமுதாயத்தையும், சமயத்தையும் உருவாக்கிய மனிதன் படைப்புக் கதைகளையும் தோற்றுவித்தான்.

இவ்வாறு உருவான பழங்கதைகள் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளை நாம அறிந்து கொள்ள உதவும் பதிவேடுகளாகத் திகழ்கின்றன. அவற்றுள் படைப்புக் கதைகள் அச்சமுதாயத்தில் உள்ள மக்களின் பார்வையில், இவ்வுலகமும் உயிரினங்களும், பிற பொருட்களும் எவ்வாறு தோன்றின என்பதைக் காட்டும் கண்ணாடிகளாக உள்ளன. மேலும் இவ்வுலகமும் அதன் பொருட்களும் எதற்காக உருவாக்கப்பட்டன என்பதையும் படைப்புக் கதைகள் பகர்கின்றன.

## ஐந்து பிரிவுகள்

உலகில் பல்வேறு பகுதிகளிலும் பரவி வாழ்ந்த எல்லாக குழுவினருக்கும் இவ்வுலகம் ஒரே வழியில் உருவானதாகத் தோன்றவில்லை. எனவே உலகில் எத்தனைப் பண்பாட்டுக் குழுக்கள் உள்ளனவோ அத்தனைப் படைப்புக் கதைகளும் உள்ளன. இக்கதைகளை ஆராய்ந்த அறிஞர்கள் அவற்றைப் பல பொதுவான பிரிவுகளில் வகைப்படுத்தி உள்ளனர். உலகில் நிலவும் பெரும்பாலான படைப்புக் கதைகள் பின்வரும் ஐந்து பிரிவுகளில் அடங்குகின்றன.

அண்டத்தின் முட்டையிலிருந்து உலகம் தோன்றுதல்.

ஒரு இணையற்ற இறைவனால் உலகம் படைக்கப்படுதல்.

முன்னரே இருந்துவரும் நிலையற்ற மூலப் பொருளிலிருந்து உலகம் தோன்றுதல்.

ஞாலப் பெற்றோரால் உலகம் பெற்றெடுக்கப்படுதல்.

நீரில் மூழ்கிச் சென்று, கொண்டு வரப்படும் மண்ணால் உலகம் அமைக்கப்படுதல்.

நம் நாட்டில் பழங்குடி மக்களிடையே இவ்வகையிலான கதைகள் நூற்றுக் கணக்கில் நிலவுகின்றன. அவற்றுள் சிலவற்றை மேலே குறிப்பிட்டுள்ள வகைப்பாட்டு அடிப்படையில் காண்போம்.

## அண்டத்தின் முட்டையிலிருந்து உலகம் தோன்றுதல்

முட்டை பல வேளைகளில் தவறான உவமைகளோடு ஒப்பிடப்படுகிறது. ஆனால் உண்மையில் முட்டை முழுமையின் மொத்த உருவம். முட்டையிலிருந்து உயிர்களனைத்தும் தோன்றுகின்றன. இந்துமதக் கோட்பாட்டில் உலகம் ஒரு முட்டையிலிருந்தே உருவானதாகக் குறிப்பிடப்படுகிறது.

அருணாச்சல மாநிலத்தின் சுபன் சிரி மாவட்டத்தின் வடபகுதியில் வாழும் 'மலைமிரி' (Hill Miri) என்னும் பழங்குடி மக்களின் ஒரு கதையை இவ்வகையான கதைகளுக்கு எடுத்துக்காட்டாகக் காணலாம்.

உலகம் தோன்றுவதற்கு முன்பு சுங்கும் என்னும் ஆவியும், அதன் மனைவி சிங்குமும் வாழ்ந்துவந்தனர். ஒருநாள் சிங்கும் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்த போது, அவள் மீது சிறிது நீர் விழுந்து அவளது ஆவி மேனியிலிருந்து பாய்ந்து பரவியது. அதனால் அவள் உடல் முழுவதும் கடுமையான குளிரில் நடுங்கியது. சிங்கும் எழுந்து தன் கணவன் சுங்குமை எழுப்பி நடந்ததைச் சொன்னாள். அவர்களிருவரும் சுற்றுமுற்றும் தேடிப்பார்த்தனர். ஆனால் அவளைக் குளிர வைத்த பொருள் எது என்பதை அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை.

இருபது நாட்களுக்குப் பிறகு சிங்கும் வியத்தக்க வகையில் ஒரு முட்டையை இட்டெடுத்தாள். அம்முட்டை அவர்களுக்கு ஒரு புதிராக இருந்தது. அதனை மிகவும் கவனமாகப் பாதுகாத்து வந்தனர். ஆறு மாதங்கள் கடந்த பின்பு அம்முட்டை உடைந்து அதனுள்ளிருந்து இவ்வுலகமும் உயிர்களும் தோன்றின.

பல படைப்புக் கதைகளில் உலகமும் உயிர்களும் எல்லா வல்லமையும் பொருந்திய இறைவனால் படைக்கப்படுகின்றன. இதுபோன்ற கதைகளில் இறைவனின் எண்ணம் தீமையற்ற இன்ப மயமான ஓர்



ப. இராசமோகன்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

உலகை உருவாக்க வேண்டும் என்பதாகவே இருக்கும். ஆனால் படைப்புத் தொழில் நடைபெறும் பொழுதோ அல்லது படைப்புத் தொழில் நடந்து முடிந்த பிறகோ இறைவனின் உயர்ந்த எண்ணம் நிறைவேறாதபடி முரண்பாடுகள் ஏற்படுகின்றன. மேகாலயா மாநிலத்தில் வாழும் 'காசிப் பழங்குடி' (Khasi) மக்களின் கதை இவ்வகையிலானது.

தன்னுடன் 16 வகையான மக்கள் குழுவினர் வாழும் வகையில் கடவுள் முக்திலையைப் படைத்தார். அவரால் படைக்கப்பட்ட உலக அன்னைக்குச் சூரியன், சந்திரன், நீர், காற்று, நெருப்பு ஆகிய ஐந்து குழந்தைகள் இருந்தன. பூமி அன்னை அழகிய உலகை ஆட்சி செய்ய மக்களை அனுப்புமாறு இறைவனிடம் வேண்டினாள். 16 மக்கள் குழுவினருள் 7 குழுவினரைத் தேர்ந்தெடுத்துக் கடவுள் உலகுக்கு அனுப்பினார்.

உலகில் மக்கள் ஒழுக்கம் தவறாமல் வாழும் வரை அவர்களுடன் தாம் தொடர்பு கொண்டிருப்பதாக இறைவன் உறுதியளித்து, அவ்வுறுதிக்கு அடையாளமாக உலகில் ஒரு மரத்தைப் படைத்தார். மக்கள் இயற்கையாகக் கிடைத்த காய்கனிகளை உண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். கடலில் வாழ்ந்து வந்த ஒரு தீய ஆவி மக்களை இறைவனுக்கு எதிராக மாற்றுவதற்குச் சதி செய்தது. ஒருநாள் அந்த ஆவி மக்களிடம் சென்று இறைவனால் படைக்கப்பட்ட மரம் மக்களை அழிப்பதற்காகப் படைக்கப்பட்டுள்ளதாகவும், அதனைப் பெரிதாக வளரவிட்டு விட்டால் உலகம் முழுவதும் படர்ந்து, மக்களை அழித்து விடும் என்று தெரிவித்தது. மேலும் உடனடியாக அம்மரத்தை வெட்டி விடுமாறும் மக்களுக்கு ஆலோசனை கூறியது.

அந்த ஆவியின் கூற்றை நம்பிய மக்கள் இறைவனால் படைக்கப்பட்ட மரத்தை வெட்டிச் சாய்த்தனர். மரம் மண்ணில் வீழ்ந்தவுடன் உலகம் அதிர்ந்தது. வெட்டுப்பட்ட பாகங்களிலிருந்து அம்மரத்தின் பால் பீறிட்டு வெளியேறிச் சிதறி






விழுந்தது. மரத்தின் பால் பட்ட இடங்களெல்லாம் சாம்பலாக மாறின. மக்களின் மகிழ்ச்சிகர வாழ்க்கை மாறி உணவின்றி அழியும் நிலை உருவானது. இந்நிலையைக் கண்டு மனம் கலங்கிய ஒரு சேவல் இறைவனிடம் சென்று மக்களைப் பேரழிவினின்றும் காப்பாற்றுமாறு வேண்டியது. சேவலின் வேண்டுகோளை ஏற்ற இறைவன் உலகுக்கு வந்து மக்களுக்கு உழவுத் தொழிலைக் கற்றுக் கொடுத்தார். கவலையின்றி வாழ்ந்த மக்கள், கடினமான வாழ்க்கையைத் தழுவ நேர்ந்தது. சேவலின் நல்ல மனத்தைப் பாராட்டிய இறைவன் பொழுது புலர்வதை மக்களுக்கு அறிவிக்கும் பெருமையை அதற்கு வழங்கினார்.

**நிலையற்ற மூலப் பொருளிலிருந்து உலகம் தோன்றுதல்**

பல படைப்புக் கதைகளில் புகை மண்டலம் அல்லது எங்கும் பரந்த நீர்ப் பரப்பு போன்ற ஒரு மூலப் பொருளிலிருந்து உலகம் வெளித் தோன்றுவதாகக் கூறப்படுகிறது. இதற்கு அருணாச்சல மாநிலத்தில் வாழும் 'கேலங்' (Gallong) பழங்குடியினரின் கதை நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தொடக்க காலத்தில் புக் என்ற கிழவனும், யுக் என்ற கிழவியும் கணவன் மனைவியாக வானத்தில் வாழ்ந்து வந்தனர். உலகம் முழுவதும் நீரால் சூழப்பட்டிருந்தது. நீரில் வாழ்ந்துவந்த ஒரு நண்டும், ஒரு கூனிமீனும் எப்படியாவது இவ்வுலகை வெளியே கொண்டுவர வேண்டும் என எண்ணின. நண்டு நீரின் அடியில் இருந்த தரையில் ஆழமாக ஒரு குழியைத் தோண்டியது. நீர் அக்குழிக்குள் செல்லத் தொடங்கியது. நீரில் மிதந்த புல் பூண்டுகள், இலைதழைகள், கட்டைகள் போன்றவை குழியை அடைத்துக் கொள்ளாதபடி அவற்றைக் கூனிமீன் ஒதுக்கித் திரட்டியது. நீரெல்லாம் வடிந்தபின் எங்கும் சேறுமயமான உலகம் வெளித் தோன்றியது.

வானில் சூரியனும் சந்திரனும் தோன்றித் தமது வெப்பத்தால் பூமியை உலரவைத்தன. வறண்டு போன பூமியில் செடிகொடிகளையும் மரங்களையும், உயிர்களையும் உருவாக்க வேண்டும் என புக்கும், யுக்கும் விரும்பினர். உலகில் மழை பெய்தால்தான் பயிர்களும் உயிர்களும் உருவாக முடியும் என உணர்ந்த அத் தம்பதியினர் மழையை உருவாக்க முயன்றனர். யுக் தனது ஆடைகளை அவிழ்த்தெறிந்தாள். அவள் மேனியிலிருந்து வீசிய ஒளி மின்னலாகப் படர்ந்தது. புக் தனது மேனியைத் தட்டி இடியோசையை உருவாக்கினான். உடனே மழை பெய்தது. உலகில் ஆறுகளும், குளங்களும் மரம் செடி கொடிகளும், உயிர்களும் தோன்றின.

**ஜோடிப் பெற்றோரால் உலகம் ஈன்றெடுக்கப்படுதல்**

இவ்வகையில் அடங்கிய கதைகளில் உலகம் படைப்புக்கு முந்திய தாய் தந்தையரால் பெற்றெடுக்கப்படுவதாக விவரிக்கப்படுகிறது. பல கதைகளில் உலகமும் வானமும் தோன்றிய பின்பு இவையிரண்டும் நெருங்கி வந்து திருமணம் செய்து கொண்டு உயிர்களையும் பிற பொருட்களையும் ஈனுவதாகக் கூறப்படுகிறது. இவ்வகையில் உயிர்களும் பொருட்களும் தோன்றிய பின்பும், இந்த அன்னை தந்தையர் நெருங்கிய நிலையிலேயே இருப்பதால் அவற்றைப் பிரித்தனுப்புவது பிள்ளைகளின் வேலையாகிறது. அசாம் மாநிலத்தில் வாழும் 'சிங்போ' (Singpho) பழங்குடி மக்களின் கதையில் இவ்வமைப்பைக் காணலாம்.

தொடக்க காலத்தில் வானமும் பூமியும் இல்லை. எங்கும் மேகக் கூட்டமும் தூசிப்படலமே காணப்பட்டது. அவ்வாறான நிலையிலிருந்து குப்லிங்நாம் என்னும் பெண் தோன்றினாள். அவளுக்கு நிங்கள்சினுன் என்ற மகனும், ஜும்காம்வெய்சுன் என்ற மகனும் பிறந்தனர். அவ்விருவரும் பனி வடிவில் இருந்தனர்.

அவர்கள் வளர்ந்து திருமணம் செய்து கொண்ட பிறகு, அவர்களுக்கு 'இங்கா' என்ற பெண் குழந்தையும், 'மூ' என்ற ஆண் குழந்தையும் பிறந்தன. 'இங்கா' உலகமாகவும் 'மூ' வானமாகவும் வளர்ந்தனர்.



அவ்விருவரும் நெருங்கி வந்து மணம் செய்து கொண்டபின் அவர்களுக்கு இம்புங் என்ற மகன் பிறந்தான். இம்புங் காற்று வடிவில் இருந்தான். அவன் பிறந்தபோது பலத்த காற்று வீசியது. அதனால் பூமியுடன் ஒன்றியிருந்த வானம் மேல் நோக்கி அடித்துச் செல்லப்பட்டது. மேலும் சேற்றுருவத்தைக் கொண்டிருந்த உலகம் காற்றின் விசையால் உலர்ந்து போயிற்று.

இதுபோன்ற கதைகளில் வானத்தையும் பூமியையும் பிரிக்கப் பல வகையான கிளைக் கதைகள் கூறப்படுகின்றன. தமிழ் நாட்டில் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் பரவலாக வழங்கப்படும் ஒருநாட்டுப்புறக் கதையில் வயதான ஒரு பெண் உரலில் நெல் குத்திக் கொண்டிருந்த போது தலைக்கு மேலாக இருந்த வானத்தின் மீது உலக்கையால் இடித்து விட்டதாகவும், அதனால் சினங்கொண்ட வானமும் "எட்டு வண்டி நூல் போட்டாலும் எட்ட மாட்டேன், பத்து வண்டி நூல் போட்டாலும் பத்த மாட்டேன்' என்று கூறிக்கொண்டே மேல் நோக்கிப் போய் விட்டதாகவும் கூறப்படுகிறது.

**நீரில் மூழ்கியெடுத்த மண்ணால் உலகம் அமைக்கப்படும்**

இவ்வகையிலமைந்த கதைகளிலும் உலகம் பெரும்பாலும் ஒரு கடவுளால் தான் உருவாக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. ஆனால் இக்கதைகளில் வரும் கடவுள்கள் எல்லா வல்லமையும் கொண்டவையாக இருப்பதில்லை. படைப்புத் தொழிலை அவர் நடத்துவதற்கு உலகம்தோன்றும்முன்னரே வாழ்ந்த பறவையோ, விலங்கோ அல்லது பேயோ உதவுகின்றன. எங்கும் பரந்து காணப்படும் நீரில் மேற்குறிப்பிட்ட ஒன்று மூழ்கிச் சென்று நீருக்கடியில் உள்ள மண்ணைக் கொண்டு வந்து கடவுளிடம் கொடுத்தபின் அதிலிருந்து கடவுள் உலகை உருவாக்குகிறார்.

மைய இந்தியாவின் சோட்டோ நாக்பூர் மலைப் பகுதிகளில் வாழும் பெய்கா என்னும் பழங்குடி மக்களின் படைப்புக்கதை இவ்வகையில் அடங்கும்.

தொடக்கத்தில் எங்கும் நிறைந்திருந்த தண்ணீரில் ஒரு தாமரை இலையின் மேல் பெருங்கடவுள் தனிமையில் அமர்ந்திருந்தார். ஒரு நாள் அவர் இரண்டு கைகளையும் தேய்த்தார். அதனால் உருண்டு வந்த அழுக்கிலிருந்து பெருங்கடவுள் ஒரு காக்கையைப் படைத்தார். எங்காவது சென்று சிறிது மண் எடுத்துவருமாறு அக் காக்கையைப் பணித்தார். காக்கை பல நாட்கள் பறந்து சென்று தேடியது. தண்ணீரைத் தவிர வேறொன்றையும் அதனால் காண முடியவில்லை. சோர்ந்து போன காக்கை, மேலும் பறக்க வலுவின்றி நீர் மட்டத்திலிருந்து ஒரு ஆமையின் மேல் விழுந்தது.




அந்த ஆமை காக்கையைத் தேற்றி அதன் முயற்சி கேட்டறிந்தது.

பின்பு, மண்ணையெல்லாம் தண்ணீருக்கடியில் வாழும் ஒரு புழு விழுங்கிவிட்டதாக ஆமை தெரிவித்தது. காக்கையும் ஆமையும் இரும்புக் கடவுளிடம் சென்று புழுவின் இருப்பிடத்தை அடைய உதவுமாறு வேண்டின. இரும்புக் கடவுள் தனது பணியாளர்களைக் கொண்டு ஐந்து பகலும் இரவும் உழைத்து ஒரு அழகிய இரும்புக் கூண்டு வாகனத்தை உருவாக்கிக் கொடுத்தார்.

காக்கையும் ஆமையும் அவ்வாகனத்தில் ஏறி நீருக்கடியில் சென்று அங்கு 12 ஆண்டுகளாகத் தூங்கிக் கொண்டிருந்த புழுவை எழுப்பின. தூக்கம் கலைந்ததனால் கோபமுற்ற புழு, வாயைத் திறந்து அவ்விருவரையும் விழுங்க முயன்றது. உடனே காக்கை தான் பெருங்கடவுளின் மகன் என்றும், மண்ணைப் பெற்றுச் செல்ல வந்ததாகவும் கூறியது. பெருங் கடவுளின் பெயரைக் கேட்டதும், புழு பயந்து வாயை மூடிக் கொண்டது. இருப்பினும் மண்ணைக் கொடுக்க மறுத்து விட்டது. ஆமை அப்புழுவின் கழுத்தைப் பிடித்துச் சுருட்டிப் பிழிந்தது.

நிலைபிழந்த புழு, மண்ணை 21 உருண்டைகளாகக் கக்கியது. அவ்வுருண்டைகளை ஆமை ஒரு நூலில் மாலைபோல் இணைத்துக் காக்கையின் கழுத்தில் அணிவித்தது.

பின்பு, காக்கையும் ஆமையும் கூண்டு வாகனத்தில் ஏறி நீர் மட்டத்தை அடைந்தன. காக்கை மண் உருண்டைகளைப் பெருங்கடவுளிடம் சேர்த்தது. அவர் மண்ணை ஒன்றாக்கி ஒருமெல்லியதகடுபோல் வடிவமைத்து நீரின் மேல் வைத்தார். மண்தகடு வளர்ந்து பெருமளவுக்குப் பரவி உலகமாக உருவானது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு பூமியில் ஒரு வெடிப்பு ஏற்பட்டது. அதிலிருந்து நங்கா பெய்காவும் அவன் மனைவியும் தோன்றினர்.

இவ்வாறு நம் நாட்டில் எல்லாப் பழங்குடி மக்களிடையேயும் பல வகையான படைப்புக் கதைகள் நிலவுகின்றன. இதெல்லாம் மெய்யோ பொய்யோ நாமறியோம். ஆனால், இக்கதைகள் அம்மக்களின் சமய, சமுதாய வாழ்க்கை முறைகளைப் பற்றி அறிந்து கொள்ள உதவுவதுடன் பண்பாட்டு எண்ணங்களின் பிறப்பிடமாகவும் திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# கொய்தவை...



ஆண், பெண் பேதங்களை அகற்ற ஜப்பான் அரசு எடுத்துவரும் முயற்சிகளில் அந்நாட்டில் தற்போது பெண்களுக்கு வேலைகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் தோன்றியுள்ளன. 1988-ஆம் ஆண்டு நிலவரப்படி ஜப்பானில் வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை 17 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. இது, வேலைக்குச் செல்வோரின் மொத்த எண்ணிக்கையில் 40 சதவிதமாகும். ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சமவேலை வாய்ப்பளிக்கும் சட்டம் 1981-ஆம் ஆண்டு ஜப்பானில் கொண்டு வரப்பட்டது.

ரஷ்யாவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்திற்கான தேர்தல் 70 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக 26.3.89 அன்று நடைபெற்றது. மொத்தம் 2,250 இடங்கள் உள்ள நாடாளுமன்றத்தில் 1,500 இடங்களுக்காகத் தேர்தல் நடைபெற்றது. மீதி இடங்கள் பல்வேறு பிரதிநிதிக் குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டவையாகும். 28 கோடி மக்கள்தொகையுள்ள ரஷ்யாவில் 18 வயதிற்கு மேற்பட்ட 19 கோடி மக்கள் வாக்குரிமை பெற்றவர்கள். இதற்கு முன்பு நடந்த தேர்தல்களில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நிறுத்தப்படும் ஒரே வேட்பாளருக்கு எதிராகவோ, ஆதரவாகவோ வாக்களிக்கும் உரிமைதான் மக்களுக்குத் தரப்பட்டிருந்தது. தற்போதுதான் முதன்முறையாக ஒரே இடத்திற்குப் பல வேட்பாளர்கள் போட்டியிடக்கூடிய உரிமை தரப்பட்டுள்ளது.

மதுரையிலிருந்து 82 கி.மீ. தொலைவில் உள்ள காந்தி கிராமத்தில் செயற்கைக் கால்கள் தயாரிக்கப்படுகின்றன. சாதாரணக் கால்களைவிட எடை குறைவான இவை இதுவரை 23 பேருக்குப் பொருத்தப்பட்டுள்ளன. செயற்கைக் கால்கள் ஒவ்வொன்றின் விலை ரூ. 500. இங்கு இதைப் பொருத்திக்கொள்ள வருபவர்களுக்கு இந்தக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மற்றபடி தங்கும் வசதி, சிகிச்சைப் பயிற்சி ஆகியவை இலவசம். இந்த அமைப்பை மேலும் விரிவுபடுத்தி, செயற்கைக் கால்களின் விலையை ரூ. 200 ஆகக் குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்துருவத்தில் ஆட்கள் தங்கியிருந்து ஆய்வு செய்வதற்கான 2-வது நிரந்தர நிலையம் ஒன்றை அமைத்துவிட்டு அண்டார்டிகாவிலிருந்து 8-வது பயணக் குழு 26.3.89 அன்று மர்மகோவா துறைமுகத்தை அடைந்தது. இந்த 2-வது நிலையத்தின் பெயர் 'மைத்ரி'. இது இந்தியா அமைத்த முதல் நிலையமான தட்சிண கங்கோத்ரியிலிருந்து 70 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தட்சிண கங்கோத்ரி பனித்தளத்திலும் 'மைத்ரி' பாறைப் பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. 9-வது அண்டார்டிகா குழு இவ்வாண்டு (1989) நவம்பரில் செல்லும்.

1989ஆம் ஆண்டு ரூ. 251 கோடி மதிப்புள்ள கள்ளக்கடத்தல் பொருட்களை மத்திய சுங்கத்துறை பறிமுதல் செய்தது. 1988ஆம் ஆண்டில் ரூ. 200 கோடி மதிப்புள்ள தங்கம் உட்பட ரூ. 4 கோடிக்கான கள்ளக் கடத்தல் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவ்வாண்டு ஜனவரி முதல் மார்ச் 18 வரை சுமார் ரூ. 120 கோடி மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவுக்கு ரூ. 45 கோடி நிதி உதவியை பிரிட்டன் அறிவித்துள்ளது. இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வாழும் 2 கோடி மக்களின் மருத்துவ மற்றும் நலப்பணித் திட்டங்களுக்காக இந்நிதி பயன்படுத்தப்பட உள்ளது.



## வெற்றி கிடைக்க வழி

—கவிஞர் தமிழ்முடி—

மண்ணை வெட்டித் தோண்டினால்
தண்ணீர் ஊற்றுப் பெருகிடும் !

நெல்லைக் குத்தித் தூற்றினால்
நல்ல அரிசி கிடைத்திடும் !

கல்லைச் சிற்பி செதுக்கினால்
நல்ல சிற்பம் கிடைத்திடும் !

கெட்டித் தயிரைக் கடைந்திடில்
கட்டி வெண்ணெய் கிடைத்திடும் !

நன்றாய் நாமும் உழைத்திடில்
குன்றாய்ச் செல்வம் குவிந்திடும்।

படிப்பைக் கருத்தாய்க் கற்றிடில்
முடிவில் வெற்றி கிடைத்திடும்.


## இது உங்கள் பக்கம்!

மாணவ மணிகளே!


உங்கள் திறமையை வெளிப்படுத்த இது உதவும். குட்டிக்கதைகள், துணுக்குகள், பாடல்கள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். ஆனால், அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். துணுக்குகள் ஆதாரத்துடன் எழுதப்படல் வேண்டும்

கல்வியோடு, பிறதுறைகளிலும் சிறந்து விளங்கும் மாணவர்கள், தங்கள் பாஸ்போர்ட் அளவுப் படத்துடன் தங்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்பலாம். அத்துடன் பள்ளித்தலைமையாசிரியர் அல்லது வகுப்பாசிரியர் கையெழுத்திடன் அனுப்பி வைக்கவேண்டும்.

## தெரிந்து கொள்ளுங்கள்



# தொலைக்காட்சி



இன்று நகரங்களில் பெரும்பாலும் தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை எனலாம். கருப்பு வெள்ளையிலும், வண்ணத்திலும் ஓரிடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து உள்ளது உள்ளவாறே தொடர் காட்சியாகக் காட்டப்பெறும் தொலைக்காட்சி இயங்கும் விதம், எப்படித் தெரியுமா?

ஓரிடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், வேறு ஓர் இடத்தில் தெரிவதற்குக் காரணமாக அமைபவை மின்காந்த அலைகள்.

1884-இல் பி.ஜி.நிப்காவ் என்பவர்தான் முதன் முதலாக தொலைக்காட்சிக்கு வித்திட்டவர். அலகிடும் வட்டு Seanning disc ஒன்றின் உதவியால் ஒரு பிம்பத்தைப் பல இணைக் கூறுகளாகச் செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர் பி.ஜி நிப்கான்.

பி.ஜி. நிப்கானின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானி பேயர்டு என்பவரும், அமெரிக்க நாட்டு விஞ்ஞானியான ஜென்கின்ஸ் என்பவரும் தொலைக்காட்சியைக் கண்டுபிடிக்கும் ஆய்வில் ஈடுபட்டார்கள்.

பிம்பத்தில் இணைக் கூறுகளிலிருந்து வரும் ஒளிக் கதிர்களை ஓர் ஒளி மின்கலம் (Photo Electric cell) ஒன்றின் மீது விழச் செய்து, அதனால் ஏற்படும் மின் அதிர்வுகளைக் கொண்டு, பிம்பங்களைப் பெற்ற பெருமை பேயர்டு, ஜென்கின்ஸ் ஆகிய இருவரையும் சாரும்.

முன்பு அலகிடும் வட்டு செய்த பணியை, தொலைக்காட்சியில் தற போது செய்வது, எதிர் மின் கதிர்க் குழாய் (Cathode ray Tube) ஆகும்.

தொலைக்காட்சி என்பது காமிராவில் உள்ள ஒருவகை ஐகனோஸ்கோப்பின் வேலையே.

ஐகனோஸ்கோப் (Iconoscope) தொலைக்காட்சிமூலம் காண வேண்டிய காட்சியை நோக்கி வைக்கப்பட்டவுடன், அதுகாணும் பொருளேமின் பிரதுயாக அலகிடுதலுக்கேற்ப மாற்றுகிறது. இதில் உள்ள ஒளிமின்கலப் பகுதியில் வெள்ளி சீசிய ஆக்ஸைடு துகள்கள் பூசப்பட்ட தகடு ஒன்று உள்ளது. இத்தகட்டின் மறுபுறம் கிராபைட் தடவப்பட்டுள்ளது. கிராபைட் மின் கடத்தியாக வேலை செய்கிறது. ஒளி உணர்வுள்ள சீசிய ஆக்ஸைடு துகள்கள் அவற்றின் மீது விழும் ஒளியின் தன்மைக்கேற்ப எலெக்ட்ரான்களை வெளியிடுகின்றன.

எலெக்ட்ரான்கள் இருக்கும் எலெக்ட்ரான் துப்பாக்கி எனும் குழாயிலிருந்து, மிகவும் அதுகத் திசை வேகமுள்ள எலக்ட்ரான்கள் வெளிப்படுத்தப்படுகின்ற போது காட்சியின் பிம்பமானது ஒரு லென்சின் உதவியால் ஒளி உணர்வுத் தகட்டின்மீது தெளிவாகக் குவிக்கப்படுகிறது. இதில் ஒளியின் தன்மைக்கேற்ப ஒளி மின்கலன் மின்னோட்டத்தை ஏற்படுத்துகின்றது. எனவே பிம்பத்தில் உள்ள ஒளி வேறுபாடுகளின் அமைப்புக்கேற்ப மின்னமுத்த அமைப்புள்ள முழுப் பிம்பம் ஒன்று ஏற்படுகின்றது.

எலெக்ட்ரான் துப்பாக்கியிலிருந்து வரும் எலெக்ட்ரான் கதிர் அலகிடுதல், Scanning மூலம் இடவலமாகவும், மேல் கீழாகவும் படத்தின் மீது வீசப்படுகின்றது. அதாவது இடமிருந்து வலமாக வரிசைப்படுத்தி, மேலிருந்து கீழாகப் பிம்பத்தை வரிவரியாகப் பிரிக்கின்றது. இதனால் ஏற்பட்ட முழுப் பிம்பம் வெளியே அனுப்பப்பட்டு பெருக்கப்படுகிறது (Amplified.)

பெருக்கப்பட்ட பிம்பம் ஆன்டென்னா (Antenna) மூலம் வெளி செலுத்தப்படுகின்றது.

இக்காலத்தில் பிம்ப ஆர்த்திகான் (Image Orthicon) ஐகனோஸ்கோப்பை விட அதிக ஒளி தருவதாக உள்ளது. பிம்ப ஆர்த்திகானில் எலெக்ட்ரான் பெருக்கி (Electron Multified) ஒன்று மிக்க பயன் தருவதாக உள்ளது.

விடிகான் (Vidicon) என்னும் மற்றொரு ஒளிப்படப் பெட்டி திரைப்படங்களைச் செலுத்தப் பயன்படுகின்றது. இதில் வீடியோ அலைகள் ஏற்பியின் Receiver ஏரியலை அடைந்ததும் மின் தூண்டல் ஏற்பட்டு, அலை வீச்சு பெருக்கப்பட்டு, ஏற்பிக் குழாயில் செலுத்தப்படுகின்றன. ஏற்பிக் குழாயில், எதிர்மின் குழாயாக இருப்பதால், திரையில் பிம்பம் தெரிகின்றது.

இயல்பாக, நாம் நமது கண்களால் ஒரு பிம்பத்தைப் பார்த்து, பிம்பம் மறைந்தபிறகும் 1-8வினாடி நேரம் வரை நாம் காணமுடியும். நம் கண்ணில் உள்ள இந்த இயல்புக்குப் பார்வை நிலைப்பு (Persistence of 'vision) என்று பெயர். நம் கண்களின் இந்த இயல்பால் நாம் காணுகின்ற காட்சி அல்லது படம் வரிவரியாக இல்லாமல்முழுமையாகவும், இயற்கையான அசைவுகளோடும் காணப்படுகின்றது. படத்தோடு சேர்ந்த ஒலி அலைகளையும் நாம் கேட்பதற்கு வானொலி ஏற்பி உதவியாக இருக்கிறது.

தொலைக்காட்சி அலைகள் வான வெளியில் நீண்ட தூரம் செல்லாத வகையில் மீச்சிறு அலைகளாக (Ultra Short Wave) செலுத்தப்படுகின்றன. குறைந்த தூரமே சென்று திரும்பக் கூடியவை.

ஆனால், தற்போது இன்சாட் போன்ற செயற்கைக் கோள்களின் மூலம் ஒளிபரப்பப்படுவதால் தொலைக்காட்சி அலைகள் வெகு தூரம் செல்பவையாகவும் செலுத்தப்படுகின்றன.

—திரு ஆனைவாரி ஆனந்தன் எழுதிய 'பல்துறை அறிவியல்' என்னும் நூலிலிருந்து.

## விளையும் பயிர் :



தஞ்சை மாவட்டம், பொறையாறு தரங்கை பேராயர் ஜுத்திரன் மாணிக்கம் கல்லூரியில் பி. எஸ்சி, கெமிஸ்டிரி, -1 பயிலும் மாணவர் பி.வி.ஸ்ரீநிவாசன்.

இவர் சுவையான துணுக்குகளையும், சிறுகதைகளையும் அவ்வப்போது எழுதி வருகிறார். சமூகத் தொண்டிலும் ஈடுபட்டு வருகிறார்.

# வெண்பாப் போட்டி

## 1 பெண்ணினம் பெற்றதே பேறு

பாரதி பாடியும் பாவேந்தன் போற்றியும்
சீரதிகம் பெற்றிலார் செல்விழியார் - விறுடனே
தன்னேரர் தமிழ்க்கலைஞர் தக்கவிதி செய்ததனால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-புலவர் பெ.சயராமன், கள்ளக்குறிச்சி.

கற்பரசி கண்ணகியால் கன்னிமணி மேகலையால்
நற்புலவர் ஔவையினால் நாச்சியரால் - பொற்புடைய
தென்னவனின் தேவியினால் தேடரிய ஆதிரையால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-புலவர்.நாகு.ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

வள்ளுவரும் பாரதியும் மானப் பெரியாரும்
நல்லறிஞர் அண்ணாவும் நம்கலைஞர் - நல்லுரையும்
மண்ணிற் புதையுண்ட மாண்புகளை மீட்டதனால்
பெண்ணினம் பெற்றதே பேறு'

-புலவர் வெற்றியழகன், சென்னை-5.

போரில் கலிப்பகையார் பொன்னுலகம் போனதனால்
நேரில் திலகவதி நேரிழையார் - ஆருயிரை
அன்னஊடன் போக்கிடவே ஆதரித்த கற்பினால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-இ.கேசவன், காஞ்சிபுரம்.

●●●●●●●●●●●●பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்
புலவர் பெ. சயராமன் எம். ஏ. எட்.,
அரசு ஆடவர் மேனிலைப்பள்ளி கள்ளக்குறிச்சி
தென்னார்க்காடு மாவட்டம்.

'நில்லரசைப் பெற்றோமே நாம்' என்னும் ஈற்றடியுடன் 1970 நவம்பர் முதல் இதழில் வெண்பாப் போட்டியை அறிமுகம் செய்தது 'தமிழரசு'

எண்ணற்ற கவிஞர்கள், புலவர் பெருமக்கள், ஏரான மான வாசகர்கள் எல்லோரும் போட்டியில் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர். அவர்களின் தமிழார்வத்துக்குத் தக்கவகையில் ஊக்கமளித்து வந்தது தமிழரசு.

ஏறக்குறைய 3 ஆண்டுகள் வெற்றிகரமாக நடைபெற்று வந்த வெண்பாப் போட்டியின் ஓட்டத்திற்குச் சிறிது ஓய்வு கொடுக்க விரும்பியதால், 1974 பிப்ரவரி முதல் இதழுடன் அந்தப் பகுதி தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. அப்போது அறிவிக்கப்பெற்ற ஈற்றடி 'தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து' என்பதாகும்.

அந்த ஈற்றடியின் கருத்துப்படியே 15 ஆண்டுகள் கழித்து மீண்டும் வெண்பாவுக்குத் தொண்டாற்ற முன் வந்திருக்கிறது தமிழரசு.

அன்றிருந்த உற்சாகம் கவிஞர் பெருமக்களிடம் இன்றும் அதே அளவில் காணப்படுகிறது என்பதை, நாள்தோறும் அலுவலகத்திற்கு அணிவகுத்துவரும் அஞ்சலட்டைகளின் வாயிலாக அறிந்து மகிழ்கிறோம். பங்குபெறும் கவிஞர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைத்து வெண்பாக்களையும் வெளியிடுவதற்கு இடம் இல்லாததால், அவற்றில் தேர்ந்தெடுக்கப்பெற்ற சில வெண்பாக்கள் மட்டும் வெளியிடப் பெறுகின்றன. இவற்றில் சிறந்த வெண்பாவுக்கு ஓராண்டு இலவசச் சந்தா வழங்கப் படுகிறது.

—ஆசிரியர்

தாய்மை முதலாசான் என்னும் தகுதியினால்
தூய்மைத் தமிழ்க்கலைஞர் தேர்ந்தளித்தார் - ஆய்ந்தளித்த
மன்னோரான் வேலை விழுக்காட்டால் வாழ்நாளில்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கலாவதி குறளன்பன், திருச்சி.1.

ஒங்கிமகள் கன்னத்தில் ஓயாது தாக்கிடினும்
விங்கிடுமே அன்னாள்கை என்றழுவாள் - தீங்கிழைத்த
தன்மகனைத்தானும் தான்நோவாப் பண்பதனால்
பெண்ணினம் பெற்றதே பேறு."

-அ. காந்தி, தேவத்தூர்.

கண்ணெனக் காத்தாள் அமுதீந்தாள் காமுறுநற்
பண்ணிசை செய்தாள் மருந்துண்டாள் - சேய்நோய்க்கு
எண்ணிடில் தெய்வம் இவளல்லான் வேறுளதோ
பெண்ணினம் பெற்றதே பேறு.

-து. நீலகண்டன், வேப்பிலாங்குளம்.

இன்னிய கற்பினால் செம்மைகொள் நெஞ்சினால்
கன்னியம் காக்கும் கடமையால் - மண்ணினில்
எண்ணிலாப் புலவர்கள் ஏற்றமாய்ப் பாடிடப்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கு.வாகீசன், புதுச்சேரி.

சமவேலை வாய்ப்புடன் சீர்கல்வி யோடு
அமையும் மணம்புரிய அன்பால் - சுமைதீர
நன்றிதியும் தான்வழங்கும் நம் அரசின் திட்டத்தால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கா.அமீர்ஜான், திருநின்றவூர்.

கண்ணாகத் தாம்பெற்ற சேயினைச் சீராட்டி
எண்ணிலடங்கா இன்னல் எதிர்நோக்கி - மண்மீதில்
விண்ணவரும் வியக்கும் சான்றோனாய் உருவாக்கும்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-வி.ஆர்.அருணாசலம், உத்திரமேரூர்.

கண்ணுக்குக் கண்ணாய் கருத்தாய் இல்லறத்தை
எண்ணிப் பெருக்கி இடர்நீக்கி - உண்மையாய்
பண்பைப் பெருக்கிப் பகைமை தாவோட்டும்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-இல. தாமோதரன், கோபி.

நன்மக்கள் நல்லதுணை நாள்தோறும் நூலின்
பொன்கருத்தைப் பேணுகின்ற எண்ணம் - இன்சொல்லால்
கண்ணனைய சுற்றம் காத்தே வாழும்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-ஆ. தசரதராமன், கரூர்.

பாரெங்கும் மக்கள் பயன்பெறத் தொண்டாற்றி
ஒரெடுத்துக் காட்டாய் உரைத்திடவே - பேரிலங்கும்
அன்னை தெரசாவால் ஆன்ற புகழ்கொண்டு
பெண்ணினம் பெற்றதே பேறு.

-க.காந்தப்பன், நாட்டரசன்கோட்டை.

கண்ணிலே அன்பும் கருணை உளத்தினிலும்
எண்ணிலா ஏற்றத்தை இன்பமாய்க் - கொண்டிலங்கும்
வண்ணக் களஞ்சியமாய் வாழ்க்கை நலம்படைக்கும்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-பூங்கோவன், கொண்டியம்பதி.

தித்திக்கும் செந்தமிழைத் திக்கெட்டும் சென்றோதி
எத்திக்கும் ஏத்திடவே இந்நாட்டில் - முத்தமிழைக்
கண்ணெனக் காத்தளித்த கண்முகில் ஔவையால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-பாவலர் பாக்கியமணாளன், மட்டப்பாறை.

வாக்கினைக் காப்பாற்றும் வண்டமிழ் நாட்டினிலே
ஆக்கமுடன் ஆரம்பப் பள்ளியில் - ஊக்கமுடன்
பெண்களைக் கல்விதனைப் போதிக்கச் செய்வதனால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-இரா.வேதநாயகம், வடபாதிமங்கலம்.

பெண்ணுரிமைக் காகப் பெரும்பாடு பட்டவராம்
வெண்தாடி வேந்தர் வியப்புறவே - மண்திருத்தும்
எண்ணத்தால் மிக்குயர்ந்த 'எம்பெரியார்' என்றழைத்துப்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-மைதிலிராகவன், திருக்கழுக்குன்றம்.

வேலைவாய்ப்பில் முப்பது விழுக்காடு; வாடும்
ஏழை விதவைத் திருமணங்கள் - சீலமுடன்
பெண்டிர் மறுவாழ்வுத் திட்டங்கள் எண்ணுவீர்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-புலவர் வளவன், வெட்டிவயல்.

போற்றிப் புகழ்ந்திடினும் பொன்நகை பூட்டிடினும்
வேற்றுமை காட்டினோம் பெண்டிர்க்கே - சாற்றுங்கால்
திண்ணமாய் நம்கலைஞர் சொத்துரிமை தந்ததனால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-சொ.பத்மநாபன், சென்னை-4.

எங்கும் மகளிர் எதிலும் மகளிரெனப்
பொங்கும் புதுவாழ்வு பூத்ததுபார் - சங்காலம்
திண்ணமுடன் இந்நாள் திரும்பியதோ என்றிடப்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-புலவர் வ.சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பணியில் ஒதுக்கீடு; பங்குரிமை; துன்பந்
தணிய மணவுதவித் திட்டம் - மணிமொழிகேள்!
கொண்டவன் இல்லார்க்குக் காப்பு; கலைஞரால்
பெண்ணினம் பெற்றதே பேறு

-கந்ததாசன், உயத்துப்பள்ளம்.

வேலைவாய்ப்பில் பெண்கள் விழுக்காடு முப்பதுறப்
பாலைவார்க்கும் செய்தி பகன்றாரே - நீலவான்
கண்மணியாம் எங்கள் கலைஞரின் ஆட்சியிலே
பெண்ணினம் பெற்றதே பேறு.

-பல்லவன், திருக்கழுக்குன்றம்.

தாய்க்குலத்தின் பேர்சொல்லித் தம்மை வளர்த்தவர்கள்
தாய்க்குலத்தைச் சீர்குலைத்தே சென்றார்கள் - தாய்போலும்
பெண்ணுரிமை பேணுகின்ற ஆரூரர் ஆட்சிதனில்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கவிஞர் அன்புதீபன், ரேகடஅள்ளி.

சங்கத் திருந்து சலியா தறமியற்றி
இங்குலகு நீடுநிலைத் தின்புறவே - செங்கமலக்
கண்ணாய்! நிறையருட் சான்றோரை ஈந்தருளும்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-இரா.பழனிசாமி, முளசெம்பட்டி.

பெய்யென்றால் பெய்யும் பெருமழை; நில்லென்றால்
வெய்யோன் பரிகளும் நிற்குமே - உய்த்திடும்
மன்னினம் வாழ்வது மாதரால், தேமொழி
பெண்ணினம் பெற்றதே பேறு.

-புலவர் சு.கப்புக்குட்டி, முளசெம்பட்டி.

மண்ணகத்தில் மாந்தர்தம் மாத்துன்பம் போக்கியருள்
கண்ணொளியால் காசினியைக் காத்தருளி - எண்ணத்தின்
வண்ணத்தால் வான்புகழ்கொள் அன்னை தெரசாவால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-புலவர் க.பழனிச்சாமி, செங்கல்பட்டு.

இல்லான் எனிற்பொருள் ஏதுமில்லான்; நற்குணத்து
இல்லாள் எனிற்புகழ் உள்ளாளாம் - இல்லறம்
கண்டிங்கு வையம் களிப்பதனால் என்றென்றும்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-க. கிருட்டிணமூர்த்தி, அரிமழம்.

அரசுப் பணியில் அரிவையரே நீவிர்
முறையாகப் பெற்றதுதான் முப்பதன்றோ - முத்தமிழின்
கண்ணிகர்த்த கற்பூரச் சொற்கோ கலைஞரால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-மு.சக்கரை நைனா முகமது, மதுரை-2.

தற்கொண்டான் பேணலொடு தக்கநெறி மக்கட்குப்
பொற்புடனே போதித்துப் போற்றலொடு - கற்பினைக்
கண்ணெனக் காத்தலால் காசினியில் என்றென்றும்
பெண்ணினம் பெற்றதே பேறு''

-புலவர் நா.சிவஞானம், தாஞ்சூர்.

'ஆண்மை அரசோச்சும்; ஆங்கடிமை பெண்மை' யெனும்
வேண்டாக் கருத்தின்று வீழ்ந்ததே - யாண்டுமே
பெண்ணினத்தின் முன்னேற்றம் பேணுகின்ற நம்அரசால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கவிஞர் வெற்றிப்பேரொளி, திருக்குவளை.

நேயமுடன் நம்முதல்வர் நெஞ்சுருக்கும் திட்டத்தால்
தாய்க்குலம் தாமோங்கிச் சீர்பெறுமே - தேயமதில்
எண்ணரிய வாய்ப்புடனும் ஏற்றஞ்சேர் மாற்றமிதால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கவிஞர். ப. கோவிந்தராசு, ஈரோடு-1.

கல்வியொடு வேலைவாய்ப்பு, கல்யாணம் போன்றவற்றில்
நல்சலுகை காட்டினர்காண் நம்கலைஞர் - தொல்சொத்தில்
பெண்ணுரிமை, பேறுகாலப், பேருதவி இன்னவற்றால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-சி.எஸ்.கோமதிசங்கர், போளூர்.

-மீதிவெண்பாக்கள் அடுத்த இதழில்

மிகவும்
பிற்படுத்தப்பட்டோர்
மேன்மையுற...

# 20 சதவிகித இட ஒதுக்கீடு

அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட சரித்திரத்தை உள்ளடக்கிய இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு, அதனுடைய வரலாற்றில் முதன் முதலாக அந்த மக்களுடைய பிரச் சினைகளை ஆராய்ந்து என்னென்ன செய்யலாம் என்று அறிந்து அறிக்கை தருகின்ற ஒரு குழு தி.மு. கழக ஆட்சி யிலேதான் சட்டநாதன் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் அம்பா சங்கர் கமிஷன் அமைக்கப் பட்டது.

இந்த இரண்டு கமிஷன்கள் தந்த அறிக்கையில் சட்டநாதன் தந்த அறிக்கையிலே பலவற்றை முன்பு கழக அரசு நிறைவேற்றியது. ஆனால் அம்பா சங்கர் கமிஷன் அறிக்கை பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளான காரணத்தால் அதை நடைமுறைப்படுத்துவதிலே பல சங்கடங்கள் இருப்பதாகக் கடந்த காலத்திலே அந்த அரசு அறிவித்தது. அந்த அறிக்கைகூட இன்னும் வெளியிடப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். இவ்வளவு இடஒதுக்கீட்டிற்குப் பிறகும் பிற்படுத்தப்பட்ட மக்களிடையே ஒரு சாரார், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கின்ற நிலையை உணரத் தலைப்பட்டார்கள்.

நாம்கூட நகர்ப்பகுதிகளைப் பற்றி மட்டும் பார்க்காமல், தென்னார்க்காடு மாவட்டத்திலோ, வடஆர்க்காடு மாவட்டத்திலோ, சேலம் மாவட்டத்திலோ கொஞ்சம் உட்பகுதிகளுக்குச் சென்று பார்த்தால் பிற்படுத்தப்பட்ட மக்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களா? அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களா? என்று வேறுபாடு தெரியாத அளவிற்குத்தான் அவர்களுடைய வாழ்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுதான் அவர்களுடைய இன்றைய வாழ்வு. அந்த நிலையின் காரணமாகத்தான் ஆதி திராவிட மக்களுக்கு என்னென்ன சலுகைகள் கிடைக்கிறதோ அந்தச் சலுகைகளில் முக்கால் பகுதியாவது தங்களுக்குக் கிடைக்க வேண்டும்; இட ஒதுக்கீடு செய்யப்பட்டும்கூட தங்களிலே ஒரு பெரும் பகுதியினர் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்ற மனக் கொதிப்பை அவர்கள் வெளியிட்டார்கள்.

## வெண்பாப் போட்டி-2

ஈற்றடி: நவிந்தாரும் பெற்றார் நலன்

வெண்பா வந்து சேர வேண்டிய இறுதிநாள்: 15-6-'89

தகுதி படைத்த வெண்பாக்கள் வெளியிடப் பெறும். அவற்றில் பரிசு பெற்ற வெண்பாவை எழுதியவருக்கு ஓராண்டு 'தமிழரசு' இலவசமாக அனுப்பப்பெறும்.

குறிப்பு:
அஞ்சலட்டையில் வெண்பா எழுதி அனுப்பினால் போதும்.
நேரிசை வெண்பாக்களே அனுப்பப் பெறல் வேண்டும்.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002

அந்த மனக் கொதிப்பை நான் குறைத்து மதிப்பிட மாட்டேன். அது இயல்பானது.

எனவேதான் கடந்த காலத்திலே இருந்த அரசுகள் உடனடியாகச் செய்ய முன்வராத அந்தக் காரியத்தை, கழக அரசு பொறுப்பேற்றதும் அது குறித்து ஆலோசனை நடத்தி இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம்.

### கமிட்டி தேவையா?

கிளர்ச்சி நடத்துவேன் என்கிறார்கள். நடத்துவேன் என்றால் நடத்தி விட்டுப் போங்களேன். எனக்கென்ன? பழைய நிலை நீடிக்கும் என்று சொல்லி விட்டு நான் போய்விடலாம். மறுபடியும் மக்கள் கணக்கெடுக்க ஒரு கமிட்டியைப் போட்டுவிட்டுப் போகலாம். அப்படி ஒரு கமிட்டியை நான் போட்டு விட்டால் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுக் காலம் அதன்பணி நடைபெற்று அதற்குப் பிறகு அந்தக் கணக்கெடுப்பு கையிலே கொடுக்கப்பட்டு, அதில் எது சரி, எது தவறு என்று ஒவ்வொரு வகுப்பாரும் போரிட்டு, குரலெழுப்பி, காரியம் நடக்காமல் இருப்பதற்கு வேண்டுமானால் இந்த கமிட்டியைப் போடலாம்.

கல்கி அழகாகச் சொல்வார். ஒரு காரியத்தைப் பற்றி பிரச்சினை எழுமேயானால் ஒரு கமிட்டியைப் போட்டு விடு. இல்லாவிட்டால் அதன் தலையிலே ஒரு கல்லைப் போடு என்று சொல்வார். அதைப்போல வேண்டுமானால் கமிட்டியைப் போடலாம். சில உருப்படியான காரியங்களுக்குத்தான் கமிட்டி போடப்பட வேண்டும். நம்மால் முடியாது. சில பிரச்சினை, சில சிக்கல் வந்து விட்டது என்று தப்பித்துக் கொள்ள வேண்டுமேயானால் மீண்டும் ஒரு கமிட்டியைப் போட்டுக் கணக்கெடுங்கள் என்று சொல்லலாம்.

எம்.ஜி.ஆர். அவர்கள் எல்லாச் சாதிக்காரர்களையும் அழைத்துப் பேசினார் என்று குறிப்பிட்டார்கள். அப்படிப் பேசியபோது அவர்கள் கண்ட உண்மை என்ன? ஒவ்வொருவரும் சொன்ன அவரவர்களுடைய வகுப்பின் கணக்கின்படி தமிழ்நாட்டிலே ஐந்து கோடி மக்கள் அல்ல; இருபது கோடி மக்கள் இருப்பதாக ஒரு புதிய கணக்கு வந்தது. அதற்குப் பிறகு என்ன செய்ய முடியும்?

அதைப்போலவே அதற்கடுத்து கவர்னர் அலெக்சாண்டர் அவர்கள் ஒருநபர் குழு ஒன்றை நியமித்து இந்தக் கணக்கெடுப்பைச்செய்யவேண்டுமென்று அறிவித்தார். அதைக் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளே கூட ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த ஒரு நபர் குழுவே வேண்டாம். மீண்டும் கணக்கெடுக்கின்ற வேலை வேண்டாம் என்று நண்பர் ராமதாஸேகூட வெளிப்படையாக அறிக்கை விடுத்தார்.

அவர் என்னிடத்திலே வந்து பேசியபோது "கம்பார்ட்மெண்டல் ரிசர்வேஷன்" தேவை என்பதை வலியுறுத்தினார்.

கொடுத்தவர்கள் நாம் என்பதை மறந்துவிடக் கூடாது.

எனவேதான் இப்போது சொல்லப்பட்டிருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் 107 சாதிகளுக்கு 20 சதவிகிதம் கொடுத்திருக்கிறீர்கள் என்று கூறுகிறார்கள். இதிலே சாதி எண்ணிக்கை மாத்திரம் பார்க்கக்கூடாது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில்கூட வன்னியர் உள்ளிட்ட மொத்தம் 39 வகுப்புகள் உள்ளன. இந்தப் பட்டியல் 31.1.57 தேதியிட்ட அரசாணையில் வெளியிடப்பட்டதாகும். இதே அவையில் பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது தான் இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல், 39 பேர் எண்ணிக்கை கொண்ட பட்டியல் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு 30.7.85ல் மீண்டும் அந்தப்பட்டியல் அப்போதிருந்த அரசால் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. இதில் வன்னியப் பெருங்குடிமக்கள் பெரும்பான்மையோராவர். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரான 39 வகுப்பினரின் மொத்த மக்கள் தொகை 105 இலட்சம். இந்த 105 இலட்சத்தில் வன்னியர்கள் மாத்திரம் 65 இலட்சம் பேர். ஏனைய 38 வகுப்பினரும் சேர்ந்த மக்கள் தொகை 40 இலட்சம் தான். அதே 38 வகுப்பில் ஒருசில வகுப்பினரின் மக்கள்தொகை எவ்வளவு தெரியுமா?

| | |
|---|---|
| நரிக்குறவர் | 20,162 |
| ஜோகி | 19,848 |
| யோகீஸ்வரர் | 18,618 |
| தாசரி | 15,907 |
| பட்ராஜு | 15,700 |
| ஸ்ரீவைஷ்ணவா | 15,354 |
| தொண்டமான் | 14,038 |
| குன்னுவர் மன்னாடி | 11,055 |
| நோக்கர் | 7,559 |
| மகேந்திரா | 7,418 |
| பேஸ்தா சிவியர் | 7,063 |
| மொண்டு நடன் செட்டி | 6,254 |
| மொண்டு கொல்லா | 5,700 |
| புன்னான் வேட்டுவ கவுண்டர் | 1,562 |

### வன்முறை வேண்டாம்

"வன்முறைகள் நடைபெறுகிற நேரத்தில், ஆட்சியாளர்கள் கைகட்டிச் சொண்டு வாளாவிருக்க முடியாது; வேண்டுமென்றே இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும். இந்த ஆட்சிக்குச் சிக்கலை ஏற்படுத்த வேண்டும். எத்தனை நல்ல திட்டங்கள் இந்த நாட்டு மக்களுக்காக இந்த மாநில [illegible] இந்த ஆட்சியின் [illegible] அவைகளுக்கெல்லாம் மாறாக ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்து வன்முறைகளிலே ஈடுபட்டு, ஒவ்வொரு நாளும் ஒரு பேருந்தாவது கொளுத்தப்பட வேண்டும் என்ற முறையிலே சிலர் ஈடுபடுவார்களேயானால் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது."

-மாண்புமிகு முதல்வர் கலைஞர் (12-5-89-சட்டமன்ற உரையிலிருந்து)

கர்நாடகத்திலே இருப்பதைப் போல வேண்டுமென்றார்கள். நான்கூட தொடக்கத்திலே - கடந்த ஆண்டில் - கர்நாடகம், ஆந்திரா, கேரளா போன்ற இடங்களிலே கூட இட ஒதுக்கீடு முறைகளைப் பரிசீலித்துப் பார்த்துவிட்டு இந்த அரசுகூட அதன்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னேன். அந்த அரசு செய்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அவைகளையெல்லாம் வாங்கிப் படித்துப் பார்த்தேன். கர்நாடகத்திலே இருக்கின்ற கம்பார்ட்மெண்ட் முறை தமிழ்நாட்டிலே புகுத்தப்பட்டால் ஒரு பெரிய கிளர்ச்சியே வரும். ஏனென்றால் அங்கே முக்கால் பகுதி பொருளாதார அடிப்படையிலேதான். பொருளாதார உச்சவரம்பை வைத்துத்தான் அங்கே இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதைத் தமிழ்நாடு என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது. அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதற்கு உரக்கக் குரல்

இப்படி இவ்வளவு சாதிகள்! 107 சாதிகள் என்று சொல்லி விட்டால் போதாது.

மொத்த மக்கள் தொகை எவ்வளவு என்று பார்க்க வேண்டும். மொத்த மக்கள் தொகையில், இந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகையில் வன்னியர்கள் 65 இலட்சம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே தான் வகுப்புகளின் எண்ணிக்கை 107 ஆக இருந்தாலும்கூட, பெரும்பாலும் இந்த ஒதுக்கீட்டின் பயனை அனுபவிக்கப் போகிறவர்கள் 65 இலட்சம் பேர் கொண்ட வன்னியர்களும் மற்றும் ஒரு சில வகுப்பினர்களும் குறிப்பாக அம்பலக்காரர், சலவைத் தொழிலாளர், மருத்துவர், ஒட்டர், வலையர், மீனவர், ஆண்டிப்பண்டாரம், குறும்பர், வேட்டுவ கவுண்டர், சீர்மரபினரில் பிரமலைக் கள்ளர், மறவர் ஆகியோரும்தான்.

### அநீதி யாருக்கும் இல்லை

இதுவரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இருந்த அனைத்து வகுப்பினரின் மக்கள் தொகை 339.68 இலட்சம் பேர். இந்த 339.68 இலட்சம் மக்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்தது 50 சதவிகிதம்தான். இந்த 339.68 இலட்சம் பேரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மக்கள் தொகை 122.19 லட்சம். 339.68 இலட்சம் பேருக்கு 50 சதவிகிதம் என்ற வகையில் 122.19 லட்சம் பேருக்கு எத்தனை சதவிகிதம் ஒதுக்கியிருக்க வேண்டுமென்றால், 18½ சதவிகிதம் ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் இவர்களுக்கு இப்போது நாம் ஒதுக்கியிருப்பது 20 சதவிகிதமாகும்.

எனவே வன்னியர் உள்ளிட்ட மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு நான் இப்போது சொன்ன கணக்கினைப் பார்க்கும்போது அவர்களுக்கு ஒதுக்கியிருப்பது குறைவானதல்ல. கிட்டத்தட்ட ஒரு கோடியே சொச்சம் பேருக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகிதம் என்றும், இரண்டு கோடியே சொச்சம் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவிகிதம் என்றும் பிரித்திருக்கின்ற கணக்கைப் பார்க்கும்போது இதில் எந்த அநீதியும் நடந்து விடவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

### பாராட்டும் புகழாரமும்

நம்முடைய மாநிலத்திலே உள்ள ஏடுகள் மாத்திரமல்லாமல், வெளி மாநிலத்திலே உள்ள ஏடுகள் - குறிப்பாக புதுடெல்லியிலிருந்து வெளிவருகின்ற 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏடு தலையங்கத்திலேயே ...

பெருமை என்பது பலத்தில் மட்டும் இல்லை; இருக்கிற பலத்தை ஒழுங்காகப் பயன்படுத்தும் விதத்தில்தான் இருக்கிறது.

—பிரயண்ட்

'அரசாங்க வேலைகளிலும், கல்வி நிலையங்களிலும் தங்களுக்கு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்ற வன்னிய சமூகத்தின் கோரிக்கை மீது, தமிழக அரசு மிகவும் அறிவுபூர்வமான ஒரு வழியைக் கையாண்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு ஏற்கெனவே இருந்து வரும் 50 சதவிகித ஒதுக்கீட்டுக்குள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 20 சதவிகிதத்தை ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனியாக இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கம்பார்ட்மெண்டல் ஒதுக்கீட்டு முறையை முதலமைச்சர் கருணாநிதி நிராகரித்துள்ளார். கம்பார்ட்மெண்ட் ஒதுக்கீட்டு முறையை ஏற்றுக்கொள்ளுவது கிணறு வெட்ட பூதம் கிளம்பும் கதையாகிவிடும். வன்னியர்களுக்கு, கூடியவரை அதிகபட்சமாக என்ன செய்ய முடியுமோ அதை அரசு செய்து விட்டிருக்கிறது என்று திரு. கருணாநிதி கூறியிருப்பது மிகைக் கூற்றல்ல.'

'வன்னியர் சங்கத்தலைவர் திரு. எஸ். ராமதாஸ் இதை இந்த வகையில் காணத் தயாராயில்லை என்றால், அதற்குக் காரணம், மாநில அரசு வேலைகளில் 20 சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று, அவர் அளவுக்குமீறி அதிகமாக கோரிக்கை எழுப்பி விருப்பதுதான். அரசாங்கத்தின் அனுபவ சாத்தியமான அணுகுமுறையை அவர் ஒரேயடியாக நிராகரித்து விட்டிருப்பது வன்னியர் சங்கத்தின் உருட்டல் மிரட்டலைச் சமாளிப்பதில் திரு. கருணாநிதியின் கரங்களைப் பலப்படுத்துவதாகத்தான் அமையும்.'

என்று எழுதியுள்ளது.

பெங்களூரிலிருந்து வெளிவரும் 'எக்னாமிக் டைம்ஸ்' ஏடு, "A JUST SOLUTION" என்ற தலையங்கத்தில்:

'தமிழகத்திலுள்ள தி.மு.க. அரசாங்கம் பள்ளிகளில் மற்றும் அரசாங்க வேலைகளில் சேர அறிவித்துள்ள புதிய ஒதுக்கீட்டுக் கொள்கை அர்த்தமுள்ளதாகவும், நேர்மையானதாகவும் உள்ளது. தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் வன்னியர் பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு ஒன்று காணப்படும் என்று திரு கருணாநிதி உறுதி அளித்திருந்தார். காலம் அதிகமாகும் என்பதால் புத்திசாலித்தனமாக "சென்ஸஸ்" எடுக்கும் திட்டத்தை கைவிட்டு விட்டார். இருந்தபோதிலும் வன்னியர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் தனது திட்டத்தை அவர் அறிவித்தார். அவ்வாறு அவர் அறிவித்தவுடனேயே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகத் தனியான துறை ஒன்றையே அவர் ஏற்படுத்தியுள்ளார்.

'ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட சாதிக்கும் அடுக்குமுறை ஒதுக்கீடு வேண்டும் (கம்பார்ட்மெண்டலைஸ்டு ரிசர்வேஷன்) என்று வன்னியர் சங்கம் வலியுறுத்துகிறது. இது நடைமுறைப்படுத்தக் கூடியதல்ல என்பதோடு விரும்பத் தக்கதல்ல. ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியாக ஒதுக்கீடு செய்வதென்றால் நிச்சயம் சாத்தியமல்ல. புதிய அரசாங்கத்தின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை நடைமுறை சாத்தியமானதாகும். பொருத்தமானதாகும்.'

- என்று எழுதியிருக்கிறது.

அதைப்போலவே சட்டநாதன் அவர்களின் கருத்தும் இதற்கு ஆதரவான கருத்தாக வெளிப்பட்டது. அம்பாசங்கர் அவர்களுடைய கருத்தும் அப்படியே வெளிப்பட்டது. பெரியவர் மாணிக்கவேலருடைய கருத்தும் அவ்வாறே வெளிப்பட்டது. வன்னிய அடிகளாருடைய கருத்தும் அவ்வாறே வெளிப்பட்டிருக்கின்றது.

ஏடுகளும், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்களும் கழக அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டியிருக்கிறார்கள்.

### செயல்படுத்துவோம்!

### சிக்கல் இருந்தால் சிந்திப்போம்!

இருபது சதவிகிதம் என்பது போதாது என்று சொல்வதிலே, அவர்கள் சில நியாயங்களை இங்கே எடுத்து வைப்பார்களேயானால், அதை நான் பிராக்டிகலாக, பரீட்சார்த்தமாக - இந்த ஆண்டிலே நடத்திப் பார்த்துவிட்டு அதற்குமேல் குறைகள் இருக்குமேயானால், அடுத்த ஆண்டில் அதைத் திருத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலை நமக்கு ஏற்படாமல் போகாது. திருத்தித்தான் தீர வேண்டுமென்றால், இல்லை இல்லை, நாங்கள் செய்தது செய்தது

தான். அப்படியே தான் இருக்க வேண்டுமென்று - பிற்படுத்தப்பட்ட மக்களை, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை, சீர்மரபினரைக் கைவிட்டு விடக் கூடிய அரசு அல்ல இந்த அரசு என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே— எங்களைக் கேட்டாரா? அழைத்தாரா? அதனால்தான் போராட்டம் நடத்துகிறோம்-என்பதற்கெல்லாம் இடம் இல்லாத வகையில் நான் அழைத்துப் பேசியிருக்கிறேன். அவரே ஒரு அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார், நம்முடைய அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் அவரும் என்னைச் சந்தித்து நீண்டநேரம் உரையாடியதையெல்லாம் அவரே சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதற்கும், நான் வெளியிட்டிருப்பதற்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை.

இருப்பினும் இப்போதும் இந்த அவையின் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். பொறுத்திருங்கள். இந்த முடிவினைச் சோதித்துப் பார்ப்போம். வருகின்ற மாதங்களில் நடைபெறுகின்ற கல்வி, வேலைவாய்ப்பு போன்றவைகளிலே மீண்டும்-மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் சீர் மரபினரும்
ஏமாற்றப்படுவார்களேயானால்
அதற்கு மேலும் அவர்களை எப்படியும் காப்பாற்றித் தீர வேண்டும், அவர்களைக் கைதூக்கி விட வேண்டுமென்ற கருத்தோடுதான் இந்த அரசு நடைபோடும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொண்டு - கிளர்ச்சிகளைக் கைவிட்டு-பொறுத்திருந்து பார்த்து அதிலும் நல்ல காரியங்கள் நடைபெறவில்லை என்றால், இந்த மக்கள் வாழ்வதற்கான வழி கிடைக்கவில்லை என்றால், அவர்களுக்கு முன்னேற்றப்பாதை மீண்டும் தடுக்கப்படுகிறதென்றால் மறுபடியும் இந்த அரசு அதைப்பற்றிச் சிந்திக்க மறுக்காது; எனவே, போராட்டங்கள் தேவையில்லை என்பதை இந்த அவையின் சார்பிலே நான் ஒரு வேண்டுகோளாக விடுத்து, இந்த மானியக்கோரிக்கை மீது கருத்துக்களை எடுத்துரைத்த எல்லாக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும்என் இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த 22.4.1989 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)**

# மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினேன்!

## பார்த்தோம் படித்தோம்

'தமிழரசு' 16-4-89 இதழில், குழந்தைக் கவிஞரைப் பற்றி ஒரு வரலாற்றையே எழுதி அவருக்குப் பெருமை சேர்த்திருக்கிறீர்கள்; மனமுவந்த பாராட்டுகள்.

-பட்டுக்கோட்டை குமாரவேல்
சென்னை-4.

(பரங்கிப்பேட்டை, கே. சம்பத்குமாரும் இதேபோல் எழுதியுள்ளார்)

---

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு 20 சதவிகித இட-ஒதுக்கீடு வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரைப் பாராட்டி பேட்டி அளித்திருந்த வன்னியர் சங்கத் தலைவர் வன்னிய அடிகளார், முதலாம் பிற்பட்டோர் நலக்குழுத் தலைவர் ஏ. என். சட்டநாதன், இரண்டாம் பிற்பட்டோர் நலக்குழுத் தலைவர் ஜெ. ஏ. அம்பாசங்கர், சட்டமேலவை முன்னாள் தலைவர் எம்.ஏ. மாணிக்க வேலர், தேவர் கல்வி அறக்கட்டளைத் தலைவர் பொன். பரமகுரு ஆகியோருக்கு இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-அ. சாம்பசிவம்
தலைவர்,
வன்னிய மாணவர் நலக் கழகம்,
சென்னை-12.

---

மகளிர் நல மேம்பாட்டிற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள முத்தான நல்வழித் திட்டங்களைத் தமிழரசில் படித்து அளவிலா மகிழ்ச்சியடைந்தேன்.

-மு.க. வெற்றிவேல்
உதயமார்த்தாண்டபுரம்.

---

'தமிழரசு' 16-4-89 இதழ், அட்டைப்படம் பிரமாதம். 'புதிய சொற்கள் படைப்போம், அரிய தமிழை வளர்ப்போம்' என்ற முதல்வர் கலைஞரின் விளக்கஉரை அற்புதம்.

-துரை கிருஷ்ணகுமார்
நெரூர்-கரூர்

(திருப்புறம்பியம் மருத. செந்தில்வேலவனும் இதனைப் பாராட்டி எழுதியிருக்கிறார்.)

---

கலைநயத்தோடு இருந்தது அட்டைப்படம். மாணவர் பக்கம் எங்கள் மனதைக் கவர்கிறது.

-எஸ். கிரி,
அகரம்-பரங்கிப்பேட்டை

---

'ஆறு' பற்றிய கவிதை அருமையாக இருந்தது. இதுபோன்ற மரபுக் கவிதைகள் தொடர்ந்து தமிழரசில் இடம் பெற வேண்டும்.

-வெ. நாகராசன்,
தென் எலப்பாக்கம்.

---

'நிலாப் பாட்டு' என்ற இலக்கிய விருந்து மிகவும் நன்றாக இருந்தது. நீண்ட காலத்திற்குப் பிறகு 'தமிழரசு' மூலம் நல்ல இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து படிக்க முடிகிறது.

-எம். முருகன்,
வில்வாரணி மோட்டூர்.

---

வரவர, 'தமிழரசு' இதழ் ஒவ்வொன்றும் போற்றிப் பாதுகாக்கத் தகுந்த அரிய பெரிய புதையலாகத் திகழ்கிறது. வாழ்த்துக்கள்.

-டி. ரமேஷ்குமார்,
பரங்கிப்பேட்டை.

---

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையைத் தெளிவாக வெளியிட்டிருந்தீர்கள். ஈரோடு நாணயவியல் கண்காட்சி-கட்டுரை பயனுடைய தாக இருந்தது.

-ஏ. கந்தசாமி
திருப்பூர்.

---

முதல்வர் கலைஞர் அவர்களின் புத்தாண்டுச் செய்தியை, அவர் கையெழுத்திலேயே வெளியிட்டிருந்தது கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினேன். டாக்டர் கலைஞர் அவர்கள் எழுத்தோவியங்களைத் தமிழரசில் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

-வெ. சங்கரநாராயணன்,
திருவண்ணாமலை.

---

கீழ்பவானி பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வளரும் வேளாண்மை பற்றிய கட்டுரைகள் என்போன்ற விவசாயிகளுக்குப் பயனுள்ளவைகளாகும். விவசாயத்திற்காகத் 'தமிழரசில்' இன்னும் அதிக பக்கங்கள் ஒதுக்கினால் நல்லது.

-பா.மா. வெங்கடாசலபதி
செயலாளர்,
பெரியார் மாவட்ட
உழவர் விவாதக் குழு அமைப்பாளர் சங்கம்,
பாப்பாங்காட்டூர்.



## செய்திப் படம்



நேரு புதுவை ஆளுநர் திரு. ரஞ்சித் சிங் தயாள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்தார் [30-4-89].

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள், கரும்பாலை நிர்வாகிகள்-பிரதிநிதிகளுடன் முக்கியப் பேச்சு வார்த்தை நடத்தினார் [4-5-89].





தமிழ்நாடு கூட்டுறவு பால் விற்பனையாளர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நுகர்வோர் சந்திப்பில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு கே. என். நேரு அவர்களும், திரு என். கணபதி, எம்.எல்.ஏ., அவர்களும், கலந்து கொண்டனர் [29-4-89].

மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் டாக்டர் ஆர். இராமகிருஷ்ணன் அவர்கள், 238 ஆதிதிராவிட குடும்பங்களுக்குத் தண்டலம் கிராமத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்கினார் [7-5-89].






சென்னையில், மகளிர் அரிமா சங்கம் ஏற்பாடு செய்த இரத்த தான முகாமை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்னுசாமி அவர்கள், அரசு தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார் [12-5-89].

தமிழ்நாட்டின் வறட்சி நிலையை ஆய்வுசெய்ய வந்த மத்திய வறட்சிக் குழுவினர், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள் [13-5-89].



> அறநிலையத் துறையின் பணிகள்
> இப்போது செம்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன.
> ஏழாண்டுகளுக்குப்பிறகு, ஓட்டப்பட்டிருக்கிறது திருவாரூர் ஆழித்தேர்.
> சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் அதே அமைப்பில் உருவாக்கப்பட்டதுதான்!



# ஆரூரில் தேரோட்டம்

**இரண்டாம் ஆட்டை சொல்லும் செய்தி:**

'கடவுளை யார் ___ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது முக்கியமல்ல; கடவுள் யாரை ஏற்றுக் கொள்கிறார் என்பதே முக்கியம்' என்ற கருத்துக்குச் சொந்தக்காரரான மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 1969-இல் தமிழ்நாட்டின் முதலமைச்சரான பிறகு, தமிழகத்தில் நடைபெற்ற அறநிலையத் துறை சார்ந்த ஆக்கப்பணிகள் ஏராளம், ஏராளம்.

குறிப்பாகச் சொல்வதானால்-

திருவண்ணாமலையில் ஐம்பது இலட்சம் ரூபாய் செலவில் ஆலயத்திருப்பணி நடைபெற்றது. ஆறு இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் அக்கோயிலின் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மதுரை மாநகரில் உள்ள கூடலழகர் கோயில் திருப்பணி முடிவுற்று, அக்கோயிலில் கும்பாபிஷேகமும் சிறப்புற நடைபெற்றது. 'கூடலழகர் கோயில் வரலாறு தெரிந்த காலத்திலிருந்து அக்கோயிலுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்' என்று 'தினமணி' ஏடு அப்போது சிறப்புக் குறிப்பே எழுதியது.

காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் கோயில் கும்பாபிஷேகமும் கோலாகலமாக நிறைவேறியது.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், சென்னையில் உள்ள பார்த்தசாரதி கோயில், வடபழனி ஆண்டவர் கோயில், பேரூர் பட்டிப் பெருமாள் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில், கொடுமுடி மகுடேசுவர சுவாமி கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில், சுவாமிமலை முருகன் கோயில் ஆகியவற்றின் குடமுழுக்குகள் நடைபெற்றன.

திருவாரூர், திருவில்லிப்புத்தூர் போன்ற ஊர்களில், ஓடாமல் நின்றிருந்த திருத்தேர்கள் ஓடுவதற்கு வகை செய்யப்பட்டது.

சில தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்திலிருந்த ஆலயங்களையும், நிறுவனங்களையும், சொத்துக்களையும் காப்பாற்ற ஓர் ஆய்வு நடத்தும்படி அப்போதைய அரசு 1970-இல் ஆணை பிறப்பித்தது. அதையொட்டி, அறநிலையத் துறை எடுத்த நடவடிக்கையின் காரணமாக இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களும், அறுபத்தையாயிரம் ஏக்கர் நிலங்களும் அறநிலையத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டன. 41,306 அறநிலையங்களும், அவைகளுக்குச் சொந்தமான 2,01,343 ஏக்கர் நிலமும் தனியார் ஆதிக்கத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான அறநிலையத் துறை ஊழியர்களின் ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. ஆலய ஊழியர், பணிக் காலத்தில் இறந்து விட்டால்- குடும்ப நிதியளிக்கும் குடும்பப் பாதுகாப்புத் திட்டமும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

சமூக நலத்துறை தொடர்பான பணிகள், ஊனமுற்றோர் உதவி, ஆதரவற்றோர்க்கு நல்வாழ்வு, கண்ணொளித் திட்டம், கருணை இல்லம் போன்ற பல நற்பணிகளுக்கும் ஆலயங்கள் பயன்படுத்தப்பட்டன.

'இறைவனின் முன்னே அனைவரும் சமம்' என்பதை மெய்ப்பிக்கும் வகையில், கோயில் அறங்காவலர் குழுவில் ஒரு ஆதி திராவிடப் பிரதிநிதி கட்டாயம் இருந்தாக வேண்டும் என்று அன்றைய அரசு விதி செய்தது.

ஏழை எளியவர் திருமண விழாக்கான என்பது திருமண மண்டபங்கள், ஆலய நிதியில் கட்டப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் மேலாக-1970-இல் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோதுதான், அறநிலையத் துறை விரிவுபடுத்தப்பட்டது. தனியாக அறநிலையத் துறை அமைச்சர் பதவியும் உருவாக்கப்பட்டது. அந்தத் துறை பற்றிய விவாதங்கள் சட்டசபையில் நடைபெறக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டது.

1967-இல் தமிழ்நாட்டுக் கோயில்களின் வருமானம், ஆண்டொன்றுக்கு மொத்தம் 3 கோடி ரூபாய் அளவிற்கே இருந்தது. 1975-76இல் அந்த வருமானம் 12 கோடி ரூபாயாக உயர்ந்தது.

கலைஞர் அவர்கள், பன்னிரண்டாண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இப்போதும் அறநிலையப் பணிகள், முழு வேகத்துடனேயே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்து அறநிலையத் துறையைச் செம்மைப்படுத்தவும் அனைத்துத் திருக்கோயில்களின் பணிகளும் செவ்வனே நடைபெறவும் சமயச் சான்றோர்களுடன் கலந்து பேசி, நல்ல முடிவெடுக்க அரசு தீர்மானித்தது. அதன் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் தலைமையில், சமயச் சான்றோர்கள் கருத்துரை வழங்கும் ஆலோசனைக் கூட்டம் 10-3-89 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அதன்பின், அறநிலையத் துறை ஆலோசனைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்த ஐவர் குழு மூன்று மாதத்திற்குள்ளாக அறிக்கை தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அத்துறையின் ஆக்கப் பணிகள் தங்கு தடையின்றித் தொடருவதில் தீவிரம் காட்டி வருகிறார். தேங்கி நின்ற அறநிலையத் துறைப் பணிகள் தெம்போடும் முழுவேகத்தோடும் ராஜநடை போடத் துவங்கியுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூர், சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த ஊர் மட்டுமல்ல; சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த பெருமை பெற்ற ஊருமாகும்.

ஆன்மீகப் பெருமக்களால், சைவ சமயத்தின் தலைமைப் பீடம் என்று போற்றிப் புகழப்படும் திருவாரூரில் உள்ள அருள்மிகுதியாகராஜ சுவாமி திருக்கோயில் மற்றும் கோயில் திருக்குளமான கமலாலயம் ஆகியவை ஆரூருக்கு அணி சேர்ப்பவைகளாகும்.

> பேசாமலே இருப்பவன் ஊமை; எப்போதும் பேசிக்கொண்டிருப்பவன் வாயாடி;பேச வேண்டிய இடத்தில் மட்டுமே பேசுபவன் அறிவாளி.
>
> —நிகல்சன்.

சைவத் திருக்கூட்டத்தாரால் போற்றப்பட்டதும், திருமுறைகளில் அதிகமான பாடல்களால் புகழப்பட்டதுமான திருவாரூர்க் கோயிலுக்குத் தேர் ஒன்று உண்டு.

தமிழகத்திலேயே மிகப் பெரிய தேர் என்பதனால், அப்பர் சுவாமிகளால் 'ஆழித்தேர்' எனப் புகழாரம் சூட்டப்பெற்றது, திருவாரூர் கோயில் தேர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமயக்குரவர்களான திருஞானசம்பந்தர் பெருமானும், திருநாவுக்கரசு சுவாமிகளும் தேரில் இருந்து இத்திருக்கோயில் தேர்விழாவை நடத்தினார்கள் என்பது வரலாறு.

ஆண்டுதோறும் வரும் தைத் திங்களில், பூச நட்சத்திர நாளில் திருஞானசம்பந்தர் தேர் விழாவிற்கான பந்தக்கால் முகூர்த்தத்தைச் செய்ததாகவும் திருநாவுக்கரசு சுவாமிகள் பங்குனிப் பெருவிழா ஆகியவைகளை முன்னின்று நடத்தியதாகவும் வரலாறு தெரிவிக்கின்றது.



'ஆழித்தேர்' வித்தகனை யான் கண்டதாரூரே' என்று பாடியிருக்கிறார் திருநாவுக்கரசர்.

இத்தகைய சிறப்புமிக்க இத்தேர்த் திருவிழா 1945-ஆம் ஆண்டிற்குப் பின் பல்வேறு இடையூறுகளால் 25 ஆண்டுக்காலம் முறைப்படி நடைபெறவில்லை. இதன் பின்பு, கடந்த 1970-ஆம் ஆண்டில், தற்போதைய தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால், முதன்முறையாக 28-4-1970 அன்று சீரும் சிறப்புமாக மீண்டும் நடைபெற்றது.

அவ்வாறு இவ்விழா 25 ஆண்டுகளின் பின்பு நடைபெற்றபோது திருச்சிராப்பள்ளியில் உள்ள 'பெல்' நிறுவனத்தின் மூலம் ஆழித்தேர் பெருமளவு மாற்றம் பெற்றது. புதிய இரும்புச் சக்கரங்களும் அச்சுகளும் அதில் பொருத்தப்பட்டன. சக்கரம் சுழல்வதைக் கட்டுப்படுத்த 'ஹைடிராலிக் பிரேக்' முதலியவை பொருத்தி நவீனப்படுத்தப்பட்டது.

இக்கோவிலுக்குச் சொந்தமான அருள்மிகு, விநாயகர், அருள்மிகு தியாகராஜர், அருள்மிகு சுப்பிரமணியர், அருள்மிகு சண்டிகேசுவரர்க்குரிய நான்கு தேர்களும்கூட அதேபோல நவீனப்படுத்தப்பட்டன.

இவ்வாறு நவீனப்படுத்தப்பட்டதால், 1945-ஆம் ஆண்டிற்கு முன்னர் சுமார் 12 ஆயிரம் ஆட்களைக்கொண்டு இழுக்கப்பட்ட ஆழித்தேர், சுமார் 3,000 ஆட்களைக் கொண்டு மட்டும் இழுப்பதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திருக்கோயிலில் உள்ள அம்பாள் தேரானது சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு தீ விபத்தில் எரிந்து போய்விட்டது. அருள்மிகு அம்பாளுக்கு இப்போதெல்லாம் சட்டத் தேர் கட்டப்பட்டே ஐந்து தேர்களும் ஒரு சேர இழுக்கப்படுகின்றன.

அலங்கரிக்கப்படாத ஆழித்தேரின் உயரம் 30 அடியாகும். அலங்கரிக்கப்பட்ட பின்பு இதன் உயரம் 115 அடி. இத்தேருக்குரிய நான்கு இரும்புச் சக்கரங்களில், ஒவ்வொரு சக்கரமும் 9 அடி விட்டமுடையவைகளாகும். பொது மக்கள் தேரை இழுப்பதற்கு 20 அங்குலச் சுற்றளவும் 400அடி நீளமும் உள்ள நான்கு தேர் வடங்கள் வேண்டியிருக்கும். அலங்கரிக்கப்பட்ட இத்தேரின் எடை சுமார் 400 டன்கள்.

# கைத்தறி நெசவாளர்க்கு-பல்வேறு சலுகைகள்

"இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில், கதர்த்தொழில், கைத்தறித்தொழில் போன்ற ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய தொழில்களில் நாம் அக்கறை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்; ஆர்வம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதனாலேதான் இதிலே கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நாம் நம்முடைய ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

"சற்றொப்ப இன்றைக்குத் தமிழ்நாட்டில் இந்தக் கண்காட்சி மூலமாக-எனக்குக் கிடைத்துள்ள விவரங்களின்படி-பதினைந்து கோடி ரூபாய் அளவிற்குக் கைத்தறித் துணிகள் விற்பனையாகியிருக்கின்றன. சென்னையிலே மாத்திரம் நடைபெற்ற கண்காட்சியில், சென்ற ஆண்டு இரண்டு கோடி சொச்சம் என்ற அளவிற்கு விற்பனையாகியுள்ளது; இந்த ஆண்டு மூன்று கோடியே சொச்சம் என்கிற அளவிற்கு விற்பனையாகியிருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபொழுது, மக்கள் பேரார்வத்தோடு கைத்தறியை ஆதரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்; நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குப் பலன் கிட்டியிருக்கிறது என்கிற மகிழ்ச்சியை நாம் அடையமுடியும்.



"ஆகவே, இதை நிறைவு விழா என்பது கைத்தறிக் கண்காட்சி முடிவடைகிறது என்பதைக் குறிப்பிடுகிற விழா அல்ல; நமக்கெல்லாம் மன நிறைவை ஏற்படுத்தியிருக்கிற விழா இது.

"26 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும் ரிபேட், பாக்கி மூன்று மாதங்களுக்குள் தீர்க்கப்படும் என்று முன்பு சொன்னேன். அதில் இதுவரை 15 கோடி ரூபாய் தீர்க்கப்பட்டுவிட்டது; மீதமுள்ள 11 கோடி ரூபாய் விரைவில் தீர்க்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு மேலும் இன்னொரு 15 கோடி ரூபாய் சேர்த்து, மொத்தம் 41 கோடி ரூபாயாக இந்த ஆண்டு ரிபேட் தரப்படும்.

"கூட்டுறவு நூற்பாலைகளின்நூல் உற்பத்தி முதலில் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்கள். பிறகு வெளியிலே உள்ள நெசவாளர்கள், மிஞ்சியது விசைத்தறியாளர்கள் என்றபடி தேவை முற்றிலும் பூர்த்தி செய்த பிறகு தான் வேறு யாருக்கும் விற்கப்படும் என்று இன்று அறிவிக்கிறேன்.

"தென்கோடி முனையில் உள்ள தெற்கு மாவட்டங்களில் இருக்கும் நெசவாளர்களின் நலன் கருதி 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு டிசைன் சென்டர் நிறுவப்படும். மத்திய அரசு மானியமாக அதற்குப் பாதித் தொகை வழங்கவிருக்கிறது.

"ஈரோட்டிலும், காஞ்சியிலும் மிகப் பெரிய கைத்தறித் துணி வளாகங்கள்-அனைத்து ரகங்களும் வைக்கும்படியாக நிறுவப்படும்.

"வரவு செலவுத் திட்டத்தில், ஆயிரம் நெசவாளர் பெண்மணிகளுக்குப் புதிய வேலை வாய்ப்பு தரப்படும் என்று கூறப்பட்டது. அந்த ஆயிரம் என்ற எண்ணிக்கை ஐயாயிரமாக உயர்த்தப்படும் என்பதையும் இங்கே நான் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்".

**முதல்வர் கலைஞர்**

**(சென்னையில் 13-5-89 அன்று நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சி நிறைவு விழா உரையின் ஒரு பகுதி)**

127076

மற்ற ஊர்களில் உள்ள தேர்களைப் போலல்லாமல், திருவாரூர் ஆழித்தேர், எண்கோணமாக இல்லாமல், 20 பட்டைகளாக அலங்கரிக்கப்படுவது ஒரு சிறப்புமிக்க தனி அம்சமாகும். தவிரவும், இதன் முன்புறம் கட்டி அலங்கரிக்கப்படும் நான்கு அழகிய வண்ணக் குதிரைகள் ஒவ்வொன்றின் நீளம் 32 அடிகளாகும்.

1970-ஆம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டுவரை தவறாமல் நடைபெற்ற ஆழித்தேர்த்திருவிழா, அதன்பின் ஆண்டுதோறும் தொடர்ந்து முறையாக நடைபெறவில்லை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஓர்முறைதான் நடைபெற்றது.

கடந்த 26-5-1982-இல்தான் தேர்த்திருவிழா ஆரூரில் கடைசியாக நடைபெற்றது. கடந்த 4-4-1988 அன்று இக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா இனிது நடைபெற்றது. பின்னர், இந்த ஆண்டு தேரோட்டம் நடைபெற வேண்டும். இதன்படி கடந்த 22-1-89 தைப்பூச நாளன்று பந்தக்கால் முகூர்த்தம் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இதனைத் தொடர்ந்து பிரமோற்சவம் நடைபெற்றது. பங்குனித் திங்கள் ஆயில்யம் நட்சத்திரத்தில் (1989 மார்ச் மாதம் 19) தேர்விழா நடைபெறுதல் வேண்டும்.

ஆனால், புதிய அரசு தமிழ் நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்று மிகக் குறைந்த காலமே ஆகியிருப்பதால் இது விஷயத்தில் உடனடி கவனம் செலுத்தப் போதுமான அவகாசம் இல்லை. ஆயினும், ஆன்மீகத் துறை மேம்பாட்டுக்காகத் தனிக் குழு அமைத்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சொந்த ஊரான திருவாரூரில் இப்படியொரு குறையிருக்கலாமோ?

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அக்கறை, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீவிர நடவடிக்கை ஆகியவைகளின் காரணமாக 7-5-89-இல் மீண்டும் ஆழித்தேர் ஓடியது அணிசேர் திருவாரூரில்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி அவர்களே நேரில் சென்று தேரின் வடம் பிடித்துச் சிறப்பித்தார். இதனால் தமிழ்நாட்டிலுள்ள-குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆன்மிகப் பெருமக்கள் அகம்மிக மகிழ்ந்தார்கள்; அரசை வாழ்த்தி மனம் குளிர்ந்தார்கள்.

-பி.எல். ராஜேந்திரன்

ஆக்கியவரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /



எங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம், ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

Verified

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங் ● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.



சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, டாக்சி
ஒட்டுநர்கள் நல்வாழ்வுத் திட்டத் துவக்க விழா (1-5-'89).